T. 858.

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY
உ MAR 1919
சிவமயம் 858
MADRAS

# விநாயக[illegible].

மட்டக்களப்பு புளியநகர்

சதாசிவம்பிள்ளை பூபாலபிள்ளை,

இயற்றியது.

இந்நூலாசிரியர் குமாரர்

பூ. செ. இராசரத்தினம்,

பிரசரித்தது.

கொழும்பு:
"ஸ்ரீ[illegible]ப்பாள்" அச்சியந்திரசாலை.
1905.

விசுவாவசு ஹு கார்த்திகை மீ.

(All rights reserved.)

உ

# அட்டவணை.


| இ. | சரித்திரம். | பக்கம். |
|---|---|---|
| 1 | சிறப்புப் பாயிரம் .... .... .... | ௫ |
| 2 | காப்பு, தெய்வ வணக்கம் .... .... | ௬ |
| 3 | அவையடக்கம் .... .... .... | ௨ |
| 4 | நூல் வரலாறு .... .... .... | ௩ |
| | **உபாசனாகாண்டம்.** | |
| 5 | சோமகாந்தன் வனம்புகுந்து பிருகு முனிவனை யடுத்தல் .... .... .... | ௫ |
| 6 | பிருகு முனிவர் சோமகாந்தனுக்கு முற்பவ வினை யுணர்த்தி நோய்தீர்த்தல் .... .... | ௭ |
| 7 | வியாசமுனிவர் பிரமதேவனையடுத்து உபதேசம் பெறல் .... .... .... | ௰௪ |
| 8 | மூவருபாசித்து வரம்பெற்று விசுவரூபங்காணல் | ௰௫ |
| 9 | பிரம சிருட்டிப்பு .... .... .... | ௰௮ |
| 10 | திருமணம் .... .... .... | ௨௩ |
| 11 | விண்டுசடாக்கர மனுட்டித்தல் .... .... | ௨௮ |
| 12 | வீமன் விசுவாமித்திரனை யடுத்தல் .... | ௩௨ |
| 13 | தக்கன் பிணி நீங்கல் .... .... | ௩௩ |
| 14 | வல்லாளன் வேதனைநீங்கி முத்தியடைதல் .... | ௩௭ |
| 15 | தக்கன் அரசாட்சி பெறுதல் .... .... | ௪௩ |
| 16 | உருக்குமாங்கதன் சாபம்பெறல் .... .... | ௪௪ |
| 17 | நாரதர் உருக்குமாங்கதனுக்கு இந்திரன் சாபம் பெற்று நீங்கிய வகையுணர்த்திச், சாப நிவாரணங் கூறுதல் .... .... | ௪௯ |
| 18 | உருக்குமாங்கதன் முத்தியடைதல் .... | ௪௯ |
| 19 | கிருச்சமதர் உற்பவம் முதலியன .... | ௫௰ |
| 20 | திரிபுரனுற்பவம் .... .... .... | ௫௩ |
| 21 | திரிபுரன் அரசிபற்றல் .... .... | ௫௪ |
| 22 | திரிபுரதகனம் .... .... .... | ௫௯ |

| இ. | சரித்திரம். | பக்கம். |
|---|---|---|
| 23 | உமையம்மைவிநாயகசதுர்த்திவிரதமனுட்டித்தல் | ௬௰ |
| 24 | கர்த்தமன் சதுர்த்தி விரதம் நோற்றல் .... | ௬௩ |
| 25 | நளன் விரதமனுட்டித்தல் .... .... | ௬௪ |
| 26 | சந்திராங்கதன் சரிதம் .... .... | ௬௫ |
| 27 | சண்முகர் அனுட்டித்தல் .... .... | ௬௬ |
| 28 | மன்மத னுருப்பெறல் .... .... | ௬௮ |
| 29 | ஆதிசேடன் அனுட்டித்தல் .... ... | ௭௧ |
| 30 | இந்திரவிமானம் மண்ணிழிதல் .... .... | ௭௨ |
| 31 | புருசுண்டி சங்கட்ட சதுர்த்தி அனுட்டித்தல் .... | ௭௬ |
| 32 | கிருதவீரியன் தவம்புரிதல் .... .... | ௭௬ |
| 33 | அங்காரகன் அனுட்டித்தல் .... .... | ௭௯ |
| 34 | சந்திரன் சாபநிவாரணம் .... .... | ௮௧ |
| 35 | விடை, கரம், புலைச்சி வீடுபெறல் .... | ௮௩ |
| 36 | தூர்வை அருச்சனை .... .... | ௮௬ |
| 37 | தூர்வை யாசகம் .... .... .... | ௮௮ |
| 38 | தூர்வை துலையேற்றல் .... ... | ௯௧ |
| 39 | வன்னி மகத்துவம் .... ... | ௯௩ |
| 40 | வாமனர் வரம்பெறல் .... .... | ௯௭ |
| 41 | கீர்த்தி மகப்பேறு; விடநீங்கல் .... | ௱௨ |
| 42 | சமிமந்தார வுற்பத்தி .... .... | ௱௬ |
| 43 | தேவர்கள் சாபந்தீர்தல் .... .... | ௱௯ |
| 44 | க்ஷிப்பிரப்பிரசாதன் வரம்பெறல் .... .... | ௱௰௨ |
| 45 | கிருதவீரியன் மகப்பெறல் .... .... | ௱௰௩ |
| 46 | இந்திரவிமானம் விண்ணெழல் .... .... | ௱௰௬ |
| 47 | சூரசேனன் முத்தியடைதல் .... .... | ௱௰௯ |
| 48 | பரசுராமன் வரம்பெறல் .... .... | ௱௨௩ |
| 49 | இராவணன் பூசித்தல் .... .... | ௱௨௭ |
| 50 | அகத்தியர் பூசித்தல் .... .... | ௱௨௯ |
| 51 | காசிபர் முதலியோர் அனுடித்தல் .... | ௱௩௧ |
| 52 | சகத்திரநாமம் .... .... .... | ௱௩௫ |


## இலீலாகாண்டம்.


| | | |
|---|---|---|
| 53 | வக்கிரதுண்ட விநாயகர் திருவவதாரம் ... | ௱௩௭ |

| இ. | சரித்திரம். | பக்கம். |
|---|---|---|
| 54 | சிந்தாமணி விநாயகர் திருவவதாரம் .... | ௱௩௮ |
| 55 | கசானன விநாயகர் ,, ,, .... | ௱௪௧ |
| 56 | விக்கின விநாயகர் ,, ,, .... | ௱௪௫ |
| 57 | மயூரேச விநாயகர் ,, ,, .... | ௱௪௯ |
| 58 | பிந்திய மயூரேச விநாயகர் ,, .... | ௱௫௩ |
| 59 | பாலசந்திர விநாயகர் ,, ,, ... | ௱௬௩ |
| 60 | தூமகேது விநாயகர் ,, ,, .... | ௱௬௩ |
| 61 | கணேசர் .... ,, ,, .... | ௱௬௯ |
| 62 | கணபதி .... ,, ,, .... | ௱௭௰ |
| 63 | மகோற்கட விநாயகர் ,, ,, .... | ௱௭௨ |
| 64 | துண்டி விநாயகர் ,, ,, .... | ௱௮௰ |
| 65 | வல்லபை விநாயகர் ,, ,, .... | ௱௮௪ |
| 66 | வியாசர் உபதேசங்கேட்டு வரம்பெறல் .... | ௱௮௫ |
| 67 | சோமகாந்தன் முத்தியடைதல் .... .... | ௱௯௨ |
| 68 | அநுபந்தம் .... .... .... | ௱௯௫ |


# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௪௪ | ௫ | றிணிபுகுங் | றணிபுகுங் |
| ௪௮ | ௩௰ | புரவலன | புரவலன் |
| ௮௧ | ௮ | ம்வ்வா | மவ்வா |
| ௮௯ | ௫ | கோக்கி | நோக்கி |
| ௮௮ | ௩௭ | கயான | காயன |
| ௯௭ | ௫௧ | முதவினன | முதவினன் |
| ௱௪ | ௩௰ | கெனறனர் | சென்றனர் |
| ௱௪ | ௩௩ | பெருநோன | பெருநோன் |
| ௱௯ | ௫௮ | முள்னவன் | முன்னவன் |
| ௱௰௧ | ௩௮ | தேர்ந்துநான | தேர்ந்துநான் |
| ௱௰௮ | ௨௩ | ரியம | ளியம |
| ௱௨௩ | ௫ | கிரேனுகை | கிரேணுகை |
| ௱௨௪ | ௨௮ | ரேனுகை | ரேணுகை |
| ௱௪௧ | ௪௨ | கிந்தா | சிந்தா |
| ௱௪௩ | ௪௧ | கணெசகுண் | கணேசகுண் |
| ௱௫௩ | ௭௨ | கிரமென | கிரமென் |
| ௱௫௭ | ௫௯ | கதமெறிங் | கதிமெறிங் |
| ௱௯௨ | ௱௩௩ | விண்ணுயிர் | விண்ணுயர் |

உ

சிவமயம்.

# சிறப்புப் பாயிரம்.

கண்டிநகர்

செல்வ விநாயக சுவாமி கோயிற் பிரதானாசாரியர்,

**ப்ரம்ம ஸ்ரீ நா. குமாரசுவாமிக் குருக்களவர்கள்,**

சொல்லிய நிலைமண்டில வாசிரியப்பா.

---

பூமிசை ஞானம் பொலிதர விரித்து
பாமலி நாற்பொருள் பயனுற வழங்குந்
திருமறை யாகமச் செவ்வழிப் பிறந்த
உரைசெறி பதினெண் ணுபபுரா ணங்களிற்
பார்க்கவ மென்றிசை பரந்தபாற் கடலை
யார்க்கும் பயன்றரக் கடைந்து திரட்டிய
புனிதநல் லமுதம் போலுறத் தொகுத்து
விநாயக மான்மிய மெனப்பெயர் விதித்துச்
சொற்பொருள் சந்தச் சுவையணி பிறங்கப்
பொற்புய ரகவற் பாவாற் புனைந்து
பொலிவுற வழங்கிப் புகழ்மிகப் படைத்தான்
நிலவுவெண் முத்தம் நிரைநிரை கொழிக்குந்
திரைசெறி வாவிக் கயலினம் பாயக்
கரைவளர் தெங்கின் குலையுதிர்ந் துடைநீர்
கட்டிப் பயிர்விளை கழனிகள் புடைசூழ்
மட்டக் களப்புப் புளியமா நகரான்
மேழியர் குலத்து வியன்குடிப் பிறந்து
வாழ்வுயர் நல்லைப் பதியினில் வாழ்ந்த
மருமலர்த் திணிதோள் வயிரவ நாதன்
தருமகன் சின்னத் தம்பிதன் றனையன்
கார்த்தி கேயன் காதல் சதாசிவன்
ஆர்த்தகு புதல்வ னவவ தரித்தோன்
நவிலரும் புகழ்சேர் ஞானமுத் துக்குங்
குவளையங் கோதைக் குமாரசா மிக்கும்
மருகனென் றுலகு மதிக்குநன் மரபான்
திருவள ரிலங்கை யரசவுத் தியோகன்

சேயிழை சீமந் தனிபுரா ணம்முதல்
ஆயபன் னூல்க ளணிபெற வகுத்தோன்
கற்றைவார் சடையனைக் கனவினு நினைந்து
மற்றவ னடியார்க் கடிமைசெய் மாண்பினன்
ஆன்றோர் விரும்பு மறநெறிக் கிலக்கச்
சான்றா யொழுகுந் தவநடை யுடையான்
தெள்ளிய மதிநலஞ் சிறந்தபூ பால
பிள்ளையென் றியற்பெயர் பெற்றநா வலனே
கன்னல்செந் தேன்பால் கனிரசங் கடுப்ப
இன்னண மன்னோ னியம்பிய விந்நூல்
பரவுறு சகாப்தம் பதினெண் ணூறொடு
வருமிரு பானெண் வளர்விசு வாவசு
துலாமதி யிருபத் தேழ்தினஞ் சோமன்
கலைநிறைந் துள்ள கார்த்திகை நாளில்
மல்கிய வளமுயர் கண்டி மாநகர்ச்
செல்வ விநாயக தேவசன் னிதியில்
தவமுளார் மறைவலார் சைவ மகான்களுங்
கவிவலார் பலருங் களிப்புட னீண்டிய
மாசபை முன்னர் வந்தாங் கனைவரும்
ஆசிக ளியம்ப வரங்கே றியதே

---

மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவான்,

சித்தாந்தசரபம்—அஷ்டாவதானம்,

## பூவை—ஸ்ரீ. கலியாணசுந்தர முதலியாரவர்கள்,

இயற்றிய இரட்டையறுசீர் விருத்தம்.

---

மன்னியவே தாகமபு ராணவிதி காசமெலா மகிழ்வி னேத்த
வருபிரண வப்பொருளாய் விளங்குறுமுன் ஞேன்சரிதை வகையிஞேர்ந்து
சொன்னயஞ்சூ ழகவற்பா வினிலொருநூல் சொற்றிட்டான் சுவை சிறந்து
சொரிதருசா துரியசிங் காரவிசித் திரவண்மை துலங்கித் தோன்றக்
கன்னல்மரு தப்பணைமட் டுக்களப்புப் புளியநகர் கவினுற் றோங்கக்
கனதனத்தோ டுதைசதா சிவவள்ள லருந்தவத்துக் காதன் மைந்தன்
நன்னெறியி லுயர்ந்துசெந் தமிழ்க்கடலிற் றிளைத்தரனை நாடி நாளு
நவின்றுறைநற் சைவசிகா மணியான பூபால நாவ லோனே.

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை,

## ப்ரம்மஸ்ரீ நா. சிவசுப்பிரமணிய சிவாசாரியாரவர்கள்

சொல்லிய வெண்பா.

தந்திமுகன் மான்மியஞ்சீர் சார்மட்டு நற்களப்பு
விந்தைச் சதாசிவவேண் மிக்கதவம்—வந்துதித்த
பூபால பிள்ளையருள் பொங்கா சிரியநனி
பூபா லனம்புரியம் பூ.

சுன்னாகம்,

## ஸ்ரீ. அ. குமாரசுவாமிப் புலவரவர்கள்,

இயற்றிய நிலைமண்டில வாசிரியப்பா.

கங்கை முடியோன் காலை கண்டன்
மங்கை பாகன் வழங்கருள் பெற்ற
நந்தி வழியா னனிலம் பரந்து
முந்திய புராண மூவா றாகும்
அவற்றுப புராணமு மத்துணை யாகும்
அவற்றுளே பார்க்கவ மாமதன் வழியே
மெச்சிய கல்வி விற்பன னாகிய
கச்சி யப்பன் கவிதையிற் பாடிய
விநாயக புராணம் விரித்திடுங் கதையை
விநாயகற் கன்புளோர் விருப்பொடு முணர்ந்து
நற்றவ நெறியி னணிபயின் றுய்யக்
கற்பவர் கேட்பவர் காத லிக்கும்
அகவற் பாவி லழகுற வமைத்து
மகிழ்தரும் விநாயக மான்மிய மென்னும்
நாமமுஞ் சூட்டி நன்குற நாட்டினன்
காமரு மட்டுக் களப்பு வாசன்
அங்கிலஞ் செந்தமி ழுடைவுடன் கற்றோன்
மங்கல வாசகன் மாப்பெருங் குணத்தோன்
புருடலக் கணமெனப் புகலுமுத் யோகப்
பெருமையு மதிப்பும் பிறங்கிய சீலன்
எள்ளருஞ் சீர்த்தி யிலங்குபூ பால
பிள்ளை யென்னும் பெருமா தவனே

வட்டுக்கோட்டை, தமிழ்வித்தியாசாலை,

## ஸ்ரீ மு. ஆறுமுக உபாத்தியாயரவர்கள்,

இயற்றிய ஆசிரிய விருத்தம்.

சீர்கொண்ட பதிஞான வளமேய மட்டுக் களப்பெனுஞ்
செல்வநகரான், செங்குவளை யங்கோதை தங்குமரு
மத்தினன் சிவஞான சைவநிலையன், செம்மைகொள்
சதாசிவப் பிள்ளைபுரி நற்றவத் திருவாத் துற்றபுதல்வன்
பார்கொண்ட லக்கண விலக்கியக் கடலுண்டு பருதுதேக்
கெறியு மேகம், பரிதிமதி யங்கியென வெண்டிசை
விராவுறப் பாரித் தெழுந்த புகழான், பன்னுதென்
மலையமுனி யென்னநற் கலையெலாம் பதிதரு விவாசகூடம்
வார்கொண்ட நாற்கவிதை வல்லுநர்கள் மெச்சுநூல் வகை
யறப் பலவகுத்தோன், வளர்புனித சற்குணம் பொறையறிவு
நன்னீதி வாய்மைதவ மாதியுடையான், வண்புவி மதிக்
கவருபூபால பிள்ளையாம் வண்டமிழ்ப் புலவர் பெருமான்
தார்கொண்ட தாரகப் பிரமநிலை யானமெய்ச் சச்சிதா னந்த
மோனத், தனிமறைப் பொருளான வைங்கரன் மான்மியந்
தரணிநிலை கொண்டுமிளிரச், சந்தமது ரச்சுவை
கொளச்செய்து தந்தனன் றக்கவர்க் கமுத மெனவே.

---

திரிகோணமலை,

## ஸ்ரீ, இ, சந்திரசேகர பிள்ளை,

உபாத்தியாயரவர்கள் இயற்றிய ஆசிரியவிருத்தம்.

சீர்மேவு தென்னிலங் காபுரியின் முடியெனத் திகழுமட்
டக்களப்புச், செங்கமல வாவியொடு கொங்குலவு
சோலைசூழ் தேசுலவு புளிய நகரான்,
கார்மேவு கங்கைகுல வாரிதி முகட்டெழு களங்கமடை
யாதமதிபோல், கவினுற சதாசிவப் பிள்ளைமுன் செய்தவக்
காட்சியென வந்த புதல்வன்,
ஏர்மேவு பாவல்ல பூபால பிள்ளையென் றேத்துநல் லினிய
பெயரான், இசைதரு வியாக மான்மிய மெனும்
பெயரொ டிம்பர்மிசை யென்றுநிலவப்
பார்மேவு பார்க்கவ புராணபாற் கடறனைப் பாவியரு
மெளிதினுகரும், படியுகவ னடையிலொரு பனுவலமு
தாக்கியே படிபுகழ வருளினனரோ



GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY
MAR 1919

ஓம்

ஸ்ரீ கணேசாயநம:

# விநாயகமான்மியம்.

## காப்பு.

சீர்பொலி கமலப் பூவளர் திசைமுகன்
கார்பொலி மேனிக் கண்ணனு மரனுஞ் (௧)
சீதரன் முதலிய தேவரு முனிவரும்
பூதல சராசர வகுப்புக ளெல்லாந் (௨)
தானே யாகிய தனிமுதற் பெருமான்
மானேர் விழியுமை தருசிவ மைந்தன் (௩)
பிரணவ சொரூபன் பெருங்கதை சொல்லப்
பரவுது மன்னோன் பதமலர்த் துணையே (௪)

## பாயிரம்.

(தெய்வ வணக்கம்.)

விரைகமழ் கொன்றை வேய்ந்த வேணியன்
திருவளர் கமலச் சேவடி பணிவாம் (௧)
அச்சிவ பாகத் தமர்ந்துல கீன்ற
பச்சை மென்கொடி பதமலர் பணிவாம் (௨)

அவ்விரு வருக்கு மாதிமா மகனைச்
செவ்விதி னுதித்த தேசுயர் பெருமான் (௩)

மங்கல மிகுத்த மட்டக் களப்பின்
பொங்கிய வளங்கூர் புளிய மாநகர் (௪)

மத்தியி லானைப் பந்தி மாநெடும்
வித்தகக் கோயின் மேவு கணேசனைத் (௫)

தேவியர் சித்தி புத்தியென் றிசைக்கும்
பாவைய ரோடு தினந்தொறும் பணிவாம் (௬)

வேலெறிந் தவுணனை வென்றுவிண் காத்த
கோல மாமயிற் குமர வேளொடு (௭)

தெள்ளிய வின்சொற் றேவ்குஞ் சரியை
வள்ளிநா யகியைப் பணிந்தடி வாழ்வாஞ் (௮)

சுடர்விடு நிகரின் முத்தலைச் சூலப்
படையுடை யானைப் பார்புகழ் வீரனை (௯)

நாமகள் நந்தி குரவர் நால்வரைப்
பூமலர் சிந்திப் போற்றுவா மன்றே (௰)

௰௪

## அவையடக்கம்.

ஆதியென் றேத்து மம்மையு மப்பனுங்
காதலி னினைந்தவை கைகூ டற்குத் (௧)

தந்திமா முகனையே தவத்திடை நோற்றால்
அந்தமா கடவுட் காரிணை யெனலாம் (௨)

மற்றவன் புகழ்சேர் மான்மிய சரிதங்
கற்றவர் முன்னே கழறப் புகுதல் (௩)

விண்வளர் மேனிலை மாடகூ டத்தை
மண்விளை யாட்டிற் சிறுமிகள் வகுத்துப் (௪)

பாரெனக் காட்டும் பரிசே யாயினுஞ்
சீருடைப் பெரியோர் சேற்றெழு மலரையும் (௫)

மணத்தாற் கொள்ளும் மரபிலிந் நூலைக் (௬)
குணத்தாற் கொள்வர் குறைதவிர்த் தன்றே

௨௰

## நூல்வரலாறு.

வெள்ளி மால்வரை விமலனுக் கன்பால்
அள்ளி மாமல ரருச்சனை புரியும் (௧)
நந்தியந் தேவன் னவையுற மேனாள்
முந்திய் புராணம் முதன்மூ வாறு (௨)
மறைவழி சனற்கு மாரற் குரைத்தான்
அறையவை கிரந்த மிலக்கநான் காகும் (௩)
அம்முனி பாலுணர்ந் தவற்றை வியாதன்
செம்மைய வுலகிற் றெளிவுற வகுத்தான் (௪)
பிந்திய முனிவர் பெயர்த்தவை கேட்டுத்
தந்தம் பெயராற் றரைமிசை விளங்க (௫)
ஓதினர் மூவா றுபபுரா ணங்கள்
ஏதமில் கிரந்த மிலக்கமொன் றாகும் (௬)
அப்பெரும் புராண மறுமூன் றனுளும்
ஒப்பரு பார்க்கவ மென்றிசை யோங்கும் (௭)
விநாயக புராணம் மிகச்சிறப் புடைத்தாம்
அனதைமுன் வேதன் சிவனிடத் தாய்ந்து (௮)
வியாதற் குரைப்ப விளங்கிமற் றவன்பால்
உயர்குணப் பிருகென் றுரைக்குமா தவத்தோன் (௯)
ஆரிய மொழியிற் செய்யு ளாக்கினன்
சீரிய வுபாசனை சிறந்திடு லீலா (௰)
காண்ட மிரண்டு கருத்தமை கிரந்தம்
ஆண்டுள பன்னீ ராயிர மாகும் (௰௧)
அத்தகைப் புராண மதனைமுன் பிருகு
பத்தியிற் கேட்ட பார்த்திபன் சோம (௰௨)
காந்தற் குரைத்தான் கற்றனர் பிறருந்
தேந்தமிழ் விருத்தப் பாவாற் செய்தனன் (௰௩)
அதிபுகழ் கச்சி யப்ப மாதவன்
இதுபுல வோர்க்கன் றெளிதில் விளங்காப் (௰௪)
பண்பினை நோக்கிப் பண்டிதர் பல்லோர்
தண்மொழி வசன நடையினுந் தந்தார் (௰௫)

இத்தகைச் சிறந்த பெருநா லிருப்ப
வித்தக விநாயக விரதநோற் பவரும் (௰௬)
முற்றவர் பலரும் வரதபண் டிதனூர்
பற்பல நூலிற் பரிந்து திரட்டிப் (௰௭)
பிள்ளையார் கதையெனப் பெயர்வகுத் துரைத்த
தெள்ளிய வகவ லொன்றைவே றிலர்போல் (௰௮)
நித்தமுங் கற்கு மியல்புகண் டன்னோர்
பத்தியி லோதப் பார்க்கவந் தன்னை (௰௯)
அருமைய மொழிகளுஞ் சந்தி விகாரமும்
விரவுவ குறைத்துத் தெள்ளிதின் விளங்க (௨௰)
ஆங்கவர் விரும்பு மகவற் பாவாற்
பாங்குறச் சுருக்கிப் பகரெனப் பல்லோர் (௨௧)
சாற்றிய மொழியுந் தந்திமா முகவன்
போற்றரு சரிதையிற் பொருந்திய வன்புந் (௨௨)
தூண்டிய பரிசாற் கலியற வொழுக்கம்
ஈண்டுமிந் நாளுக் கியைபுறச் சுருக்கித் (௨௩)
தொகுத்தொரு வாறு தொன்னெறி வழாமன்
வகுத்தன மிந்நூல் வரலா றிதுவே (௨௪)
நித்திய நிர்க்குண நின்மல நிரஞ்சன
சத்திய தத்துவ சச்சிதா னந்த (௨௫)
அத்து விதப்பரி பூரண வமல
மெத்திய ஞான தற்பர விநாயகன் (௨௬)
உருவமொன் றில்லா னுருப்பல வுடையான்
அருவுரு வாண்பெண் ணலியென வமையான் (௨௭)
வழிபடு மாறே வந்தருள் செய்பவன்
விழைவிலான் விழையும் விளையாட் டியல்பை (௨௮)
முற்பவ வினையான் முதுகலை யுணராச்
சிற்றறி வாளர் தெரியா திகழ்ந்து (௨௯)
தனிமுத லிவற்குத் தந்தைதா யென்சொல்
மனைவிய ரொன்னென மயங்கி மாழ்குவர் (௩௰)
புண்ணிய வயத்தர் பொருண்மயக் குறினும் (௩௧)
எண்ணுமெய்ப் பத்தியி லிதம்பெறு வாரோ ௩௨

## நூல்.

# உபாசனாகாண்டம்.

### சோமகாந்தன் வனம்புகுந்து பிருகுமுனிவரை யடுத்தல்.

திங்களார் செஞ்சடைச் சிவனரு ளேக்காற்
பொங்குயிர் மலிந்த பூவுல கதனிற் (௧)
பொன்னகர் நாணப் பொலனெடு வளங்கூர்
தன்னிக ரில்லாச் சவுராட் டிரமாந் (௨)
நீதக னாட்டிற் செங்கோ னடாத்துந்
தாதவிழ் மலர்ப்பூந் தார்புனை சோம (௩)
காந்தனென் றிசைக்குங் கவினுறு கோமான்
சாந்துயர் களபத் தடவிள முலையாள் (௪)
சுந்தர மிகுத்த சுதன்மையென் றிசைக்கும்
பைந்தொடி யாளைப் பாரியை யாக்கிப் (௫)
பூமி புரக்கப் புரைதவிர் புதல்வன்
ஏம கண்டனை யிசைபெற நல்கிப் (௬)
பொற்புற வாழும் பொருவறு நாளின்
முற்பவத் தீவினை முனைந்து சூழ்வரக் (௭)
கட்டழ குடம்பின் கவினெலாம் பொன்றிக்
குட்டநோய் தொட்டுக் குருதிநீர் வடிய (௮)
மந்திரம் மருந்து மற்றெவை புரியினும்
அந்நோ தணியா ததிகரித் திடலாற் (௯)
சிந்தை வருந்தித் தெளிவுசற் றடைந்து
மந்திரத் தலைவனை மருங்குறக் கூவி (௰)
இன்புறு புதல்வ னேம கண்டனை
முன்புற விருத்தி மூதறி வுணர்த்தி (௰௧)
அரசியன் முறையு மறநெறி முழுதுந்
தெரிதர வுரைத்துச் செகமினி யாள்கெனச் (௰௨)

செங்கோ லாங்கவன் செங்கையிற் சேர்த்துத்
துங்கநன் மவுலியுஞ் சூட்டின னப்பாற் (௰௩)
கதிர்மணிக் கலன்கள் யாவையுங் களைந்து
விதிதவ வேடம் மெய்யுறத் தாங்கி (௰௪)
அடவியை நோக்கின னவியிற் சிறந்த
மடமயிற் சாயன் மனைவி சுதன்மையும் (௰௫)
அமைச்சர்கள் சிலரு மவன்பின் றொடர்ந்தார்
உமைப்பிரி யோமென் றுளிர்மனை நீங்கி (௰௬)
விண்ணுற வோங்கு வியன்றரு வனத்திற்
கண்ணகல் தூரங் கடந்தனர் போதலுஞ் (௰௭)
செங்கதிர் நுழையாச் செழுமலர்ச் சோலை
அங்கொன் றிலகக் கண்டதன் பாங்கர் (௰௮)
தங்கினர் மந்திரத் தலைவர் காய்கனி
பங்கமி லுணவு நாடிப் படர்ந்தார் (௰௯)
அன்னமென் னடையா ளருகினி லமர
மன்னவன் சிறிது மலர்க்கண் வளர்ந்தான் (௨௰)
அந்தநல் லமைய மவ்வன முனிவன்
கொந்தலர் குழலி புலோமையின் கொழுநன் (௨௧)
பிருகுவென் றிசைக்கும் பெயருடைப் பெருமான்
தருமகன் சிவன னெனுந்தகு மிளவல் (௨௨)
தந்தை சொற்படி தண்ணீர் கொள்வான்
வந்தன னவ்வழி மற்றிவர்க் கண்டு (௨௩)
தன்வர வோதித் தாயே நீயிவண்
மன்னவ னோடு வந்ததென் சொல்கெனத் (௨௪)
தண்ணறுந் தொடைப்பூந் தாரணி குழலாள்
கண்ணிருந் திழிநீர் கடலெனப் பெருக (௨௫)
உற்றன வெல்லா முரைத்தனள் கேட்டுக்
குற்றமில் சிவனன் மெழுகென வுருகி (௨௬)
அலமரு சிந்தை யவர்பா லமரச்
சலமெடுத் தேகித் தந்தையை வணங்கிக் (௨௭)
கண்டன கூறிக் கரைந்துள மழுதான்
எண்டவ முனியு மிரக்கமுற் றிங்ஙனம் (௨௮)

அன்னவர் தமைநீ யழைத்துவா வெனலும்
உன்னியங் கோடி யொருகணத் துற்றென் (உகூ)
அன்னையே வருதி யையநீ வருதி
என்னையாள் குரவ னிரங்கிய பொழுதே (௩௰)
நின்னையா டியரம் நீங்கிய விரைவில்
என்னொடு வருகென் றெல்லவர் தமையுந் (௩௧)
தந்தைபா லுய்ப்பத் தாழ்ந்தவர் பணிந்தார்
அந்தமில் தவத்தோ ருசிகள் கூறிப் (௩௨)
படர்களை யகலப் பலவுண வுதவித்
திடமுறச் செய்தான் சென்றதங் கந்நாள் (௩௩)
வைகறை மறுநாள் மன்னவ னெழுந்து
செய்கடன் முடித்துச் செழுமலர் தூவி (௩௪)
மாதவன் பாதம் வழிபட வன்னோன்
காதலி னிருத்திக் கழறலுற் றனனே (௩௫)

அ ௱

## பிருகுமுனிவர் சோமகாந்தனுக்கு முற்பவ வினையுணர்த்தி நோய் தீர்த்தல்.

மல்லமர் புயத்து மன்னவர்க் கரசே
நல்வினை தீவினை நவிலிரு வினையும் (க)
முந்திய பவத்தின் முடித்தனை யவைகேள்
விந்தமால் வரையின் விரிபுறத் தொருபால் (உ)
கொங்கலர்ச் சோலை கொல்லமென் றிசைக்கும்
மங்கல நகரின் வைசியர் குலத்திற் (௩)
பிறந்துளா னொருவன் பெயர்சித் துருபன்
அறந்தவ றுகா னவன்றிரு மனைவி (௪)
சுந்தர மிகுந்த சுலோசனை யென்பாள்
உந்திய தவத்தி லொருமக னாகி (௫)
வந்து நீயவள் வயிற்றிற் பிறந்தாய்
தந்தையு மகிழ்வாஞ் சலதியின் மூழ்கி (௬)
நின்னெழிற் கிசைய நேரில்கா மந்தன்
மன்னநன் னாம மினிதொடு சூட்டிப் (எ)

பரிவொடு வளர்த்துப் பருவகா லத்திற்
குருமணி யிமைப்பூண் குடும்பினி யென்றோர் (அ)
மங்கையை விதிமுறை மணம்முடிப் பித்தான்
அங்கவள் பெண்க ளவரான் மக்கள் (கூ)
பங்கமி லெழுவர் பயந்தன ளாகிப்
பொங்கிய வாழ்விற் பொலிதரு நாளில் (ய)
நின்னருங் குரவன் னீள்வய தொழியப்
பொன்னக ருற்றான் பேரியினள் தாயும் (யக)
அன்னவர்ப் பின்ன ரடைகாப் பிலனாய்
மன்னவ தீய வழிச்செல வுற்றாய் (யஉ)
பொருணசை கொண்டு புணர்முலை பகரும்
மருள்விழிக் கணிகையர் மாயையிற் சிக்கி (யரு)
வாழ்மனை யகத்து வளர்நிதி யனைத்துந்
தாழ்வறக் கொடுத்துத் தவறிழைத் திட்டாய் (யச)
சரியல வென்றுன் மனைவி சாற்றியும்
பரிவுட னிரந்து பணிந்து வேண்டியும் (யரு)
வேசிய ரன்பை விடுத்திலை மன்னா
தேசுயர் மனையி லெஞ்சிய வெல்லாம் (யசா)
பெட்டியும் பேழையும் பெண்ணொடு மக்கள்
கட்டிய நகையுங் கழற்றிக் கொடுபோய் (யஎ)
வஞ்சக நஞ்சின் வஞ்சியர்க் குதவி
மிஞ்சிய வொன்றும் மேலில னாகி (யஅ)
ஐய மிரந்து மவர்க்கே கொடுத்தனை
நைதக மனையா ணலிந்துண வின்றித் (யகூ)
தன்முகம் நோக்கித் தவித்தழு மக்கள்
பொன்முக வாட்டம் பொறுக்கா ளாகிப் (உய)
பிறந்திடங் கொண்டு பேதையுஞ் சென்றாள்
துறந்தன ளில்லந் தோகையென் றப்பாற் (உக)
கல்லென விறைத்த கடுமனத் தொடுநீ
அல்லும் பகலு மளக்கரும் பாவம் (உஉ)
விலைமுலை மடவார் வேட்கையின் பொருட்டுப்
புலைகொலை களவும் புரிந்தனை யாவும் (உரு)

அங்கநகர் வேந்த னறிந்துனை முனிந்து
தன்னகர் விட்டுத் தணவெனத் துரத்தினன் (உச)
ஆங்கது முதலா யடர்வனக் குடியாய்ப்
பாங்குறு கள்வர் பலரொடுங் கூடி (உரு)
வழிவரு வாரை மறித்துயிர் போக்கிப்
பிழைபல செய்து பெரும்பொருள் கவர்ந்து (உசா)
விலங்கின மெறிந்து மென்றசை நுகர்ந்து
கலங்கவெல் லாருங் காலனை நிகர்த்தாய் (உஎ)
இம்முறை நீயு மிடர்புரி நாளிற்
செம்மறை முழுதுந் திரிபற வுணர்ந்த (உஅ)
காசகன் மறையோன் கணவர்த் தனனெனும்
ஆசிகொள் பெயரா னவ்வழி வருதலுங் (உகூ)
கண்டெதிர் சாடக் கையிற் றண்டங்
கொண்டுநீ போந்தனை குலைதரு மறையோன் (௩0)
அஞ்சினன் கூவின னபயமென் றேத்தி
நஞ்சர வாய்ப்படு தேரையின் மாழ்கி (௩க)
என்னுயிர் கவரே லிளமனை சாகப்
பின்னொரு பெண்ணைப் பெட்புற மணந்தேன் (௩உ)
கள்ளவிழ் மலர்ப்பூங் கன்னி யவளோ
பிள்ளை யுபிராப் பிராயஞ் சிறியவள் (௩௩)
தஞ்சமற் றில்லாள் தாபரிப் பாரிலை
அஞ்சினேற் கிரங்கி யருளது புரிவாய் (௩ச)
கைப்பொருள் யாவுங் கலனொடு தருவேன்
மெய்க்கிடர் செய்யேல் விடுவிடென் றழுதான் (௩ரு)
எவையெவை சொல்லியு மெவ்வகை வேண்டியும்
அவைகொள்ளை பயிலுன் னறிவிற் புகுந்திலை (௩சா)
நின்மனந் தன்னி னினைத்தது முடித்தாய்
பின்னுனைச் சார்ந்தது பிரம சாயையுந் (௩எ)
தீவினை யதன்பின் செய்திடு வினையால்
மேவிய நன்மை விளைந்ததுங் கேண்மோ (௩அ)
ஈளையு மிருமலு மேர்ப்பு மிளைப்பும்
நாளினிற் பல்பிணி நரைதிரை மூப்பொடு (௩கூ)

வந்தன கண்டு வருமுனங் காலன்
எந்தன மிவனுற் றெடுமினென் றுந்தன் (சய)
பைந்தொடி மனைவி பாற்றா தேவினை
அந்தமின் னன்னுள் பந்தினங் குழமி (சக)
வேந்திதை யறியின் வெறுக்குமென் றஞ்சிச்
சார்ந்தில ருன்பாற் றளர்ந்துநீ பின்னும் (சஉ)
உன்னிட மிரக்கு மொருமறை யவனை
முன்வர வழைத்து முதுமறை யோர்க்குப் (சங)
பொன்மிக வழங்குவன் போய்க்கொடு வாவென
அன்னவ னோடி யழைத்தன னனேக (சச)
அந்தண ருன்னியல் பறியா ராகி
வந்துனைக் கண்டு மனவெறுப் படைந்து (சரு)
பழிபவ மஞ்சாப் பாவியுன் பெயரை
மொழிபவர் கேட்பவர் மூழ்குவர் நரகிற் (சசா)
தீதுறு வழியிற் றேடிய பொருளைக்
காதலித் தேற்போர் கைத்தவம் பாழாம் (சஎ)
ஆதலி னிங்கெடு மடவியி லொருபால்
மாதுமை மைந்தன் மதகரி முகவன் (சஅ)
தக்கவர் போற்றுந் தனிமுதற் பெருமான்
விக்கினந் தீர்க்கும் விநாயகக் கடவுள் (சகூ)
வாழ்தரு கோயில் வளங்குறை வாகித்
தாழ்வுற நிற்குந் தனமுள கொடுபோய் (ருய)
ஆங்கதை முன்போ லழகுற வமைத்து
நீங்கிய பூசனை நீமுறை செய்யின் (ருக)
ஐங்கரக் கடவு ளனுக்கிர கத்தால்
இங்கிதம் பெறுவா யென்றவர் சென்றார் (ருஉ)
சொற்றன வனைத்துஞ் சோர்வறக் கேட்டு
நற்றது மதியென நம்பி நடந்து (ருங)
கம்மியர் பலரைக் கதுமென வழைத்து
மும்மத வேழ முகனுறை கோயிற் (ருச)
திருப்பணி யாவுஞ் செவ்வே நடத்தினை
விருப்பொடு தொன்னூல் விதிவழு வாமல் (ருரு)

வில்லுமிழ் மணியால் விரிசுடர்ப் பொன்னாற்
சொல்லரு வெள்ளி தூநிறக் கல்லால் (௫௬)
விண்ணுயர் சிகரம் வியன்மதிள் கோபுரங்
கண்ணகல் வாயில் கவினெடும் வீதி (௫௭)
நந்தன வனங்க ணறுமலர்த் தடாகம்
பந்தியி லாக்கிப் பழமையிற் சிறப்ப (௫௮)
அன்பொடு நாளு மணிவிழ வாற்றி
இன்புறு நாளி லிசைவய தொழிய (௫௯)
அந்தகன் றாதுவ ரதிவிரை வாக
வந்தன ருன்னுயிர் வெளவிக் கொடுபோய் (௬௰)
முன்விடத் தருமன் முழுமையு முணர்ந்து
துன்னடை யோய்நீ சொல்லரும் பாவம் (௬௧)
நாளும் புரிந்தனை நன்மையு மொன்று
வேழ மாமுக விநாயகன் றிருப்பணி (௬௨)
சிந்தனை கொண்டு செய்தனை யதனால்
வந்தது நன்மை வரலா றிதுவாம் (௬௩)
இருவகை வினைபோ லெய்துவ போகந்
தனைமிசை நீபோய்ச் சார்ந்தவை நுகர்வாய் (௬௪)
முன்னெது வேண்டும் மொழிகென வின்பந்
தன்னைநீ கேட்டாய் தந்தனன் வந்து (௬௫)
மன்னவ னாகி வாழ்ந்தனை சிலநாள்
பின்னுனைப் பற்றிய பிரமசா யையினால் (௬௬)
இன்னலுக் காளா யிங்கிலை கொண்டாய்
அன்னதுந் தீரு மருங்கவ லொழிகென (௬௭)
மெய்த்தவப் பிருகு விளம்பின னெல்லாம்
வித்தக வேந்தன் மெய்யென நம்பான் (௬௮)
ஐயங் கொண்டன னப்பழி தன்னால்
மெய்யினி லனேக பறவைகள் தோன்றிச் (௬௯)
சுற்றின மேனி துகள்படக் கொத்திப்
பற்றின பிடுங்கின பறித்தன ரத்தம் (௭௰)
ஆறெனப் பாய்தர வாற்றா னாகித்
தேறிய முனிவர தேசிக வோலம் (௭௧)

வேதிய வோலம் வித்தக வோலம்
பாதகப் புட்குலம் பறிக்குதென் னுயிரைக் (எஉ)
காத்தரு ளென்னக் கையெடுத் தேத்தினன்
தோத்திரஞ் செய்தனர் தோகையு மமைச்சருந் (எங)
தேவரு முனிவருந் திகைத்துள்ளங் கலங்கி
யாவரும் போற்றப் பிருகுவு மிரங்கி (எச)
உங்கா ரஞ்செய வொழிந்தன புட்குலம்
இங்கோ தியதை யேற்றிலை யதனால் (எரு)
இப்பழி நேர்ந்த தினிப்பிற மூமன்
முப்பழம் நுகரும் மூடிக வாகனன் (எசு)
பூங்கழ னிதமும் போற்றெனச் சாற்றி
ஆங்கொரு கலசந் தனிற்புன லள்ளி (எஎ)
உன்னரு விநாயக மந்திர மோதி
மன்னவன் மீது மரபொடு தெளிப்ப (எஅ)
அக்கணத் தவன்பா லகோர முகத்தொடு
பொக்கென வந்தோர் பூதம் பிறந்து (எகூ)
உண்ணுது மிவனை யொருங்கென வலறக்
கண்ணுறு முனிவன் கடிந்து வெருட்டி (அய)
மாமரப் பொந்தின் மறையெனப் பணிப்ப
ஏமுறச் சென்றம் மரத்துட னெரிந்து (அக)
பொன்னுருக் கொண்டோர் மறையவ னாகி
முன்னர்க் குறுகி முனிவனைப் போற்றி (அஉ)
மன்னவ னெனைமுன் வதைத்தகா ரணத்தால்
அன்னவன் றனையா னடைந்துமெய் வருத்தி (அங)
ஐங்கரக் கடவு ளடிகணின் னருளால்
இங்கிதோ நற்கதி யெய்தின னென்று (அச)
கூறிமுன் னெய்திய குருமணி விமானம்
ஏறிவிண் போந்தன னிப்பால் யாவரும் (அரு)
அற்புதக் களிற்றை யாரண முனிவனைப்
பொற்புற வேத்திப் போற்றி மகிழ்ந்தனர் (அசு)
அப்பால் முனிவர னரசனை நோக்கி
மெய்ப்பா மிசைகொள் விநாயக புராணங் (அஎ)

கற்றுள னந்தக் காரண மதனாற்
சுற்றிய பிரம சாயை தொலைந்தது (௮௮)
மற்றுமுன் னோய்க்கு மருந்துமக் கதையே
உற்றதைக் கேட்பி னுத்தம மாகும் (௮௯)
மாதவஞ் செய்து மறையவ னேற்று
வேத வியாதற் கியம்பினன் மேனாள் (௯௰)
அவன்பால் யானு மறிந்தவிப் புராணத்
தவஞ்சேர் மான்மியஞ் சாற்றரி தாகும் (௯௧)
முக்கல முனிபால் முறையொடு கேட்டுத்
தக்க னரசு தாழ்வறப் பெற்றான் (௯௨)
பவந்தொறு மீட்டிய பாவ மகற்றி
உவந்ததை நல்கி யுறுபிணி போக்கி (௯௩)
முத்தியை நல்கும் முதன்மைய தான
அத்தகு புராணக் கேள்வியென் றறிமின் (௯௪)
குலாசா ரத்தொடு கோதக லொழுக்கம்
எலாமுடை யோரே யிக்கதைக் குரியார் (௯௫)
நல்லொழுக் கில்லா நாத்திகர் கேட்கச்
சொல்லினெஞ் ஞான்றுந் துயர்க்கிட மாகும் (௯௬)
இப்பெருங் கதையை நினக்கிங் கிசைப்பாம்
அப்புன லாடி வாவெனப் புகன்றான் (௯௭)
அம்முனி பெயரா லங்குள தீர்த்தஞ்
செம்மலு மாடித் திருநீ றணிந்து (௯௮)
வந்தடி போற்ற மாதவன் மகிழ்ந்து
முந்துசங் கற்பம் முறையொடு வகுத்தான் (௯௯)
அத்தொடு குட்ட மழிந்தவ னாக்கை
வித்தகப் பொன்போல் விளங்குறக் கண்டார் (௱)
ஆடினர் பாடின ரம்முனி வரன்பதஞ்
சூடினர் தலைமிசை சொரிந்தலர் போற்றினர் (௱௧)
கற்பமொன் றேசய விப்பலன் காணில்
அற்புதக் களிற்றி னருங்கதை முழுதும் (௱௨)
உற்றுளங் கேட்பி னுலகினெப் பலனும்
பெற்றிட லாம்பிச காதெனச் சொல்லி (௱௩)

ஆயிழை சுதன்மையு மமைச்சரும் மருங்கு
மேயினர் பிருகு விளம்பலுற் றனனே (௱௪)

உ௱௬௰

## வியாசமுனிவர் பிரமதேவனை யடுத்து உபதேசம் பெறல்.

பத்தியிற் சிறந்த பராசர முனிவன்
வித்தகப் புதல்வ னாகிய வியாதன் (௧)
இந்நிலத் துள்ளோ ரினிதுணர்ந் தொழுகத்
தொன்மறை நான்கைத் தொகுத்துச் செய்தபின் (௨)
அம்மறை வழியே மிருதியு மறிவான்
விம்முறு புராணமும் விரிக்கப் புகுந்தான் (௩)
பார்க்கப் பார்க்கப் பயன்றெரி யாமல்
வாக்கொடு சிந்தை மனங்கலை வாகிப் (௪)
பொன்னறுங் கமலப் புத்தே ளிடம்போய்த்
தன்மனத் துயரைச் சாற்றின னவனும் (௫)
மிக்குயர் தவத்து வியாதனை நோக்கி
எக்கரு மத்தை யெவர்முயல் போதுங் (௬)
கணபதி பாதங் கருத்துற வாழ்த்திக்
குணமொடு முயல்வர் கொண்டநின் செருக்கால் (௭)
அன்னது செய்திலை யாரண முகத்தின்
மின்னிய பிரணவம் விநாயக வடிவே (௮)
மன்னிய வகையான் மறைமொழி காத்துப்
பின்னவில் புராணம் பேணித் தொடங்காத் (௯)
தன்மையால் விக்கினந் தந்தனர் விநாயகர்
முன்னவர் பூசனை முறையுட னாற்றிப் (௰)
பேசுதி நூலெனப் பின்னும் வியாதன்
பூசனை யியல்பைப் புகலெனப் புகல்வான் (௰௧)
அல்லலறுக்கும் விநாயகற் குரிய
சொல்லரு மந்திரத் தொகையெழு கோடி (௰௨)
அவைதமி லாறெழுத் ததிசிறப் புடைத்தாம்
இவையினு மோரெழுத் திணையிலா திருக்கும் (௰௩)

இத்தகு மந்திர மிரும்புன லாடி
உத்தம மனத்தை யொருவழி நிறுத்தி (௰௪)

இடரிலாப் புனித விடத்தினி லிருந்தே
அடைவுட ஞேதி னளக்கருஞ் சித்தி (௰௫)

எய்துமென் றிசைக்க விப்பரி செவர்முன்
செய்தன ரென்னச் செப்பலுற் றனனே (௰௬)

௩௯

## மூவருபாசித்து வரம்பெற்று விசுவரூபங்காணல்.

எண்ணறு தேவ ரிசைகொ டானவர்
புண்ணிய சித்தர் பொருவறு முனிவர் (௧)

உரகரோ டியக்க ரோதுசா ரணரும்
புரைதவிர் விஞ்ஞையர் போற்றுகின் றவரும் (௨)

பார்வளர் மானிடர் பல்வகை யோருஞ்
சீர்திகழ் பூசனை செய்தனர் மேனாள் (௩)

மூவரும் போற்றிய முறைமையைச் சுருக்கி
நாவிய லளவு நவிலுதுங் கேண்மோ (௪)

முன்னொரு பிரளய மெய்துழி முன்னோன்
தன்னருந் தத்துவ மெல்லா மொடுக்கிப் (௫)

பல்வகை யுயிரு மோய்ந்திடப் பண்ணி
அல்லற் பிரளய மகன்றதன் பின்னர் (௬)

முன்போ லுலகை முறையொடு செய்தற்
கன்போ டயனரி யரனென மூவரைத் (௭)

தந்தனன் றன்முக் குணங்களுக் கிசைய
வந்திடு நாளும் மற்றவ ரிருவரும் (௮)

பிரம மேதெனப் பெருவெளி முழுதும்
பரவியுந் தேடியும் பயனடை யாமல் (௯)

தேவராண் டாயிரஞ் சென்றிடு மளவும்
யாவரு முயலாப் பெருந்தவ மிழைத்தேம் (௰)

அத்தவம் நோக்கி யருள்செயக் கருதி
வித்தக முதல்வ விநாயகக் கடவுள் (௰௧)

கோடிசூ ரியர்போற் குலவொளி பரந்து
சாடவெண் டிசையுந் தந்தனன் றரிசனம் (௰௨)
அச்சமு மன்பு மடைந்துட னெழுந்து
மெச்சின மாடினம் விளம்பினந் தோத்திரம் (௰௩)
விகற்பமும் விகாரமும் விசேடமு மில்லாப்
புகலருங் குணத்தாய் பொற்பதம் போற்றி (௰௪)
பிரமமா யொளியாய்ப் பேருல காதிய
கரைதவிர் தத்துவங் கடந்தாய் போற்றி (௰௫)
பரமனு யேகனுய்ப் பதம்பணி வார்க்கு
வரமெலா முதவும் வள்ளலே போற்றி (௰௬)
உலககா ரணனு யுயிர்க்குயி ராகிப்
பொலிதரு முதல்வா பூரணு போற்றி (௰௭)
என்றின பலவு மிசைத்துநின் றேத்தக்
கன்றமு னிரங்கும் பசுவெனக் கணேசன் (௰௮)
அன்புடன் னேக்கி யருந்தவ முடையீர்
என்பெற வேண்டித் தவமிழைத் தீரென (௰௯)
நின்பத மலர்மே னீடிய பத்தியும்
அன்புமுண் டாக வருள்புரிந் தடியேஞ் (௨௰)
செய்திட வேண்டிய பணிகளுந் தெரிந்து
மெய்யுற வகுக்க வேண்மென் றிரந்தோம் (௨௧)
வேண்டிய படியே விக்கின மின்மையும்
நீண்டுயர் பத்தியும் நேர்பெற வுதவி (௨௨)
இராசத குணத்தி லெய்திய பிரமன்
இராசதத் துருவா யாவையும் படைக்கச் (௨௩)
சாத்து விதத்திற் சனித்திடு மாயோன்
சாத்து விதமாய்ச் சகலமுங் காக்கத் (௨௪)
தாமதத் துதித்த தாழ்விலா வுருத்திரன்
தாமதத் துருவாய்ச் சகலமுந் துடைக்க (௨௫)
என்றிவை தொழிலுக் கிசைந்தநல் லறிவும்
வென்றிகொள் வலியும் வேண்டுவ தெல்லாந் (௨௬)
தந்தனன் மேலுந் தாள்பணிந் தெந்தாய்
பந்திகொ ளுலகைப் படைத்திடு முறையும் (௨௭)

எனக்கரு ளென்றே னியாவையும் நோக்கத்
தனிப்பெருந் துதிக்கை தன்புழை வழியே (உ௮)
திருமலி வயிற்றுட் செலுத்தின னங்கே
அரியுட னரனு மடைந்தனர் மூவருங் (உ௯)
கண்டனங் கண்ணுற் கருத்து ளடங்கா
அண்ட வகைக ளளக்கருங் கோடி (௩௰)
ஆங்கவற் றொன்று ளடைந்துபார்ப் பளவிற்
பாங்கெழு கடலும் படர்தரை நடுவும் (௩௧)
மேல்கீ ழடர்ந்து விளங்குபல் லுலகும்
மாலறக் கண்டு மனமிக மகிழ்ந்தேம் (௩௨)
வெய்துயர் போக்கு விநாயக னருளால்
ஐவகைப் பூதமு மங்ஙனங் கண்டேம் (௩௩)
முந்திய வூழிக டொறும்மூ துலகைத்
தந்துகாத் தழித்த தலைவரைக் கண்டேம் (௩௪)
ஏதமின் மூவரு மெண்டிசைக் கிறைவரும்
ஆதப ருருத்திர ருந்தவ வசுக்கள் (௩௫)
மதித்திடு நவகோள் மருத்துவர் கின்னரர்
கதித்தகந் தருவர் கருடர்க ளியக்கர் (௩௬)
தன்னிகர் விஞ்சையர் சாத்தியர் சித்தரும்
பன்னக ருரகரும் பற்பல வமரரும் (௩௭)
அசுரரு மரக்கரு மவ்வவர் மாதரும்
இசைபெறு யோகியர் முனிவர ரொழில்சேர் (௩௮)
மானிடர் பலரையும் மகிழ்ந்தெதிர் கண்டேம்
கானமர் மிருகங் கனதிரட் பறவையும் (௩௯)
மலைகட னதிதடம் வகைவகை கண்டேம்
அலர்கிளைக் கற்பக மாதிய தருக்கள் (௪௰)
பூங்கொடி யம்புய மாதிய பூமலர்
ஆங்கு சராசர மனைத்தையுங் கண்டேம் (௪௧)
நால்வகைப் பிறப்பு நவிலெழு தோற்றம்
நாலிரு பத்து நான்குநா றுயிரம் (௪௨)
பேதக யோனிப் பிறப்புக ளெல்லாம்
ஏதமி லண்டந் தொறுமிவ் வகையே (௪௩)

கண்டுகண் டெண்ணறு காலங் கழித்துப்
பண்டுறு வெளியே படர்தர நோக்கினம் (சச)

ஆற்ற லிலேமா யானைமா முகனைப்
போற்றினந் துதிக்கைப் புழைவழி யெனையும் (சரு)

மற்றவ ரிருவரைச் செவியிரு வழியும்
உற்றிட வெளிவிட் டுருக்கரந் தனனே (சசா)

ஙருஉ

# பிரம சிருட்டிப்பு.

புறம்பியான் வந்தபின் பூவுல கதனைத்
திறம்பிலா முறையிற் செய்திட முயன்றேன் (க)

செய்வன வெல்லாந் தீயன வாகி
எய்திய விகார மிடர்பல நேர்ந்தன (உ)

ஒருதலை யிருமுகம் மூவிழி நால்செவி
விரிதரு மைவாய் விளங்கறு நாசி (ங)

எழுகர மிவ்வகை யெண்ணறு விகாரப்
பழுதுருக் கொண்டு படர்ந்தன படைப்பெலாந் (ச)

துள்ளின வார்த்தன சூழ்ந்தன வென்னைத்
தள்ளின வீழ்த்தின சாடின வெற்றின (ரு)

இம்முறை செய்யு மிடும்பைக ளெல்லாம்
மும்மத வேழ முகன்செய லென்றே (சா)

எண்ணமொன் றுள்ளத் தெழும்பலும் யோகம்
நண்ணியா னிருப்ப நலம்பெறு காட்சி (எ)

கிட்டிய முறைகேள் கிளரொழு கடலின்
எட்டிய புனலி லெழும்பிய பழுமரத் (அ)

தோரிலை யதன்மே லொருசிறு பாலகன்
சீரிய கண்டுயில் செய்வது கண்டு (கூ)

கையெறிந் தெழுப்பக் கண்மலர் திறந்து
மெய்சிறந் திலகும் வேழமா முகத்தொடு (௰)

திவ்விய கோலந் தெரித்தருள் செய்தான்
பவ்வமி லெந்தாய் படைத்திடு தொழிலுக் (௰க)

கென்னைப் படைத்தா யிடர்பல வாகிப்
பின்னைப் படுத்தும் பேதக மறியேன் (௰௨)
காத்தருள் செய்கெனக் கைகுவித் திருதாள்
ஏத்தின னெம்பிரான் முறுவலித் திசைக்கும் (௰௩)
மறையவ கேள்நீ மண்ணொடு விண்ணுக்
கிறையவன் யானென் றினிதுணர்ந் திருந்தும் (௰௪)
தோற்றுவித் தாண்டு துடைப்பதென் னாணையென்
றேற்றிலைப் போலும் யாவையும் நீயே (௰௫)
செய்பவ னென்னுஞ் செருக்கொடு செய்தாய்
எய்திய விக்கின மிதுகெட வேண்டின் (௰௬)
இன்புறு மந்திர மேகாக் கரத்தை
அன்புட னோதென் றருளின னதுமுதல் (௰௭)
உற்றநல் யோகத் துதவிய மனுவைப்
பொற்கம லத்திற் பொருந்துற வோர்கால் (௰௮)
வைத்தொரு நிலையின் மனங்குலை யாமற்
பத்தியி லோதினன் பன்னிரு வருடஞ் (௰௯)
சித்த மிரங்கிச் சிவபுரத் தரசு
வித்தகப் பெருமான் விநாயகக் கடவுள் (௨௰)
வந்தெதிர் நிற்ப மலர்ப்பத மிறைஞ்சி
எந்தா யேழைக் கென்றுமுன் பதமேற் (௨௧)
சிந்தனை செலவுஞ் செய்பணிக் கிடுக்கண்
வந்துறு வண்ணம் வரமரு ளென்றேன் (௨௨)
கேட்டன வெல்லாங் கிருபைகொண் டருளிப்
பாட்டளி துதையும் பங்கயத் திறைகேள் (௨௩)
எமக்குள வாகு மென்னறு சத்தியுட்
டமக்கிணை யில்லா ஞானமுங் கிரியையும் (௨௪)
என்றிசை சத்திக ளிருவரை மனத்துள்
ஒன்றுற விருத்தி யுலகெலாம் முறையே (௨௫)
பொற்புறப் படையெனப் புகன்றுருக் கரந்தான்
கற்பக னம்முறை கரந்தபின் யானுஞ் (௨௬)
சத்திக ளிருவரைத் தவமனத் தெண்ணிப்
பத்தியில் வேண்டிப் பரவின னிருவரும் (௨௭)

மட்டவிழ் கோதை மதிநிகர் வதனக்
கட்டழ கமைந்த கன்னிய ராகி (உ௮)
இசைபெறு சித்தி புத்தியென் றிசைக்கும்
வசையறு நாமம் வகுத்துமுன் வந்தார் (உ௯)
எந்தவம் மாழா திங்கெழுந் தருளி
வந்திடு மன்னேயீர் மக்களா யென்பால் (௩௰)
இனிதமர்ந் தென்னைக் காமினென் றிரந்தேன்
மனதிசைந் தவ்வரம் மகிழ்வுறத் தந்தார் (௩௧)
பெற்றபின் னவ்வரம் பேரருட் கடலாங்
கற்பகக் கடவுளைக் கருத்திடை முறையே (௩௨)
பொற்பமர் சித்தி புத்தியோ டிருத்தி
அற்புதப் படைப்பி லாரம் பித்தேன் (௩௩)
மைந்தர்க ளெழுவரை மனத்தொழி லாலே
முந்துறத் தந்து மூதுல கெல்லாம் (௩௪)
படைத்திடு மென்னப் பணிந்தவர் தொழுது
தொடுத்தனர் யோகந் துறவிகள் சாதனை (௩௫)
முற்றிய தவத்தின் முடுகிய வீடு
பெற்றனர் போகப் பின்னுமோ ரெழுவர் (௩௬)
மைந்தரைப் பெற்றேன் மற்றவர் தாமும்
முந்திய பேர்போன் முத்தியுற் றார்பின (௩௭)
அருண்மிகு சனக ராதிய பேரை
வரமிகு நாரதர் தம்மையும் வழங்கி (௩௮)
எந்த னுடம்பி லியாவையு மீன்றேன்
அந்தணர் குலமு மங்கியும் முகத்துற (௩௯)
மன்னவர் புயத்தில் வணிகர்வார் தொடையில்
பின்னிரு காலிற் பிறந்தனர் சூத்திரர் (௪௰)
திங்களு மப்பாற் சிந்தையிற் றோன்றினன்
வெங்கதிர்க் கடவுள் விழியிற் பிறந்தான் (௪௧)
இந்திரன் முகத்தி லெழும்பினன் செவியில்
வந்தன பிராணன் முதலிய மருத்துகள் (௪௨)
உந்தியில் வான முயர்திரு முடிமேற்
பந்திகொ ளிமையோர் பதங்களும் பாதந் (௪௩)

தன்னிலிப் பூமியுஞ் சராசர மனைத்தும்
இன்னண மாக யாவையும் படைத்தேன் (௪௪)
என்றுமா மறையோ னியம்பலும் வியாதன்
நன்றுமூ னுரைத்த நங்கைய ரிருவரும் (௪௫)
புதல்விய ராகப் பொருந்திய பின்னர்
எதுகதி பெற்றா ரிசைத்தியென் றனனே (௪௬)

௩௯அ

# திருமணம்.

மாமறைக் கிழவன் வகுத்துரை செய்வான்
காமரு பூங்குழற் கன்னிய ரிருவரும் (௧)
எவ்வுல கத்து மிணையிலா மேன்மை
யவ்வன சொரூப வெழினலம் மிகுத்து (௨)
வாழுமந் நாளின் மகரயாழ் முனிவன்
வேழமா முகனைப் பணிந்திட வேண்டிக் (௩)
கண்ணகல் வளங்கூர் கைலையங் கிரியை
நண்ணிமற் றுங்கோர் நாயக மெனவே (௪)
தேவர்கண் மத்தியிற் சிங்கா தனமேல்
மேவிய வுத்தம விநாயகக் கடவுளைக் (௫)
கண்டடி தாழ்ந்து கைதொழு திறைஞ்சிப்
பண்டரு மியாழிற் பலவிசை பாடிப் (௬)
பேரருள் பெற்ற பின்னிவை சொல்வான்
காரமர் மேனிக் கற்பகக் களிறே (௭)
வேதனின் பாதம் வேண்டிமுன் னாளிற்
காதலிற் பெற்ற கன்னிய ரிருவரும் (௮)
பேரழ கனைத்தும் பிறழா தொருங்கமைத்
தீருருப் பெற்றாற் போல்வனப் பெய்தினர் (௯)
மெல்லிய பஞ்சின் மிகமிரு தாகிப்
புல்லிய வனிச்சப் பூவினுங் குழைந்து (௰)
செந்தா மரைபோற் சிவந்தவுள் ளடிகளும்
பந்திகொ ளணிசேர் பல்சிறு பவளத் (௰௧)

துண்டுக ணிணையிற் றெருக்த்தபோ லுவமை
விண்டுரைக் கரிதாய் விளங்குமென் விரல்களும் (௰௨)
புத்தகஞ் சேர்த்துப் பொருத்திய வகைபோற்
சித்திரத் தமையாச் சிறுபுறந் தாளுங் (௰௩)
கதிர்மணி யிழைத்த கந்துகம் போலக்
குதி[illegible]தராசிற் குலவிய பரடும் (௰௪)
பரவொலித் தண்டை பாடகம் பயில
வராலெனச் சிறந்து வளர்கணைக் காலுந் (௰௫)
துலங்குற விரித்துச் சொல்லுதற் கரிதாய்
இலங்கொளி பரந்த விருமுழந் தாளும் (௰௬)
அரம்பையை நேரு மணிதிகழ் குறங்கும்
நிரம்பிய லக்கணம் பொருந்திய நிதம்பமும் (௰௭)
மாலுறு மிணையின் வனப்புறு சகனமும்
ஆலிலை போல வமர்திரு வயிறும் (௰௮)
ஒழுக்கெறும் புறழு மூரோமநற் பந்தியும்
இழுக்கறு புனல்மாட் டெய்திய சுழிபோல் (௰௯)
உந்தியில் வாய்ந்த வொப்பிலாச் சுழியுஞ்
சுந்தர மின்போற் றுவள்கொடி யிடையும் (௨௰)
அரும்பிள மலர்போ லழகிய தென்னங்
குரும்பையிற் சிறந்து குவியிள முலையும் (௨௧)
வேயெனப் பொலிந்து விளங்கிய தோளும்
பாயொளித் தொடிசேர் பணிமலர்க் கரங்களுங் (௨௨)
குற்றமில் பவளக் கொம்பெனச் சிறந்த
நற்றகு விரல்களும் நவையிலா நகமுஞ் (௨௩)
சங்கொடு கமுகைச் சரிசொலப் பிறழ்ந்து
பொங்கிய வணிசேர் பொருவறு கழுத்துங் (௨௪)
கொவ்வையங் கனிபோற் கோலவா யிதழுஞ்
செவ்விய முத்திற் சிறந்தபல் வரிசையும் (௨௫)
எள்ளலர் போல வெழின்மிகு மூக்கும்
வள்ளைவார் தண்டின் வயங்குறு காதும் (௨௬)
வேலொடு சேலை வெருட்டிய விழியுஞ்
சாலவுஞ் சிறந்து தனுநிகர் புருவமும் (௨௭)

இளம்பிறை போல விலங்குபொன் னுதலும்
வளம்பெறு முகிலின் வண்ணமாங் கூந்தலுந் (௨௮)
திருமக ளுறைந்த செந்தா மரைபோற்
பொருவற மலர்ந்த பூரண முகமுந் (௨௯)
தேனொடு பாலுந் தெள்ளிய வமிழ்தும்
போனல வின்பம் புணரிசை மொழியும் (௩௰)
பானிற வன்னம் பயிலுமென் னடையுங்
கானக மயில்போற் கவினுறு சாயலும் (௩௧)
பொருந்தினர் வனப்பெலாம் பூரண மாகத்
தெரிந்துரை யெவருஞ் செய்வதிங் கரிதால் (௩௨)
இவ்வகை தமக்குத் தாமே யிணைபெறும்
அவ்விரு மாதரை யடிகளின் பாலே (௩௩)
மன்றல்செய் விக்க மலரவன் னினைந்தான்
என்றின பலவு மியம்பிமீள் வழியிற் (௩௪)
கன்னியர் தம்மைக் கருத்தொடு கண்டு
பொன்னன வன்னப் பூவையி ருங்கள் (௩௫)
மாதவம் போலும் மதகரி முகவன்
காதலி னும்மைக் கடிசெய நினைந்தான் (௩௬)
என்றெம் பிரானி னெழினல மெல்லாம்
ஒன்றிய வுள்ளத் துறைபுக வோதிச் (௩௭)
சென்றன னப்பாற் செல்வியர் சிந்தனை
மன்றலி னூடும் வகைமையாற் கண்டு (௩௮)
கயிலயங் கிரிபோய்க் கறைமிடற் றண்ணலை
மயிலுமை யோடு மகிழ்வுறப் பணிந்து (௩௯)
நிகழ்ந்தவை யாவும் நேர்பெற வோதி
மகன்றமி யேன்றன் மாதரை மணப்ப (௪௰)
அருளுமென் றிரந்தே யன்னதற் கிசைந்தார்
பெருநிதி படைத்தோன் பெற்றியின் மகிழ்ந்து (௪௧)
சத்திய லோகஞ் சார்ந்தவ னிறைந்த
வித்தக முனிவர் விண்ணவ ரெலாரையுந் (௪௨)
தங்கணை யகிமார் தம்மொடு வம்மென
மங்கிலங் கூறி வரவழைத் திட்டேன் (௪௩)

மாதவ வசிட்ட ளுதிய மாதவர்
சீதரன் முதலிய தேவர் கூட்டமும் (சச)

பாதலத் தவரும் பார்த்திபர் யாவருங்
காதலி மாரொடு களித்துவந் தீண்டினர் (சரு)

மனப்பெரு முயற்சியால் வகுத்தொரு மாநகர்
வனப்பெலா முருக்கி வார்த்துவைத் ததுபோல் (சசு)

வென்றிகொள் புகழான் விச்சுவ கன்மன்
மன்றலுக் கிசைந்த மண்டப மமைத்தான் (சஎ)

முத்தின் றோரணம் முதிர்குலை வாழை
கொத்தொடு பூகங் குளிர்மணிப் பந்தர் (சஅ)

பத்தியி னிலவப் பற்பல பூரண
வித்தக கும்பம் வெகுநிரை விளங்க (சகூ)

நிரைபெறத் தூக்கிய நிறைமது மாலிகை
பரிமள மிகுத்துப் பாதலம் பரவத் (ருய)

தொகையற நிரைத்த சுடர்மணி விளக்காற்
புகவிட மின்றிப் புறம்பிரு ளகலப் (ருக)

பரவையி லெழுந்த பல்லிய மார்ப்பத்
தெரிவையர் குழுமிச் செய்திட நடனம் (ருஉ)

மன்றலுக் கேற்ற பொருளெலாம் வகைவகை
ஒன்றிய மண்டபத் துற்றவர் தொகுப்ப (ருந)

இப்பரி செல்லா மினிதுற வமைதலும்
மெய்ப்புகழ் நாரதன் வெள்ளி மால்வரை (ருச)

சென்றுரைத் திட்டான் சிவபிரான் றனக்கு
நன்றென வெழுந்தார் நந்தியை யனுப்பித் (ருரு)

தந்தி மாமுகத் தனிப்பெருங் கடவுளை
முந்துற வழைத்து முருகுயிர்த் திலகும் (ருசு)

பங்கயத் தவிசோன் பாவையர் தமைநீ
அங்கிமுன் வதுவை யாற்றிட வேண்டுந் (ருஎ)

திருமணக் கோலஞ் செய்கென விநாயகன்
பெருமகிழ் வெய்திப் பிதாவுரைப் படியே (ருஅ)

புனல்படிந் தணிசேர் பொற்றுகில் புனைந்து
கனமணித் திரளாற் கவினுறு மணியும் (ருகூ)

மதுமலர்த் தொடையும் மற்றருங் கலன்களும்
விதம்வித மணிந்து விளங்கிய கோலம் (௩௰)

பொற்புற வெழுந்தான் பூத கணங்களும்
வெற்றிவேற் கரனும் வீரபத் திரனும் (௩௧)

மற்றையோ ரெல்லாம் மருங்கு சூழ்வரப்
பெற்றவ ரிருவரும் பெருங்களிப் புடனே (௩௨)

இடப வாகனத் தேறினர் வழியிற்
படர்தர யானும் பண்ணவ ருடனே (௩௩)

போயங்கெதிர் தாழ்ந்து புதுமலர் தூவி
வாய்ந்தநன் மணிநகர் வலமுறக் கொடுபோய் (௩௪)

மண்டபத் தடைதலும் வாணிபொற் கலசங்
கொண்டுநீர் வார்ப்பக் குணமிகு கணேசன் (௩௫)

பங்கய மனைய பதத்தையான் விளக்கிச்
சங்கர னுமையைத் தவிசிருத் தியபின் (௩௬)

வேலவ னிந்திரன் விண்ணவர் யாவருங்
கோலமிஞ் சியசீர்க் குருமணி யிமைக்கும் (௩௭)

ஆதனத் தமர்ந்தா ரைங்கரக் கடவுளுங்
கோதைய ராடலும் பாடலுங் குறித்துப் (௩௮)

பொலிமணித் தவிசிற் பொற்பவிற் றிருந்தான்
மெலிதரு மருங்குன் மெல்லியர் பல்லோர் (௩௯)

வெள்ளிலை பாகு வியன்கத லிப்பழம்
தெள்ளிய பூரந் திரள்படு தேங்காய் (௪௰)

கள்ளுயிர் கோதை கலன்பல பட்டும்
அள்ளி நிறைத்த வணிதிகழ் தட்டஞ் (௪௧)

செங்கையி லேந்தித் திசைகட லொலிபோன்
மங்கல வாத்தியம் மலிதர மாநகர் (௪௨)

தொன்னெடு வீதி சூழ்ந்துபோய் மீண்டு
மன்னிய வெண்வகை மங்கலப் பொருளொடு (௪௩)

பொற்பமுன் னிரையிற் பொலிதர வைத்தார்
கற்புய ருமையாள் கடைக்கண் கனிப்பத் (௪௪)

திருமக ளதிதி திகழுயி ராணியும்
பொருவில்சித் திக்குப் பூம்புன லாட்டித் (௪௫)

திருமணக் கோலஞ் செய்தன ராங்கே
பொருவறு புத்தியைப் புகழுன சூயையும் (எசா)
இரதியுஞ் சாலியு மெழின்மிகப் பிறங்கப்
பரிமள நறும்புனல் பரிவுட ளாட்டிப் (எஎ)
பூந்துகில் சாத்தியும் புதுமலர் வேய்ந்தும்
ஆய்ந்தநற் பணிக ளழகுறப் புனைந்தும் (எஅ)
இருவரு மிருவர்க் கீடலா லிவருக்
கொருவரும் பிறவீ டொப்பிலை யென்று (எகூ)
மாமணக் கோலம் மகிழ்வுறச் செய்து
காமரு கணேசன் கவினிரு மருங்கில் (அ௰)
கொடுவந் திருத்தினர் தருவளர் கொடிபோல்
நெடுமா தவத்தி னிகரிலாச் சனகன் (அக)
போற்றுமா மறைநூல் புகல்வழி வழாமற்
சாற்றுசங் கற்பந் தனைமுடிப் பித்து (அஉ)
வாரண முகத்தோன் மங்கையர் தமையான்
நீரொடு கொடுப்ப நேயமா யேற்றபின் (அங)
சூழணிக் குண்டஞ் சுத்திசெய் தாங்கே
நீள்தவச் செந்தீ நேர்பெற வெழுப்பிச் (அச)
செய்தன னோமஞ் சிந்தைகொண் டனையான்
ஐயனு மெழும்பி யரிவையர் பதந்தொட் (அரு)
டம்மிமேல் வைத்து மாகுதி வளர்த்தும்
மும்முறை நற்பொரி முறையொடு தூவியும் (அசா)
எரிவலஞ் சூழ்ந்து மிம்முறை மன்றற்
குரியன பலவுங் குறையா தனுற்றத் (அஎ)
தந்தைதா யிருவர் தாளிணை மலரைப்
பைந்தொடி யாருடன் பணிந்துமுன் னின்றான் (அஅ)
அன்னவர் மகிழ்வுற் றாசிகள் கூறி
நன்மணித் தவிசி லமர்ந்திடச் செய்து (அகூ)
மாதவ நாரணன் மதிமுகம் நோக்கினர்
மேதகு மன்னோன் வீழ்ந்தடி பரவி (கூ௰)
இந்திர னெடுத்தெடுத் திதம்பெற நீட்ட
முந்துதாம் பூலந் தேவருக் களித்தான் (கூக)

ஈண்டிய தருக்கள் பரிசன மெலார்க்கும்
வேண்டிய பலவும் விருப்பொடு வழங்கின (௬௨)
இம்முறை பொருளோ டிசைபல வரங்கள்
அம்மை பாக னருளிய பின்னர் (௬௩)
மங்கையுந் தானும் மண்டபம் நீங்கி
அங்கன மொருபா லமர்ந்தினி திருப்ப (௬௪)
ஐங்கரப் பெருமா னணிதிகழ் வீதி
பங்கமில் சூழப் பரிவுளங் கொண்டு (௬௫)
மலைநிக ரயிரா வணமிசை யிவரச்
சிலைநுத னெடுங்கட் டேவிய ரிருவருஞ் (௬௬)
செப்பருங் கனகச் சிவிகையி லெழுந்தார்
ஒப்பருங் கடல்போ லொலிசெயப் பல்லியம் (௬௭)
மங்கல வாழ்த்தொடு மங்கையர் சூழ்வரத்
துங்கவெண் சாமரை சோர்விலா திரட்ட (௬௮)
முத்தின் குடைபல மொய்த்துக் கவியச்
சித்திரக் கொடிகள் சேணள வளாவக் (௬௯)
கின்னரர் குழுமிக் கீதம் பாட
அன்ன மென்னடை யரம்பைய ராடப் (௭)
புகழ்மிகு நந்தியும் பொற்பிரம் பேந்தி
மிகநெருக் குற்ற சனத்திரள் விலக்க (௭௧)
மண்டிய தேமலர் மாரியிற் பொழியக்
கண்டவர் மிக்க களிப்பிடை மூழ்க (௭௨)
இப்பரி சாக வென்னை யாளுடை
மெய்ப்புகழ் விநாயகன் மெல்லியர் தம்மொடும் (௭௩)
பன்னெடு வீதி பவனிபோய் வந்து
பொன்னெடுங் கோயில் புகுந்தன னப்பால் (௭௪)
தருவொடு தேனுஞ் சங்கமுந் தாமரை
திருவளர் சிந்தா மணியினத் திரள்களும் (௭௫)
வெவ்வே றுருபு வியப்புறத் தாங்கி
அவ்வவர்க் கேற்ப வளித்தன விருந்து (௭௬)
விந்தைகொண் மங்கல வினையெலாம் முடிந்தபின்
தந்த முலகுக் கெழுந்தனர். சகலரும் (௭௭)

சங்கர னுமையுந் தந்திமா முகனும்
மங்கைய ரிருவரும் மற்றின குழாத்துடன் (௱அ)
கயிலையங் கிரிபோய்க் கண்ணுத லாங்கே
இயலுறு மைந்தொழி லினிதிழைத் திருப்பத் (௱௯)
தன்னுல கடைந்து தந்திமா முகவன்
பொன்னன தலைவியர் போகமுற் றிருந்தான் (௱௰)
மன்றலை யன்று வளம்பெறக் கண்டும்
இன்றுரை செய்து முய்ந்தன னென்று (௱௰௧)
வேத னுரைத்தான் வியா தனுக் கென்று
மாதவப் பிருகு வகுத்தன னன்றே (௱௰௨)

ஙௗ௰

## விண்டு சடாக்கர மனுட்டித்தல்.

பின்னுமப் பிரமன் வியாதனை நோக்கி
இன்னு மோர்கதை கேளென விசைப்பான் (௧)
பண்டொரு காலம் பாற்கடற் பள்ளி
விண்டுகண் டுயிலு மேல்வையி னுங்கவன் (௨)
காதிருந் தேமது கயிடவ ரென்னும்
பாதக வசுரர் பயமுறத் தோன்றி (௩)
அனலுமிழ் விழியு மலறிய விடிபோற்
கனையொலிக் குரலுங் கருநிற வுருவும் (௪)
வான்பிறை போன்று வயங்குவெண் பல்லும்
ஊன்பயில் பேழ்வா யுடையரு மாகிக் (௫)
கண்வளர் மாயனைக் கடிந்துநிந் தித்து
விண்வளர் தேவர் முனிவரை வெருட்டி (௬)
மன்னெடும் புவியின் மல்குயி ரலைத்திங்
கென்னையும் வருத்தற் கெய்தின ரிருவரும் (௭)
முந்திய பிறப்பின் முநிவர மென்பால்
வந்துபெற் றிம்முறை மாயவன் காதிற் (௮)
பிறந்தன ரவன்கரத் தன்றியிப் பெற்றியோர்
இறந்துபட் டழியா ரென்றியா னுணர்ந்து (௯)

கரந்துருச் சென்று கண்ணனை யடுத்து
நிரம்பிய துயிலை நீத்திடச் செய்தேன் (௰)
தேவரு முனிவருந் திருப்பாற் கடலை
மேவினர் தொழுது வெகுமுறை யிட்டார் (௰௧)
நித்திரை நீத்த நெடுமா லென்முகம்
பத்தியி னோக்கிப் பண்ணவ ருடனே (௰௨)
இவணுற விளைந்த கருமமே தென்ன
அவுணர்செய் கொடுமை யடங்கலுஞ் சொல்லி (௰௩)
அன்னவர் நின்செவி யழுக்கிற் பிறத்தலின்
அன்னையுந் தந்தையும் நீயே யாகினை (௰௪)
பழிக்கிடங் கொடாமற் பாதக ரவரை
அழித்திட வேண்டு மமர்தொடுத் தென்றேன் (௰௫)
நன்றென வெழுந்து நலிந்தபண் ணவரைப்
பொன்றுள மஞ்சேல் போமினென் றனுப்பிப் (௰௬)
போர்க்கிசை கோலம் பொலிவுறப் பூண்டு
கூர்ப்படை பலவுங் கொண்டெதிர் போந்து (௰௭)
வலம்புரி பவள வாயிடைச் சேர்த்துக்
கலங்கொலி செய்தா னவுணர்க ளிருவரும் (௰௮)
இவ்வொலி சங்கத் தெழுப்பிய வீரன்
பவ்வமில் பாற்கடற் பள்ளியான் போலுந் (௰௯)
தோண்மலி தினவு தொலையுமின் றென்று
நீண்மலை யிரண்டு நெருங்கிய முறைபோற் (௨௰)
கூடின ரோடிக் கொதித்துள மிகலிச்
சாடினர் மாயனுஞ் சமரெதிர் புரிந்தான் (௨௧)
பத்திகொண் டெழுந்து பற்பல கூளிகள்
கைத்தலங் கொட்டிக் களித்துநின் றாட (௨௨)
வடித்தவெங் கணைபல மாரியிற் றாவிப்
படித்தலம் முழுதும் படுதுக ளாக்கினர் (௨௩)
வடவைகண் மூன்று வந்தம ராடலின்
அடலரி யேறுபோ லார்ப்பரித் திடுவார் (௨௪)
அண்ட வகுப்பெலா மணிகுலைந் தலையக்
கொண்டலி னீருங் குறைந்தற வற்றத் (௨௫)

தண்டுகை யேந்தித் தாக்குவர் பாசங்
கொண்டுசூழ் வந்து குறித்தெதிர் வீசுவர் (௨௬)
முடியொடு முடியைக் கிரியென மோதித்
தடநெடு மார்பொடு மார்புறத் தாக்கித் (௨௭)
தோளொடு தோளுந் தொடையொடு தொடையுந்
தாளொடு தாளுந் தகைவறப் பின்னிப் (௨௮)
பன்முறை மற்போர் படிமிசை புரிந்தார்
இன்னண மிகலிப் பன்னெடுங் காலம் (௨௯)
அருஞ்சம ராடியு மாற்றா துடைந்து
கரந்துதன் னுருவங் கண்ணனு மகன்று (௩௰)
வெள்ளி மால்வரை மேவியச் சாரலின்
உள்ள பூம்பொழி லோரிடத் தமர்ந்து (௩௧)
பண்ணுறு மியாழிற் பயினரம் புளர்ந்தான்
கண்ணுதற் பெருமான் காதுற விசைபோய் (௩௨)
நண்ணலுஞ் சிந்தை நனிமகிழ் கூர்ந்து
கண்ணனைத் தன்பாற் கணங்களை யேவி (௩௩)
முன்வர வழைத்து முகமலர் நோக்கி
நின்வர லாற்றை நிகழ்த்துதி யென்றார் (௩௪)
ஆடினன் பாடின னருமலர்த் தாளிணை
சூடினன் முடிமேற் றொழுதுவாய் புதைத்துத் (௩௫)
தானவர் பிறப்புஞ் சமர்விளைத் திடைந்ததும்
ஆனவை யாவு மறைந்தன னமலன் (௩௬)
செந்திரு வளருஞ் சீரணி மார்பா
முந்திநங் கணபதி பூசனை முடித்துப் (௩௭)
பிந்திவெஞ் சமரந் தொடுத்திடாப் பிழையால்
நொந்தனை யினியாம் நுவல்வதுங் கேட்டி. (௩௮)
விக்கினந் தீர்க்கும் விநாயகற் குரிய
தக்கமந் திரமா றெழுத்தையுஞ் சாற்றி (௩௯)
அன்பொடு வழிபட் டமர்க்களம் புகுந்தால்
இன்புறு வெல்வி யெய்துமென் றிசைத்தனர் (௪௰)
அருளிய விடைபெற் றவ்விட மகன்று
புரைதவிர் மாயன் போந்தணி புகழ்சேர் (௪௧)

சித்திகேத் திரமாந் திவ்விய தலத்தைப்
பத்தியி னண்ணிப் பரிவுட னமர்ந்து (சஉ)
சொல்லிய விதியிற் சோர்விலா துளத்திற்
புல்லவே ரம்பன் பொன்னுருப் பொருத்திக் (சங)
கருத்தொடு மனுவைக் கணித்தான் கணேசனுந்
திருத்தகு கோலத் தெரிசனந் தந்து (சச)
வேண்டிய வரமெலாம் விருப்பொடு நல்கித்
தாண்டரு வலிசேர் தானவ ரிருவரும் (சரு)
மாயையி னாலே மறைந்திருக் கின்றார்
நேயமோ டென்மனு நினைந்துநீ செல்லின் (சசா)
கண்ணெதிர்ப் பட்டுக் களத்திடை மடிவார்
விண்ணவ ருய்ந்திதம் மேவுவ ரென்று (சஎ)
அருளினன் மறைந்தபின் னவ்விடத் தாயன்
வரம்பெறு முறையை மாநிலம் மதிக்கச் (சஅ)
சித்தி விநாயக னெனப்பெயர் செப்பிப்
பத்தியோ டுருவம் பண்புற வமைத்து (சகூ)
நந்தன வனமும் நறும்புனற் றடாகமும்
பந்திகொள் வீதியும் பசும்பொனன் மதிலும் (ருய)
பொருவறு கோபுர வாயிலும் பொருந்த
ஒருமணிக் கோயி லொளிபெற வகுத்துச் (ருக)
சென்றன னசுரர் செருக்களம் நோக்கி
நின்றன னெதிரே நெடுஞ்சமர் தொடுத்து (ருஉ)
மடிந்தனர் திருமால் வந்தெனைக் கண்டு
முடிந்தவா றெல்லாம் மொழிந்தனன் யானுஞ் (ருங)
சித்தி கேத்திரஞ் சென்றாங் கெழுந்த
சித்தி விநாயக தேவனைப் பணிந்து (ருச)
வரமிகப் பெற்றேன் மற்றுமிக் கதையைக்
கிரமமாய்க் கற்பவர் கேட்பவர் சொல்வோர் (ருரு)
நித்திய வாழ்வு நிறைவுறப் பெறுவார்
சத்திய மென்று சதுர்மறை யோன்சொல (ருசா)
மேலு மிப்புகழ் விநாயக னருங்கதை
சாலவு முளதேற் சாற்றென வியாதன் (ருஎ)

வேண்டிட விசுவா மித்திரன் றன்னை
ஆண்டகை வீம னடுத்தரு ணல்மகப் (௫௮)
பேறுமுன் பெற்ற பெருங்கதை யொன்று
கூறுவல் கேளெனக் கூறலுற் றனனே (௫௯)

௫௬௯

# வீமன் விசுவாமித்திரனை யடுத்தல்.

விண்வளர் சோலை விதர்ப்பமென் றிசைக்குங்
கண்ணக னாட்டின் கவுண்டினி புரமாள் (௧)
நாமவே லரசன் னற்றகு புகழான்
வீமனென் றிசைக்கும் மேதகு பெயரான் (௨)
குறைதவிர் மலர்ப்பூங் கொம்பன மனையாள்
முறுவரேன் றுமன் முறுவல்செய் முறையாற் (௩)
சாருகா சினியெனத் தாரணி புகழுஞ்
சீருடைப் பெயராள் தன்னொடு சிறந்து (௪)
வாழ்தரு நாளின் மகப்பே றின்றித்
தாழ்வறு நோன்பு தவம்பல விழைத்தும் (௫)
பயனடை யாமற் பரவையி லெழுந்த
துயரதைப் போக்கத் துணிந்திது செய்வான் (௬)
மந்திரத் தலைவர் மனோரஞ் சிதனொடு
சுந்தர மதிசேர் சுமந்துவா மிருவரை (௭)
முன்புற வழைத்து மூதறி வுடையீர்
இன்புறு மகப்பெறு ரிம்மையு மறுமையும் (௮)
வாழ்வில ராதலின் வனம்புகுந் தாங்கே
நீள்தவம் முயன்று நினைவுமுற் றுற்றான் (௯)
மீளுது மன்றேல் வியுது மதுவரை
ஆளுதிர் நாடென் றவர்க்கர சளித்து (௰)
மனைவி தன்னொடு மாநகர் தணந்து
தனிநெடு வனத்தைச் சார்ந்து காய்கனி (௰௧)
இலைமுத லருந்தி யிவ்வகை யாகச்
சிலபகல் விடுத்துச் செய்தவப் பலனால் (௰௨)

மாசகல் விசுவா மித்திரன் வாழும்
ஆசிர மத்தை யடைந்தவ னடிமேல் (௰௩)
வீழ்ந்து பரவினன் மெல்லியற் பாவையுந்
தாழ்ந்தடி பணிந்தாள் தவமுனி மகிழ்ந்து (௰௪)
வாயுற வாழ்த்தி வரன்முறை வினவலும்
மேயவுட் கருத்தை வேந்தனு முரைப்பான் (௰௫)
தவம்பல முயன்றுந் தனைய னுறாமையின்
அவம்பெறு வாழ்க்கை யறத்துறந் திங்கு (௰௬)
வந்தன னகை வனையடுத் தோர்க்கும்
பைந்தரு தன்பாற் படர்ந்தவர் தமக்கும் (௰௭)
மனத்திடை நினைந்த வரம்பெற லரிதோ
இனித்துயர் போமென மாதவ னிசைப்பான் (௰௮)
நின்குல வேந்தர் நித்தமுங் கணேசர்
தன்பெரும் பூசனை தவறா தாற்றிப் (௰௯)
பெற்றனர் பற்பல பேறுக ளியாவும்
பொற்றொடி யிவள்வயிற் பொருந்திய வன்பால் (உ௰)
அதுவிடுத் தவினை லருமகப் பெற்றிலை
மதகரி முகனை மனைவியோ டினிமேல் (உ௧)
வழிபடு வாயின் மகவுயிர்த் திடுவாய்
பழியுறா வண்ணம் முந்திய பவத்தினும் (உ௨)
ஐங்கர னினையாண் டருளிய விதத்தை
இங்குநீ யுணர வியம்புது மன்றே (உ௩)

௫௰௨

# தக்கன் பிணி நீங்கல்.

வீமகேள் நின்குல வேந்தர்கள் முன்னாள்
மாமுடி புனைந்து வழிவழி யாண்ட (௧)
நல்வள மிகுகரு நாடதே யத்தை
வல்லவ னென்றோர் மன்னவ னினக்கேழ் (௨)
ஆந்தலை முறையி னவதரித் தமரர்
வேந்தனி லரசு விதியொடு புரிநான் (௩)

கற்புயர் மனையாள் கமலையென் றிசைக்கும்
பொற்புயர் பெயராள் பொருந்திய கருவில் (௪)
ஒருமகப் பெற்று ளூமையாய்ச் செவிடாய்
இருவிழி குருடா யிளமுடம் பெல்லாம் (௫)
புண்ணொடு வருமப் புதல்வனை நோக்கிக்
கண்ணுறு மாலி கடலெனப் பெருகக் (௬)
கையொடு கையை நெரித்துக் கதறினள்
ஐயை யோவென் றரற்றின ளாறிலள் (௭)
பாலன் பரிவைப் பார்ப்பது மரிதே
கோலமெய் யரசர் குலமெலாம் பழிக்கப் (௮)
பிறத்தலிற் பிறவா விடிற்பெரும் பேறே
இறந்திடி லதுவு மித்துயர்க் கினிதே (௯)
என்றவள் புலம்பி யிவ்வகை யழுதாள்
மன்றலங் கோதை மன்னனும் வந்து (௰)
குழவியை நோக்கிக் குலைந்துளந் தெளிந்தபின்
அழுதுளங் கரைபவட் காறுத லுரைப்பான் (௰௧)
துன்பொரு காலஞ் சூழ்தர வுழந்தார்
இன்பொரு கால மெளிதிற் பெறுவார் (௰௨)
நற்பொறி யில்லா மகவிது நாட்செலப்
பொற்புறு கோலம் பொருந்துமுள் ளுருகேல் (௰௩)
மணிமந் திரத்தான் மாதவ முயற்சியான்
பிணியிது போக்குவல் பேதாய் வருந்தேல் (௰௪)
என்றவட் கிவ்வா றிசைத்துளந் தேற்றத்
தன்றுயர் சிறிது தணிந்தாங் கிருந்தனள் (௰௫)
கொற்றவ னப்பாற் கோளியல் பெல்லாங்
கற்றறிந் துள்ள கலைஞரை யழைத்துச் (௰௬)
சாதகங் கணித்துத் தக்கனென் றிசைபோர்
காதலின் மகற்குக் கருத்தொடு வகுத்துப் (௰௭)
பேணினன் பற்பல பெருந்தவ நோன்புகள்
கோணிடா துள்ளங் குறைவற வாற்றியும் (௰௮)
பொருளளித் தவுடதம் புகட்டிமந் திரித்தும்
ஒருவகை யானு முறுகுறை நீங்காப் (௰௯)

பாலகற் காண்டு பன்னிரண் டெய்தலுஞ்
சாலவுந் தளர்ந்து தலைவியை நோக்கி (௨௰)
நின்மகன் பொருட்டு நிதியெலாந் தொலைத்தும்
உன்னிய தவத்தி லுடம்பினை வாட்டியும் (௨௧)
எவ்வகை புரிந்து மின்படைந் திலேமால்
இவ்விடத் துன்மக னினியிருப் பானெனில் (௨௨)
எஞ்சிய பொருள்களு மெல்லா மழிவுறும்
அஞ்சின ளைதலி னவனைக் கொண்டுநீ (௨௩)
செல்லுதி வேறு தேயமென் றுரைத்தான்
வல்லவ னன்பிகந் திவ்வகை வழுத்தக் (௨௪)
கேட்டலு முருகிக் கிளிமொழித் துவர்வாய்
வாட்டடங் கண்ணி மனம்பதை பதைத்துக் (௨௫)
கொழுகொம் பில்லாக் கொடியென நடுங்கி
அழுது புரண்டன ளாயினு மென்செயும் (௨௬)
நல்லூ ழெய்துழி நானிலத் தியாவரும்
அல்லும் பகலு மன்புபா ராட்டுவர் (௨௭)
தீவினை வருகாற் றீக்குமுன் வேட்ட
காவலன் றானுங் கைவிடு கின்றான் (௨௮)
நதிவளர் சடையோ னற்சர ணல்லாற்
கதியினி யில்லைக் காசினி தனிலே (௨௯)
என்றுளந் தேறி யிளவலைக் கொண்டு
சென்றனள் பாதஞ் சிவந்துநொந் தயர (௩௰)
நகர்ப்புறம் போந்து நள்ளிருள் தனிலே
தகைப்படு கானிற் றனிவழிச் சேறலுங் (௩௧)
கள்வர்கள் சூழ்ந்து கதிர்மணிப் பணியெலாங்
கொள்ளைகொண் டகன்றார் குலைந்துளம் வாடி (௩௨)
வன்பசி தாகம் மல்கி வருத்த
மென்மெல நடந்து மேயின ளோரூர் (௩௩)
அந்நக ரொருபா லம்பிகை பாகன்
மன்னுபொற் கோயி லெதிர்ப்பட நோக்கி (௩௪)
அங்ஙனம் புதல்வனை யாற விருத்திப்
பொங்கணி நகரிற் றமியளாய்ப் போந்து (௩௫)

வினைவழி யலைந்து பலிகொடு மீண்டு
தனையனுக் கூட்டித் தானுமுண் டிருந்தாள் (௩௬)
இவ்வகை யிரந்துண் டிருக்கையி லோர்தினம்
செவ்விய பலிக்குச் செல்லும் போது (௩௭)
மகனையு மழைத்துப் போந்தனள் வாணுதல்
நகரிடைப் போதலும் நல்வினைத் தொடர்பாற் (௩௮)
படிபுகழ் கணேச பத்தியிற் சிறந்த
முடிவறு மாதவ முக்கல ரவ்வழி (௩௯)
குறுகின ரவர்பொற் கோலமெய்க் காற்றுச்
சிறுவனிற் படிதலுந் தீர்ந்தன பிணியெலாம் (௪௰)
கண்ணொளி பெற்றுக் கண்டனன் யாவையும்
பண்ணமை சொற்கள் பகர்ந்தனன் கேட்டனன் (௪௧)
முருகனே காமனே முகுந்தனே யென்னப்
பெருகொளி யழகு பிறங்குருப் பெற்றான் (௪௨)
கண்டனள் தாயுங் கண்ணீர் பெருகக்
கொண்டனள் மகிழ்வு குளிர்ந்தன ளுள்ளம் (௪௩)
அறிந்திதை யூரவ ரடிசிலு மாடையுஞ்
செறிந்திடு தயவாற் றினந்தின முதவப் (௪௪)
பெற்றுங் கிருந்தனர் பின்னொரு நாளிற்
சுற்றை யஞ்சடைக் கண்ணுதல் பூசனை (௪௫)
ஆற்றுமா மறையோ னடிமலர் வணங்கத்
தேற்றிமற் றவனுந் தீக்கைமுன் னாற்றிக் (௪௬)
கணபதி யுண்மை காட்டுமெட் டெழுத்தைக்
குணமொடு வகுத்தான் கோதையும் மைந்தனும் (௪௭)
அம்மந் திரங்கொண் டருந்தவ மிழைத்தார்
மும்மதக் கடவுள் முன்னெழுந் தருளி (௪௮)
மாதினுக் கேற்ற வரமெலா முதவித்
தீதகன் மைந்தன் றிருமுகம் நோக்கி (௪௯)
முக்கல னென்ன முன்னெம் மாலே
தக்கநன் னாமந் தரித்திடு தவத்தோன் (௫௰)
அவனுயி ருருவெம் முருவென வறியத்
தவமிகு காட்சி தந்தன மவன்றன் (௫௧)

மெய்யுறு காற்றுன் மெய்யுறு பொழுதே
எய்தினை புனித மின்னமுன் விழைவெலாம் (ருஉ)
அன்னவன் சரண மடைந்தா னிரப்புவன்
என்னமற் றோதி மறைந்தன னெம்பிரான் (ருங)
எம்பிரான் மறைய விளவலுங் கதறி
வெம்பினின் றழுது மெய்த்தவ முக்கலன் (ருச)
ஆசிர் மத்தை யடைந்தடி வீழ்ந்து
பூசித் திறைஞ்சி யாவையும் புகன்றான் (ருரு)
கேட்டவம் மாதவன் கிருபைமிக் கூர்ந்து
வாட்டடங் கண்ணியை மகனொடு தேற்றி (ருசு)
இந்திரன் போல்வாழ் வெய்துவ னிவனுந்
தந்திமா முகவன் மந்திரங் கணித்தால் (ருஎ)
என்றெழுத் தொன்றை யின்புற வோதிச்
சென்றிட விடையளித் தானெனச் செப்பலும் (ருஅ)
வீமன் பணிந்து வினவுவன் மேலுங்
காமரு தக்கற் கிங்கோ யுறவும் (ருகூ)
முதிர்தவ முக்கல முனிமெய்க் காற்றால்
அதுமுடிந் திடவு மமைந்தவா றேதென (சாய)
உள்ளமுற் பவத்தி லுஞற்றிய வினையெலாம்
விள்ளுவன் விசுவா மித்திரன் றானே (சாக)

சாருங

## வல்லாளன் வேதனை நீங்கி முத்தியடைதல்.

மல்லல் வளங்கூர் மைவளர் சோலைப்
பல்லியென் றோதும் பட்டணந் தனிலே (க)
வசிய குலத்தில் வந்தவ தரித்தோன்
இசைகலி யாண னெனும்பெயர்க் குரியான் (உ)
இந்து மதியெனு மில்லா ளுடனே
அந்தமி லறங்க ளாற்றிவாழ் நாளிற் (ங)
சிந்தை மகிழச் செய்தவப் பலனால்
மைந்த னொருவன் வந்தவ தரித்தான் (ச)

அத்திரு மைந்தற் கமைவலி யழகை
ஒத்தவல் லாள னெனப்பெய ரோதி (௫)
உவந்தனர் வளர்ந்தா னுவாமதி யெனவே
தவழ்ந்து மெழும்பியுந் தனிநடை பயின்றும் (௬)
அறிவுசற் றேற வயலகத் துள்ள
சிறுவர் தம்மொடு சென்றுபூங் காவில் (௭)
கணேசனென் றாங்கோர் கவினுரு வமைத்து
மணமிகு தேமலர் வளம்பெறச் சாத்திப் (௮)
பூசனை புரியு மியல்பின னானன்
ஆசையி லிவ்வகை யாற்றுமந் நாளில் (௯)
ஒருபகல் தன்வய தொத்தயல் வாழுந்
திருமலி சிறுவர் பலரையுஞ் சேர்த்து (௰)
நகர்ப்புறம் போந்து நறும்புன லாடி
மிகப்பொலி மணப்பூஞ் சோலையை மேவிப் (௰௧)
பாலரை யேவப் பந்தர்க ணட்டார்
கோல மாமலர்க் கொத்துக னோக்கினர் (௰௨)
தேங்கிளங் குலையுந் தேனொடு பாலும்
மாங்கனி கதலி வருக்கைநற் கனியும் (௰௩)
நிரைபடக் குவித்துப் பாலகர் நிற்ப
வரையறு சீர்த்தி வல்லா ளன்போய் (௰௪)
விநாயக மூர்த்தியை விரிபுன லாட்டி
மனோதய வன்பின் மாலிகை சாத்திச் (௰௫)
சந்தனங் குங்குமந் தகைபெற வணிந்து
வந்தனை செய்து வழிபட் டிருந்தான் (௰௬)
காலை யுணவொடு கடும்பக லுச்சியூண்
மாலையூண் கொள்ள மனைக்கு மீண்டிலர் (௰௭)
பாலக ரென்னப் பதைத்துளந் தாதையர்
சீலகல் யாணன் றிருமனைக் கேகி (௰௮)
நின்மக னெங்கள் சிறுவரை நெருக்கித்
தன்னொடு கொடுபோய் மீண்டு தந்திலன் (௰௯)
இன்னமு மவனை நீயொறுத் திடாயேல்
அன்னவன் றன்னை யாமே யடக்குவம் (௨௰)

அன்றே லரசற் கறிவித் திடுவோம்
என்றே சொலவு மெழுந்தவன் னடந்து (௨௧)
மட்டிலாக் கோபம் மனத்திடை மூளக்
கிட்டி விரைந்து கிளர்மணிப் பாலகன் (௨௨)
பூசனை புரியும் புலமடைந் தாங்கே
வாசனை மலர்ப்பூம் பந்தரை மண்மேற் (௨௩)
பாடுறச் சரித்து விநாயக மூர்த்தியைக்
காடுற வெறிந்து கைக்கோ லுயர்த்திப் (௨௪)
பதைக்க வடித்தான் பாலனுந் துடித்து
வதைக்கே லென்று வாய்விட் டழுதான் (௨௫)
ஆறிலன் கோப மவனிரு கரத்தை
மாறிடப் பின்னி மரத்தொடு பிணித்துக் (௨௬)
கணபதி பூசனை கருத்தொடு செய்தனை
துணையினி யவனே சோறொடு நீருங் (௨௭)
கட்டவிழ்த் தூதவக் கடனுளா னென்று
துட்ட னகன்றான் சோர்ந்தவப் புதல்வனும் (௨௮)
எந்தைநல் லுருவை யெடுத்திங் கெறிந்து
பந்தரைக் குலைத்து வீசிய பாதகன் (௨௯)
குருடா யூமையாய்க் குறளாய்க் கறைமிகப்
பெருகா நிற்கும் பெரும்புண் ணுடம்பொடு (௩௰)
வருந்தக் கடவ னெனச்சபித் துளத்திற்
றிருந்து கணேசனைத் தியானஞ் செய்தான் (௩௧)
செய்தலு மொருமறைத் தேசிக னுருவம்
எய்திமுன் னடைந்தன னெம்பிரா னுடனே (௩௨)
இருகரப் பிணிப்பு மின்னல்வே தனையும்
ஒருகணத் தழிய வுய்ந்தனன் பாலகன் (௩௩)
வேண்டிய வரங்கள் விருப்பொடு நல்கி
ஈண்டுநின் பூசனை யேற்றுளம் மகிழ்ந்தேம் (௩௪)
எம்மையு மெமதடி யாரையு மிகழுஞ்
செம்மையின் மாந்தர் சிறுமையுற் றிடைவார் (௩௫)
ஆதலி னாலுன் னையனுக் கின்றுநீ
ஓதிய சாப மொருங்குற் றணைந்தது (௩௬)

வாழிநீ யென்ன மறைந்தன னப்பால்
ஆழிய புகழா னாலயம் புதுக்கி (௩௭)
முன்போற் பூசனை முறையொடு நடாத்தி
இன்புற் றாங்கே யிருந்தன னிப்பால் (௩௮)
வணிகன் மகனை வருத்திய செய்தி
அணிமனை யிருந்தாட் கயலவ ருரைப்பப் (௩௯)
பெருந்துயர் கொண்டு பேதையும் வாடி
வருந்தினள் வழிபார்த் திருத்தலும் முன்னே (௪௰)
கண்ணொடு வாக்குக் காதறி வின்றிப்
புண்ணுடம் போடு போந்தனன் வணிகன் (௪௧)
கண்டன ளுருகிக் கருத்தழி வுற்றுப்
பண்டிழை வினையின் பயன்கொலென் றேங்கி (௪௨)
அங்குதன் னில்லத் தயன்மனை வாழும்
நங்கையர் சிலரொடு நகர்ப்புறம் போந்து (௪௩)
மாதவ யோக முனிவரின் வைகி
நாதன் பூசனை நடத்துஞ் சிறுவனைப் (௪௪)
பரிவுறக் கண்டு பான்முலை சுரப்ப
அருகுபோய்த் தழுவி யன்பொடு சொல்வாள் (௪௫)
இச்சிறு வயதில் விநாயகற் கினிய
அர்ச்சனை புரியு மன்பின னானாய் (௪௬)
இனியுன் குரவனும் யானு முய்ந்தனம்
தினமொரு காலப் பூசனை செய்து (௪௭)
ஆசுறு மனைவந் தடையலா காதோ
பூசனை மனையிற் புரிதலு மரிதோ (௪௮)
எம்மை நீபிரிந் திங்குறத் தகுமோ
இம்மையிற் றாதைய ரெவ்வகை கடியினுந் (௪௯)
தனையர்க ளானவர் பொறுப்பர்க ளன்றோ
நினது தாதை நெருங்குடற் புண்ணொடு (௫௰)
குருடாய்ச் செவிடா யூமையாய்க் குறுகினன்
உரைசெய வந்தே னுன்பா லென்றனள் (௫௧)
மற்றவள் தன்சிர் மதிமுகம் நோக்கிப்
பெற்றுக் காப்பவன் பெருங்கரி முகவன் (௫௨)

தந்தைதாய் வேறு தரணியி லறியேன்
எந்தைநல் லுருவை யெறிந்திவை யனைத்துஞ் (ருஙு)
சிந்திய பாவந் தீர்க்கரி தாமால்
மந்திரம் மருந்தான் மாற்றரி தாகி (ருச)
எய்திய துன்ப மிப்பிறப் பன்றி
மெய்யுறு மேலைப் பிறப்பினும் மேவும் (ருரு)
பேசரு கற்புடைப் பெண்பா வாய்நீ
மாசறு மன்னர் குலத்தவ தரித்து (ருசா)
வல்லவ ராசன் றன்மனை யவளாய்ப்
புல்லநின் வயிற்றிற் பொருந்திய நோயொடு (ருஎ)
வந்துகல் யாணன் மகனெனத் தோன்றி
ஐந்துட னேழு வயதா மளவில் (ருஅ)
முக்கல னருளான் முதிர்சுகம் பெறுவான்
தக்க னெனப்பெயர் தரிக்கவும் பெறுவான் (ருகூ)
திருந்திழை யாய்நீ செல்கென வனுப்பிப்
பொருந்திய தவத்துப் பூசையி லிருந்தான் (சாய)
இருந்திழை பூசனை யியல்பினை நோக்கிச்
சுரந்திழி மும்மதத் தும்பிமா முகவன் (சாக)
கணங்களை யேவக் கடுகிநல் விமானம்
வணங்கிவல் லாளன் முன்கொடு வந்தார் (சாஉ)
அன்புட னேறி யானைமா முகவன்
தன்பெரு முலகைச் சார்ந்தன னன்றே (சாங)
அதிசய மிதுகண் டங்க ருள்ளார்
விதியுட னங்கோர் வியன்மணிக் கோயில் (சாச)
பரவுவல் லாள கணேசற் காமெனப்
பொருவற வமைத்துப் பூசையாற் றினரோ (சாரு)

எயஅ

# தக்கன் அரசாட்சி பெறுதல்.

முக்கல ரிடத்து முதன்மனுப் பெற்ற
தக்கனுந் தாயு மங்கர் தணைந்து (க)

காசகல் கவுண்டினி நகர்ப்புறத் தேகி
வாசனை கமழோர் மலர்க்கா விடையிற் (உ)
கணேச னாலயங் கண்டாங் கிருந்தனர்
குணமிகு மனுவைத் தக்கனுங் குறித்தான் (ங)
பன்னிரண் டாண்டு பத்தியி னேற்றபின்
துன்னிய பல்பொருள் சோர்வறத் தொகுத்துப் (ச)
பூசனை யிருபது நாளும் புரிந்து
மாசகன் மறுநாள் வைகறைப் பொழுதின் (ரு)
வெண்மருப் புடைய வேழமொன் றணுகித்
தண்மலர் மாலை தன்புயத் தணிந்து (சா)
பிடர்மிசை யேற்றிப் பெயர்ந்தொரு நகரின்
இடைகொடு போகக் கனவுகண் டெழுந்து (எ)
தாய்க்குறை செய்யத் தகுமுடி புனைவாய்
பாக்கிய நோன்பின் பலனிஃ தென்றாள் (அ)
இங்ஙன மிவர்க ளிவ்வா றிருப்ப
மங்கல மிகுந்த கவுண்டினி மாநகர் (கூ)
தகுமுறை யாண்ட சந்திர சேனன்
இகசுக மொருவிப் பொன்னுல கேகச் (ய)
சுலபையென் றோதுஞ் சுந்தர மனையாள்
குலமுடி புனையக் குமரராற் றாளாய் (யக)
வருந்தி யிருந்தாள் மாதவ முக்கலன்
தெரிந்துமுன் போந்து செய்வகை சொல்வான் (யஉ)
இலங்குறு பட்டத் தியானையை யின்றே
அலங்கரித் ததன்கை யலர்த்தொடை கொடுத்துக் (யங)
கட்டவிழ்த் திடுமின் கணித்திங் கெவனை
இட்டு வருமோ விராசனு மவனே (யச)
பட்டங் கட்டப் பக்குவ னென்றான்
விட்டன ரம்முறை யேவிய களிறு (யரு)
போந்து கணபதி பொன்னடி போற்றுஞ்
சாந்தணி மார்பத் தக்கனைப் பிடர்மிசை (யசா)
ஏற்றிக் கொடுவந் தியாவருஞ் சூழ்ந்து
போற்றி யிறைஞ்சப் பொலிமணித் தவிசிற் (யஎ)

பரிவுட னிருத்திப் பணிந்துநின் றதுவே
திரளொளி முத்துச் சிவிகையி லெய்திய (௰அ)
தாயைச் சுலபை யெதிர்போய்த் தழுவி
நேயத் தொடுமனைக் கழைத்து வந்தனள் (௰கூ)
முக்கல முனிவ னரசியன் மொழிந்து
தக்கன் றனக்குத் தகுமுடி புனையப் (உ௰)
பொன்னகர் வேந்தன் போற்சிறப் புற்று
மன்னவ ரேத்த மகிழ்ந்தர சாண்டான் (உக)
அந்நகர் தனிலே ஐங்கரன் றனக்குப்
பொன்மணிக் கோயில் புதுக்கவொன் றாக்கி (உஉ)
அணிவிழ வாதி யருச்சனை நிதமும்
இணையற வாற்றி யினிபுறு நாளில் (உங)
வென்றிகொள் புகழான் வீர சேனன்
என்றிசை வேந்தற் கானமா முகவன் (உச)
கனவினி லெய்திநின் கன்னியைத் தக்கன்
மனமுறு மன்றல் செயவழங் கெனவும் (உரு)
நன்றென விசைந்து நராதிபன் கொடுத்தான்
மன்றலங் குழலி வயிற்றவ தரித்துப் (உசா)
பிரகற் பானு பிறந்தன னவற்கு
வரமிகு கட்க ரதன்மக னாகினன் (உஎ)
அம்மகன் மகனைச் சுபாலனு மவற்குச்
செம்மைகொ ளோகா தரனுஞ் செனிப்ப (உஅ)
அவ்விறைக் கபுத்திரத் தன்பிறந் தவற்குச்
செவ்விகொள் சித்திர சேனனு முதித்தான் (உகூ)
அன்னவன் மனைவி யழகிய வயிற்றில்
மன்னவ நீயும் வந்தவ தரித்தாய் (ங௰)
தக்கன் முதனின் றந்தையீ றாக
விக்கின விநாயகன் விரதமும் பூசையும் (ஙக)
பத்தியோ டாற்றிப் பலன்மிக வடைந்தார்
அத்தகை நீயு மன்பொடு வழிபடின் (ஙஉ)
நின்னுளக் கருத்து நேர்பெற முடியும்
மன்னவ வென்று கணேசமந் திரமும் (ஙங)

அன்புற வோதி யனுப்பின னவனுந்
தன்மனை யாளொடு மீண்டுதன் னகர்க்குத் (௩௪)
தக்க னமைத்த கோயிலின் வைகி
விக்கின விநாயகக் கடவுளை வேண்டி (௩௫)
வரமிகப் பெற்றுன் மகனெனப் பிறந்தான்
உருவினிற் சிறந்த வுருக்கு மாங்கதன் (௩௬)
அன்னவன் றன்னைக் கபிலமா முனிவர்
தன்னிடம் போக்கிப் பலகலை யுணர்த்தித் (௩௭)
திருமுடி புனைவித் தும்பர னிறைபோற்
பெருமித வாழ்வு பெற்றிருந் தனனே (௩௮)

எ௫௬

# உருக்குமாங்கதன் சாபம்பெறல்.

இருளெறிந் திலகு மிளங்கதிர் போல
உருவினிற் சிறந்த வுருக்கு மாங்கதன் (க)
இவ்வகை யரசு புரிதலு மொருநாள்
அவ்வணி நாட்டுப் பயிரை விலங்கினம் (உ)
தின்றதஞ் செய்யுஞ் சேதியைக் கேட்டுக்
கொன்றிட வேட்டைக் கெழுந்துகான் புக்கி (௩)
வில்லிய ரமைச்சர் வெகுசனஞ் சூழ்வர
வல்வினை மிருக மளப்பில வதைத்து (௪)
நண்பொழு தாகலுங் கவிமுனி வாழுந்
தண்மலர்க் காவிற் றினிபுகுந் தாங்கு (௫)
வாசவ னமருங் காவெனச் சிறந்த
ஆசிர் மத்தை யடுத்து மாதவன் (௬)
புனலிடை படியப் போகத் தமியளாய்
மனையிடை யிருந்த முகுந்தையை நோக்கித் (எ)
தாயே பருகநீர் தருகெனக் கேட்டனன்
வேயுறழ் தோளி விறன்மிகு மன்னனைக் (அ)
கண்டமாத் திரையிற் கருத்துவே றுகி
உண்டிடத் தண்ணீ ருதவுதல் மறந்து (௯)

விண்டுவோ குமரனோ வேளெனுங் காமனோ
அண்டர்தம் மிறையோ வாவென மயங்கி (௰)

ஐய நினைப்போ லெவ்வுல கத்துஞ்
செய்யழ கமைந்த நாயகன் கண்டிலன் (௰க)

அங்கச னமருக் காற்றிலன் மாழ்கமுன்
இங்கெனை மருவிச் சுகங்கொடென் றிரந்தாள் (௰உ)

கேட்டுளங் கொதித்துக் கிளர்மணி முடியோன்
வாட்டடங் கண்ணாய் தகாதன வகுத்தாய் (௰ங)

மறையவர் குலத்து மங்கைநீ யானோ
நெறிவழா தவனி புரந்திடு மகிபன் (௰ச)

இப்பவ தொழிலுக் கிசைந்திடே னெரிமுன்
மெய்ப்பொடு நின்னை வேட்டமா முனிவன் (௰ரு)

தவமொடு புகழைத் தாழ்த்த முயன்றனை
அவமிதை விடுகென் றறிவுக ளுரைப்பக் (௰சா)

கொந்தலர் நறுங்காக் குயின்மொழி முகுந்தை
சிந்தையி லுணராள் வேட்கைமீ தூர (௰எ)

மன்னவன் கரத்தை வலிந்துபோய்ப் பற்றிக்
கன்னிய ரிசையாக் கருத்தின ராயின் (௰அ)

அன்னவர் கற்பை யழித்தலும் பவமாம்
முன்னடைந் தியானே விரும்பி யிரத்தலின் (௰கூ)

கலவியை மறுத்தல் தகாதெனக் கரைந்தாள்
குலவொளி வேற்கைக் கோமா னழன்று (உ௰)

கணவனைக் கூடிற் கணத்திடை யழியுங்
குணமுடைக் காமம் பிறர்வயி னுகர்தல் (உக)

அணைக்கணந் தானும் நிலைக்கா தழிந்து
பெருக்கிவெம் பழிபவம் பின்விளைத் திடுமால் (உஉ)

கற்பகக் கடவுளைக் கைதொழு மடியேன்
பொற்கொடிப் பாவாய் புன்னெறி படரேன் (உங)

அகலெனப் புகல வாயிழை மீண்டுந்
தகைபெறு மார்பிற் சார்ந்து தழுவினள் (உச)

நிலமிசை வீழத் தள்ளிவிட் டேகினன்
அலமரு முகுந்தை யாறு தழன்று (உரு)

மற்றவ னுடம்பின் வனப்பெலாம் பொன்றிப்
பற்றுக குட்டம் பரந்தெனச் சபித்தாள் (உசு)
இட்டவிச் சாப மெய்தலு முடனே
மட்டிலாத் துன்பம் மன்னனு மடைந்து (உஎ)
வித்தக விநாயக வேழமா முகவ
தத்துவ ஞான தனிமுத லிறைவ (உஅ)
நினக்கே யபய மபயமிந் நோய்கெட
எனக்கரு ளாயேற் றஞ்சமிங் கினியார் (உகூ)
கரிமுக வென்று கருத்திடை நினைந்து
ஒருவட தருவி னிழற்கணுற் றிருந்தான் (௩௰)
அண்டிய சேனை யடவியிற் றேடிக்
கண்டிலர் நகர்க்கு மீண்டுபோ யினரோ (௩க)

எஅஎ

## நாரதர் உருக்குமாங்கதனுக்கு இந்திரன் சாபம்பெற்று நீங்கிய வகையுணர்த்திச், சாபநிவாரணங் கூறுதல்.

ஒன்றிய துயரோ டுருக்கு மாங்கதன்
அன்றிரா முழுது மரும்பசி தாகம் (க)
வருத்திட வைகி வைகறைப் பொழுதில்
திருத்தகு நாரத மாமுனி சேண்மிசை (உ)
செல்வது கண்டு செங்கரங் கூப்பிப்
பல்வகைத் தோத்திரம் பரிவொடு பகர்தலும் (௩)
அம்முனி விரைந்து வந்தெதிர் நின்றான்
செம்மலும் மகிழ்ந்து தீயவெண் குட்டஞ் (ச)
சார்ந்திடு வகையைத் தவறு தியம்பித்
தீர்ந்திடு வகைநீ செய்கெனப் பணிந்தான் (ரு)
மகரயாழ் வல்லோன் மன்னனை நோக்கிச்
செகதலத் திந்நோய் தீர்ந்திட வேண்டில் (சு)
விதற்பமா மிந்த மேதகு நாட்டிற்
கதம்பமென் றோரூர் கண்டன னங்கே (எ)
சிந்தா மணியெனுங் கணேசர்பொற் கோயில்
மந்தர கிரிபோன் வயங்குறும் நேரோ (அ)

கணேச குண்ட மெனும்பெயர்த் தீர்த்தம்
இணையறப் பெருகு மிப்புனல் தனிலே (கூ)
கடியவெண் குட்டத் தழுந்துமோர் கிழவன்
படிதனும் மேனி பசும்பொனில் விளங்கக் (ய)
கண்டன னந்தக் கணேசகுண் டத்தின்
மண்டிய பெருமை யின்னமுங் கேண்மோ (யக)
பூர்வ மொருநாட் பொன்னகர்க் கேகிச்
சீர்திக ழிந்திரன் றன்னையான் காண (யஉ)
மற்றவன் பணிந்து மாநிலப் புதினஞ்
சொற்றிடு கென்னத் துங்கநற் கவுதமன் (யங)
பாரி யகலிகை பச்சிளங் கொடிபோற்
சீரிய சிறப்பில் யாரையும் வென்றாள் (யச)
பூமக ளிரதி புலோமிசை யதிதி
நாமக ளிடைய வனப்பெலா மமைதலின் (யரு)
அன்னவ ளுலகுக் கதிசய மாயினள்
என்னமற் றோதி யென்வழிப் படர்ந்தேன் (யசா)
அமரா பதியோ னதுமுத லணங்கன்
சமரா லுடைந்து சமையங் காத்துக் (யஎ)
கவுதமன் புலரியி னீர்த்துறைக் கேக
அவனுருக் கொண்டு புகுந்தக மனையாள் (யஅ)
தனையே மாற்றிக் கலந்துதன் சிந்தை
நினைவெலாம் முடித்து மவ்வயின் னீங்கமுன் (யகூ)
மாதவன் மீண்டு நிகழ்ந்தன மதித்துக்
காதலி தன்னைக் கல்லெனச் சபித்து (உய)
ராகவ பாத தூளிதோய்ந் திடுநாட்
போகுமிச் சாபப் புணர்ப்பெனப் புகன்று (உக)
வச்சிர பாணியை வைதொரு குறிக்காய்
இச்சைகொண் டெய்தி யிப்பிழை யிழைத்தாய் (உஉ)
ஆயிரம் யோனி யமைகநின் னுடம்பில்
போயக லென்னச் சபித்துத் துரத்தினன் (உங)
விண்ணமை போகம் யாவையும் விடுத்துப்
பண்ணவர் கோமான் பதுங்கிமெய் வருந்திப் (உச)

பூமலி யாங்கோர் பொய்கையி லிறங்கித்
தாமரைத் தண்டி னொழித்திருந் தனனே (உரு)
மற்றவன் றன்னை வானவ ரனைவருஞ்
சுற்றிமூ வுலகிற் றேடியுங் காணுத் (உசு)
துன்புறு மேல்வை நிகழ்ந்தவா றனைத்தும்
முன்பியான் போந்து மொழிந்திடக் கேட்டுக் (உஎ)
கவுதமன் வாழுங் கானகத் தடைந்து
தவமுனி முனிவைத் தணித்தியென் றிரக்க (உஅ)
மாதவன் சற்று மனங்குளிர்ந் தவனுய்
மேதகு விநாயக மந்திரந் தன்னைச் (உகூ)
சுரர்குரு காதி லுபதே சித்துப்
புரவலன் றனக்கு போயிதை யுரைத்துப் (௩ய)
பத்தியிற் கணிக்கப் பண்ணினு னுடனே
அத்தனை குறிகளும் விழிகளா யமையும் (௩க)
என்றுரைத் தனுப்ப யாவரும் மகிழ்ந்து
சென்றகன் மடுக்கரை சேர்ந்தன ராகி (௩உ)
இந்திரன் றன்னை வருகென வழைத்து
மந்திரஞ் சொல்ல மாறின குறியெலாம் (௩௩)
கண்களாய் வயங்கக் கண்டு கணேசனைப்
பண்ணவர் யாவரும் பாடிப் புகழ்ந்தனர் (௩ச)
முந்திவிண் பேர்மின் வருதுமென் றனுப்பி
இந்திரன் கதம்ப வனத்திடை யேகித் (௩ரு)
திருப்புன லொன்று செறிவது கண்டு
விருப்புட னங்கோ ராலய மமைத்துக் (௩சு)
கணேசனை வழிபட் டாயிர மாண்டு
குணமுள மந்திர மனுட்டித் திருப்பத் (௩எ)
தந்திமா முகவனுந் தயவு கூர்ந்து
வந்தெதிர் நின்றுன் வாசவன் பணிந்து (௩அ)
பெற்றன னப்பில் பெருவரம் பலவும்
மற்றவற் றென்று வயங்குமத் தலப்பெயர் (௩கூ)
கதம்ப நகரெனக் கழறிடப் படவும்
இதம்பெறு மாலயத் திலங்குமம் மூர்த்தி (௪ய)

சிந்தா மணியெனச் செப்பிடப் படவும்
வந்தெவர் பணியினும் விருப்பெலாம் வாய்க்கவும் (சக)
திருநதி படிவார் தீவினை யகலவும்
அருளெனப் பெற்றுள ளதனி னங்கே (சஉ)
சென்றுநீ கணேச குண்டத் தாடில்
ஒன்றிய குட்ட மொழிந்திதம் பெறுவாய் (சங)
என்றுரைத் தகன்று னிமிரளி குலவித்
துன்றலர் கமழச் சோலையை நீத்தே (சச)

எஙக

# உருக்குமாங்கதன் முத்தியடைதல்.

அருந்தவ நாரத னகன்று போயபின்
பிரிந்த பரிசனம் பெயர்ந்துவந் தீண்டினர் (க)
அன்னவர் தம்மோ டவ்வுழை நீங்கி
மன்னவன் கதம்ப மாநக ரடைந்து (உ)
வாய்ந்தபொற் கணேச குண்டமா நதியிற்
றோய்ந்தன னுடனே தொலைந்தது குட்டம் (ங)
பழமைபோ லுடம்பு பசும்பொனின் மிளிர
விழைவில்சிந் தாமணி விநாயகற் பணிந்தான் (ச)
அன்னவ னருளா லருங்கண நாதர்
பொன்னலர் விமானம் புவியிற் கொடுவந் (ரு)
திங்கெழுந் தருளா யிரும்புக ழோயென
அங்கெனைப் பயந்தார்க் கெதுகதி யென்றான் (சு)
விருப்புறு மவரைநீ சிந்தையிற் கருதித்
தருப்பண மமைத்திப் புனல்வயி னாடின் (எ)
நிறைகதிர் விமானத் தெய்திடு பக்குவம்
பெறுகுவ ரென்னப் பெயர்த்தவர் பேச (அ)
அப்பரி சவனும் பரிசனம் யாவரும்
மெய்ப்புன லாடித் தம்பதிக் கேகித் (கூ)
தவப்பலப் பாதியைத் தத்தஞ் செய்தாங்
கவரவ ருறவினர்க் களித்தலு முடனே (ய)

பற்பல விமானம் படர்ந்தெதிர் குறுகப்
பொற்புட னேறிக் கணம்புடை சூழ்வர (௰க)
மறைதிகட் கெட்டா மதகரி முகத்து
விநாயக னுலகை மேயின ரன்றே (௰உ)

எசங

# கிருச்சமதர் உற்பவம் முதலியன.

இங்கிவை நிகழக் கவிமனை முகுந்தை
பொங்கிய காமப் பொலியனல் வெதுப்ப (க)
வாடியண் வீழ்ந்து வருந்தவ துணர்ந்து
கூடலை நெடுநாட் கோரிய விந்திரன் (உ)
வடிவுறு முருக்கு மாங்கதன் போல
வடிவம தெடுத்து வந்துமுன் னிற்பப் (௩)
போந்தவன் மீண்டு வந்தன னென்னுச்
சாந்துயர் களபத் தடமுலை முகுந்தை (௪)
அன்பொடு கலந்து பலவகை லீலையும்
இன்புற நடாத்தி யார்வமுற் றியபின் (௫)
இந்திரன் போக விருடியி னேவல்
முந்தியன் முறைபோன் முடித்தினி திருந்தாள் (௬)
செய்தவக் கலவியிற் சேர்ந்தது கருவும்
ஐயிரு திங்க ளாகலுஞ் சிறந்த (௭)
முதன்மைய வுலகம் மூன்றுந் துதிக்கப்
புதல்வ னொருவன் பூமியிற் பிறந்தான் (௮)
தன்மக னென்றே தவமுனி கவியும்
பொன்பெறு மிரவலன் போற்களி கூர்ந்து (௯)
தேறிய மறைமுறை செய்வன முடித்தும்
ஆறிரண் டானா ளாங்கவன் றனக்கு (௰)
நற்றகு கிருச்ச மதனென நாமமும்
பொற்புற வகுத்துப் பொருவற வளர்த்தான் (௰க)
வளர்மதி போலப் பாலகன் வளரத்
தெளிதரச் சகல கலைகளுந் தெருட்டி (௰உ)

மரபிய லொழுக்கம் வாய்தலின் முறையே
கரிமுகன் மனுவையுங் கணித்திடச் செய்தான் (௰௩)
இப்பரி சாக வப்பெரும் புதல்வன்
ஒப்பிலை யென்னா வாழ்தரு நாளில் (௰௪)
மகததே சத்து மன்னவன் சூரன்
இகல்விழி யம்பிகை பெண்பாள் கொழுநன் (௰௫)
தந்தையின் சிராத்த மெய்திய வந்நாள்
முந்துறு வதிட்ட னத்திரி முதலாம் (௰௬)
மாதவத் தோரை வருகென வழைப்பத்
தீதகல் கிருச்ச மதனுமங் குற்றான் (௰௭)
கூடிய முனிவர் குழாங்களைப் போரில்
ஆடின ராற்றா திடையுமத் திரியும் (௰௮)
வென்றிகொள் கிருச்ச மதன்றனை விளித்து
நன்றுநன் றிந்தச் சபையிலெம் மொடுநீ (௰௯)
வந்துறத் தக்க பக்குவ னாமோ
முந்துறு மெம்போல் முனிவரன் மகனோ (௨௰)
நின்னையும் நினதிழி வாகிய பிறப்பையும்
உன்னிலைப் போலு முருக்கு மாங்கதன் (௨௧)
மகனென வறியார் மாநிலத் துளரோ
அகலுதி புறம்பென் றழன்றுரை யாடினன் (௨௨)
அனல்விழி யுகுத்துக் கனபுகை யெழுப்ப
மனமிகக் கொதித்து மற்றவ னுரைப்பான் (௨௩)
வாதினில் வெல்ல வலியில ராகித்
தீதெனக் குரைத்தீர் திருத்தகு மாதவக் (௨௪)
கவிமுனி மகனும் யானே யானால்
அவையினெல் லாரையு மடக்குவ லென்று (௨௫)
சென்றனன் வெளியே தன்வனஞ் சேர்ந்து
மன்றலங் குழற்றாய் முகுந்தையை யழைத்துப் (௨௬)
பாவா யென்னை யார்க்குநீ பயந்தனை
சாவா முன்னம் மெய்விளம் பென்ன (௨௭)
அஞ்சின ளுருக்கு மாங்கதன் றன்னை
மிஞ்சிய விரகத் தணைந்ததும் பெற்றதும் (௨௮)

வாய்மையென் றுரைப்ப மனமிகக் கொதித்துப்
பேய்நிகர் தூர்த்தாய் பெயரிகா னகத்திற் (௨௯)
பறவைக ளுண்ணாப் பழந்தரு மிலந்தையாய்
உறையெனச் சபித்தா னொண்டொடி முகுந்தையும் (௩௰)
தாயிவ ளெனநீ சற்றுமெண் ணாமல்
தீயவெஞ் சாபந் திடுக்கிடத் தந்தாய் (௩௧)
நின்னையும் நடுக்க நினக்கொரு கொடுமகன்
தன்னையும் பெறுவா யெனப்பதில் சபித்து (௩௨)
வனந்தனி லிலந்தை மரமா கினளே
மனந்தளர் வெய்திய மகனிவை யெல்லாஞ் (௩௩)
சிந்தித் துயிர்விடல் திறமெனத் துணியத்
தந்திமா முகவன் றன்னரு ளாலே (௩௪)
அந்தரத் தொருமொழி யருந்துயர் கொள்ளேல்
இந்திரன் மகனீ யெனப்பிறந் திடலும் (௩௫)
தவமன மொருவகை சற்றே தேறி
அவமதித் திட்ட முனிவரெல் லாரையுந் (௩௬)
தன்னடிப் படுத்தத் தகுவரம் பெறுவான்
உன்னிய மனத்தோ டயல்வனத் துற்றான் (௩௭)
ஆங்குபல் லமரருந் தவமுனி சிரேட்டரும்
ஓங்கிய தவங்க ளுஞற்றுவ கண்டு (௩௮)
பணிந்தவ ரருள்பெற் றொருபா லணுகி
இணைந்துற மனத்தி லெம்பிரா னுருவம் (௩௯)
ஒருகாற் பெருவிர னிலமிசை யூன்றிச்
சுரராண் டாயிர மொருதரங் கண்மலர் (௪௰)
திறந்து மூடியு மாண்டுபத் தாயிரம்
அறந்திகழ் யோகத் தமர்தலுங் கணேசன் (௪௧)
முன்னுற வூனக் கண்கொளக் கூசலின்
பின்பெறு ஞானக் கண்கொடு நோக்கிப் (௪௨)
பாடின னாடினன் பணிந்தடி பரவினன்
நீடிய புகழோய் வேண்டுவ நிகழ்த்தென (௪௩)
நின்பதத் தன்பும் நெடியமா தவத்தோர்
முன்புறு முதன்மையு மருளென வழங்கி (௪௪)

அரனு லன்றி யழிவுறா மகனும்
பெரும்புக ழோடு பெறுவையென் றேதிப் (௪௫)

புட்பக வனமும் புட்பக நகரென
இப்பதி கிரேதா யுகத்திற் பெயர்பெறும் (௪௬)

மற்றைய வுகத்தில் மணிபூ ரகமாம்
பெற்றிடுந் துவாபரந் தனிற்பா னகமாம் (௪௭)

கலியினிற் பத்தி ரீகமென் றேபெயர்
நிலமிசை வழங்கப் படுமென வருளிக் (௪௮)

கதிரொளி பரவுந் திருவுருக் கரந்தான்
இதமகிழ் கிருச்ச மதமுனி யாங்கே (௪௯)

குருமணி யிமைக்குங் கோயிலொன் றமைத்துத்
திருமலி தீர்த்தமுஞ் செய்து கணேசனை (௫௰)

வரத கணபதி யெனவகுத் தேத்தினன்
விரவிய தீர்த்தங் கணேசன் பெயர்பெறுஞ் (௫௧)

சேர்ந்தவர் யார்க்குஞ் சித்திசேர்ந் திடலால்
வாய்ந்தநற் சித்தி மாநக ரென்றும் (௫௨)

ஆசிகொள் கணேச புரமுமென் றத்தலம்
பேசிடப் படுமிப் பெயர்பல பெற்றே (௫௩)

---

## திரிபுராநுற்பவம்.

இவ்வகை வரம்பெற் றியாவரு மிறைஞ்சச்
செவ்விய கிருச்ச மதன்மிகச் சிறந்து (௧)

கணபதி பூசனை கைவிடா தாற்றிக்
குணமொடு வாழ்நா ளொருமுறை மகாநெடுந் (௨)

திவ்விய யோகத் திருந்துகண் விழித்தலும்
அவ்விழி நோக்கா லமைந்தொரு புதல்வன் (௩)

இடிமுழக் குறழக் கனைகுர லெழுப்பிப்
படியெலாம் நடுங்கப் பருதியிற் சிறந்து (௪)

முன்வர முனிதன் மகனென மதித்தும்
நின்வர லாற்றை நிகழ்த்தென வுரைப்பான் (௫)

ஐயவுன் னோக்கி லமைந்துநின் மகனென
எய்தினன் சிலநா ளென்னையா தரித்தால் (௬)

புலியொரு மூன்றையு மெனதுதாட் படுத்தி
நவையறு பெரும்புகழ் நாட்டுவ லென்னப் (௭)

பலியெனும் பெயரொடு வருமப் புதல்வனைக்
குலமுனி பேணிக் கொடுத்தனன் கணேச (௮)

மந்திரங் கணிக்கும் மரபையும் வகுத்தான்
தந்தையிற் சிறந்த தவமிழைத் தனனே (௯)

ஐந்துமூ வாயிர மாண்டள விழைப்ப
வந்துமுன் னின்றான் மதகரி முகவன் (௰)

வேண்டுவ கேளென விள்ளுவான் பலியும்
ஆண்டகை யெந்தா யருள்வது மெய்யெனில் (௰௧)

மூவுல கங்களு மென்வச மாகவுந்
தேவரென் னேவல் தினம்புரிந் தொழுகவும் (௰௨)

நின்பதத் தன்பும் நினைவன பலித்தலும்
பின்புற முத்தியு மருளெனப் பணிந்தான் (௰௩)

வரமிவை யனைத்தும் வழங்கினோம் நின்பெயர்
திரிபுர னாகும் வெள்ளிபொன் னிரும்பால் (௰௪)

திரிபுரப் பெயரொடு மூவகைக் கோட்டையும்
அருளினோ மவைநீ செல்லிடந் தொறுஞ்செலும் (௰௫)

சிவனெறி கணையாற் சிதையுமந் நாளில்
தவநிலை முத்தியுந் தழுவுவா யென்று (௰௬)

சாற்றி மறைந்திடத் தந்தைக் கிவையெலாம்
போற்றி யுரைத்தனன் புட்பகத் தவ்விடம் (௰௭)

தன்னைவங் காள மெனத்தகு பெயரால்
இந்நிலத் துள்ளா ரிசைத்திடு வாரோ (௰௮)

௮௰௪

## திரிபுரன் அரசியற்றல்.

இத்தகைச் சிறந்த வரமெலாம் பெற்றபின்
அத்தலந் தனிலே யாலய மொன்று (௧)

கண்டகச் சிலையாற் கவினுற வமைத்துக்
கண்டபா வனையிற் கணேசனை வகுத்துப் (௨)
பூசனை புரிந்து சிலபகற் போனபின்
மாசகல் புவியின் மன்னரை மலைந்து (௩)
தன்னடிப் படுத்திப் பாதலம் போந்து
பன்னக ரெலாரையும் பணிந்திடச் செய்து (௪)
அமரர்தம் மிறையோ டமர்பல நடாத்தி
ஆமய கிரிப்புறத் தெறிந்தவன் றனையுங் (௫)
கற்பக நாட்டைக் கைவசப் படுத்தியும்
பொற்புயர் சத்திய லோகம் புகுந்து (௬)
வேதன் கரந்திட மேலினித் தானே
நாதனென் றுங்குதன் னாணையை நாட்டியும் (௭)
மாலகன் றோட வவன்பதி மடக்கியும்
நாலிரு திசைக்குந் தனியிறை யாயபின் (௮)
கரிமுக னுதவிய முப்புரங் களையும்
வருமென நினைத்தான் வந்துதோன் றியவே (௯)
சுக்கிலஞ் சுபிலஞ் சுவிர்த்தியென் றோதும்
முக்கடி புரமுந் தனித்தனி யோசனை (௰)
ஒருநூ றகல மொருநூ றுயரம்
விரியுமண் ணந்தரம் விண்ணிடை விளங்கி (௰௧)
வதிபவர் விரும்பிய பொருளெலாம் வழங்குங்
கதியொடு நினைந்துழி காலெனச் செல்லும் (௰௨)
இச்சிறப் பினவா முப்புரங் களையும்
வச்சிர மிதட்டிரன் வலிவீம காயன் (௰௩)
விந்தைகொள் காள கூடனென் றோதும்
மைந்தர்கண் மூவரை மனமுயற் சியினால் (௰௪)
சுந்தர சாளத் தகுமுடி புனைந்து
பிந்தியுஞ் சண்டன் பிரசண்ட னெம்பெயர் (௰௫)
ஓதிரு மகாரையு மவ்வா றுதவி
வேத னுலகையும் விண்டுவி னுலகையுங் (௰௬)
கறையடி முகத்தோன் கழறுணைக் கொண்டு
முறையுட னிருந்தர சாளுமென் றனுப்பிப் (௰௭)

பொன்னனை யொருபெண் டன்னைப் புணர்ந்து
பின்மத னுமொரு சுதனையும் பெற்றே (௰அ)
அத்தி முகனையு மம்மைபா கனையும்
நித்தமு மேத்தி நெடிதுவாழ்ந் தனனே (௰௯)

அ௩௩

# திரிபுர தகனம்.

அமர குழாத்துட னுயிழை புலோமிசை
இமய மால்வரைப் பாங்கரி னெய்தி (௧)
இந்திரன் கரந்தீர்த் திருந்திடு மளவில்
வந்தன னவ்வழி நாரதன் வகுப்பான் (௨)
மூவுல கரசும் முதன்மையுஞ் சிறப்பும்
யாவையுங் கணேச னருளிய வரத்தாற் (௩)
பெற்றனன் பலியும் பெயர்த்தினி மாழ்வது
கற்றை வார்சடைக் கண்ணுதல் கணையால (௪)
அதுவு மைங்கர னருள்கொடு நடக்கும்
இதுமுதல் விநாயக னேகாக் கரத்தைச் (௫)
செம்மறை விதியிற் கணித்திடொன் றேகினன்
அம்முறை பலநா ளாங்கவர் கணிப்பக் (௬)
குஞ்சர முகத்தோன் முன்னெழுந் தருளி
அஞ்சா தீயொன் றபயங் கொடுத்துச் (௭)
சங்கர னிடம்போய்ச் சரண்புக வனுப்பி
மங்கல மறையோன் வடிவம தெடுத்துத் (அ)
தேவியு முடன்வரத் திரிபுரன் கொலுவை
மேவலு மவனும் விரைந்தெதிர் சென்று (௯)
பாத பூசனை பரிவுட னாற்றி
ஆதனம் நல்கி யமர்ந்திடச் செய்தபின் (௰)
துங்கமா மறையோய் தோகையும் நீரும்
இங்கெழுந் தருளிய தேதெதன வினவ (௰௧)
மன்னவ யாங்கள் மறையவர் குலங்காண்
என்பெயர் கலாதர னென்றிசைத் திடுவார் (௰௨)

தேசசஞ் சாரஞ் செய்திங் கடைந்தோம்
ஆசிகொள் பொருணீ யளித்தல்மெய் யானால் (௰௩)

கறைமிடற் றண்ணல் கயிலைமால் வரையில்
மறைவழி நிதமும் வழிபா டாற்றிப் (௰௪)

புரிந்திடு பூசனை கொண்டவண் பொலிவுற்
றிருந்திடு சிந்தா மணியெனும் மூர்த்தியைத் (௰௫)

தருகுதி யழைத்துத் தந்திடு மளவும்
அருகுய ரிளமலர்க் காவினி லமர்வோம் (௰௬)

என்றவர் போதலு மேவலர்க் கூவிச்
சென்றுநீர் கைலையிற் சிவனடி வணங்கித் (௰௭)

தந்திடுஞ் சிந்தா மணியைத் தராவிடின்
வந்து திரிபுரன் வலிந்தெடுப் பானெனக் (௰௮)

கூறியிங் கதனைக் கொணர்மினென் றேவத்
தேறிய தூதருஞ் சென்றனர் விரைந்தே (௰௯)

இப்பா லிமையவர் யாவருந் திரண்டு
செப்பார் குவிமுலைத் தேவிபங் காளனைச் (௨௰)

சரண்புக நினைந்து தாமிது புரிவார்
அருணனும் மதியுந் திகிரிக ளாகவும் (௨௧)

அமைவுறு மிருதுக ளுட்பரப் பாகவுஞ்
சமய மனைத்து முள்ளிட மாகவும் (௨௨)

முன்னெழு மாயை முகப்பே யாகவும்
மன்னிய காலம் மச்சே யாகவும் (௨௩)

தளர்வறு புவனந் தட்டே யாகவும்
அழகிய சுவர்க்க மாதன மாகவும் (௨௪)

முந்துறு கலைகண் முளையே யாகவும்
மந்தர கிரிமேல் வட்டம தாகவுங் (௨௫)

கதிர்செறி யிமயங் கொடிஞ்சி யாகவும்
உதய மால்வரை கூம்புதை யாகவும் (௨௬)

மற்றைய மலைகள் தூண்க ளாகவும்
குற்றமில் தத்துவங் குடமே யாகவும் (௨௭)

வானெழு மேகஞ் சூழ்மர மாகவும்
ஞானேந் திரியமுங் கன்மேந் திரியமும் (௨௮)

எண்டகு மாபர ணங்க ளாகவும்
அண்ட வகுப்புகள் மாலைக ளாகவும் (உகூ)
புராண சாத்திரம் மணிவட மாகவும்
இராமிளிர் தாரகை விதான மாகவும் (௩௰)
அலைசெறி சமுத்திர மாடை யாகவும்
பலமிகு மருத்துவர் படிக ளாகவும் (௩௧)
திகழ்சிவ கங்கை சாமரை யாகவும்
பகர்மறு நதிகள் பதாகை யாகவுந் (௩௨)
திதிதின மாதிய வேக மாகவும்
இதுமுறை தேரோன் றினிதுற வமைத்துக் (௩௩)
கன்மமு ஞான காண்டமென் றோது
முன்மறை மார்க்க மிருநுகத் தடிகளாய் (௩௪)
நாலணி மறையும் புரவிக ளாக
மேலுப நிடத மவைபணி யாக (௩௫)
வனங்கிளர் வசுக்கள் வடிக்கயி றாக
மனங்கிளர் பிரணவம் மத்திகை யாகப் (௩௬)
பொற்புற நிறுத்திப் பொன்மக மேருவை
விற்றடி யாக வாசுகி நாணாய் (௩௭)
மாலொரு கணையாய் மறலியு மலகாய்க்
காலிற காகக் கணைக்கூர் வடவையாய்ச் (௩௮)
சீருற வகுத்துப் பிரம தேவனைச்
சாரதி யாக்கிச் சங்கரன் முன்னே (௩௯)
கொண்டுபோ யுள்ளக் குறைவெலாங் கூறிப்
பண்டுபோ லெங்கள் பதவிபெற் றுய்ய (௪௰)
இப்பெருந் தேரி லெழுந்துபோய்ப் பலியை
முப்புரத் தோடு முடித்திட வேண்டுந் (௪௧)
தேவவென் றிரந்தார் சிந்தா மணிகொளற்
கேவிய தூதரு மெய்தின ராங்கே (௪௨)
மறுத்தவர் துரத்தி வானவர் தம்மைப்
பொறுத்திரு மென்று கோயிலுட் புக்கி (௪௩)
மந்திரங் கணித்து மதகரி முகனைச்
சிந்தையி லேத்தித் தியானித் திருப்ப (௪௪)

அப்பெரு மானு மவர்முகத் தெழுந்து
செப்பம தாகத் தெரிசனை கொடுத்துத் (௪௫)
திரிபுர மழிக்கு முபாயமுந் தெரித்துப்
பரவினின் றேத்தும் பண்ணவர் தமக்கு (௪௬)
வேண்டிய வரங்கள் விருப்பொடு நல்கிக்
காண்டகு முருவங் கரந்தன னன்றே (௪௭)
மீண்ட தூதுவர் விநாயக மூர்த்தியைத்
தாண்டவ மூர்த்தி தரமறுத் தானெனத் (௪௮)
திரிபுரன் வெகுண்டு செருச்செய வெழுந்தான்
வருமுடி புணரா வகையினி லாங்கே (௪௯)
சதுர்வகைப் படைகளுந் தானவர் தொகுதியும்
புதல்வருந் திரண்டு புடைவரப் போதலுந் (௫௰)
தேவர்க ளமைத்த தேர்மிசைச் சிவனை
பாவை யருகுறப் பண்ணவர் சூழ்வர (௫௧)
எழுந்தெதிர் போயின ரிருதிறப் படையும்
வளைந்தெதிர் கூடி மண்டமர் தொடுத்தார் (௫௨)
எண்ணறு கால மியற்றிடு போரிற்
பண்ணவ ராற்பலர் பாடு சாய்ந்தனர் (௫௩)
சிதறின படையணி சேனைத் தலைவரும்
புதல்வரும் மடியக் கண்ட முப்புரன் (௫௪)
மூவுருக் கொண்டு முப்புரத் துடனே
யாவரும் நடுங்கத் திசைதொறும் பாய்ந்து (௫௫)
பரம சிவனுடன் பலவகைப் போரும்
வெருவுறு தாற்றினன் விமலையு மமரருந் (௫௬)
திருவிளை யாட்டாய்ச் செய்யுமிப் போரைப்
பரம யாமினிப் பார்ப்பதற் கியலேம் (௫௭)
முடித்தியென் றிரப்ப முதல்வனு மோர்கணை
விடுத்தனன் விநாயக மந்திரம் விளம்பி (௫௮)
அக்கணை செலாமு னழிந்தன புரங்கள்
தக்கநன் முத்தி சார்ந்தனன் றிரிபுரன் (௫௯)
பாடின ராடினர் பண்ணவர் சிவன்றாள்
சூடினர் தலைமேற் றோத்திர மியம்பி (௬௰)

வரமிகப் பெற்று வாழ்பதி புகுந்தார்
புரமெரிந் திமையோர் பொன்னகர் புகுந்த (சூக)
அத்தின மேபுரட் டாதிமா மதியிற்
பத்திகொள் பூரணை பாகுளி யெனப்படும் (சூஉ)
எப்பெரும் பாவ மிழைத்தவ ராயினும்
அப்பூ ரணையி லரனொடு கணேசனை (சூஙு)
வழிபடி னினைந்த வாழ்வெலாம் பெறுவர்
எளிதென வியாதற் கியம்பினன் வேதன் (சூச)
கற்றிடாய் சோம காந்தனே யென்று
நற்றவப் பிருகு நவின்றன னன்றே (சூரு)

அகூஅ

## உமையம்மை விநாயக சதுர்த்தி விரத மனுட்டித்தல்.

இன்னமுங் கணேசன் பெருங்கதை யிருந்தாற்
பன்னென வியாதன் பகருவன் சதுர்முகன் (க)
பண்டொரு காலம் பரமனை விலக்கி
மிண்டொடு தக்கன் வேள்வியொன் றாற்றிப் (உ)
பழிசுமந் தனனு லவன்மக ளெனவரும்
இழிவதை நீக்க வெரிபுகுந் துமையாள் (ஙு)
பகவனை வழிபடும் பருவத ராசன்
மகளெனப் பிறந்து வளரு நாளையில் (ச)
முன்வரு கங்கையை முடிக்கமுன் சிவனார்
தன்மண மாற்ற விழைவுகொண் டனளாய்த் (ரு)
தந்தையை நோக்கித் தவங்களின் மேலாய்ச்
சிந்தையி னினைந்தவை சீக்கிரம் பலிக்க (சா)
விரதமுண் டாயின் விளம்பென வினைவலுந்
தெரிதர வவனுந் தெளிந்துரை செய்வான் (எ)
இந்திரன் முதலிய விமையவர் பிறரும்
முந்திய மூவரும் முதன்மையென் றுணர்ந்து (அ)
விழைவொடு நோற்றனர் விநாயக சதுர்த்தியைச்
செழுமலர்க் குழலாய் செய்முறை கேண்மோ (கூ)

ஆவணி மாதப் பூர்வபட் சத்தின்
மேவிய சதுர்த்தியில் விரதந் தொடங்கி (௰)
அன்றுவை கறையி னருந்துயி னீத்து
வென்றிகொள் விநாயகக் கடவுளை யேத்தி (௰௧)
நாட்கடன் முடித்தபின் னறுமலர் முதலாய்
ஆட்டிடு பொருள்களு மருச்சனைப் பொருள்களும் (௰௨)
உணவொடு தீப முபாசனைக் குதவு
குணமுள பொருளெலாங் குறைவற நிறைத்துப் (௰௩)
புண்ணிய தலம்போற் புனிதமா மிடத்திற்
கண்ணகல் மண்டபங் கவினுறச் செய்து (௰௪)
மறைவிதி மண்ணால் மூர்த்தியொன் றமைத்துப்
பிறவொரு மூர்த்தியு மியல்பினுக் கேற்பப் (௰௫)
பொன்மணி வெள்ளி செம்பிவற் றொன்றால்
முன்விதிப் படியே முறையுட னமைத்துத் (௰௬)
தண்டுலம் பரப்பி யதன்மிசைத் தண்ணீர்
கொண்டிழை சுற்றிய கும்பமு நிறுத்தி (௰௭)
முன்னமை மூர்த்திக ளிருவரை முறையே
அன்னதின் பாங்க ரணிபெற விருத்திக் (௰௮)
குருவிடை பெற்றுக் குளிர்புன லாடிப்
பொருவறு நீறு கண்டிகை புனைந்து (௰௯)
துன்றரு பூசனை சோர்விலா தாற்றுக
ஒன்றிரண் டொடுநான் கைந்தா றெட்டுப் (௨௰)
பத்தொடு பன்னிரண் டிருபத் தெட்டென
வித்தக வெழுத்தான் விளங்குமந் திரங்களிற் (௨௰௧)
சிந்தைகொண் டொன்றைச் செபித்திட வேண்டும்
முந்திய மூன்றத் தொன்றுருச் செய்யின் (௨௰௨)
இலக்க முறைசெய வியலா விடினதை
இலக்க மாயினு மிசைத்திட வேண்டும் (௨௰௩)
மற்றய லைந்து மந்திரத் தொன்றைச்
சொற்றிடி னூறு யிரந்தரஞ் சொல்க (௨௰௪)
ஆங்கதிற் கியலா விடிற்பதி னாயிரம்
பாங்குருச் செய்க விருபத் தெட்டெனும் (௨௰௫)

எழுத்தமை மந்திர மிசைத்திடின் முறையே
வழுத்துக பதின யிரம்முறை வழாமல் (உகூ)
இத்தகை செய்யு மேதமில் செபங்கள்
பத்துக் கொன்று பண்ணுக தருப்பணம் (உஎ)
அவ்வகை தருப்பணம் பத்தினுக் கொன்று
செவ்விகொ ளோமஞ் செய்கநற் சிறப்பாய் (உஅ)
முறைபெறு மோமம் பத்தினுக் கோர்முறை
அறுவகைச் சுவையோ டன்னம் வழங்குக (உகூ)
பொன்னொடு பூமி முதற்பல தானம்
இன்னமு மிறுதியி லேற்பவர்க் குதவுக (௩௰)
இப்பரி சாக விழைத்திடு பூசையை
முப்பதா நாள்வரு சதுர்த்தியின் முடித்து (௩க)
மிருத்திகை மூர்த்தியை வரிசையோ டெடுத்துத்
திருத்தடம் புனலொன் றிடைவிடன் முறையாம் (௩உ)
ஊண்டுயில் முப்பது நாளு மொழித்திட
வேண்டு மியலார் முதனாள் விலக்கி (௩௩)
மறுநாள் முதலாய்ப் பால்பழ மருந்தல்
முறையாம் மூர்த்திக ளாயிரம் வரைக்கும் (௩௪)
எத்தனை யமைத்துப் பூசனை செய்யினும்
அத்தனை மடங்கு பலன்கதித் திடுமால் (௩௫)
மேதகு விநாயக சதுர்த்தியின் மேன்மையை
ஓதிட யார்க்கு முளாயிடத் தடங்கா (௩௬)
வேலவன் பண்டு விமலனை நோக்கிச்
சாலவுஞ் சிறந்த தவங்களின் மேலாம் (௩எ)
விரத மேதென வினவிய காலையின்
பெருமையோ டிதனையே வியந்து பேசினர் (௩அ)
பைந்தொடி யுணர்கெனப் பருவத னுரைப்பச்
சிந்தையின் மகிழ்ந்து சீர்திக ளுமையாள் (௩கூ)
யானுமிவ் விரதம் நோற்பதற் குரிய
ஆனபல் பொருளுந் தருகென வளித்தான் (௪௰)
பெற்றமை முறையே பெருந்தவ மிழைத்துக்
கற்பக னருளாற் கறைமிடற் றண்ணலைக் (௪க)

கங்கைமுன் னுள்ளங் கருதிய வாறு
மங்கலம் முடித்து மனமகிழ்ந் தனளே (சஉ)

கூசய

## கர்த்தமன் சதுர்த்திவிரதம் நோற்றல்.

விற்பன வியாதனிவ் விரத மான்மியம்
மற்றுமுண் டோவென மறையவ னுரைப்பான் (க)
ஆற்றலின் மிக்கு மருநிதி படைத்தும்
மாற்றலர் போற்ற மனுநெறி வழாமன் (உ)
வித்தக வுலகை மேனாட் புரந்த
கர்த்தம னென்றோர் காவல னிருந்தான் (ங)
ஒருதின மவன்சபைக் குயர்தவப் பிருகு
வருதலு மெதிர்போய் மலரடி பணிந்து (ச)
ஆசன முதவி யமர்ந்திடச் செய்து
மாசக னன்மொழி வழங்கிய பின்னர் (ரு)
அருந்தவ வெனக்கிங் களக்கருஞ் செல்வம்
பொருந்துறற் கிருந்த புண்ணிய மேதென (சா)
மற்றவ னுரைப்பான் வைசியர் குலத்தில்
முற்பவத் துதித்தாய் முதிர்கலி வருத்தலின் (எ)
நின்குல வொழுக்கம் நீங்கினை தமரெலாம்
உன்னைப் பழித்தன ருபிர் துறப் பேனென (அ)
வெங்கான் படர்தலு மாங்கொரு மாதவன்
மங்கா விரதச் சவுபரி யென்பான் (கூ)
கண்டுனைத் தேற்றிக் கணபதி மந்திரம்
விண்டனன் கணித்தாய் விநாயக சதுர்த்தி (ய)
எய்தலுந் தானு மிருந்துனை நோற்கச்
செய்தன னுடனே பல்வகைச் செல்வமும் (யக)
மேவிய துன்மனை யிடந்தொறும் மீண்டுபோய்
யாவரும் புகழ வாழ்ந்தனை நெடுநாள் (யஉ)
அப்பவத் திழைத்த வருந்தவப் பேற்றால்
இப்பவந் தனிலு மிருநிதி படைத்தாய் (யங)

என்றுரைத் தேகினன் கர்த்தம னிப்பால்
நன்றென விரதம் நடத்திவாழ்ந் தனனே (௰௪)

௯௫௪

# நளன் விரத மனுட்டித்தல்.

நிறைவளங் கெழுமிய நிடதநன் ஞட்டில்
இறையவர் பதிபோ லெழினலம் பெருகி (௧)
மன்னுமா விந்த மாநகர் தனிலே
தன்னிக ரற்றோர் தனிக்குடை நிழற்கண் (௨)
வைகிய நளனெனும் மன்னவர் பெருமான்
செய்ய தாமரைத் திருவெனச் சிறந்து (௩)
பொலிதமை யந்தியின் புணர்முலே தோய்ந்து
கலைமிகு பதும வத்தனென் றோது (௪)
மந்திரி மருங்குற மாநிலம் புரக்கும்
அந்த நாளையி லாங்குறக் கவுதமன் (௫)
பணிந்தடி தொழுது பயிலருந் தவத்தோய்
உணர்ந்தபல் விரதத் தொப்பிலா வொன்றைத் (௬)
தெரிந்துரை செய்கெனத் தெளிந்திது தெரிப்பான்
பொருந்துமுற் பவத்தி னீடிய புகழோய் (௭)
அறந்திகழ் கவுடநாட் டரச னுகநீ
பிறந்தர சுரிமை பெற்றிருந் திடுநாள் (௮)
பற்றலர் தேயங் கைக்கொளப் பலரொடும்
உற்றனை கானி லொருமலர்ச் சோலையில் (௯)
கவுசிக னிருப்பக் கண்டடி பணிந்தனை
அவன்குளிர்ந் துள்ள மைங்கரற் குரிய (௰)
மேதகு சதுர்த்தி விரத மேன்மையைத்
தீதற வகுத்து நோற்றிடச் செய்தான் (௰௧)
அப்பல னுற்பகை யறுத்துல காண்டாய்
இப்பவந் தனிலு மீடற வுயர்ந்தாய் (௰௨)
வென்றிகொள் மேதவம் வேறிலை யென்றான்
அன்றுதொட் டொவ்வோ ராண்டுமவ் விரதம் (௰௩)

க்ஷேமமோ டாற்றி நெடிது வாழ்ந்தபின்
காமரு பதவி கலந்தனன் நளனே (௰௪)

௯௪௮

# சந்திராங்கதன் சரிதம்.

பூமலர்ச் சோலை புடைபொலிந் திலக
மாமலி வளங்கூர் மாளுவ நாட்டைக் (௧)
கார்மலி கன்ன புரத்திருந் தாளுந்
தார்மலி மார்பன் சந்தி ராங்கதன் (௨)
சுந்தர மேறிய சுரிகுழற் றுணைவி
இந்து மதியோ டின்புறு நாளில் (௩)
தானையும் மந்திரக் கிளைவருஞ் சூழ்வரக்
கானக மேகிக் கனிவிலங் கெறிந்து (௪)
விருப்பொடு பற்பல வேட்டைக ளாடையில்
அரக்கர்கள் சிலபே ராங்குவந் தடர்ந்து (௫)
பொருதுயி ரழிந்து போயினர் மற்றொரு
பெரிய ராக்ஷதப் பெண்ணெதிர் குறுகிச் (௬)
செய்தனள் பெரும்போர் செம்மலை மடக்கிக்
கைகொடு பற்ற நெருங்கலு மாங்கவன் (௭)
வலியிழந் தகன்றோர் மடுவினிற் பாய்ந்தான்
கலனுயர் நாக கன்னிய ரம்மடுப் (௮)
புனல்விளை யாட்டிற் போந்துளார் கண்டு
மனமகிழ்ந் திங்கு வாய்த்தது தவமெனக் (௯)
கோமகன் றன்னைக் கொண்டுதம் மூர்போய்க்
காமுக ராகிக் கலவியை வேண்டலும் (௰)
மறுத்தனன் வேட்ட மனைவியை யல்லால்
அறத்திய னழுவி யாரையும் புணரேன் (௰௧)
ஈன்றவென் றந்தை யேம கந்தனைப்
போன்றொழு காமற் புன்னெறி படரேன் (௰௨)
பாவைமி ரென்று பகர்ந்தன னாயினும்
மேவுமா றெண்ணி விடாமற் றடுத்துப் (௰௩)

பன்னிரண் டாண்டு வைத்துப சரித்தார்
மன்னவன் மடுவில் மாய்ந்தன னென்னு (௰௪)
இந்து மதிகேட் டிழைகளைந் தெறிந்து
முந்து துயர்க்கடன் மூழ்கின ளிருப்ப (௰௫)
மகரயாழ் முனிவன் வந்தவட் டேற்றி
நிகரறு பாவாய் நீங்கிய காதலன் (௰௬)
படிந்தில னுரகர் வாழ்புரந் தன்னை
அடைந்திருக் கின்றா னவ்வயி னீங்கி (௰௭)
வருமா றதுவும் வகுப்பது கேட்டி
கரிமா முகனைக் கைதொழு திறைஞ்சிச் (௰௮)
சாற்றரு மேன்மைச் சதுர்த்திநல் விரதம்
நோற்றிடு கென்ன நுவன்று போயினன் (௰௯)
உரைத்தவம் முறைபோ லொண்டொடி விரதங்
கருத்தொடு நோற்பக் கணேசனல் லருளால் (௨௰)
மன்னவன் றன்னை மணிமுடி யுரக
கன்னியர் கலவிக் கருத்திகந் தனுப்ப (௨௧)
மணிநகர் மீண்டு மனைவியுந் தானுங்
கணபதி பூசனை கைவிடா தாற்றி (௨௨)
நெடியபல் போகந் திளைத்துடல் நீத்து
முடிவிலா னந்த முத்திசார்ந் தனரே (௨௩)

௬௬௧

# சண்முகர் அனுட்டித்தல்.

அரனிடம் நூற்றெட் டுகமர சாள
வரம்பெறு தாருகா சுரனெனும் வள்ளல் (௧)
அண்ட மாயிரத் தெட்டையுந் தன்கீழ்க்
கொண்டு தேவரைக் கொடுஞ்சிறை புகுத்த (௨)
இந்திர னரிமுத லெதிருறாச் சிலபேர்
சுந்தர மேருச் சூழலிற் கரந்து (௩)
கவற்படு மேல்வையிற் கந்த மூர்த்தியைச்
சிவன்றர முயற்சி செய்மினென் றோர்மொழி (௪)

விண்ணொழ மகிழ்ந்து வெள்ளிமால் வரைபோய்
அண்ணலைக் காணா தம்பிகை தாடொழ (ரு)
இதுகிரி புடைசூ ழீரிரு மலையின்
மதகிரி யிருந்து மாலினுக் கருளியும் (சு)
புட்ப கிரியி லயற்கருள் புரிந்தும்
பெட்புற நிமிர்ந்து பிறங்குசந் தான (எ)
மலைமிசை வானவர்க் கருளிய முறைபோற்
குலவிய கோள கிரியினிற் சிவனார் (அ)
முனிவர்கட் கருள மோன முற்றனர்
இனியவ ணேகிக் காண்மினென் றிசைத்தாள் (கூ)
சென்றன ராங்கு திருத்தகு மோனம்
ஒன்றிய யோகத் துமாபதி யிருப்பக் (ய)
கண்டனர் காமனைக் கடுகென வழைத்து
மண்டிய பைந்தேன் மலர்க்கணை தூவிப் (யக)
பரமனை விழிக்கப் பண்ணெனப் பணித்தலும்
வருபுணர்ப் பறியான் வரிசிலை குனித்துப் (யஉ)
பூங்கணை தெறிப்பப் புரமூன் றெரித்தோன்
ஆங்குசற் றேகண் டிறந்தன னனல்போய்க் (யங)
காமனை யெரித்துக் கடந்துவிண் ணளாவ
மாமயி லுமையாள் மருங்குவந் தோடி (யச)
எம்பெரு மானே யேழைகட் கிரங்காய்
வம்பலர் தூவிய மாரனும் மடிந்தான் (யரு)
ஒப்பினின் பெருமை யுணர்ந்தில ராகி
இப்பிழை யிழைத்தா ரிரங்குதி தாருகன் (யசு)
வன்சிறை புகுத்த வானவர் வருந்தித்
துன்புற லாற்றா ரருளெனத் தொழுதாள் (யஎ)
கறைமிடற் றோனுங் கருணை கூர்ந்து
பிறைநுத லோடு பெயர்ந்தவ ணீங்கிக் (யஅ)
கயிலையை மேவிக் கலவியி லிருப்பத்
துயர்மிகு வானவ ரறுபதி னாயிரம் (யகூ)
ஆண்டு காத்தபின் னக்கினி தேவனை
மீண்டு சிவன்பால் விடுத்தன ரவன்போய் (உய)

இரந்துமை கரத்தி லேற்றிணி தளிப்ப
அருந்திய வீரியத் தனல்பொறுக் காதுய் (உக)
விரைவுட னிமகிரி மேவிநற் கங்கையிற்
சரவணப் புற்கள் தழைத்து மூடிய (உஉ)
பொய்கையில் விடலுங் குழவியாய்ப் பொருந்தி
வைகிய தறுமீன் வழங்குபா லருந்தித் (உங)
திருமா லுணர்ந்து தெரித்திட வுமைபோய்
அருமா மகனை யணைத்தெடுத் தேந்தித் (உச)
திருவமு தூட்டிச் சிவன்கையிற் கொடுப்பப்
பிரியமோ டேற்றுப் பெயர்பல வகுத்தார் (உரு)
பண்ணவர் தங்குறை பகர்ந்தடி பராவச்
சண்முக னெழுந்துபோய்க் கிருஷ்ணை நதியின் (உசா)
வடபா லாங்கோர் சோலையின் வைகித்
தடகரி முகத்தோன் சடாக்கர மனுவை (உஎ)
முறையொடு கணிப்ப முன்னெழுந் தெம்பிரான்
சிறைவிரித் தாடுஞ் சிகண்டிவா கனமும் (உஅ)
வரங்களு முதவி வானிடை மறைந்தான்
அரும்பிய விலக்க மலராறு கெடுத்தாங் (உகூ)
கிலக்கா யெழுந்தவன் றிருவுரு விருத்தி
இலக்க விநாயக னெனப்பெயர் வகுத்து (ஙய)
வழிபட் டப்பால் வானவர் சூழ்வர
வெளிபட் டெதிர்த்த தாருகா சுரனைச் (ஙக)
சாய்த்துல கெல்லாந் தாழ்வகன் றுய்யக்
காத்தன னறுமீன் காதலன் பூசனை (ஙஉ)
ஆற்றிய தலம்மயூ ரேசமா மென்னச்
சாற்றுபேர் கொண்டு தழைத்திடு மன்றே (ஙங)

ஞ்உச

# மன்மத னுருப்பெறல்.

நீரணி சடையோன் னுதல்விழி நெருப்பால்
மாரனீ றுகிய மாற்றங் கேட்டுப் (க)

பாவை யிரதி பரதவித் தோடி
மேவினள் கைலை விமலனை யடுத்துக் (உ)
கண்ணீர் பெருகக் கைதொழு திறைஞ்சி
எண்ணு திமையோ ரேவலின் மடிந்த (ங)
அங்கசன் பிழையைப் பொறுத்தவன் றனைநீ
இங்கெனக் கருள்வா யென்றலு மிறையோன் (ச)
மனங்குளிர்ந் திரதி மதிமுகம் நோக்கி
அனங்கனை நினக்கு மாத்திரம் ரூபனுய் (ரு)
மற்றவர்க் கரூபனு வழங்கினம் முன்போல்
வெற்றிகொள் திறமையும் வில்லொடு கணையும் (சு)
விநாயகக் கடவுளை வேண்டிடின் வாய்க்கும்
எனவிடை கொடுப்ப வெழுந்தமன் மதனும் (எ)
மயிலூர் குமரன் வழிபட் டிருந்த
மயூரே சத்தில் வந்தினி தமர்ந்து (அ)
முந்துறு தவத்தின் முயன்றிட நெடுநாள்
வந்தெதி ரைங்கரன் வரம்பல வுதவி (கூ)
மண்மிசை மாயோன் வந்தவ தரிப்பான்
கண்ணனு மவற்கு நீமக னுகி (ய)
வடிவுகொள் வாயென வகுத்துருக் கரப்ப
அடைவுட னங்கோ ராலய மமைத்து (யக)
நலமிகு மகோற்கட னெனப்பெயர் நாட்டிச்
சிலபகற் பூசனை செய்தபின் சென்று (யஉ)
தண்மொழி ரதியுடன் வாழ்தரு நாளின்
மண்மிசைக் கண்ணன் வந்தவ தரிப்பப் (யங)
பிரத்தியு மன்னெனும் பெயரொ டாங்கவற்
குருத்திகழ் புதல்வ னுகவுற் பவித்தான் (யச)
இங்கிவன் வளரச் சம்பர னெனும்பேர்
தங்கிய தானவன் றனியளா மிரதியைப் (யரு)
பற்றிவிண் ணெழுந்து புடர்ந்துபோ மளவின்
மற்றவள் நழுவிக் கடல்விழ வொருமீன் (யசு)
விழுங்கிய தவனும் வேலையை யுழக்கிப்
புழுங்கிய மனத்தொடு கண்டிலன் போந்தான் (யஎ)

காரிழை தன்னைக் கருவெனக் கொண்ட
பாரிய மீனம் வலைஞர்கைப் படலுஞ் (யஅ)
சம்பரன் முன்னே தந்திடக் கீழ்ந்து
வம்பவிழ் கோதை வனிதையைக் கண்டு (யசு)
மகளென வளர்த்தா னிவ்வர லாற்றைப்
புகரறு நாரதன் போயங் குரைப்பப் (உய)
பிரத்தியு மன்னெனப் பெயர்பெறுங் காமன்
கருத்தொடு ரதியைக் கைக்கொளச் சென்று (உக)
சம்பா சுரனைத் தாக்கி நெடுநாள்
வெம்போர் விளைத்து வெல்வழி முயன்றான் (உஉ)
திருக்கிளர் மகனைத் திசைதொறுந் தேடி
உருக்கு மணியா ளுளம்பர தவித்துத் (உங)
தந்திமா முகனே தஞ்சமென் றெண்ணி
விந்தைகொள் சதுர்த்தியை விருப்பொடு நோற்க (உச)
ஆறும் நாளி லவுணனை யழித்துப்
பேறுய் விரும்பிய பெண்ணொடு மைந்தன் (உரு)
வந்தன னுருக்கு மணிமிக மகிழ்ந்து
முந்திய நோன்பை முறையொடு முடித்தாள் (உசு)
அத்தகு பிரத்தியு மன்மக னயனு
ருத்தன் பிறந்து ரூபமிக் குடைய (உஎ)
காமனிற் சிறந்த கட்டழ கமைந்து
பூமகிழ் யவ்வன திசையினைப் பொருந்தலும் (உஅ)
எரிமதிள் புடைசூழ் புரியர சியற்றும்
வரமிகு வாணன் மகளுடை யென்பாள் (உசு)
கனவிடைக் கண்டு பாங்கியர்க் குரைப்ப
அனையரி லொருத்தி சித்திர லேகை (நய)
இரவினி லேகிக் கண்வள ரிளவலை
விரிமல ரணையொடு மெல்லெனக் கொடுபோய் (நக)
அரசிமுன் றரலு மாங்கவன் றன்னைக்
கரவினில் வைத்துக் கலந்தனள் சிலநாள் (நஉ)
வளர்ந்தது வயிறு கருக்கொடு வாணன்
தெளிந்தனு ருத்தனைச் சிறையினில் வைத்தான் (நந)

கங்குலிற் பிரிந்த காளையைத் தேடி
எங்குற் றனனோ விளைந்ததென் னோவென (௩௪)

மனங்குழை பிரத்தியு மன்முகம் நோக்கி
வனங்கிள ருருக்கு மணியிது பகர்வாள் (௩௫)

சம்பர னுடனீ சமர்புரி நாளில்
இம்பரி னுன்னைக் கண்டிடா திரங்கி (௩௬)

மதகரி முகவன் மாதவச் சதுர்த்தியை
விதியொடு நோற்றேன் சயமொடு மீண்டாய் (௩௭)

அம்முறை நீயு மனுட்டியென் றுரைப்பச்
செம்மைகொள் விரதஞ் செய்தன னுடனே (௩௮)

கரிமுக னருளா னடந்தவை யனைத்துந்
தெரிதரக் கண்ணன் றிடமுட னேகி (௩௯)

மலைந்தெதிர் வாணனை வானகர்க் கேற்றி
நலந்திக ழுடையைப் பவுத்திர னுடனே (௪௰)

தன்பதிக் குய்த்தான் சதுர்த்தியின் பலனால்
இன்புற யாவரு மினிதுவாழ்ந் தனரே (௪௧)

அசா (௫)

# ஆதிசேடன் அனுட்டித்தல்.

இலகிவிண் ணளாவி யெழும்பிய கைலையில்
அலரொளி பரக்கு மரியணை மேலே (௧)

பார்வதி சகிதராய்ப் பரசிவ னிருப்பச்
சீர்திகழ் திருமான் முதற்பல தேவரும் (௨)

வந்துவந் தடிமலர் வணங்கினர் வணங்கா
அந்தமில் சடைமே லமர்ந்துள சேடன் (௩)

முனிவர்கள் யாவரும் முடிபணிந் திறைஞ்சத்
தனிமுடி யிருக்குந் தன்னிலை நினைந்து (௪)

செருக்குறச் சிவனார் சேடனைப் பிடித்துப்
பொருக்கென மால்வரைப் புறத்தினி லெறிந்தார் (௫)

விழுந்தன னுயிரஞ் சுக்கலாய் வெடித்துப்
பிளந்தது தலையும் பேச்சுமூச் சற்று (௬)

வருந்தினன் கிடப்ப மகரயாழ் முனிவன்
பொருந்துமவ் வழியிற் போந்தவன் கண்டு (எ)
மாறு வித்துயர் வந்தவா றென்கொல்
கூறென நாணுற் கூறிலன் கிடப்பச் (அ)
சிந்தையா லுணர்ந்து செருக்கினு லிக்கதி
வந்தது தீர மதகரி முகத்தோன் (கூ)
சதுர்த்தியைப் பேணெனச் சடாக்கர மனுவைப்
பதித்திட மனதிற் பகர்ந்தனன் போயபின் (ய)
பெற்றமா மந்திரப் பேரரு ளாற்களை
சற்றே தணிதலு மவ்விடந் தணந்துபோய் (யக)
வளமிகுத் திடும்பிர வாளமென் றோதும்
அளகையிற் சிறந்த பதிதனை யடைந்து (யஉ)
வியனுறு கோயில் விநாயகற் கமைத்துப்
பயனுறு சதுர்த்தியைப் பத்தியி னேற்கத் (யஙு)
தரிசன மருளித் தந்திமா முகவன்
பிரிபடு தலையின் கூறுக ளாயிரந் (யச)
தலைக ளாகவுந் தரணியைத் தாங்க
வலியமைந் திடவும் வளர்மதிச் சடையோன் (யரு)
முடிமிசை முன்போ லந்தலைப் பணியாய்
அடையவுந் தனக்கோ ரனைஞா னுகவும் (யசா)
இன்னநல் வரமெலா மினிதொடு வழங்க
மன்னிய சேடன் மகிழ்ந்துவாழ்ந் தனனே (யஎ)

ஆக அஉ

# இந்திர விமானம் மண்ணிழிதல்.

காதலி னினைந்தவை கையுற வழங்கும்
மாதவச் சதுர்த்தியின் மகத்துவ முரைத்தோம் (க)
இன்னமுஞ் சங்கட சதுர்த்தியென் றிசைக்கும்
அன்னதை வேத னறைந்தவம் முறையே (உ)
சொல்லுதுஞ் சோம காந்தகே ளென்று
வெல்லருந் தவத்துப் பிருகுவிண் டுரைப்பான் (ங)

வளங்கெழு மத்திய தேயமா நாட்டில்
இளங்கதிர் நுழையாச் சோலைசூழ்ந் திலகும் (ச)
தன்னிக ரில்லாச் சகத்திர புரியாள்
மன்னவன் சூர சேனனும் வள்ளல் (ரு)
வேலைவென் றிசனும் விழியலர்க் கொம்பனாள்
சிலையென நிசைக்குந் தேவிதன் னுடனே (சா)
வாழ்பவ ளொருநாட் கொலுவயி னமர்ந்து
சூழ்குறை முறைகேட் டரசிய னடாத்த (எ)
அந்தரத் திருந்தோ ரழகிய விமானம்
வந்திழி கதிர்போல் மண்மிசை யிறங்கக் (அ)
கண்டதி சயித்துக் காரண மறிவான்
மண்டிய பரிசனம் மருங்கு சூழ்வரப் (கூ)
படர்ந்துபார்ப் பளவிற் பன்னவர் கோமான்
இடம்படு வியான மத்தியி லிருப்பக் (௰)
கண்டுநன் முகமன் கசிந்துரை யாடிப்
பண்டியான் செய்த பெருந்தவப் பலனே (௰க)
இன்றுனைக் காணற் கிருந்தவா றிங்கு
மன்றலந் தோளாய் வரன்முறை வழுத்தென (௰உ)
இந்திர னிசைப்பா னிந்தபா நிலத்திற்
றந்திமா முகவன் றலத்தினிற் சிறந்து (௰௩)
புனிதனாம் நாதன் பொற்புரு வமைந்த
முனிபுரான் பெயர்புரு கண்டியாம் முனிவன் (௰ச)
கண்டிவந் துரைப்பக் காறுகற் காதை
கொண்டியான் கான மார்க்கமாய் வரலும் (௰ரு)
பழிமிகும் பொல்லாப் பாவியிங் கொருவன்
அழுதுறு குட்டத் தழுந்திடு வணிகன் (௰சா)
மகனெறி நோக்கா துறுகதி வழுக்கித்
தகைபடு விமானந் தாழ்ந்தது புவியில (௰எ)
ஐங்கரன் விரத மகிமைத் தினுஞ் சிறந்த
சங்கட சதுர்த்தி நோற்றுமெய்த் தவத்தோன் (௰அ)
இங்குளா னென்னி லவன்விழி நோக்கால்
தங்கிய விமானந் தரைவிடுத் தெழும்பும் (௰கூ)

மன்னவ வென்முன் மற்றவன் மேலும்
முன்னர்நீ யுரைத்த முனிவரன் மகிமையும் (உய)
இங்குநோற் றறியா விரும்புழ்க் கணேச
சங்கட சதுர்த்திபி னியல்பையுஞ் சாற்றென (உக)
அண்டர்தங் கோமான் மகிழ்ந்தவற் குரைப்பான்
தண்டக வனத்திற் றக்கதோர் மூதூர் (உஉ)
நந்துர மெனப்பெயர் நவிலுறப் படுமால்
விந்தைகொ ளவ்வூர் வேட சேரியிற் (உங)
பிறந்தன னொருவன் பெயர்விப் பிரதன்
அறந்தலை கவிழ்க்குங் கொடியவ னாகி (உச)
வழிபறித் துண்டு வாழுமோர் நாளிற்
செழுமறை யுணர்ந்த தேசிக னொருவன் (உரு)
அவ்வழிப் போதலு மடர்ந்துபின் றொடர்ந்தான்
வவ்வுவ னுயிரென மறையவ னஞ்சி (உசா)
ஓடலும் பின்றொடர்ந் தோடி நெடும்பகல்
கூடிலன் கைக்கெனக் கொண்டதன் களையால் (உஎ)
மீள்வழி தன்னில் விநாயகக் கடவுள்
வாழொரு கோயில் வளம்பெறக் கண்டான் (உஅ)
மணிதிகழ் கோயின் மருங்கினில் வயங்கும்
அணிதிகழ் தீர்த்த மாடியு மருந்தியுங் (உகூ)
களைகிறி தாறிக் கரையமர்ந் திருப்ப
வளர்தவ முக்கலன் வருவது கண்டு (ஙய)
எடுத்தகை வாளோ டெழுந்தெதி ரோடிப்
படுத்திடச் சென்முன் பண்ணவன் னோக்கலும் (ஙக)
அலரிவிண் ணுதிப்ப வகன்றிடு மிருள்போல்
விலகிய வேடனைப் பற்றிய விருளெலாம் (ஙஉ)
தன்பெரும் மடமை தணந்துமெய்ஞ் ஞானம்
மன்னலும் மாதவன் மலரடி பணிந்து (ஙங)
காத்தரு ளென்னைக் கைவிடே லுலகில்
நீத்தனன் னெருங்கிய பற்றெலா மென்றனன் (ஙச)
மாதவன் கேட்டு மனங்குளிர்ந் தவனைத்
தீதகல் புனலிற் றோய்ந்திடச் செய்து (ஙரு)

சிரந்தனிற் றனது செங்கையைச் சேர்த்து
வரந்தரு மோம்கணே சாய நமவென (௩௬)

நலந்தரு மந்திரங் காதினி னவின்று
புலர்ந்தவோர் தண்டைப் பூமியி னட்டு (௩௭)

நாடொறு மும்முறை நறும்புன லிதற்குப்
பாடறப் பெய்து பகர்ந்தவிம் மனுவையுங் (௩௮)

கருத்தொடு கணித்துக் கணேசனை வணங்கி
இருத்திபல் சித்தியு மெய்திடும் யான்போய் (௩௯)

மீள்வலென் றேகினன் வேடனும் மகிழ்ந்து
நாள்தொறும் மந்திரம் நவின்றுமும் முறைநீர் (௪௰)

தண்டினுக் கூற்றத் தழைத்தது கிளைபூக்
கொண்டடர்ந் தெழும்பிக் கொடுத்தது குளிர்நிழல் (௪௧)

ஆயிர மாண்டிங் ககலுமக் கலனும்
மேயினன் மீண்டு நோக்கியவ் வேடனை (௪௨)

இத்தவ நிலைமை யெய்துதல் யார்க்கும்
மெத்தவு மரிதென வியந்தனன் மேலும் (௪௩)

வைத்துப தேசம் வழங்கிமந் திரித்த
வித்தக நீரை மேற்றெளித் திடலும் (௪௪)

புருவ நடுவிற் புழைக்கரந் தோன்றி
மருவினன் கணேச வுருமுனி மகிழ்ந்து (௪௫)

புருவ நடுவிற் பொருந்துசுண் டத்தால்
உரைபெய ரினிப்புரு சுண்டியா முலகில் (௪௬)

இந்தநன் மரமு மிலங்குகற் பகமாய்ச்
சிந்தையில் விழைந்தவை தீதற வழங்கும் (௪௭)

கற்பநாள் வாழ்கெனக் கருணையின் வாழ்த்தி
மற்றவன் போயபின் மாதவப் பலனாற் (௪௮)

கரிமுகக் கடவுள் காட்சிதந் துரைப்பப்
பொருண்முன் றுணர்ந்து புகரறு சீவன் (௪௯)

முத்தனு மாகினன் மொய்மலர்த் தாரினைப்
அத்தவ னாற்றிய விரதமுங் கேளே (௫௰)

## புருசுண்டி சங்கட்ட சதுர்த்தி அனுட்டித்தல்.

ஒருபகல் நாரதன் யமனுல கேகத்
தருமனு மெதிர்போய் நயமொழி சாற்றி (க)

இங்கெழுந் தருளிய தேதென வினவ
அங்குள வளங்க ளறியவந் தேனென (உ)

நன்றென மகிழ்ந்து நகர்ச்சிறப் பனைத்துந்
துன்றிய நிரயத் தொகையொடுங் காட்டக் (ங)

கண்டனன் சுற்றிக் கருத்துட னேபுரு
சுண்டி மாதவன் றொல்குல மெல்லாம் (ச)

ஆங்கொரு பாங்கர் கும்பி பாகமென்
றோங்கிய நிரயத் துழல்வது கண்டு (ரு)

மீண்டிடு வழியி லறைகிதை விளம்பி
நீண்டிடு புகழோய் நின்குலத் தவரைநீ (சா)

நற்கதிக் குய்ப்ப முயலென நவின்றான்
மற்றவன் றேர்ந்து வழிவே றிலாமற் (எ)

சங்கட சதுர்த்தியை நோற்றதன் பலனை
ஐங்கரற் களித்தலு மக்கணந் தனிலே (அ)

தமரெலாம் முத்தி சார்ந்தன ரென்றால்
அமைபலன் விரித்திங் கறைதலு மரிதே (கூ)

ஆசக

## கிருதவீரியன் தவப்புரிதல்.

செய்யகா வேரி செழிப்புற வழங்குஞ்
சைய மால்வரைச் சாரலி னுங்கோர் (க)

திருநக ரிருந்து செங்கோ லோச்சும்
விரிபுகழ்க் கிருத வீரிய னென்பான் (உ)

தோகையர் சிகாமணி சுகந்தையென் பாளொடு
போகமுற் றிருந்து பொலியுமந் நாளில் (ங)

மகப்பே றின்றி மனமிகத் தளர்ந்து
நகர்ப்புறத் தோங்கு மடவியை நண்ணிச் (௪)
சருகிலை யுண்டு தம்முடல் வருத்தி
இருவரு மருந்தவ மிழைத்தன ரிருப்ப (௫)
அருந்தவ நாரதன் பிதிருல கடைந்து
வருந்திடு கிருத வீரிய மகிபன் (௬)
தந்தையைக் கண்டு தரணியி னின்மகன்
மைந்த ரிலாமையின் வனங்குடி புகுந்தான் (௭)
அவனொடு நின்குல மழியா வண்ணந்
தவமுளா னவற்குத் தக்க சந்ததி (௮)
எய்திட வகைநீ யெப்பரி சாயினுஞ்
செய்கென வுரைத்துச் சென்றன னப்பால் (௯)
சித்தமுற் றப்பிதிர் தேவனு மெழுந்து
சத்திய லோகஞ் சார்ந்தல ரணைமேல் (௰)
மன்னிய மறையோன் மலரடி வணங்கித்
தன்னரு மகற்குச் சந்ததி யிலாமை (௰௧)
என்னினிச் செய்மா றேதென விசைப்பான்
முன்னைய பவத்தி லுன்மக னின்றுவாழ் (௰௨)
அந்தமா நகரி லரசர்தங் குலத்தில்
வந்தவ தரித்தான் சாமனு மவன்பெயர் (௰௩)
துதிபெறு கணேச னெனப்பெயர் சூடிய
புதல்வனு மொருவ னுங்கவற் கிருந்தான் (௰௪)
வருவிதி வழியால் வறுமைவந் தணுக
ஒருபக லிருபக லுணவிலா தாழ்ந்தும் (௰௫)
இரந்துண வருந்தியு மிவ்வகை நாட்கழித்
திருந்திடு மோர்நாள் யாதுமூ ணின்றிக் (௰௬)
கடும்பசி வருத்தக் கானிடை புகுந்து
நெடும்மறை யோர்வழி நேர்ந்தபன் னிருவரைக் (௰௭)
கொன்றவ ருடலெலாங் குகையினில் வீசிப்
பொன்றுகி லோடு புனைகலன் பறித்துக் (௰௮)
கங்குல்வாய் நடந்து கடிமனைக் கேகி
அங்குதாட் கதவ மடைபட் டிருப்பக் (௰௯)

கணேச கணேச கணேசவென் றரத்துக்
குணமிகு மகனை மும்முறை கூவியும் (உ௰)
எதிர்மொழி யிலாமையி னேறியுட் குதித்துப்
புதல்வனைப் பார்க்கப் புதல்வனு மிறந்து (உக)
கிடப்பது கண்டு கிலேசமுற் றயர்ந்து
படுத்தனன் பசியொடு பாவியு மிறந்தான் (உஉ)
அற்றைநாட் சங்கட சதுர்த்தி யாதலின்
மற்றவன் மைந்தன் மருவினன் பெரும்பதம் (உ௩)
மும்முறை கணேச னெனமொழிந் தமையாற்
செம்மலா யிம்மையிற் செனித்தன னின்மகன் (உ௪)
அப்பவப் பாவ மழியா தெஞ்சலின்
இப்பவத் தெச்ச மிலையினி வேண்டுமேல் (உ௫)
சங்கட சதுர்த்தியைத் தாழ்வற நோற்றால்
பொங்கிய பவம்போய்ப் புதல்வர்பெற் றிடலாம் (உ௬)
அப்பெரு விரத மாற்றிடு முறைகேள்
செப்பரு மாசிநற் றிங்கள்பின் பக்கம் (உ௭)
மேவிய செவ்வாய் விரவிய சதுர்த்தியிற்
பூவணை யமளி புலரியி னீத்து (உ௮)
விரிபுன லாடி வெண்ணீ றணிந்து
மருவுநல் லக்க மணிகளும் புனைந்து (உ௯)
புலன்களோ ரைந்தையு மொருவழிப் பொருத்தி
இலங்கு மோரெழுத் தாறெழுத் தோடு (௩௰)
நாமமந் திரமும் நவிலுறக் கணித்து
நேமமா யுணவை நீக்கிநாள் விடுத்து (௩க)
வான்பிறை யுதிக்க வரந்தரு மூர்த்தியை
நான்முறை யிருத்தி நுவலரும் பூசனை (௩உ)
அன்புட னாற்றி யம்புலி தனக்கும்
நன்முறை யருச்சனை நடாத்திய பின்னர் (௩௩)
அறுசுவை யுண்டி யடைக்காய் வெள்ளிலை
மறையவர் தமக்கு மகிழ்வொடு வழங்கி (௩௪)
அன்றிரா முழுதுங் கண்டுயி லாமல்
வென்றிகொள் விநாயக மான்மியம் விரித்த (௩௫)

சரிதைகள் பலவுந் தளர்விலா திருந்து
விரதமாய்க் கேட்டல் விதியெனப் படுமால் (நகூ)

இப்பரி சிழைப்பவர் பவமிரிந் தோட
வைப்பினில் வாழ்வொடு மகப்பே றெய்துவர் (நஎ)

மலர்தரு வன்னி மரத்தடி யிருந்து
நலமொடு நோற்பவர் நவையெலா மகலக் (நஅ)

கூன்குரு நிமை யெனுங்குறை நீங்கி
நான்மருங் கிசைசெல நலமொடு வாழ்வார் (நகூ)

பூமக னிற் பொருந்து சதுர்த்தியின்
மாமருப் புடையான் மகிழ்வதே தென்னில் (சம)

செப்புதுங் கேள்பிதிர் தேவவென் றயனுந்
தப்பற விரித்துச் சாற்றலுற் றனனே (சக)

தாஅஉ

# அங்காரகன் அனுட்டித்தல்.

ஐங்கரக் கடவுட் கன்ப னகிய
பங்கமில் பரத்து வாசமோர் காலந் (க)

திரைசெறி நருமதை தீரத் திருந்தான்
விரிபுனல் படிதற் கொருபகன் மேவ (உ)

ஆங்கொரு தேவ மங்கையிற் சிறந்த
பூங்கொடி யாளும் போதலைக் கண்டு (ங)

தேறிய வுள்ளங் கலைந்தடங் காமுன்
மீறிய வீரியம் மண்மிசை வீழ்ந்து (ச)

பொருந்திய தொருமக வாய்ப்பெற பூமகள்
அருந்தவப் பரனென் றுதரித் தனைசெல் (ரு)

வண்மைகொள் செந்நிறம் மருவிய வியல்பும்
மண்புகுந் துதித்த பரமையும் மதிக்கங் (சா)

காரக னென்றும் பூமக னென்றும்
சீரிய ருரைப்பச் சிறுவனும் வளர்ந்து (எ)

பருவ மெய்தலும் படிமகள் கொடுபோய்
வரமிகு பரத்து வாசர்கைக் கொடுப்பத் (அ)

தன்மக னென்னத் தவமுனி மகிழ்ந்து
சொன்மிகு நூலெலாஞ் சோர்வற வுணர்த்தி (கூ)
இணையறு கணேச மந்திர மியம்பிக்
குணமொடு கணிக்கும் முறைமையுங் கூறித் (ய)
தவமிழை யென்ன விடுத்தனன் றனையனும்
அவணகன் றொருபா லமர்ந்தனன் றவத்தில் (யக)
ஆயிர வருட மகலலு மொருநாள்
மாயிரு புகழ்சேர் மதகரி முகத்தோன் (யஉ)
முன்னெழுந் தருளி வேண்டுவ மொழிகெனப்
பொன்னடி வணங்கிப் பூமகன் புகல்வான் (யங)
எம்பிரா னின்பதத் திடையறு வன்பும்
உம்பரோ டமுத முண்டிடு முறவும் (யச)
விண்ணமர் கோனொடு விளங்கவு நல்வரம்
அண்ணலே யருளா யன்றியு மிற்றைநாள் (யரு)
சதுர்த்தி யாதலி னின்னையித் தினத்தில்
துதிப்பவர் மனத்துத் துயரொடு சங்கடம் (யசா)
நீங்கலு மருளா யென்றலு நிமலன்
ஆங்கிவை வரமெலா மன்பொடு நல்கி (யஎ)
மங்கல காட்சி நீபெற் றமையால்
மங்கல னென்றனை வையகஞ் சாற்றும் (யஅ)
என்றுருக் கரந்தபி னெழின்மிகு கோயில்
ஒன்றுங் கமைத்துப் பூசைக ளுஞற்றிச் (யகூ)
சிலபக லிருந்து சென்றுவிண் ணுறைந்தான்
நிலவுமக் கோயிலி னிறைந்த மூர்த்தியைப் (உய)
பவந்தொலை சிந்தா மணியெனப் பகர்வார்
அவந்தி மாநகர் மேற்புறத் தப்பதி (உக)
காமத மென்னக் கழறிடப் படுமால்
பூமகன் சரிதம் புகன்றனம் முன்னர் (உஉ)
மதியுத யத்தில் வழிபடச் சொன்னமை
எதுமுறை யென்றிங் கியம்புதுங் கேளே (உங)

# சந்திரன் சபாநிவாரணம்.

பண்டொரு நாள்யான் பனிவரைக் கேகி
அண்டர்கள் பரவு மம்பிகை பாகன் (க)
கரிமுகக் கடவுளுங் கார்த்தி கேயனும்
இருமருங் குறவாங் கெழுந்தினி திருப்ப (உ)
வந்தனை செய்தபி னொருபுடை யமர்ந்தேன்
ந்த வேளையி லருந்தவ நாரத (ங)
மாமுனி யெய்தி மகரநல் யாழிசை
காமுறப் பாடிக் களிப்புறச் செய்தபின் (ச)
அன்பொடு கொடுவரு மாங்கனி யொன்றை
முன்புவைத் திடவவ ரென்முகம் நோக்கி (ரு)
இருமருங் கிருக்கும் புதல்வரி லெவர்க்குத்
தருவதிக் கனியைச் சாற்றெனப் பணிப்ப (சா)
முருகவே ளினையோ னுதவி னவற்கே
தருவது கனியைத் தகுமுறை யென்றேன் (எ)
அண்ண லும்வ்வா றவற்களித் திடலுங்
கண்ணழ லுகுப்பக் கணேச னென்முகம் (அ)
ஏறிடப் பார்த்தா னச்சமுற் றெழும்பி
ஆறுதி கோப மறிவிலா தடியேன் (கூ)
செய்பிழை பொறுத்தி தேவவென் றிரந்தேன்
மெய்யனு மொருவகை வெப்பந் தணிந்தான் (ய)
இவையெலாஞ் சந்திர னிருந்துகண் டொருபால்
அவமதிப் பானகை யாடின னுடலுங் (யக)
கறையடி முகவன் கடிந்தெதிர் நோக்கிச்
சிறுமதி யானகை செருக்கொடு செய்தாய் (யஉ)
மன்னவைப் பெருமையும் மதித்திலை யினிநீ
இன்னலுற் றொளியிழந் தேகெனச் சபிக்கக் (யங)
கலையொளி குறைந்து கரந்துரு விருந்தான்
நிலமிசைப் பயிரெலாம் நெடிது சோர்ந்தன (யச)

அமரரு முனவுக் கமுதில ராகித்
தமதுகோ னோடு தந்திமா முகனைக் (யரு)
கண்டடி தொழுது கருணையங் கடலே
அண்டரெம் மழுதையு மவனியிற் பயிரையும் (யசு)
விளைத்திட விதித்தனை சோமற் கின்றவன்
வளத்தினைக் குறைத்தால் வாழ்வெமக் கரிதே (யஎ)
பிழைபொறுத் தருளெனப் பெரிது வேண்டலும்
புழைநெடுங் கரத்தோன் பொறுத்தன மாயினும் (யஅ)
சிங்கமா மதியிற் றிகழுமுற் பக்கப்
பங்கமார் சதுர்த்தியிற் பார்ப்பது தவிர்த்தேம் (யகூ)
அத்தினத் தவனை யாவர் நோக்கினும்
மெத்திய துயர்க்கடன் மேவுவ ரென்று (உய)
விடைகொடுத் தருள விண்ணவ ரேகிக்
கடவுண்மா மதியைக் கண்டினிக் கலுழேல் (உக)
அரிமுக னின்பிழை யனைத்துமன் னித்தான்
உரியநன் மந்திர மிதையுணர்ந் தோதி (உஉ)
அன்னவன் சரண மடையென வறைந்து
பொன்னகர்க் கேகின ராங்கவர் போனபின் (உங)
அக்கண மவன்போய்க் கங்கைமா நதியின்
தக்கண தீரஞ் சார்ந்தினி திருந்து (உச)
மந்திரங் கணிப்ப மதகரி முகத்தோன்
வந்தெதிர் தோன்றி வகுத்தருள் செய்வான் (உரு)
சந்திர நினக்குத் தகுவரம் பலவும்
முந்தியாம் பண்ணவர் முன்பளித் திட்டேம் (உசு)
இன்னமுங் கேட்டி யிருநிலந் தனிலே
மன்னுமங் காரக சதுர்த்தியை நோற்பவர் (உஎ)
உன்னியெம் பூசை யுஞற்றும் பொழுது
நின்னையு நினைந்து வழிபடக் கடவர் (உஅ)
உன்னருங் கலைகளி லொன்றுநம் முடிமேல்
மன்னுக வென்று வழுத்திவிண் மறைந்தான் (உகூ)
டாங்குறு பால் சந்திர மூர்த்திக்
காங்கொரு கோயி லழகுற வமைத்துப் (நய)

பூசைக ணடாத்திச் சிலபகல் போனபின்
மாசகல் விசும்பின் மதிநிலைக் கொண்டான் (ருக)

அத்திருக் கோயி லமைதலஞ் சருவ
சித்திமா நகரெனச் செப்புவர் மேலுங் (ருஉ)

கரிமுக னருமலர்ப் பதங்களைக் கருதிப்
பொருவறு பூசனை புரிபவ ரெவரும் (ருரு)

அறுகுகொண் டருச்சனை யாற்ற வேண்டும்
நறுமலர்த் தொகையினு மறுகிடைப் பொருந்திய (ருச)

மேன்மையைக் கேள்பிதிர் தேவவென் றுங்கு
நான்முகக் கடவு ணவிலவுற் றனனே (ருரு)

திருச்சிற்றம்பலம்

# விடை, கரம், புலைச்சி வீடுபெறல்.

வளமுய ரவந்தி மாநகர் தனிலே
அழகுயர் சுலப னெனப்பெய ரமைந்த (க)

மன்னவ னிருந்தா னவன்றிரு மனைவி
தன்பெயர் சுபத்திரை யாமெனச் சாற்றுவர் (உ)

ஏற்றகைச் செங்கோ லிடருறு தோச்சி
மாற்றலர் வணங்க வாழுமோர் நாளிற் (ரு)

சீர்மறை யுணர்ந்த தேசிக னொருவன்
ஆர்கலி வாய்ப்பட் டையமேற் றிடுவான் (ச)

வருதலு மேற்பவர் மகிழ்வுற நிதிநிதந்
தருமியல் புடைய தராபதி முற்பவப் (ரு)

பொருந்துமூழ் வலியாற் புன்னகை செய்தலும்
அருந்தவ மறையோ னழன்றிது பகர்வான் (சா)

நின்னுடைச் செல்வங் கனவென நினையா
தென்னுடை வறுமைக் கிகழ்ந்தெனைச் சிரித்தாய் (எ)

முன்வரு பசுவின் பின்புறம் மோந்து
தன்பலைக் காட்டு மெருதென நீயும் (அ)

பல்லைக் காட்டிய பரிசா லுழுது
புல்லையுண் ணெருதாய்ப் போகெனச் சபித்தான் (கூ)

சொல்லிய சாபஞ் சுபத்திரை கேட்டுப்
புல்லிய கோபம் பொறுக்கா ளாகி (ய)
வேதியன் முகத்தை வெறுப்பொடு நோக்கிப்
பாதக நீயும் பூசிய நீறுக் (யக)
கேற்ப நல்லளி தாங்கினை யில்லை
நூற்பல வோதியும் பொறுமை கற்றிலை (யஉ)
சிறந்தவர் சிறப்பிலர் தெரியாக் கழுதை
உறழ்ந்திது சாப முரைத்தனை யாதலின் (யங)
கத்தப மாய்த்துகில் கழுவுவார் கையின்
வத்திரஞ் சுமந்து வருகெனச் சபித்தாள் (யச)
மற்றவன் றானும் மாதரா யும்பாற்
குற்ற மிருந்துங் குறையிரந் தகற்று (யரு)
மதிகெடு நீச மடந்தையர் போல
விதிகெடு சாபம் விளம்பினை யாதலின் (யசு)
இரந்தூ ணருந்து மிழிகுலத் தினளாய்
வருந்துக வென்றெதிர் சாபமும் வகுத்தான் (யஎ)
இம்முறை மூவரு மெய்திய வூழ்வழி
தம்முட் பொறித்த சாபமங் குறலும் (யஅ)
மன்னவ னெருதா யுழவர்கைப் புகுதப்
பொன்னனை யாள்புலைச் சேரியிற் புக்கினள் (யகூ)
அந்தணன் கழுதையா யந்நகர் வண்ணான்
பந்தியிற் சிக்கிப் பருவர லடைந்தான் (உய)
சென்றன நெடுநா ளிவ்வகை யொருதினம்
வன்றுயர்ப் புலைச்சி மாலையம் பொழுதிற் (உக)
கொல்லையின் புறம்போய்க் குளிரது காப்பப்
புல்லரித் திருக்கும் பொழுதுவான் கறுத்துக் (உஉ)
காற்றிடி முழக்கொடு கனமழை பொழிய
ஆற்றில ளாகி யரித்தபுற் சுமையுடன் (உங)
ஓடியப் பாங்க ருள்ளவைங் கரத்தோன்
நீடிய கோயின் மருங்கினி னின்றாள் (உச)
மழையிடை நனைந்தம் மாடுங் கழுதையும்
வழிபிடித் தவ்வுழை வந்திரு ளானபின் (உரு)

புலைச்சிகைப் புல்லைப் பறித்துவாய் குதட்டக்
கலைத்தனள் தடிகொடு கழுதையைத் தாக்கலுங் (உசு)
கத்தப மெருநதைக் காலெறிந் துதைப்பக்
குத்திய திதனைக் கொம்பினு லதுவும் (உஎ)
இவ்வகை மூன்று மெழுப்பிய கலாதியை
அவ்வயின் சதுர்த்தி யாற்றவந் தடைந்த (உஅ)
தவத்தினர் கேட்டுத் தடிகொடு சாடினர்
நவைத்திரள் போன்ற நள்ளிரு ளானும் (உகூ)
மழையொடு வாடை மலிவுற லானும்
வழிமயக் குற்று வெளிசெலா முன்னம் (௩௰)
அடியினுக் கஞ்சி யஞ்சியக் கோயின்
நெடுவலம் பன்முறை சூழ்ந்தன மூன்றும் (௩க)
விடைகர மிரண்டின் வாய்ப்படு புல்லும்
புடைகரந் தேரடு புலைச்சிகைப் புல்லும் (௩உ)
மூன்றிள மறுகுகள் சுழிகாற் றெழுப்ப
ஆன்றோர் பரவு மைங்கரன் மேனியிற் (௩௩)
சென்றவை தங்கின புலைச்சிபுற் சிரமேல்
நின்றது விடைப்புல் துதிக்கையி னிலைப்பக் (௩ச)
கத்தப வாய்ப்புல் கழன்மிசை யமர்ந்தது
மெய்த்தவர் குற்றம் மேவிய தென்னுத் (௩ரு)
தோய்ந்தன ராலயஞ் சுத்திபண் ணியபின்
வாய்ந்தநன் மூர்த்தியை மஞ்சன மாட்டிக் (௩சு)
குறைதவிர் பொருளெலாங் குறைவறக் கொண்டு
முறையொடு பூசனை முடித்துள மகிழ்ந்தார் (௩எ)
வெளியுற் றோடிய விடைகரம் புலைச்சி
குளிர்பசி யடியிற் கொண்டநோ யாலும் (௩அ)
உயிர்விட வைங்கரற் கறுகு சாத்தித்
துயரறு கோயில் வலமுறச் சூழ்ந்து (௩கூ)
பூசனை மாதவர் புரியவைத் தமையால்
ஆசிகொள் விமானத் தொடுகண மடைந்து (ச௰)
திருப்பொலி தெய்வத் தேகமு வர்க்கும்
விருப்பொடு நல்கி விமானத் தேற்றலுந் (சக)

துதிபெறு மாதவர் கணங்களை வணங்கி
விதியிலார் விமானத் தேறுவ தென்னெனக் (சஉ)
கணபதிக் கறுகு சாத்திய பலனிக்
குணமென மேலுங் கூறுவ ரன்றே (சங)

தூஉஅங

# தூர்வை அருச்சனை.

கார்வள மோங்கிய தாபர நகரிற்
சீர்வளர் தென்றிசைப் பனமரத் தோப்பின் (க)
ஓடையங் கரையி லொருமுனி யிருந்து
நாடொறு மறுகுபத் தாயிரஞ் சாத்தி (உ)
ஐங்கரற் கருச்சனை யன்பொடு புரிவான்
இங்கிவன் பெயர்கவுண் டினியென விசைப்பார் (ங)
மங்கையா சிரியை மனையவள் பெயராம்
பங்கமில் பூசனை பயிறரு நாளில் (ச)
ஒருதின மவன்முக மொண்டொடி நோக்கி
விரைகமழ் மலர்பல வேண்டிய விருப்ப (ரு)
அறுகுகொண் டருச்சனை யைங்கரற் காற்று
முறையருள் செய்கென் முனிவர னுரைப்பான் (சு)
பாவாய் கேட்டி பண்டொரு நாள்யமன்
மேவிய கொலுவில் விண்ணவர் கின்னரர் (எ)
கருடர் கிஞ்ஞ்ஞுபர் சாரண ராதியோர்
அருகு கூடி யாங்கினி தமர்ந்தார் (அ)
மெல்லிய ரம்பைய ரமிழ்தினு மினிய
நல்லிசை பாடி நடனஞ் செய்தலும் (கூ)
வடிவினி லுயர்ந்த திலோத்தமை பெண்பாள்
தடவிள முலைமேற் சாத்திய பூந்துகில் (ய)
விலகலுப் நாணி யவைப்புறப் போந்தனள்
கலையுளத் தருமனுங் கண்டெழுந் தந்தப் (யக)
புரமதை நாடிப் போந்தனன் வழியில்
உருத்தெழு வீரியம் வீழ்ந்தொரு வாகி (யஉ)

ஆவென வலறி யகோர முகத்தொடு
பாவக னென்னப் பல்லெழுந் திலகத் (௰௩)
தோற்றின னனலா சுரனவன் றேன்ற
நாற்றிசை யமரரு நடுக்கமுற் றேடினர் (௰௪)
சென்றன னுலகிற் சிவரா சிகளைத்
தின்றடங் காமற் சேணுற வளாவலும் (௰௫)
இந்திரன் முதலியோ ரிரிந்தகன் றோடித்
தந்திமா முகனைத் தஞ்சமென் றேத்தத் (௰௬)
தபமிகு பிரம சாரிபோ லெய்தி
அபயங் கொடுத்தாங் கவர்வயி னிருப்ப (௰௭)
அனலா சுரனு மத்திசை யோடிச்
சினமோ டணுகத் தேவர்தம் பெருமான் (௰௮)
திருவுருக் காட்டிச் செங்கையாற் பற்றி
ஒருநிலஞ் சூழ்ந்தா யெம்வயிற் றுள்ளே (௰௯)
அண்டம் பலவுள கண்டுவா வெனல்போற்
கொண்டுவாய் விழுங்கக் கொழுந்தனல் மேனியிற் (௨௰)
பற்றிய பற்றுற் சராசர மடங்கலுந்
தொற்றிய வெங்கனல் சுரரெலாங் குழுமி (௨௧)
ஆதி நாயக னழல்தனை யவிப்பச்
சீதள மதியைச் செலுத்தலு மவன்போய்ப் (௨௨)
பாரிய முடிமேற் பலகலை விரித்துத்
தாரை தாரையாய்த் தண்ணமு தூற்றியும் (௨௩)
மாறிலைத் தேவியர் மருங்கமர்ந் தாற்றியும்
ஆறிலைத் திருமா லரிவைய ராய்ந்து (௨௪)
கொடுத்திடு தண்மைக் கோகன கப்பூ
எடுத்தெடுத் தொத்தியு மிறங்கிலை வருணன் (௨௫)
சீதள மிகுநீ ராட்டியுந் தீர்ந்திலை
மாதுமை பாக னணிந்தநற் சேடனைக் (௨௬)
கொண்டுவந் தணிந்துங் குறைந்திலை வெப்பங்
கண்டன ரெண்பத் தெண்ணு யிரந்தவர் (௨௭)
பச்சிள மறுகு பலபல கொடுவந்
தச்சினின் றெம்பிரான் கழலள வாகச் (௨௮)

சாத்தின ருடனே தணிந்ததவ் வெப்பம்
ஆர்த்தகு சராசர மடங்கலுங் குளிர்ந்தன (உகூ)
முதல்வனு மகிழ்ந்து முனிவரை நோக்கி
இதமொடு வாழே ரிழையுப சாரத் (௩0)
தடங்கா வெப்ப மறுகுநீர் சாத்த
அடங்கிய முறையா லருச்சனை புரிவோர் (௩க)
எண்ணறு திரவிய மொடுமல ரிறைக்கினுந்
தண்ணறு கொன்று சாத்திடா ராயின் (௩உ)
அப்பூ சனையா லேற்றவர்க் கருளேம்
எப்படிக் குறைந்த பொருளோ டியற்றினும் (௩௩)
அறுகொன் றிருந்தா லவர்மன விழைவின்
பெறுவர மெல்லாம் பிசகறக் கொடுப்போம் (௩ச)
அதிகமில் லாவழி மூவே மாயினும்
அதுவுமில் லாவிடத் தோரறு கேனுஞ் (௩ரு)
சாத்துத றகுமெனச் சாற்றிவிண் மறையத்
தோத்திர மியம்பித் தொழுது வானவர் (௩சா)
கோயிலொன் றங்கு கோதற வமைத்துக்
கயான லாசுரன் றனைவிழுங் கியதாற் (௩எ)
கதிதரு கலானலப் பிரசம ரெனப்பெயர்
விதித்தன ரறுகின் மேன்மையீ தென்றான் (௩அ)
ஈதலா லோர்கதை யியம்புவ மெனக்கண
நாதர்மா தவர்க்கு நவிலவுற் றனரே (௩கூ)

௬௩உஉ

## தூர்வை யாசகம்.

அளகா புரியினு மமரா வதியினு
மிளிரா மூதூர் மிதுலா புரியிற் (க)
கன்னிக ரில்லாச் சனகனென் றோதும்
மன்னவர் பெருமான் வாழ்தரு நாளில் (உ)
நாரத முனிவன் ஞடிவந் தடையத்
தாரணி மார்பன் தகுமுப சாரஞ் (௩)

செய்திடா துள்ளச் செருக்குட னிருப்ப
மெய்விடா முனிவன் வெகுளியை யடக்கி (ச)
இப்பெரு வாழ்வுநீ யீசனல் லருளால்
வைப்பினிற் படைத்தாய் வளர்கமேன் மேலும் (ரு)
அவனரு ளாலென் றுசிக ளியம்ப
எவனவன் யானே பிரம மாகினன் (சு)
தருவது மேற்பதுந் தரணி காப்பதும்
ஒருவனே யானென் றுணர்ந்திலே போலும் (எ)
மாதவ வென்று மன்னவ னுரைப்ப
யாதிவன் பேதமை யென்றவை நீங்கித் (அ)
தவந்திகழ் கவுண்டினி தன்பா லேகி
அவன்றொழு கணேச னடிமலர் போற்றிச் (கூ)
சனகன் செருக்கைச் சாற்றலு மெம்பிரான்
மனதுகொண் டாங்கோர் மறையவ னாகி (ய)
மன்னவ னிடம்போய் வந்தன னின்பால்
என்பசி தணித்தற் கென்றியம் பிடலும் (யக)
மைந்தனைக் கூவி மறையவற் கமுது
பந்தியில் வழங்கெனப் பணித்தலு மவனும் (யஉ)
போசன மண்டபம் புகுவெனக் கொடுபோய்
ஆசனம் நல்கி யமர்ந்திடச் செய்தபின் (யங)
அறுசுவைப் போனக மன்பொடு படைத்து
மறையவ பசியைத் தணியென வணங்க (யச)
ஒருபெருங் கவளத் துணவெலாந் திரட்டித்
திருவாய் மடுப்பத் திகைத்தனர் யாவரும் (யரு)
இன்னமும் பலவூ ணிலைமிசை குவிப்ப
அன்னது முண்டா னதிசய முற்றனர் (யசு)
இந்தநல் வாறு யேவலர் யாவரும்
வெந்தன வேகா திருந்தன வெல்லாம் (யஎ)
கொண்டெதிர் குவிப்பக் குறுமுனி கடனீர்
உண்டவா றுண்டும் பசிதணி யாமல் (யஅ)
அதிகமாம் பொருள்க ளடக்கிய வறைகட்
கதவுக ளெல்லாந் திறந்துகண் காட்ட (யகூ)

ஒவ்வோ ரறையினு முட்புகுந் தாங்குள
செவ்விய பொருளெலாந் தின்று முடித்தபின் (உய)
மன்னவ னெய்தி மாநகர்ப் பாலுள
அன்னபா னாதிக ளமைமினென் றேவக் (உக)
கொண்டுவந் தாங்கே மலையெனக் குவித்தார்
உண்டுமென் பசியிங் கொழிந்திலை யென்றனன் (உஉ)
செய்வன மேலினித் தெரிந்தில ராகி
ஐயனை நோக்கி யரசனு முரைப்பான் (உங)
ஆனமட் டிங்கே யருந்திடத் தந்தும்
போனதே யில்லைப் பொங்குறும் பசிதான் (உச)
ஆற்றிடத் தக்கா ரகத்திடை யினிப்போய்
மாற்றிடு கென்ன மறுத்திசைத் திடுவான் (உரு)
நன்றுநன் றியம்பினை நாடிய பசியாற்
சென்றனை யிரந்தாற் றிருத்திசெய் யாமற் (உசா)
பிறவிடம் போவெனப் பேசலுந் தகுமோ
அறமெனப் படுவது மிவ்வகைத் தாமோ (உஎ)
வள்ளலும் நீயோ மன்னனும் நீயோ
கள்வனை நானிலங் காப்பவ னீயோ (உஅ)
பிரம மெனப்படும் பெரியவ னானால்
ஒருவ னரும்பசிக் குணவிட வியலாக் (உகூ)
குறுவிழி விழித்துக் கொள்வதோ பிரமத்
துறுமியல் பென்றம் மொளிர்மனை நீங்கி (ஙய)
வீதியிற் சென்று வேதிய னொருவன்
மாதவ முடையான் வறுமைமிக் குள்ளான் (ஙக)
திரிசிர னென்பான் றிருமனை புகுந்து
அரசனென் பசியை யாற்றில னாதலின் (ஙஉ)
நின்னுழை வந்தேன் னீயிரங் கெனலும்
அன்னவன் மனைவி விரோசனை யென்பாள் (ஙங)
மலரடி வணங்கி மறையவ நாங்கள்
கலியொடு வளர்தலிற் கைப்பொரு ளறியேம் (ஙச)
யாசகந் தன்னில் பெற்றதை நேற்றுப்
போசனஞ் செய்து பொழுதினை விடுத்தோம் (ஙரு)

குஞ்சர முகற்கின் றருச்சனை கொடுத்தபின்
எஞ்சிய வறுகோன் றிருப்திங் கல்லால் (௩௬)
வேறிலை யென்று விசனமா யுரைப்பத்
தேறிய மறையோன் றேமலர்க் குழலாய் (௩௭)
அன்பொடு வழங்குவ தற்பமே யாயினும்
இன்பொடு கொள்வோ மிகழ்ந்திடா தறுகைத் (௩௮)
தந்திடென் றுரைப்பத் தையலுங் கொடுத்தாள்
சிந்தையோ டேற்றுத் தின்றுதேக் கெறிந்தான் (௩௯)
அடங்கிய பசியு மம்மனை பொன்னுய்
இடந்தொறுந் திரவிய மெய்திடக் கண்டார் (௪௰)
அண்ணலு மவர்முன் னழகிய தன்சுய
புண்ணிய வுருவொடு பொலிதரப் போற்றினர் (௪௧)
வேந்தனு மிவற்றை வியப்புறக் கேட்டுச்
சார்ந்தவன் றானே யீசனென் றெண்ணி (௪௨)
ஆங்குவந் தேத்திப் பிழைபொறுத் தருளெனப்
பாங்கொடு பசுபதி பாசம் விளக்கித் (௪௩)
தன்னூருக் கரந்தான் றூர்செறி கோமான்
நன்னெறி தழுவி நாடர சாண்டான் (௪௪)
ஓரறு களித்த வுபசா ரத்தாற்
சீருறு வாழ்விற் சிறந்து திரிசிரன் (௪௫)
பன்னியோ டேற்றிற் பதவி சார்ந்தனன்
இன்னமும் புதுமை யியம்புத மன்றே (௪௬)

தூ.௩.௬௮

# தூர்வை துலையேற்றல்.

மூன்பியா முரைத்த கவுண்டினி முனிவன்
அன்பினி லுயர்ந்த மனைவியா சிரியை (௧)
காதலன் றன்னைக் கனிவொடு நோக்கி
மாதவ தமியினட் கொருகதை வழுத்தென (௨)
மகிழ்வுட னவனும் மிதுலைமா நகரிற்
புகழ்மிகு சனகன் போய்ப்பலி யிரந்ததுஞ் (௩)

சனகனுட் செருக்கைத் தாக்கிய தன்மையும்
மனையகன் றவ்வூர் வாழ்திரி சிரன்பால் (ச)
அறுகொன் றேற்றதை யருந்திய விநோதமுங்
குறைவறு செல்வங் கொடுத்த பான்மையுந் (ரு)
தெரிதர வுரைப்பத் தேமலர்க் குழலாள்
பெருநிதி யறுகொன் றளித்தவர் பெற்றால் (சா)
நித்தமும் பலவறு கெடுத்துநின் மலன்றாள்
வைத்திடு மெமக்கேன் வளர்நிதி யிலையெனப் (எ)
பூசனை புரிந்த புல்லறு கொன்றைத்
தேசிக னெடுத்துச் சேயிழை யாயிதை (அ)
இந்திரன் கைக்கொடுத் திதனிடைச் செர்பொன்
தந்திடச் சொல்கெனத் தார்குழல் வாங்கி (கூ)
உரைப்படி கொடுபோ யும்பர்கோன் கையில்
விருப்பொடு கொடுப்ப வியப்புட னவனும் (ய)
அளகைக் கனுப்பின னங்கள கேசன்
வளர்நிதி வேண்டுவ தருகுது மென்றான் (யக)
அத்தொகை வேண்டுவ தில்லையிவ் வறுகிடை
ஒத்தபொன் போதுமென் றொண்டொடி யுரைப்ப (யஉ)
ஆங்கொரு தராசை வரவழைப் பித்துப்
பூங்கொடி யாள்கைப் புல்லையோர் தட்டினும் (யங)
மற்றொரு தட்டிற் செப்பொனும் வைக்கப்
பொற்றொடி தட்டம் பூமிவிட் டெழாமல் (யச)
இருந்தவா றிருப்ப வின்னமுஞ் செம்பொன்
பெருந்தொகை வைத்துப் பெயர்ந்திலை யென்று (யரு)
சாலைக டோறுந் தயங்கிய நிதியெலாங்
கோலமா மேருபோற் கொண்டுவந் தேற்றியுந் (யசா)
தட்டெழும் பாமையிற் குபேரனுந் தளர்ந்து
பட்டணத் துள்ளார் பாக்கிய மெல்லாந் (யஎ)
தருகென வழைத்துத் தராசினி லேற்ற
விரிந்தவா யேற்றும் மேனிலை பதிந்தில (யஅ)
அந்தறு கெழும்பா வதிசயங் கண்டு
பைந்தொடி மலர்க்கைப் பனிமொழித் துவர்வாய் (யகூ)

மனைவியுந் தானும் வந்தாங் கேறியுந்
தனியறு கிருந்த தட்டெழும் பாமையின் (உ௰)
என்னினிச் செய்மா றென்றுளங் கலங்கப்
பொன்னகர் முதல்வனு மந்நகர்ப் பொருளொடு (உக)
வந்தாங் கேறியும் நிறைசிறி வராமையின்
சிந்தையி னினைப்பச் சிவன்முதல் மூவரும் (உஉ)
பரிசனத் தோடு படர்ந்துவந் தேறினர்
தரையினி லமர்ந்த படிதரா திருப்பக் (உ௩)
கற்பகக் கடவுளி னற்புத மிஃதென
மற்றவர் யாவரும் மண்மிசை வரலும் (உ௪)
மாதவக் கவுண்டினி வந்தெதிர் தாழ்ந்தனன்
மேதகு வரங்கள் விருப்புட னருளிக் (உ௫)
காம தேனுவுங் கற்பக தருவும்
மாமுனி மனையின் வளர்தர வழங்கிப் (உ௬)
போந்தன ரதுமுதற் பூவையா சிரியையும்
ஆய்ந்தநல் லறுகா லருச்சனை புரிந்தாள் (உ௭)
இருவரு முடிவி லெய்துதற் கரிய
கரிமுகன் பதத்திற் கலந்தனர் நீவிரும் (உ௮)
அறுகுகொண் டருச்சனை யாற்றுமென் றுரைத்து
நிறைமணி விமானத் தொடுகண நாதர் (உ௯)
விண்மிசை படர்ந்து விநாயகருலகை
நண்ணினரென்று நான்முகன் னவில (௩௰)
ஓரறு காயினு மில்லா விடத்துச்
சீரிய பூசனை செய்வகை யேதென (௩க)
மேதகு பிதிரன் பிரமனை வினவக்
காதலி னவனுங் கழறவுற் றனனே (௩உ)

கூ௩௱

# வன்னி மகத்துவம்.

எண்ணறு வகைப்பொரு ளெடுத்தைங் கரற்குப்
பண்ணினு மருச்சனை பச்சிள மறுகொன் (க)

றில்லை யாயின் பயன்பெற லிலையாம்
புல்லறு கில்லா விடத்துப் பூசனைக் (உ)
கேற்றது வன்னி மரத்திலை யாகுஞ்
சாற்றுமந் தார புட்பமுந் தகுமால் (௩)
பண்டொரு காலம் விதற்பமா நாட்டில்
எண்டிசை புகழா தேயமூ தூரில் (௪)
வீமனென் றுங்கோர் வேடுவ னிருந்தான்
பூமலி யுயிர்க்கோர் மறலியைப் போன்று (௫)
கலங்கிடக் கொலைகள வாதிய பயின்று
விலங்கினம் வதைத்து விற்றுவாழ் நாளில் (௬)
அந்நகர்க் கோயி லணிவிழாப் பார்த்துப்
பின்பனை மீளும் பிராமணர் சிலரை (௭)
வழியிடை மடக்கி வதைத்தவர் பொருளெலாம்
பழியுறக் கொண்டு படர்ந்துபோ மளவில் (௮)
இருளெனக் கறுத்த விராக்கத னொருவன்
விரைவொடு தொடர்ந்து மேவலைக் காணு (௯)
அச்சமுற் றோடி வழியிடை நின்ற
பச்சிலை வன்னியிற் பற்றி யேறலும் (௰)
ஓரிலை யொடிந்தம் மரநிழ லுறையுஞ்
சீரிய கணபதி திருக்கழன் மேல்விழ (௰௧)
அடுத்தவன் ஏறிய வரக்கன் விசையால்
முடித்தல மீது மோரிலை முறிந்து (௰௨)
வீழ்ந்தது பின்னர் வீமனைப் பற்றித்
தாழ்ந்திடா வரக்கனுந் தரைமிசை விழுந்தான் (௰௩)
இருவரும் பாவ வுடல்விடுத் தெதிரே
மருவிய புட்ப விமானத் தேறி (௰௪)
ஐங்கர னுலகை யடைந்தன ரவர்முன்
இங்குசெய் வினையு மியம்புதுங் கேண்மோ (௰௫)
புண்ணிய கீர்த்தி யெனப்பெயர் புனைந்த
அண்ணலும் மதன வதியெனு மனைவியும் (௰௬)
அத்தகு விதற்ப நாடர சாண்டு
புத்திர ரிலாமற் பொன்றிய பின்னர் (௰௭)

அமைச்சர்க ளானோ ரவர்கடன் முடித்துத்
தமக்கினி யரச னாரென வாய்ந்து (௰அ)
புண்ணிய கீர்த்தியின் ஞாதி யாகிய
தண்ணளி துத்திரி டன்மகன் சாம்பனைத் (௰௯)
தக்கோ னென்றவன் பிறப்புண ராமன்
மிக்கபொன் மவுலி விருப்பொடு புனைந்தார் (௨௰)
ஆங்கவன் னிதமு மறநெறி பிழைத்துப்
பூங்கொடிப் பரத்தையர் போகத் தழுந்திக் (௨௧)
கள்ளொடு மாமிசங் களிப்புட னருந்தி
உள்ளவர் பொருளெலாங் கொள்ளையிற் கவர்ந்து (௨௨)
தன்னடைக் கிசையா வமைச்சர்க டம்மை
வன்சிறைப் படுத்தி மற்றொரு கொடியோன் (௨௩)
புன்னெறி போந்துற் புத்தியென் பானைத்
தன்முதன் மந்திரத் தலைவ னாக்கியும் (௨௪)
இன்னணம் பிரசைகட் கிடர்விளைத் திட்டான்
அன்னவன் பிறப்பை யாதென வினவில் (௨௫)
தாதைதுத் திரிட னெனுந்தகு பெயரான்
மைந்தர்க ளிலாமையின் மாதவ மாற்றியும் (௨௬)
முந்திய பவத்தி லவுணரைச் சார்ந்து
வெந்தொழில் புரிந்த பாவமே லீட்டால் (௨௭)
வாய்ந்திலைப் பின்னர் மற்றவன் மனையாள்
போந்து களவிலோர் வலைஞனைப் புணர்ந்து (௨அ)
பெற்றன ளிவனைப் பிள்ளை யாக
மற்றவப் பரிசான் மறைபல வோதியும் (௨௯)
இழிகுலத் தொழின்மே லிச்சைகொண் டியல்பாம்
பழிமிகப் புரியும் பண்பின னானான் (௩௰)
இம்முறை காலம் போக்குமோர் நாளில்
வெம்மைகொள் கானக வேட்டையிற் சென்று (௩௧)
மந்திரி மாரொடு மனைக்குமீள் வழியில்
தந்திமா முகத்துத் தனிமுதற் பெருமான் (௩௨)
வளர்தரு பொருமணிக் கோயிலைக் கண்டான்
பழயநாள் வதிட்டன் பதிட்டை செய்திடத் (௩௩)

தசதர னிருந்து தனயர்ப் பெறுவான்
உசிதநற் பூசைக ளுஞற்றவுஞ் சிறந்து (௩௪)
மனவிழை வருளலான் வரத கணபதி
எனப்படு மூர்த்தியோ டிலங்குமக் கோயினுள் (௩௫)
அரசனும் புகுந்து பார்த்திடு மளவில்
திரள்படு சனங்கள் திசைதொறுங் குழுமிக் (௩௬)
குஞ்சர முகற்குக் கொடிவிதா னித்தலும்
மஞ்சன மாட்டலும் மணிவிளக் கேற்றலும் (௩௭)
தோரணம் நடுதலும் மாலைக டேக்கலும்
பூரண கும்பம் பொற்புற வமைத்தலுந் (௩௮)
திவ்விய பாலமு தாதிய செய்தலும்
இவ்வகை யாவரு மிழைப்பது நோக்கித் (௩௯)
தானுமவ் வாறொரு தனிவிழை யாட்டெனக்
கானிடைத் திரட்டிய தேனொடு கனிகாய் (௪௰)
மதகரி முகன்முன் வைத்தனை யானும்
இதமொடு பணிந்தே னென்றுரைத் தேகினன் (௪௧)
பின்னரு முன்போற் பெயர்கெடு மமைச்சனும்
மன்னனுந் தீய வழிநடந் திறப்ப (௪௨)
மறலியின் றூதுவர் வவ்விக் கொடுபோய்
நிறையெரி பரந்த நிரயத் தழுத்திப் (௪௩)
பன்னெடுங் காலம் பற்பல வகையாந்
துன்புங் கொடுத்தபின் றொல்லைமா நிலத்தில் (௪௪)
நரியொடு நாயாய் நாகமுந் தேளுமாய்ப்
பரியொடு கழுதையாய்ப் பெற்றமும் பகடுமாய் (௪௫)
மானொடு புலியாய் மச்சமுஞ் சராவுமாய்
ஆனபுன் சென்மத் துயரடைந் தப்பால் (௪௬)
அன்றொரு நாளின் விளையாட் டாகத்
துன்றருட் கணேசனைத் தொழுதபுண் ணியத்தால் (௪௭)
அரக்கனும் வேடனு மாகப் பிறந்து
மருக்கிளர் வன்னி மரமிசை யேற (௪௮)
முறிந்திரண் டிலைபோய் முன்னொரு காலம்
அறந்திகழ் வாமன ரருச்சனை புரிந்தம் (௪௯)

மரநிழ லிருத்திய மதகரி முகனுக்
குரியன வாய்விழத் தொழுதலி னுவந்து (௫௰)
தன்பத முதவினன சார்ந்தன ரிருவரும்
முன்பிசை வாமனர் சரிதையுங் கேளே (௫௧)

௲௪௫௧

# வாமனர் வரம்பெறல்.

திருவெண் ணீற்றையுஞ் செப்புமைந் தெழுத்தையும்
ஒருபொழு தாயினுங் கைவிடாக் காசிபன் (௧)
மனைவிய ரிருவரின் மாசக லதிதி
தனையனிந் திரற்குத் துணையெனத் தன்வயின் (௨)
மாலொரு மகனு வந்துறக் கருதிச்
சால்வுஞ் சிறந்த தபசுநோற் றிருந்தாள் (௩)
இருப்பதை மற்றத் திதியெனு மனையாள்
விருப்பிலள் கேட்டு விண்டுவின் வலியராத் (௪)
தானவர் தம்மைக் காப்பதற் கருமை
ஆனதிண் மைந்தரை யவட்குமுன் முன்பெறக் (௫)
கருதிய மனத்தொடு காசிப னிடம்போய்
மருவியென் காதலை மாற்றென விசைத்துக் (௬)
கூடின ளவனைக் கூடிய கலவியின்
நீடிரு புதல்வர் நிலமிசைப் பிறந்தார் (௭)
இரணிய கசிப னிரணியாக் கதனும்
இருவரின் மூத்த விரணிய கசிபன் (௮)
பரம சிவன்பாற் பலவகைச் சிறந்த
வரங்களைப் பெற்று னகம்புறம் வானொடு (௯)
தரையென முறையே சாற்றிய விடங்களில்
இரவொடு பகலி லிருதிணை யாலும் (௰)
அத்திர சத்திரத் தாலழி வின்றி
இத்தரை மீதுதன் னிரத்தஞ் சிக்காழி (௰௧)
தன்போ லுருக்கொளத் தகுவரம் பெற்றபின்
அன்பே யின்றி யறநெறி கவிழ்த்து (௰௨)

வையக மூன்றையும் வருத்திடு நாளிற்
செய்யவெண் பாற்கடற் றிருமா லிவனைக் (௰௩)
கொல்வழி தேடிக் குஞ்சர முகத்தனை
அல்லும் பகலு மருச்சனை செய்தான் (௰௪)
வன்னியென் றோது மரத்தடி நிழலிற்
பொன்னன வுருவம் பொற்புற விருத்தி (௰௫)
அவன்புரி பூசைக் கைங்கர னிரங்கித்
தவவடி வெடுத்துத் தரிசன மருளிப் (௰௬)
பங்கா யிருதிணை பொருந்தும் படிநர
சிங்கமாய் மாலையிற் சேணில மகம்புறம் (௰௭)
அல்லா வாயிற் படிதனி லமர்ந்து
பொல்லான் றன்னை மடிமிசைப் பொருத்தி (௰௮)
நகங்கொடு கிழித்துக் குருதியைப் பருகென
உகந்தநல் வலியு முதவிவிண் மறைந்தான் (௰௯)
இரணிய கசிபனை யிம்முறை வதைத்துப்
பருகினன் குருதி பாற்கடற் பள்ளியான் (௨௰)
அவன்பிற குலகி னாட்சிகொள் ளிளவல்
தவஞ்செறி யிரணி யாக்கதன் றனையும் (௨௧)
மன்னிகல் வராக வடிவெடுத் தேகி
முன்னவ னருளான் முடித்தனன் றிருமால் (௨௨)
மாலவன் றனக்கு வைகுந் தத்தைச்
சாலவு மருளிய தன்மையி னாலே (௨௩)
விண்டு விநாயக னென்றொரு பெயரைக்
கொண்டன னெம்பிரான் குறளுரு வாயரி (௨௪)
வழிபடு முறையின் வாமன கணேச
வெழில்பெறு நாமமு மெய்திய முறைகேள் (௨௫)
இரணி யாக்கத னிறந்தபின் மைந்தன்
பொருவறு விரோசன னெனும்பெயர்க் குரியான் (௨௬)
பன்னெடுங் காலம் பகலவன் றன்னை
உன்னிய தவமோ டுபாசனை செய்தலும் (௨௭)
வந்தவன் றனக்கோர் மாமுடி வழங்கி
இந்தநன் முடியுன் சிரமிசை யிருந்தால் (௨௮)

மூவுல கத்தையு முனதுதாட் படுத்துவை
யாவர்கை யாயினுஞ் சிரமிசைப் படுமேல் (௨௯)
அக்கண மகலா முன்றலை நூறு
சுக்கலாய் வெடித்துத் தொலைந்துபோ முயிரெனச் (௩௰)
செங்கதிர்ச் செல்வன் செப்பியே கியபின்
தங்குற முடியைத் தலைமிசை புனைந்து (௩௧)
மூவுல கத்தையும் விரோசன னண்டான்
யாவருந் துன்பக் கடலமிழ்ந் திடலால் (௩௨)
மற்றொரு சூழ்ச்சியை மாயோன் னினைந்து
முற்றுரு மாறி மோகினி வடிவொடு (௩௩)
கண்ணெறி கைவிச் சொயினடை யிவற்றால்
புண்ணிய காமன் புகழ்தெரிப் பவள்போல் (௩௪)
விரோசனன் பாங்கர் மேவலு மாங்கவன்
தெரிவையென் றெண்ணிச் சிந்தைவே றாகிப் (௩௫)
பாவா யென்னுயிர் படிமிசை தரிக்கின்
மேவாய் விரகந் தணித்தியென் றிரப்பக் (௩௬)
காவல நின்பாற் கலவியை வேண்டி
மேவின னாயினும் நெய்முழுக் கிலாரைக் (௩௭)
கூடுத லொவ்வேன் கொண்டுபூந் தைலம்
ஆடுதல் வேண்டு மதனையிங் கழைத்தால் (௩௮)
என்சிறு கரத்தாற் பொருத்துவன் யானென
முன்பெறு வரத்தின் முறைமையை மறந்து (௩௯)
தழைத்தெழு காமத் தடுமாற் றத்தால்
அழைத்துநற் றைல மணிமுடி கழற்ற (௪௰)
வாய்ப்பிதென் றெண்ணி மாயவ னுடனே
தேய்ப்பதற் கடுத்துச் செங்கையைச் சிரமேல் (௪௧)
வைத்தலு மச்சிரம் வெடித்தது சுக்கலாய்
அத்துட னாவியு மகன்று போயதே (௪௨)
போனதன் பின்ன ரவன்பெறு புதல்வன்
ஆன யாவலி யரசுகைக் கொண்டு (௪௩)
சிவபெரு மானைத் தினந்தொறு மிறைஞ்சித்
தவநெறி முறைவாழ் தருமொரு நாளில் (௪௪)

தன்குல குருவாஞ் சுக்கிரன் றன்னை
முன்வர வழைத்துப் பணிந்தித மொழிவான் (சரு)

ஞாதிய ராகிய விந்திரன் முதலியோர்
போதிய பல்வகைப் போகந் துய்ப்பவும் (சசு)

அவ்வகை யெங்கட் கமைந்திலா வன்மை
எவ்வகை சொல்லெனக் குரவனு மிசைப்பான் (சஎ)

நற்றவ முயற்சியாற் றேடிய சுகங்கள்
முற்றுற நிலைக்கும் முறைபிறழ் வாகி (சஅ)

மற்றுயர் பிறப்பு வலிதுணை முயற்சியாற்
பற்றிடு போகம் பயனில தாகும் (சகூ)

இந்திரன் முன்ன ரைம்பதி னிரட்டிச்
சுந்தர வேள்வி சோர்வற முடித்துக் (ருய)

கற்பக நாட்டு வாழ்வுகைக் கொண்டான்
மற்றவன் வாழ்வில் மனதுநீ வைத்தால் (ருக)

ஆற்றுதி யசுவ மகமொரு நூறெனச்
சாற்றலும் மாவலி தானதற் கிசைந்து (ருஉ)

தொடுத்தனன் றொண்ணூற் றொன்பது வேள்வி
முடித்தபின் னூறும் வேள்வியின் முயல (ருங)

இந்திரன் றன்வாழ் வினியிறு மென்று
சிந்தை கலங்கித் திருமா லிடம்போய் (ருச)

வருமிடர் காக்கும் மரபினை யுடையோய்
ஒருமகம் மாவலி யுஞற்றிய வுடனே (ருரு)

என்னர சுரிமை யவன்றன தாகும்
அன்னது நிகழா முன்னவன் றன்னைக் (ருசு)

கொன்றெனைக் காவெனக் கூறுவ னவனும்
நன்றலா வழியி னுடிய தானவர் (ருஎ)

தங்களை நின்பொருட் டுயிர்கெடத் தகர்த்தேன்
இங்கிவ னென்று மிருந்தவ முடையோன் (ருஅ)

சிவபிரான் றன்னைத் தினந்தொழு மியல்பினன்
தவநெறி வழுவாச் சற்குண முடையோன் (ருகூ)

கனவினுந் தீமை கருதிடா விரதன்
மனுநெறி வழாமற் செங்கோல் வளர்ப்பவன் (சுய)

அத்தகை யானைக் கொல்லுவ தரிதென்
தத்துவத் தடங்கா தாயினு முபாயஞ் (௬௧)
செய்குவ னஞ்சேல் செல்கென வனுப்பி
வையகந் தன்னிற் றனைமக னாகப் (௬௨)
பெறமனத் தெண்ணிப் பெருந்தவ மிருக்கும்
அறமிகு மதிதி யழகிய வயிற்றில் (௬௩)
வாமன னாகி வந்தவ தரித்தான்
காமரு மகனைக் காசிபன் பேணி (௬௪)
அன்பொடு வளர்க்க வளர்ந்தன னொருநாள்
தன்பெருந் தத்துவத் தாதையை நோக்கி (௬௫)
மாவலி புரியும் மகமழித் தும்பர்
காவலன் றன்னைக் காப்பதெம் மாறென (௬௬)
ஐங்கரக் கடவு ளருளினா லன்றி
இங்கிதை முடித்த லியலா தென்று (௬௭)
மாசகல் சடாக்கர மந்திரந் தன்னைக்
காசிப னுரைப்பக் கருத்தினி லமைத்துத் (௬௮)
திருமலி விதற்ப தேயமா தேய
மருமலி நகரத் தென்பால் வன்னி (௬௯)
மரத்தடி நிழற்கண் வந்தமர்ந் தாங்கோர்
திருத்தகு மூர்த்தியைச் சீருற வகுத்துப் (௭௰)
போற்றி நெடுநாட் பொருவறு வரங்கள்
ஏற்றபின் மாவலி யிடத்தினுக் கேகி (௭௧)
மூன்றடிப் பூமி முறையொடு கேட்கத்
தோன்றலு மிசைந்தான் சுக்கிரன் றடுத்துத் (௭௨)
தஞ்சமென் றடைந்து தானங் கேட்பவன்
வஞ்சக மாயோன் மறுத்தியென் றிசைப்பக் (௭௩)
கொடையா லொருபழி குறுகினு மப்பழி
கொடாநிதி யதனி லினிதெனக் குறித்துத் (௭௪)
தத்தஞ் செய்வான் றண்ணீர் வாங்கலும்
உத்தமச் சுக்கிர னுருமறைந் தொடுங்கிக் (௭௫)
கரகமூக் கடைப்பக் கண்டு வாமனர்
ஒருபெருந் தருப்பை யுட்புகச் செலுத்திக் (௭௬)

குத்தலு மொருகண் குறைந்தகன் ஞேடினன்
தத்தம் புரிந்தபின் றந்திமா முகனைச் (எஎ)
சிந்தையி னினைந்து சேணள வளாவி
முந்துற வோருரு முறையுட னெடுத்தாங் (எஅ)
கீரடி யாலே மூவுல களந்தும்
ஓரடி மாவலி சிரமிசை யுறுத்திப் (எகூ)
பண்ணவர் மகிழப் பாதலத் தமுக்கினன்
தண்ணுமை மணாளன் றன்னரு ளாலே (அ0)
மாவலி யாங்கும் மன்னனை யமர்ந்தனன்
மேவரு பெருவரம் பெற்றிருந் தானுங் (அக)
காமரு கணேச னுதவிகைக் கொண்ட
வாமனர் முன்னே வலியிழுந் தகன்ருன் (அஉ)
வாமன விநாயகர் வன்னி விநாயகர்
தோமறு விண்டு விநாயக ரென்று (அங)
யாவர் துதிப்பினும் பூசனை யாற்றினும்
மேவுமே கோடி வியத்தகு பலன்கள் (அச)
வன்னி மகிமை தனைப்பிதிர் தேவ
இன்னமு முணர வியம்பிடு வேனே (அரு)

தருநங்

## கீர்த்தி மகப்பேறு; விட நீங்கல்.

திரைகட லுலகிற் சிறப்பெலா மமைந்த
பிரிய விரத னெனும் பெயர்க் குரிய (க)
மன்னவ னிருந்தான் மனைவிய ரிருவர்
முன்முடித் தாட்கு மொழிபெயர் கீர்த்தி (உ)
பின்முடித் தாளைப் பிரபையென் றிசைப்பார்
அன்னவர் தம்மி லழகிய விளையாள் (ங)
தன்மீ தரசன் றயவுமிக் கூர்ந்து
கன்னலுஞ் சுவையுங் கலந்திருப் பதுபோல் (ச)
அன்பொடு நடத்தின னெனினும் மூத்தாள்
தன்பெருங் கற்பிற் றணவா ளாகிக் (ரு)

சொண்டவன் மீது குறைசுமத் தாமற்
சண்டைசெய் திளையாள் தனைநோ காமற் (௬)

காதலற் குரிய கடமைக ளெல்லாந்
தீதற நாளுஞ் செய்துகொண் டிருந்தாள் (௭)

எவ்வகை பொறுமைகொண் டெப்பணி யாற்றியுஞ்
செவ்விய சோமான் றிருமுகம் பாரான் (௮)

இளையவள் போக மென்றுமுற் றிருப்ப
வளமிகு மாங்கவள் மகவுண் டாகிப் (௯)

பயந்தனள் பதும நாபன் றன்னை
நயந்தவன் பருவ நண்ணிய காலைப் (௰)

பன்னருந் தவத்துப் பாஞ்சா லன்றன்
கன்னியை வேட்டுக் களிப்பொடு வைகினன் (௰௧)

இத்தகைச் சிறப்பா லிளையவள் கீர்த்தியை
மெத்தவு மிகழ்ந்து துரும்பெனக் கணிக்காள் (௰௨)

மன்னவ னொருதினந் தன்பா லிருப்ப
அன்னவன் பணியிற் கீர்த்தியாங் குறலும் (௰௩)

இங்குநீ வருத லென்னென் றெழுந்து
பொங்கிய கோபத் தொடுபோ யுதைத்தாள் (௰௪)

உதைத்தலுங் கீர்த்தி யொடுங்கிநின் றுள்ளம்
பதைத்திட மன்னனைப் பார்த்தன ளவனுங் (௰௫)

கண்டுங் காணா தவன்போ லிருப்பப்
பண்டிழை வினையின் பலனிதென் றுருகித் (௰௬)

தஞ்சமிங் கில்லைத் தழல்விழுந் தாயினும்
நஞ்சுண் டாயினும் நான்றுகொண் டாயினும் (௰௭)

உயிர்தனை விடுத லுத்தம மென்று
கயனெடுங் கண்ணீ ராறெனப் பெருக (௰௮)

விம்மிய துயரொடு வெளியே வருதலுஞ்
செம்மறை யுணர்ந்த தேசிக னொருவன் (௰௯)

யாசகங் கொள்ள வந்தவ னிவளின்
மாசகல் முகத்து வாட்டங் கண்டு (௨௰)

அம்மணி யினிநீ யஞ்சிட வேண்டாம்
மும்மத வேழ முகத்தனைச் சிலநாள் (௨௧)

அன்பொடு வழிபட் டருச்சனை புரிந்தால்
நின்னுளக் கவலை நீங்குமென் றிசைத்தான் (௨௨)
ஆங்கவ னுரைப்படி யாயிழை கீர்த்தியும்
பாங்கியர்க் கூவிப் பலவகை மலரும் (௨௩)
அறுகொடு மஞ்சன மருச்சனைப் பொருள்கள்
முறையுள பலவுந் தருகென மொழிந்து (௨௪)
திருப்புன லாடித் திருநீ றணிந்து
விருப்பொடு பூசனை விதியொடு செய்தாள் (௨௫)
இவ்வகை வழிபட் டிருப்பவ ளொருநாட்
செவ்விய பாங்கியர் திசைதொறுந் தேடி (௨௬)
அறுகுகா ணாம லலைந்துமீ ளமையம்
நெறியிலோர் வன்னி நிற்பது கண்டு (௨௭)
சிலவிலை பறித்துச் செங்கையிற் கொடுபோய்த்
தலைவியை நோக்கித் தாயே யாண்டும் (௨௮)
அறுகு தேடியு மகப்படா மையினன்
முறையறி யாதிவ் விலைகொடு வந்தேம் (௨௯)
தக்கதேற் சாத்துக சாமிக் கெனறனர்
புக்கிய தருச்சனை புரிதரு காலமும் (௩௰)
மற்றினிச் செய்ய வகைவே றின்றிப்
பொற்றொடி யாளும் பூசையின் முயன்று (௩௧)
தவமிகு வன்னித் தளிர்கொடு கணேசன்
நவையறு பூசனை நடாத்திய பின்னர் (௩௨)
அறுகொன் றில்லா வப்பிழை தீரப்
பெறுமுணா வொழித்துப் பெருநோன பிருந்தாள் (௩௩)
அன்றிர வன்னாள் சொற்பனந் தன்னில்
வென்றிகொள் விநாயகன் றரிசனங் கொடுத்துப் (௩௪)
பாவா யின்றுன் ளருச்சனைப் பத்திரம்
மேவிநம் முடிமிசை விளங்குதல் காண்டி (௩௫)
நின்னுளக் கவலை யின்றொடு நீங்கும்
மன்னவ னின்பால் மனதுவைத் திடுவன் (௩௬)
பிரபைநோய் கொண்டு பெட்பிழந் திடுவள்
ஒருதிரு மைந்த னுலகிற் பெறுவாய் (௩௭)

கிப்பி ரப்பிர சாதனென் றவற்குத்
தப்பறு நாமஞ் சாத்துக நாலாம் (௩௮)
வயதுற மாற்றா ளூட்டுநஞ் சதனால்
உயிரறுங் கிருச்ச மதமுனி சேவையால் (௩௯)
மீண்டு முயிர்த்திடு வானென விளம்பி
வேண்டிய வரங்கள் விருப்பொடு நல்கி (௪௰)
மறைந்தனன் பூவையும் மலர்க்கண் விழித்து
நிறைந்துள மகிழ்வாற் றுதிபல நிகழ்த்திப் (௪௧)
பண்டுபோற் பூசனை பயின்றன ளிளையாள்
கொண்டனள் வெப்புநோய் குறைந்தன வழகெலாங் (௪௨)
கண்டுகா வலனுங் கைவிடுத் தவளை
அண்டினன் கீர்த்திபா லமர்ந்தன னிருப்பக் (௪௩)
கற்பக னருளாற் கருவுண் டாகிப்
பெற்றனள் கிப்பிரப் பிரசா தனனை (௪௪)
அழகொடு வலிகுண மாதிய மருவிப்
பொழுதெழு வகைபோற் புதல்வனும் வளர்ந்து (௪௫)
வயதுநான் கடைதலும் மாற்றா ளூக்கிச்
சயமுறு மிவனித் தரணியி லிருந்தால் (௪௬)
தன்மகற் கரசு சார்ந்திடா தென்று
தின்பதற் குணவி னஞ்சுசேர்த் தளித்தாள் (௪௭)
அருந்திய பாலக னறிவிலா தயர்ந்து
வருந்தலு மன்னன் மனமிகப் பயந்தான் (௪௮)
கனவினிற் கண்ட கற்பனை தன்னை
மனதினிற் கீர்த்தி மதித்தெழுந் துடனே (௪௯)
மைந்தனை வாரி மார்போ டணைத்துச்
சுந்தரக் கிருச்ச மதனுறை சூழலை (௫௰)
நோக்கி நடந்தன ளுண்ணிடை வருந்தப்
பூக்கிளர் சோலை நடுவழிப் போதலுந் (௫௧)
தலைவிட மேறிய தன்மையி னாலே
குலைதர வுயிர்போய்க் குலமக னிறந்தான் (௫௨)
மண்மிசை யிருந்து மடிமேற் கிடத்திக்
கண்மணி யோவெனக் கதறினள் கரைந்தாள் (௫௩)

வஞ்சக மாற்று ளூட்டிய நஞ்சாற்
றுஞ்சினை யோவென் சுந்தர மகனே (ருச)

மகனே யென்று வாய்விட் டலறி
அகமே வியவெங் துயர்க்கட லழுந்தலும் (ருரு)

மெய்த்தவக் கிருச்ச மதனுணர்ந் தோடி
உத்தமி முன்னுற் றுறுதிக ளியம்பி (ருசா)

மைந்தனை யெழுப்பு மாறே தென்று
சிந்தையி னினைந்த தேமலர்க் குழலாய் (ருஎ)

முன்னொரு தினம்நீ முள்ளவன் றன்னை
வன்னியி னிலைகொண் டருச்சனை யாற்றினை (ருஅ)

அத்தினப் பூசையி னரும்பலன் றன்னைத்
தத்தஞ் செய்புன் றனையற் கென்றனன் (ருகூ)

ஆங்கவள் விரைந்தவ் வாறளித் திடலுந்
தூங்கின வன்போற் சுந்தர னெழுந்து (சாய)

முனிவரன் பதத்தை முறையொடு பணிந்தான்
வனிதையுங் கண்டு மனமிக மகிழ்வுற் (சாக)

றொருபகல் வன்னியி னியல்புண ராமற்
புரியருச் சனையிற் பொருந்திய பலனால் (சாஉ)

இறந்தவ னெழும்பி னித்தவம் வன்னியில்
நிறைந்தவா றென்னென நிகழ்த்தலுற் றனனே (சாங)

ஆ ருகூகூ

## சமிமந்தார வுற்பத்தி

வாக்கினு லொருமுறை வன்னியென் றிசைத்தால்
வாக்கினு லுற்ற பவமெலா மழியும் (க)

மனதினு லொருமுறை வன்னியை நினைக்க
மனதினு விளைத்த பவமெலாம் மடியும் (உ)

காணினுஞ் சூழினுங் கையெடுத் திறைஞ்சினும்
ஆணவத் துடம்பின் பவமெலா மழியும் (ங)

இத்தகை வன்னிச் சிறப்பையிந் திரற்குப்
பத்தியி னாரதன் பகர்ந்தவா றுரைப்பாம் (ச)

நந்தி கோத்திரந் தனிலொரு முனிவன்
வந்தன னவன்பெய ரவுரவ னாகும் (௫)
சுந்தர மனைவியைச் சுமேதையென் றிசைப்பார்
அந்தமில் போக மவர்திளைத் திடுநாட் (௬)
செய்யதா மரையின் றிருமகட் போலொரு
தையலைப் பெற்றார் சமியவள் பெயராம் (௭)
பருவ மெய்தலும் பாவையன் னாட்குத்
திருமணம் புரியச் சிந்தையி னினைந்து (௮)
சவுனக முனிவ னேவலி னமர்ந்த
தவநடை மிகுமந் தாரனை யழைத்து (௯)
மணமுடிப் பித்தார் மங்கை பூத்தபின்
குணமுறு சாந்திகள் கோதறச் செய்து (௰)
தந்தை யாதியர் வாழ்மனைக் கேகப்
பைந்தொடி யுடனே பட்டர் தரும் பாதையில் (௰௧)
விதித்தொடர் பாற்புரு சுண்டி மேவலுந்
துதிக்கையும் பருத்த தொந்தியும் நோக்கி (௰௨)
இங்கிவன் யார்கொ லெனநகை புரிந்தார்
அங்கவன் னோக்கி யகம்வே றாகிச் (௰௩)
செருக்கொடு நகைத்தீர் யார்க்கும் பயன்றராத்
தருக்க ளாகுமி னெனச்சபித் திட்டான் (௰௪)
அஞ்சினர் பிழைபொறுத் தருளெனப் பணிந்து
வஞ்சமற் றிரப்ப மனங்குளிர்ந் தவனும் (௰௫)
யானை யானனங் கண்டுநீர் நகைத்தலின்
கானமர் தருக்களாய்க் கலங் குவீர் சிலநாள் (௰௬)
யானை யானனன் வந்துநும் நிழலிற்
றானமர்ந் திடுநாட் சங்கைகள் பெறுவீர் (௰௭)
என்றுரைத் தகன்று னிருவரும் மரங்களா
நின்றனர் முன்போ னிலைத்தன பெயர்களுஞ் (௰௮)
சமிமந் தார மெனச்சகத் தப்பால்
அமைந்தவா றனைத்துஞ் சவுனக னறிந்து (௰௯)
வாரண முகத்தனை மனத்தமைத் தன்புடன்
ஆரண முறைப்படி யருச்சனை செய்தலும் (௨௰)

கிருபை கொண் டெம்பிரான் றரிசன மருளி
வரமெவை வேண்டும் வழுத்தெனப் போற்றி (௨௧)
அடியார்க் கடிய ஞகுமந் தாரன்
அடியாற் கறியா திழைத்தவப் பிழையை (௨௨)
எந்தாய் பொறுத்திங் கிரங்கெனக் கணேசன்
முந்துறு தவத்து முனிவர கேட்டி (௨௩)
எவர்குறை நீக்கினு மெம்பழி போக்கினுந்
தவவடி யாரிடு சாபம் மாற்றுதல் (௨௪)
அருமையா மெவர்க்கு மாயினு நின்றவப்
பெருமையின் மகிழும் பெற்றியா லன்னோர் (௨௫)
மரங்களே யாகினும் மாநிலத் தென்றும்.
பெருங்குண மேன்மைகள் பெறுபவ ராக (௨௬)
நாமவர் நிழலி னன்குற விருப்போம்
பூமல ரிலையாற் பூசிப் பவர்க்கு (௨௭)
வேண்டிய வரமெலாம் விருப்பொடு நல்கித்
தாண்டரு பவக்கடல் தணந்திடச் செய்வோம் (௨௮)
என்றுபோய்த் தருக்க ணிழலி லிருப்ப
அன்றுதொட் டாங்கே யாவரு மவர்க்கு (௨௯)
வன்னிமந் தார விலைமல ராலே
உன்னித பூசனை யுஞற்றுவ ராயினர் (௩௰)
வன்னியாஞ் சமியை யீன்றமா தாவும்
அன்னதன் னிழ லமலனை வணங்கிச் (௩௧)
சார்ந்தனள் பதவி தந்தை யவுரவன்
கூர்ந்தநல் லன்பா லுடலைக் குலைத்துப் (௩௨)
பொருவறு சூக்கும வுடலொடு மகளின்
கருவினிற் பொருந்தி வானவர்க் கிதமாம் (௩௩)
அவிபெற் றுதவுந் தொழிலினி லமர்ந்தான்
புவிமிசை யவனே யதுமுத லாச்சமி (௩௪)
கருப்பனென் றிசைப்ப ரறுகிலாக் குறைவை
நிரப்புமந் தார மிரண்டுமில் லாவழி (௩௫)
வருகுறை நிரப்புதல் வன்னியி னிலையாம்
அரிவையர் சிகாமணி யாகிய மாதே (௩௬)

வன்னி நீழலின் மகத்தழன் மருவலான்
அன்னதி னிலெசிவன் முடிமிசை யமர்தலான் (௰௭)
மன்னிய மகிமை வகுப்பது மரிதாம்
இன்னமு மோர்கதை யியம்புது மன்றே (௰௮)

௩௬௰௭

# தேவர்கள் சாபந்தீர்தல்.

நான்மறை விளம்பிய நான்முகப் பிரமன்
தேன்மொழி சாவித் திரிதனை மனையில் (௧)
வைகுற விருத்திக் காயத் திரியொடு
மையய் மால்வரைச் சாரலை நண்ணிப் (௨)
பிறைமுடி தரித்த பிஞ்ஞகன் றனக்கோர்
மறைவிதி யாகம் வரம்பெற வகுத்தான் (௩)
ஆதியிற் கணேசனை யன்பொடு வணங்காத்
தீதுறச் சாவித் திரியிது நினைந்தாள் (௪)
மறைவலா னென்னைத் தனிமனை யிருத்திக்
கெறுவுளாள் காயத் திரியொடு சென்று (௫)
மாதவ வேள்வி வளர்த்திட வுற்றான்
ஆதர வென்பா லமைந்திலை போலுஞ் (௬)
சென்றியான் மகத்தைச் சிதைத்திடு வேனெனத்
துன்றிய கோபத் துடனுங் கேகி (௭)
இந்திரன் றிருமா லிமையவர் யாவருஞ்
சுந்தர வேள்வியிற் சூழ்ந்துறல் கண்டு (௮)
தடுத்தெனை வைத்துச் சதுர்முகன் வந்து
முடித்திடு வேள்வியின் முறைகெட் டிருந்தீர் (௯)
நீவிர் யாவரு மலைசெறி நீராய்ப்
போவிரிங் கென்று புகன்றனள் சாபம் (௰)
அம்மொழி யருமுன் னனைவரும் புனலாய்த்
தம்முரு மாறித் தடங்கரை புரண்டு (௰௧)
யாகப் பொருள்களை யடித்தொழுக் குற்றார்
பாகத் தமரும் பத்தினி மாரெலாம் (௰௨)

வந்து சூழ்ந்தனர் மலரவன் றன்னை
இந்தநல் யாக மென்பெற முயன்றாய் (௰௩)
எங்கள் வயிற்றிலு முன்மனை யாட்கும்
பொங்கனல் கொழுத்தப் புகுந்தனை போலும் (௰௪)
ஆடவர் தமையிங் கெமக்களிக் காயெனில்
நீடிய பெரும்பழி நினக்குறு மென்றார் (௰௫)
வேதனுங் கேட்டு மிகமனங் கலங்கி
யாதினிச் செய்வ தெனப்பர சிவனைத் (௰௬)
தஞ்சமென் றேத்தத் தரிசனங் கொடுத்துக்
கஞ்சமென் மலரோய் கரிமுகன் றனைநீ (௰௭)
முந்துற வணங்கி முயலா முறையின்
வந்ததிப் பிழையினி மாற்றிட வேண்டின் (௰௮)
அங்கவன் றனையே வேண்டென வருளிச்
சங்கரன் மறையச் சதுர்முகக் கடவுளுஞ் (௰௯)
சுரமக ளிர்க்குச் சொல்லியிம் முறையை
வரதனை யன்பின் வணங்குமென் றுய்த்தான் (௨௰)
நன்றென வவர்கரு நாடாதே யத்திற்
சென்றுமுன் னரக்கரைச் சிதைக்கத் திருமால் (௨௧)
மருமலர் யலிமந் தாரமைந் தருநிழல்
வரமுறை வகுத்த வக்கிர துண்ட (௨௨)
கணேசனை யடுத்துக் கைதொழு திறைஞ்சி
மணமலர் தூவியும் மஞ்சன மாட்டியும் (௨௩)
புனலிடை முழுகிப் பூசனை புரிந்தும்
அனமுறை வழிபட் டனேகநா ளிருந்து (௨௪)
தரிசனம் பெறுமற் றயங்குறு மேல்வையின்
வரதருக் குகந்த வன்னியி னிலையாற் (௨௫)
பூசனை புரியம் பூவையி ரொன்று
வாசக மொன்று வானிடைப் பிறப்ப (௨௬)
அவ்விலை பறித்தாங் கருச்சனை புரிந்தார்
செவ்விய கணேசனுந் திருவுளங் குளிர்ந்து (௨௭)
வந்துமா தர்க்கு வரம்பல வளித்தான்
இந்திரன் முதலிய விமையவ ரெலாரும் (௨௮)

புனல்வடி வகலச் சுயவுருப் பூண்டு
மனமிக மகிழ்ந்து வந்தாங் கடைந்து (௨௯)

தேமிகு மலர்மந் தார நீழலிற்
றுமுமோர் மூர்த்தியைத் தாபித் திறைஞ்சினர் (௩௰)

பேரின்ப வாழ்வைப் பிசகா தளிக்கும்
ஏரம்ப மூர்த்தியென் றிசைத்தனர் நாமமும் (௩௧)

ஆங்கது முதலா யனைவரும் வாழ்மனைப்
பாங்கரி னட்டுப் பலமந் தாரம் (௩௨)

வழிபட வாயினர் மறையவன் றானும்
புழைநெடுங் கரத்தனைப் பூசனை புரிந்து (௩௩)

சாவித் திரியுந் தன்மருங் கிசைந்து
மேவத் தொடங்கிய வேள்வியை முடித்தான் (௩௪)

வன்னிமந் தார மகத்துவ மிதுவெனத்
தன்னிக ரிலாக்கிருச் சமதன் சாற்றலுங் (௩௫)

கேட்டுள மகிழ்ந்த கீர்த்தியோன் றிசைப்பாள்
வாட்டமில் சிறந்த மாதவ முடையோய் (௩௬)

விக்கினந் தீர்த்து விருப்பெலாம் வழங்கத்
தக்கதா யெளிதிற் கற்கவோர் மந்திரம் (௩௭)

மைந்த னிவற்கு வகுத்தருள் செய்கெனச்
சிந்தையி லவனுந் தேர்ந்தான கெழுத்தை (௩௮)

விதியொடு கூறி மேதவர் வாழும்
அதிபுகழ்க் காசி மாநகர்க் கேகித் (௩௯)

துண்டி விநாயக மூர்த்தியைத் தொழுது
விண்டவா றோத வேண்டுமென் றிசைத்தான் (௪௰)

மெல்லியல் மீட்டும் விளம்பிய மனுவைச்
சொல்வதற் கிசைந்த தூயநற் றலமது (௪௧)

காசியென் றுரைத்த காரணம் யாதெனத்
தேசிக னெடுத்துச் செப்பலுற் றனனே (௪௨)

# கிப்பிரப் பிரசாதன் வரம்பெறல்.

பெண்ணல மனைத்தும் பெட்புற வமைந்த
தண்ணளிப் பாவாய் சராசர மாகிய (௧)
நால்வகைப் பிறப்பு நவிலெழு தோற்றம்
நாலிரு பத்து நான்குநா றாயிரம் (௨)
யோனிபே தங்க ளாமிவற் றுள்ளே
மானிட ராக மன்னுத லரிது (௩)
அப்பிறப் பெய்தினு முயர்பிறப் பாளராய்ச்
செப்பரு ஞானஞ் சிவணுத லரிது (௪)
இத்தகைச் சிறந்தா ரன்றிமற் றேனையோர்
முத்திபெற் றுய்யும் முறைவழி யாகத் (௫)
தனிமுத லிறைவனே யனந்தமூர்த் திகளாய்ப்
புனிதநற் றலங்களாய்ப் புனல்களாய்ப் பொருந்தினன் (௬)
அவ்வகை மூன்றனுள் ளோர்வகைக் கொன்றே
திவ்விய முதன்மைத் திறத்தின தாமவை (௭)
மணிகன் னிகையென வயங்குறு தீர்த்தமும்
இணையி லாதவி முத்தமென் பதியும் (௮)
துதிபெறு விசுவ லிங்கமிம் மூன்றும்
வதிதரு மோரிடங் காசிமா நகரால் (௯)
அத்தலத் தாக்கிணை யத்தல மல்லால்
இத்தரை மேலினி வேறிணை யில்லை (௰)
ஆதியில் விண்டு தடாகமொன் றகழ்ந்து
மேதகு விசுவ நாத மூர்த்தியை (௰௧)
மறைமுறை மஞ்சன மாட்டி வழிபடக்
கறையகல் விசுவபிற் கர்த்தனுந் தோன்றிச் (௰௨)
சிரமதை மகிழ்வாற் சிறிதசைத் திடலும்
உரக குண்டலத் தோர்மணி யுதிர்ந்து (௰௩)
தடாகத் தழுந்திய தன்மையா லந்தத்
தடாகந் தனைமணி கன்னிகை யென்பார் (௰௪)

பின்பு பகீரத னெனும்பெயர்க் குரியான்
இன்பவா னதியை யிட்டுக் கொடுபோய் (௰௫)
அன்னதி னுய்த்ததாற் பகீரதி யென்றும்
மன்னிய தொருபேர் மணிகன் னிகைக்காம் (௰௬)
இப்பரி சாகிய தீர்த்தத் தாடிச்
செப்பிய மனுவைச் செபியுமென் றனுப்பச் (௰௭)
சொற்படி கீர்த்தியுஞ் சுதனுமங் கேகி
நற்றவ மிருந்து நாட்சில சென்றபின் (௰௮)
போற்றரு மாகி பொருந்துபிற் பக்கச்
சாற்றுமங் காரகச் சதுர்த்திவந் தடுப்ப (௰௯)
அற்றைநாண் முழுது மைம்புல னடக்கி
நற்றவ வன்னி நறுநிழ லமர்ந்து (௨௰)
மந்திரஞ் செபித்து மாதவ பூசனை
சந்தி ரோதயந் தனினடத் திடலும் (௨௧)
வாரண முகத்தன் வந்தோ ராயிரம்
பூரண வயசு புதல்வற் கருளி (௨௨)
ஆயிரம் வேள்வி யாண்டுக் கொன்றாய்
நீயிழைத் தடங்கா நேரல ரடக்கி (௨௩)
வையக மாள்கென வச்சிரப் படையுங்
கையினி லுதவித் திருவுருக் கரந்தான் (௨௪)
வரமிவை யேற்ற மைந்தனுந் தாயுந்
திருநகர்க் கேகிச் சிறப்பொடு வாழ்ந்து (௨௫)
மறுமையின் முத்தி மருவின ரென்று
நறியதண் கமலத் திறைநவின் றனனே (௨௬)

௲௭௫

# கிருதவீரியன் மகப்பெறல்.

சாற்றிய பெருமைச் சங்கட சதுர்த்தியை
நோற்பவர் முறையே நோற்றபின் முடிக்கும் (௧)
விதிமுறை யாதெனப் பிதிரன் வினவலும்
புதியதண் கமலப் புத்தே ளுரைக்கும் (௨)

தொடங்கிய திங்களி னுதலேர் தேழாம்
இடம்படு திங்க ளிவற்றிலொன் றெய்துஞ் (௩)
சதுர்த்தியிற் கலசந் தாபித் ததன்மேல்
விதிப்படி தட்டம் விளங்குற விருத்தி (௪)
மெல்லிழைப் பூந்துகில் விரித்துமே லியந்திரஞ்
சொல்லிய மறைப்படி துலங்கிட வைத்து (௫)
மங்கைய ரிருவரு மருங்கினிற் பொலிதர
ஐங்கர னுருவ மமைத்தாங் கிருத்திப் (௬)
பூசனை யன்பாற் புரிந்தபி னியந்திரம்
மாசகன் மூர்த்தி மற்றிவை யிரண்டையுங் (௭)
குரவன் றனக்குக் கொடுப்பது விதியாம்
ஒருபதி னுயிர மோதுமை யாயிரம் (௮)
ஓரா யிரநூற் றெட்டென வுரைக்கும்
ஏரா ராகுதி யியன்றன புரிந்து (௯)
குறுணியெட் டானங் கொடுத்திடல் வேண்டுங்
கறவையுங் கன்றுங் கைப்பொரு ளுடையான் (௰)
வழங்குதன் முறையா மெழுமூ வந்தணர்
உளங்களி கொளவூ ணுகந்தினி துதவி (௰௧)
ஆங்கவர் சேட மருந்துக விரதந்
தீங்கற முடிக்குந் திறமிது வாகும் (௰௨)
மூவிரு திங்கண் முறைமையி னேற்றுத்
தேவி சேர்ந்தனள் சிவனிடப் பாகம் (௰௩)
ஈரிரு திங்க ளெழிற்றமை யந்தி
சீருற நடத்திக் கொழுந்தனைச் சேர்ந்தாள் (௰௪)
அகத்தியன் றிங்க ளொருமூன் றாற்றி
மகத்துவக் கடலை யடக்கிவாய் மடுத்தான் (௰௫)
விண்டுவு மோர்பகல் மேதக நோற்றுத்
திண்டிறல் வாணனைச் செயிர்த்தமர் வென்றான் (௰௬)
இத்தகை யானு மிந்திர னாதியோர்
பத்தியிற் பலவிசை நோற்றிடர் பறித்தோம் (௰௭)
ஐங்கரக் கடவு ளதிகமாய் விரும்புஞ்
சங்கட சதுர்த்திக் கீடாந் தவமிலை (௰௮)

நின்மக ணிதனை நியமமாய் நோற்பின்
நன்மகப் பேறு நாடுமென் றுரைக்கப் (௰௯)

பத்தியி லுணர்ந்த பரிசெலாம் பிதிரன்
புத்தக மொன்றிற் பொருந்துற வரைந்து (௨௰)

சொற்பனத் திடைபோய்ச் சுதன்கையிற் கொடுத்துக்
கற்பகன் றானைக் காட்டுமிப் புத்தகம் (௨௧)

மறையவர்க் கொண்டு வழுவறப் படித்து
முறையொடு நோன்பின் முயலுவா யாளுல் (௨௨)

எண்ணிய மகப்பே றெய்துமென் றிசைத்தான்
கண்விழித் தவனுங் காதலி யுடனே (௨௩)

களிமிக வாகக் கானகம் நீங்கி
வளர்மனைக் கேகி மறையவர் தம்மாற் (௨௪)

புத்தகத் தமைந்த பொருளெலாங் கேட்டபின்
அத்திரி முனியை யழைத்தாங் கிருந்தி (௨௫)

அருந்தவ விரத மாரம் பித்துத்
திருந்துற வேழாந் திங்களின் முடித்தான் (௨௬)

அன்புயர் மனையாள் கருப்பமுண் டாகி
ஒன்பதாந் திங்களி லொருமகப் பெற்றுள் (௨௭)

ஐதிக மும்மகற் குறுப்பெலா மமைந்துங்
கைகா லிலாமையிற் கனதுய ரடைந்து (௨௮)

தந்தைதா யிருவருந் தவக்குறைக் கிரங்கி
மைந்தனைப் பேணி வளர்த்திட வளர்ந்தான் (௨௯)

மாசகல் வயது பன்னிரண் டடைதலுந்
தேசுயர் தேத்தாத் திரிய மாதவன் (௩௰)

வந்தவன் காதிற் கணேசனே றெழுத்தாம்
மந்திர முரைப்ப மதித்திளங் குமரனும் (௩௧)

வாழ்மனை நீங்கித் தருமலி வனத்திற்
சூழ்வரு பரிசனந் துணைகொண் டெய்தி (௩௨)

ஆங்கொரு பொய்கைக் கரைதனி லமர்ந்து
தீங்கற மந்திரஞ் செபித்தலுங் கணேசன் (௩௩)

தரிசன மருளித் தாளிரண் டுடனே
கரமொரா யிரமுங் களித்திடக் கொடுத்தான் (௩௪)

சூழ்வரு வானவர் கற்பநாட் டொல்புவி
ஆள்கென வாழ்த்தி வரம்பல வளித்தார் (௩௫)
வரமிவை பெறுமக் கார்த்த வீரியன்
அரிமுகற் காங்கோ ராலய மமைத்துக் (௩௬)
கவினுறு பவளக் காட்சிதந் தமையாற்
பவளத் தாலுருப் பதிட்டை செய்தனன் (௩௭)
அன்றுதொட் டேபிர வாள விநாயகர்
என்றுமவ் வனம்பிர வாளமென் றிலங்கும் (௩௮)
பின்னொரு காலம் பெரும்புவி சுமக்க
உன்னிய சேட னுபாசனை செய்து (௩௯)
வரம்பெறு முறையான் மற்றொரு பெயருந்
தரணி தரனெனச் சாற்றிடப் படுமால் (௪௰)
அப்பெரு மூர்த்திக் கருச்சனை புரிந்து
தப்பறு பாண்டவர் தரணிகைக் கொண்டார் (௪௧)
மணிமுடி ராவணன் வழிபா டாற்றி
அணிதிக ழிலங்கையி னரசுகைக் கொண்டான் (௪௨)
சாற்றிய சங்கட சதுர்த்தியை முறையே
நோற்றவ ரொருதின நோன்பின் பலனை (௪௩)
இங்கெனக் கன்பா லீந்திடு வாரேற்
றங்கிய விமானந் தரணிவிட் டெழும்புங் (௪௪)
கொற்றவ வென்று விண்ணவர் கோமான்
சொற்றன னுசாவு சூரசே னற்கே (௪௫)

௩௭௫௰

# இந்திர விமானம் விண்ணெழல்.

இன்னண முரைத்த விந்திரன் றன்னை
மன்னவன் னோக்கி வானநாட் டரசே (௧)
முன்னியா னறியா முதன்மைய வறுகு
வன்னிமந் தார மகத்துவம் மற்றுஞ் (௨)
சங்கட சதுர்த்தியின் றவமலி பெருமையும்
இங்குன தருளா லெளிதினி துணர்ந்தேன் (௩)

அப்பெரு விரத மாற்றிய மாதவர்
இப்பதி யிருந்தாற் றருவலென் றிசைத்துத் (௪)
தூதரை விடுத்தான் றுரிதமா யோடி
மாதவர் தம்மை மனைதொறுந் தேடிக் (௫)
கண்டிலர் மீளுங் காலையின் மற்றோர்
மண்டொளி விமானம் வானிருந் திழிய (௬)
நோக்கி யதன்வர வுணர்ந்திட நெருங்கிப்
பார்க்கையி லங்கரன் பணிபுரி கணங்கள் (௭)
நொய்துடல் பிரியு மொருபுலைச் சிக்குத்
தெய்வநல் லுருவஞ் சிறப்புறக் கொடுத்துக் (௮)
கதிர்மணி விமானத் தேற்றுதல் கண்டு
மதிநல முடையிர் மாதவம் பயிலா (௯)
இழிகுலத் தாளிவட் கிப்பெரும் பேறெவன்
மொழிமினென் றிரப்பக் கணத்தினர் மொழிவார் (௰)
கனவள மிகுவங் காளமா நகரிற்
றனியர சியற்றிய சாரங் கதரன் (௰௧)
மாதவத் தொருமக ளாவவ தரித்த
சோதக சுந்தரி யெனும்பெயர்க் குரியாள் (௰௨)
திருமலி திணிதோட் சித்திர னென்னும்
அரசிளங் குமரன் மனைவியா யிருந்தனள் (௰௩)
பற்றெனு முலக பாச மனைத்தையும்
முற்றத் துறந்த முனிவரர் தாமுஞ் (௰௪)
சுந்தரி யாளைத் தூரக் காணினுஞ்
சிந்தனை மயங்கித் திறம்புவர் தவநெறி (௰௫)
மற்றவள் தானும் மங்கையர்க் குரிய
கற்பெனு மறத்தைக் கனவினு நினையாள் (௰௬)
மருவுதல் வேட்டு வருமெவர் தமையுங்
கரவினிற் புணர்ந்து காலங் கழிப்பாள் (௰௭)
கொண்டவ னிவளின் கொள்கையை யுணர்ந்து
மண்டலஞ் சிரிக்க மரபுகெட் டொழுகும் (௰௮)
பாதகி வெளியினிப் படருவை யானாற்
சேதித் துடலை யருந்திடச் செய்குவன் (௰௯)

என்றுரைத் தகத்தி லருஞ்சிறை யிருத்த
நன்றென விருந்தாள் நாட்சில சென்றபின் (உ௰)
ஓரிர வவனு மருகினி லுறங்கக்
கூரிய வாள்கொடு கொன்றுயிர் போக்கி (உக)
மற்றோ ராடவன் மனைபுகுந் திருந்தாள்
உற்றதைக் காவலர் வேந்தனுக் குரைத்து (உஉ)
வஞ்சக வஞ்சியை வாட்கிரை யாக்கத்
துஞ்சின ரியம தூதுவர் கொடுபோய் (உஙு)
நரகிடை வருத்தி நாட்பல சென்றபின்
மரபிழி புலைச்சியாய் வந்திங் குதித்தனள் (உச)
இப்பவந் தனிலு மெண்ணிலாப் பழிவபந்
தப்புகள் செய்தாள் தவமொன் றறியாள் (உரு)
இற்றைநாட் புலரியின் மதுமிக வருந்திப்
பற்றிய வெறியாற் படுக்கையிற் கிடந்து (உசா)
கங்குலிற் சிறிது கண்விழித் தெழும்பிப்
பொங்கிய பசியைப் பொறுக்கா ளாகித் (உஎ)
தெருவினி னுடங்கிச் செல்லு மேல்வையின்
ஒருதிரு மனையி னுள்ள மாதவர் (உஅ)
சங்கட சதுர்த்தியைத் தவம்பெற வாற்றி
ஐங்கரற் கமுது நிவேதித் தயின்றபின் (உகூ)
தெருவினி லெறிந்த சேடந் தன்னை
வருபவ ளெடுத்து வாய்மடுத் துண்டாள் (ஙு௰)
அணிமனை யிருந்தவ ரன்பொடு பரவிக்
கணபதி யெனுஞ்சொற் காதினில் விழலும் (ஙுக)
அம்முறை தானுங் கணபதி யென்று
மும்முறை யாக மொழிந்தனள் சதுர்த்தியில் (ஙுஉ)
தன்பெய ரோதிய தன்மையி னாலே
அன்பினில் விநாயக ரனுப்பினர் விமானம் (ஙுஙு)
என்றிவர் புகலத் தூதுவ ரிசைப்பார்
வென்றிகொள் சுவர்க்கத் திந்திர விமானங் (ஙுச)
குட்டன் னோக்காற் குவலயத் திறங்கி
விட்டது பெயர்த்தினி விண்ணெழ வுபாயஞ் (ஙுரு)

செய்மினென் றிரக்கச் சிரித்தவர் புகல்வார்
ஐய னெம்பிரா னேவலி னல்லாற் (௩௬)
பிறர்பணி புரித லடாதெனப் பேசிக்
கறையகல் விசும்பிற் கதுமென வெழும்பிச் (௩௭)
சுந்தர விமானத் தொடுபறந் தேகலும்
அந்த நல் விமானத் தடர்ந்தபெண் ணணங்கின் (௩௮)
மைவிழி நோக்கு வாசவன் விமானத்
தெய்தலு முடனே யெழும்பிய ததுவும் (௩௯)
பொன்மலை யிரண்டு பொலன்சிறை படைத்துப்
பொன்னகர்க் கேகும் புதுமையிற் படரத் (௪௰)
தூதுவ ரோடித் தோன்றலுக் கியம்பினர்
காதலி னவனுங் கையெடுத் திறைஞ்சி (௪௧)
விநாயக விரதப் பெருமையை வியந்து
மனோதய மாகு மகிழ்வினீ டினனே (௪௨)

௬௭௯௨

# சூரசேனன் முத்தி யடைதல்

இந்திர னியம்பிய மொழியெலா மேந்தல்
சிந்தனை செய்து சிலநாட் சென்றபின் (௧)
மாதவ வதிட்டன் வருதலும் வணங்கி
ஆதர வேற்றுச் சதுர்த்தியை நோற்றான் (௨)
விதிமுறை வழாமற் சிலமதி நோற்றலும்
பதமருள் கணேசன் பணித்திடக் கணங்கள் (௩)
பொற்புறு விமானம் புவிமிசைக் கொணர்ந்து
மற்றிதி லேறென மன்னவன் வணங்கி (௪)
இந்நக ரத்தா ரெனைப்பிரிந் தறியார்
என்னொடு வருதற் கேற்குமோ வென்றான் (௫)
உடன்கொடு போத லுன்விருப் பாயின்
இடந்தரு விமான மேற்குமென் றிசைத்தார் (௬)
நன்றென வேந்தனு நகருளார் யாவரும்
ஒன்றிய விமானத் தொருங்குறி யேறினர் (௭)

மாறரு குட்டநோய் வணிகன் மைந்தனும்
ஏறினன் முன்னு ளிந்திர விமானம் (அ)
அசைவற விருந்த வாறுபோ லங்கரன்
இசைபெறு விமானமு மியக்கமற் றிருப்பக் (௯)
காரண மறிந்த கணத்தினர் கோமான்
பூரண மதிபோற் பொலிமுகம் நோக்கிப் (௰)
பங்கவெண் குட்டப் பாவிக் கொடியான்
இங்குறத் தகாதா னிவன்வர லாறுகேள் (௰௧)
ஆதியிற் சிறந்த கவுடதே யத்தில்
வேதிய னைந்தவ சீலனென் றொருவன் (௰௨)
சானகி யென்னுந் தையலை வேட்டுத்
தேனொடு பாலெனச் சேர்ந்துவாழ் நாளில் (௰௩)
மைந்தனென் றிவனும் வந்தவ தரிப்பச்
சுந்தரப் புதனென நாமமுஞ் சூட்டிப் (௰௪)
பலகலை யுணர்த்திப் பராயமே றிடலுங்
குலங்குண மழகாற் கோதறச் சிறந்த (௰௫)
பிறைநுதற் சாவித் திரியெனும் பெண்ணை
மறைவிதிப் படியே மணமுடிப் பித்தான் (௰௬)
சீலநா ளவளைச் சேர்ந்தபின் னகன்று
விலைமுலை மடவார் வேட்கையிற் சென்றான் (௰௭)
ஒருமுறை வீடுவிட் டகன்றவன் மீண்டு
வொராமையின் வாடி வயோதிபத் தந்தையும் (௰அ)
மனைப்புறம் போந்து மைந்தனைத் தேடத்
தனக்குறு மூப்பாற் றள்ளா தவனாய் (௰௯)
உண்டலு முறங்கலு மொழித்துள முருகிக்
கண்டிடற் காசை கதித்தலி னெழுந்து (௨௰)
கைக்கோ லூன்றிக் கடிமனை தணந்து
புக்கி மறுகிடை மெல்லெனப் போதலும் (௨௧)
எதிர்ப்படு வீம னெனும்பெயர்க் குரியான்
பதித்துநின் மைந்தன் வஞ்சகப் பரத்தையர் (௨௨)
தம்மனை புகுந்து தங்கின னென்ன
அம்மனை வாயிலி லவன்போய் நின்று (௨௩)

மகனைக் கூவிப் பரத்தையர் மனைநீ
புகுதலுந் தகுமோ புன்னெறி கொண்டனை (உச)
செப்பரு மொழுக்கஞ் சிதைந்திட விடுத்தாய்
ஒப்பரு மறைகளோ தூதலொழிந்தாய் (உரு)
அருந்ததிக் கற்பின ளார்வம் விட்டனை
திருந்திய வாழ்க்கைச் செயலெலாம் மறக்கினும் (உசா)
தள்ளா வயதிற் றளருமெங் களைநீ
பிள்ளாய் மறந்து பிரிதலுந் தகுமோ (உஎ)
நின்மனங் கல்லோ நெகிழா விரும்போ
என்குலக் கொழுந்தே யெழுந்துவா வெனலும் (உஅ)
பொங்கிய புதனும் புத்திகள் சொலற்கோ
இங்குவந் தனைநீ யென்றுபற் கடித்துக் (உகூ)
கைக்கொடு கிழவன் கன்னத் தறைதலும்
பக்கச் சார்பிலன் பாடுசாய்ந் திறப்ப (௩௰)
மண்கிழித் தடக்கி மற்றவன் பொருளெலாம்
பண்பறு பரத்தைக் களிப்பதற் கெடுப்பான் (௩க)
வாழ்மனை புகுதத் தாயவள் கண்டு
நீள்வய தெங்களை நீங்கியெங் குற்றனை (௩உ)
தேடியுன் னையர் சென்றதிக் கறியேன்
நாடிநீ பாரென நரைத்தபெண் பேயே (௩௩)
சென்றவன் றன்னைத் தேடும் பொருட்டோ
இன்றுநான் வந்த தென்றவ டனையுந் (௩ச)
தண்டினுன் மொத்திக் கொன்றுட லடக்கினன்
கண்டனள் மனையாள் கைநெரித் தலறி (௩ரு)
ஆவென் செய்தனை யன்னையைக் கொல்வரார்
பாவமும் பழியும் பார்த்திலைப் பரத்தை (௩சா)
தன்னலம் பெரிதெனத் தவறிங் கிழைத்தாய்
மன்னவ னறியின் வதைத்திடு வானே (௩எ)
அப்பால் வேசி சுகம்பெறு மாறெவன்
செப்பா யென்று மதிபல தெருட்டத் (௩அ)
தரைமிசை தள்ளித் தாளினு லுதைத்தான்
திருவனை யாளுஞ் சேணுல கடைந்தனள் (௩கூ)

அங்கர்க் காவல ரறியா முன்னம்
பொன்மணி யாடை பொருளெலாந் திரட்டிக் (சய)
கொண்டுபோய் வேசி கைக்கொடுத் தவளுடன்
மண்டிய கங்குல் வாய்வனம் புகுந்தான் (சக)
அங்குவாழ் தால வனமா தவனார்
கங்கைநீ ராடக் காலையிற் போயபின் (ச௨)
தனிப்பட விருந்த தையலாள் சுலபை
வனப்பெலாங் கண்டிப் பாதகன் மயங்கிச் (சங)
செங்கையாற் பற்றச் சினந்தவ ளூதறிப்
பொங்கன லனலாய்ப் புகையெழ விழித்துத் (சச)
தீர்க்கமெய்த் தால வனமுனிக் கல்லால்
யார்க்குஞ் சுலபை யானலக் கண்டாய் (சரு)
இளமை வலியழ கிருத்தலி னன்றே
குழன்மொழிக் கோதையர் நலனுகர் கின்றாய் (சசா)
பேசருங் குட்டப் பெருநோய் பெறுவாய்
ஆசையு மின்றே டறுமெனச் சபித்தாள் (சஎ)
சொல்லிய சாபஞ் சூழ்தலி னுடனே
மெல்லியல் வேசியும் விட்டகன் றோடினள் (சஅ)
மறுதுணை யின்றி வனத்தினி லலைந்து
பொறையுயிர் நீங்கிப் புக்கினன் னரகில் (சகூ)
அங்ஙனம் வருந்தி யனேகநாட் சென்றபின்
இங்ஙனம் பிறந்தா னெஞ்சிய பழியால் (ருய)
என்றனர் கோமா னெப்பரி சாயினும்
நன்றிவற் கருளீர் நாதரே யென்னத் (ருக)
திருத்தகு புனலிற் றோய்ந்திடச் செய்து
கருத்தினி லைங்கரக் கடவுளை யிருத்திக் (ரு௨)
கணபதி கணபதி கணபதி யென்று
குணமுற மும்முறை காதிற் கூறப் (ருங)
பற்றிய குட்டம் பறந்துபொன் னுருவம்
பெற்றனன் யாவரும் பெருமகிழ் வெய்தி (ருச)
ஐங்கரன் புகழைப் பாடியு மாடியும்
இங்கித விமானத் திவர்ந்துபோ யினரே (ருரு)

தூஅசஎ

# பரசுராமன் வரம்பெறல்.

சைய மால்வரைச் சாரலி னுங்கோர்
செய்ய தேன்மிகு திருமலர்ச் சோலையில் (௧)

தண்ணிழ லுறுதவச் சாலையொன் றமைத்துப்
பெண்ணலங் கனிந்த பெட்புய் ரேணுகை (௨)

என்பா டன்னோ டினிதுற் றிருந்தான்
அன்போ டியசம தக்கினி யென்பான் (௩)

பிருகுமுன் கொடுத்த பெருஞ்சா பத்தால்
திரைகட லுறங்குந் திருந்துழாய் மௌலி (௪)

வந்திங் கிரேணுகை வயற்றிற் பிறந்து
மைந்த னிராம னெனப்பெயர் வகுத்துத் (௫)

தந்தைதா யிருவர் தம்பணி யனைத்துஞ்
சிந்தனை யாகச் செய்துவாழ் நாளில் (௬)

ஒருபக லவ்வனச் சூழலை நீங்கிப்
பொருவறு நைமிச வனம்புகுந் திருந்தான் (௭)

பவளமா வனத்திற் பண்டெடுத் துரைத்த
பவள விநாயகன் பால்வரம் பெற்றுத் (௮)

தரணியை யாளுங் கார்த்த வீரியன்
பரிசனஞ் சூழப் படர்ந்துகான் புக்கி (௯)

விலங்கெறிந் தரிய வேட்டைக ளாடி
நலங்கிளர் முனிசம தக்கினி வாழும் (௰)

ஆசிர மத்தை யடுத்தனு மன்பாற்
போசன முதவப் புங்கவ னினைந்து (௰௧)

காம தேனுவைக் கடுகென வழைத்து
மாமுடி மன்னனுஞ் சேனையு மருந்தச் (௰௨)

சொல்லரு மறுவகைச் சுவைக்கறி பால்பழம்
நல்லமு திடுகென நயந்தது வழங்கக் (௰௩)

களிப்புட னருந்திக் களைமா றியபின்
அளிக்கருங் காம தேனுவை விரும்பித் (௰௪)

தருதியென் றரசன் றவத்தனைக் கேட்பச்
சுரர்பசு வாகலிற் றகாதெனச் சொல்ல (ωரு)
வலிந்துகைப் பற்றிப் போகுவ லென்று
மலிந்ததன் படையொடு மன்னவன் சூழக் (ωசு)
காம தேனுவுங் கண்டுகண் சிவந்து
மாமயிர் சிலிர்ப்ப வயவர்கள் தோன்றிப் (ωஎ)
பொருதழித் தரசனைப் புறம்புறச் செய்தார்
சுரபியும் விடைபெற் றடைந்தது சுவர்க்கம் (ωஅ)
பின்னிடைந் தோடிய பெருந்தகை வெட்கி
மன்னிய கோபம் மாறில னொருநாள் (ωகூ)
முனிகண் மூடி முதிர்தவத் திருப்பத்
தனிநெடு வாளாற் றுக்கி வதைத்தனன் (உω)
இரேணுகை பதைத்துப் பாவியென் செய்தாய்
புரோகித னன்னம் புசித்துயிர் கவர்ந்தாய் (உக)
நின்போ னீச னுலகி லுண் டோவென
அன்னாட் கெழுமூ வம்பெறிந் தகன்றான் (உஉ)
கொல்லுதற் கெறிந்த கொடுங்கணை பாய
மெல்லியல் சோர்ந்து தரைமிசை வீழ்ந்து (உ௩)
மைந்த னிராமன் வருமள வாகப்
பந்தித் துயிரைப் பருவர லுற்றாள் (உச)
மாதவ நைமிச வனம்போ யிருந்த
மேதகு ராமன் மீண்டுவந் தையன் (உரு)
பட்டுக் கிடப்பதும் பயந்தவ ளுயிரைக்
கட்டிக் கிடப்பதுங் கண்டுடல் பதறி (உசு)
அந்தோ விப்பழி யாரிழைத் தார்கொல்
எந்தா யெந்தா யென்றிரைந் தலறப் (உஎ)
பைந்தொடி ரேணுகை பாலனை நோக்கி
மைந்தகேள் வஞ்சகக் கார்த்த வீரியன் (உஅ)
வானமர் சுரபியை மறுத்த தன்மையிற்
றானுன தையனைச் சதிபுரிந் தழித்தான் (உகூ)
என்னிலு மெழுமுக் கணையெறிந் தனனால்
மன்னவர் தலைமுறை யெழுமூன் றறுத்து (௩ω)

நாவெழு மறையவர் நற்குலங் களைநீ
தேவெழு குலமெனச் சிறப்புறச் செய்குதி (௩௧)
அறந்திகழ் தெத்தாத் திரியரை யழைத்துச்
சிறந்திடக் கிரிகைகள் செய்திடுங் குணனைக் (௩௨)
கண்டதே போதுங் காதலன் பாலினி
அண்டுவ லெனப்பகர்ந் தாக்கைவிட் டகன்றாள் (௩௩)
செப்பிய முறையிற் றெத்தாத் திரியரை
மெய்ப்புற வழைத்து வினைகளை முறையே (௩௪)
செவ்விதி னடாத்தி வருமைந் தாந்தினம்
அவ்வயி னிராமன் கண்ணுறுங் கமையங் (௩௫)
கனவிடை யோர்புலி கதுமெனப் பாய்தலும்
மனமிக நடுங்கி வாய்விட் டலறி (௩௬)
அம்ம அம்மவென் றழைத்தனன் ரேணுகை
இம்மையி னிடையே யிவனழைத் தமையால் (௩௭)
திருமலி வதனஞ் சேணிடைக் காட்ட
மருமலி தெத்தாத் திரிய மாதவன் (௩௮)
எழுப்பி ராமனைப் பதின்மூன் றுநாள்
அழைக்கா திடையே யழைத்தலிற் றுய்முகம் (௩௯)
மாத்திரந் தோன்றிய வண்மைபா ரென்று
சாத்திர முறையி னெஞ்சிய வினைபெலாம் (௪௰)
வழுவற வாற்றினன் சமதக் கினியும்
பழுதறு பிரமன் பதியடைந் திருந்தான் (௪௧)
சில்லார் கருங்குழற் சித்திர ரேணுகை
எல்லா வுருவு மெழிலுறப் பெற்று (௪௨)
மாநிலத் தோர்கள் மதித்து வணங்கத்
தாமொரு தெய்வத மாயின ளப்பாற் (௪௩)
படிபுரந் திடுபல் பார்த்திபர் குலத்தை
முடிபெடுத் திடுதற் கிராமன் முயன்று (௪௪)
தன்னருந் தாயைத் தனிமனத் தெண்ணை
முன்னவள் தோன்றி முதல்வனுஞ் சிவனைப் (௪௫)
பணிந்தருள் பெற்றுற் பாலக நீயுந்
துணிந்தவுள் ளெண்ணஞ் சோர்வற முடிப்பாய் (௪௬)

என்றவ ளுரைப்ப விளவலு மெழுந்து
பொன்றிகழ் கைலைப் பொலன்கிரி யடுத்துச் (௪௭)
சிவனடி பராவத் தெரிசன மருளித்
தவமிகு ஷ்ம்ங்கரன் சடாக்கர முரைத்து (௪௮)
விதியுறச் செபித்தால் விக்கினந் தீர்க்கும்
மதகரி முகத்தோன் வந்தருள் புரிவான் (௪௯)
ஒன்றிய மனக்கருத் தொருங்கே முடியும்
என்றவ ருரைப்ப விடைகொண் டேகி (௫0)
இணையி லாமயூ ரேசத் தெய்திக்
கணேசனை வேண்டிக் கடுந்தவத் திருப்ப (௫௧)
மனங்கசிந் தெம்பிரான் மருப்பொடு பரசும்
வனங்கிளர் கமலம் மோதக மாமிவை (௫௨)
நான்கு மேந்தியநால்கரந் துலங்கத்
தேன்றொடை பற்றிய துதிக்கையுந் திகழத் (௫௩)
தண்மலர் தூவிச் சயசய வென்று
பண்ணவ ரெல்லாம் பலவிசை பாடக் (௫௪)
காட்சிதந் தருளினன் கண்டெழுந் திராமன்
மோட்சவீ டிங்கு முடுகிய தென்னப் (௫௫)
பாடின னடினன் பரவச முற்றான்
நாடிய கருத்தை நாதனு முணர்ந்து (௫௬)
மழுவா யுதமும் மன்னரை வெல்லத்
தளரா வலியும் மடியா வயதும் (௫௭)
பேறா யுதவிப் பிழைத்திடு மடியரைச்
சீறா தடிமை செய்திடு நின்பேர் (௫௮)
பரசு ராம னெனப்படு மென்று
திருவுருக் கரப்பத் திசையதை நோக்கி (௫௯)
மணிமுடி சாய்த்து வணக்கஞ் செய்தபின்
துணிவுட னேகித் தோன்றலாங் கார்த்த (௬0)
வீரியன் றனையும் வேந்தர்கள் பலரையும்
பேரற் முடித்துப் பிரித்தவர் நாடெலாம் (௬௧)
அந்தணர்க் குதவி யரிய மாதவம்
பிந்தவும் பரசு ராமன் றொடங்கி (௬௨)

இன்னமும் புவியி லிருக்கின் றானெனப்
பொன்னலர்த் தவிசோன் புகன்றனன் வியாதன் (௬௩)
தேர்ந்திட வென்று பிருகுவுஞ் சோம
காந்தற் கன்று கழறின னன்றே (௬௪)

௲௧௰௧

## இராவணன் பூசித்தல்.

மற்று மோர்கதை வழுத்துவல் கேண்மோ
பொற்புய ரிலங்கா புரியைமுன் னாண்ட (௧)
வேந்த னிராவணன் வெள்ளிமால் வரையைச்
சார்ந்தொரு சாரலிற் றவம்பல நடாத்தக் (௨)
கண்ணுத லாங்கே காட்சிதந் தருளி
எண்ணிய வரங்கள் யாதென வினவலும் (௩)
வளமிகு கற்பக வானா டழியினும்
அளியே னிலங்கை யழியா வண்ணம் (௪)
வரங்கொடுத் தருளென மாதுமை பாகன்
ஒருமணி லிங்கங் கையினி லுதவி (௫)
நின்பதிக் கிதனை நேரே கொடுபோய்
அன்பொடு வைத்துப் பூசனை யாற்றுதி (௬)
வாகனத் திவரேல் வழியிடை வைத்தால்
ஏகமுற் றாங்கே யிருந்திடு மெழும்பா (௭)
என்றுரைத் தகல விராவண னேந்தி
நன்றெனத் தன்னூர் நாடிமற் றேக (௮)
இந்திரன் முதலிய விமையவ ரோடிச்
சுந்தரக் கணேச னிணையடி தொழுது (௯)
பத்துத் தலையான் பரனிடம் வாங்கிய
தத்துவ லிங்க மிலங்கைமூ தூரிற் (௰)
போயுறு மாயிற் பொன்றிடா னவனும்
மாயிரு விசும்பை வந்துகைக் கொள்வான் (௰௧)
அங்குறா வண்ணந் தடுத்தரு ளாயெனப்
புங்கவர்க் கிரங்கிப் புழைநெடுங் கரத்தோன் (௰௨)

வருணனை யழைத்து ராவணன் வயிற்றிற்
பெருகென விடுத்துப் பிராமணச் சிறுவன் (யஙு)
போலெதிர் போதலும் பொங்குநீ ருளைவால்
மேலுறச் சூழ்வரு விளைவையோ ராமல் (யச)
வருமிளங் காளாய் வாதைசெய் நீரைப்
பரிசனஞ் செய்து வருமள வாக (யரு)
இத்தகு லிங்கந் தனைக்கரத் தேந்தி
வைத்துக் கொள்ளென வழங்கின னெம்பிரான் (யசா)
மெலிதரு மாக்கையேன் றாங்குதற் கேற்ற
வலியில னாயினும் வலிதினிற் றந்தாய் (யஎ)
மும்முறை கூவுவன் முடிகா யாயின்
அம்மகை விடுவே னறிந்துகொள் வாயெனச் (யஅ)
சொல்லிமற் றவன்போய் நீர்தொடா முன்னம்
வல்லையின் மும்முறை வருகென வழைத்துச் (யகூ)
செங்கையி லேந்திய சிவலிங் கத்தை
அங்ஙன மிருத்தத் தரையகத் தழுந்தி (உய)
வளர்ந்தது ராவணன் வல்லையி னோடி
இளந்தா யிங்கென் னிழைத்தனை யென்று (உக)
கரங்கொண் டெடுப்பக் கவினுறு லிங்கம்
உரங்கொண் டவ்விடத் துற்றவா றிருப்பப் (உஉ)
பக்கமண் கிழித்துப் பத்திரு கையாற்
சிக்கெனப் பற்றித் திறமெலாஞ் செலுத்தி (உஙு)
இழுத்தன னெழுந்திலைப் பசுவின் செவிபோற்
குழைந்ததக் காரணங் கொண்டுகோ கன்னம் (உச)
என்னவத் தலத்துச் கெய்திய தோர்பெயர்
மன்னிய லிங்கம் வலித்திழுத் தெழாமையின் (உரு)
மாபல மென்று னிராவண னதுமுதல்
மாபல லிங்க மெனப்பெயர் வழங்கும் (உசா)
அந்தண சிறுவன் போலாங் குற்ற
தந்தி மாமுகன் றலைமிசைக் குட்டலும் (உஎ)
மேவிய வுருவம் விரைவினில் மாறி
யாவரு நடுங்க யானை யானனப் (உஅ)

பேருரு வெடுத்துப் பிடித்திரா வணனைப்
பாரொடு விசும்பிற் பன்முறை தாடக் (௨௬)
கொண்டபல் லெலும்பெலாங் குலைதர மறுகி
அண்டர்தம் பிரானே யபயமிங் கடியேன் (௩௰)
புரிந்தபொல் லாப்பிழை பொறுத்தரு ளாயேல்
வருந்துயிர் போமென வாய்விட் டலறக் (௩௧)
கர்த்தனு மிரங்கிக் காவல நீயென்
மத்தகந் தன்னிற் றூக்கிய வாறுன் (௩௨)
சிரமிசை புடையெனச் செப்பிய வுடனே
இருபது கரங்கொண் டிராவணன் புடைத்தான் (௩௩)
இம்முறை யாரும் மத்தகத் திருகையான்
நம்மெதிர் புடைத்துச் செல்லுவா ராயின் (௩௪)
ஆங்கவர் விரும்பிய வரமெலா மளித்துத்
தீங்கிலா தினிய வாழ்வுறச் செய்வோம் (௩௫)
என்றவன் றனக்கு மிசைவரம் வழங்கிச்
சென்றன னப்பாற் றென்னிலங் காபுரம் (௩௬)
எய்தி யிராவண னிதமொடு வாழ்ந்தான்
வையக மெங்கும் புகழ்வளர்ந் திடவே (௩௭)

௩௰௬௪அ

# அகத்தியர் பூசித்தல்.

தண்மதி வளர்சடைக் கண்ணுத றன்பால்
எண்ணறு வரங்கொள் சூரற் கிடைந்து (௧)
திரிந்திடு மிந்திரன் றேவி தன்னொடு
கரந்தகன் றெழிற்சீ காழியில் வாழ்நாள் (௨)
சிந்தைகொண் டாற்றுஞ் சிவபூ சைக்குப்
பைந்தளிர் நறுமலர் பற்பல வேண்டி (௩)
நந்தன வனமொன் றத்தலத் தமைத்தான்
அந்தவெஞ் சூர னாணைக் கடங்கி (௪)
வான்மழை சுருங்க மலர்வனங் காய்ந்து
தேன்மல ரிலாமற் றேவர்கோன் வருந்தினன் (௫)

பூவனந் தழைக்கப் புதுப்புன லொன்று
மேவுமென் றோர்மொழி விசும்பிருந் தெழும்பித் (௬)
தேற்றிட வுள்ளந் தேறின னப்பால்
போற்றரு நாரதன் வந்திவை புகல்வான் (௭)
கைலை மால்வரைக் கண்ணுத லெம்பிரான்
கைலையி லிருந்த காவிரி யாற்றைத் (௮)
தண்டலைப் பொதியத் தமிழ்முனிக் களித்தான்
குண்டிகைக் குள்ளே கொடுவந் தவனுஞ் (௯)
சைய மால்வரை தனிலிருக் கின்றான்
செய்யவப் புனலித் திசையுறு மாயின் (௰)
வாடிய நந்தன வனஞ்செழிப் படையுந்
தேடியிங் கிதனைச் செய்திட வல்லான் (௰௧)
கற்பகக் கடவு ளொருவனே யாகும்
மற்றவன் றன்னை வழிபடென் றகன்றான் (௰௨)
அம்முறை யவனு மன்பொடு வழிபட
மும்மதப் பெருமான் முன்னெழுந் தருளி (௰௩)
அஞ்சலென் றுரைத்துக் குறுமுனி யமர்ந்த
மஞ்சுயர் சைய மால்வரைக் கேகிக் (௰௪)
காவிரி நிறைந்த கமண்டலத் தேறிக்
காகமா யிருப்ப வகத்தியன் கண்டு (௰௫)
கையெறிந் தோட்டக் கரகநீர் கவிழ்த்துச்
செய்ய மாமறைச் சிறுவனென நின்றான் (௰௬)
கொடியுரு வெடுத்துக் குண்டிகை கவிழ்த்துப்
படிவமு மாறிப் பாலனாய் நிற்பவன் (௰௭)
ஆரிவன் றிறத்தை யறிகுவ லென்று
சீரிய குறுமுனி செங்கரந் தாவிப் (௰௮)
பற்றுவான் றொடரப் பயந்தவன் போல
உற்றவப் பாலனு மோட்டம் பிடித்தான் (௰௯)
கிட்டுவான் கைக்குக் கிட்டா னாகி
எட்டுவா னார மிங்குமங் கோடப் (௨௰)
பின்றொடர் முனிவன் பெருங்களைப் படைந்து
நின்று தயங்க நிமலனும் மகிழ்ந்து (௨௰௧)

தன்னுரு மாறித் தந்தி மாமுகப்
பொன்னுரு வெடுத்துப் பொலிந்தெதிர் நிற்ப (௨௨)
அச்சமு மன்பு மடைந்து தன்பெரும்
உச்சியிற் புடைத்தா ேனாங்கிய கரத்தால் (௨௩)
இச்செயல் போது மிருந்தவத் தோய்நீ
நச்சிய வரங்கேள் நல்குமென் றியம்ப (௨௪)
முத்தொழி னடாத்து மூவர்கண் முதலாம்
வித்தக நின்றிரு விளையாட் டியல்பைத் (௨௫)
தமியின னறியத் தக்கவ னல்லேன்
விமலைதன் பாகன் விருப்பொடு வழங்கிய (௨௬)
காவிரி நீரைக் கவிழ்த்தனை யளியேன்
போவது பொதிய வெற்பினுக் காங்கே (௨௭)
அமலனை யாட்டி யருச்சனை புரியத்
தமதரு ளாலிப் புனறர வேண்டும் (௨௮)
என்றடி பராவ விந்திரன் பூம்பொழில்
பொன்றிடா வண்ணம் புனலிதைக் கவிழ்த்தேம் (௨௯)
நினதுகுண் டிகையும் நிரப்புது மென்னாத்
தனதிரு கையாற் றடம்புன லள்ளிக் (௩௰)
கரகத் தடக்கிக் கைக்கொடுத் தனுப்பப்
பொருவற் றுயர்ந்த பொதிய மாமலைக் (௩௧)
கெய்தினன் முனிவ னிந்திரன் காவுஞ்
செய்யதண் புனலாற் செழித்தோங் கியதே (௩௨)

௩௧௮௰

## காசிபர் முதலியோர் அனுட்டித்தல்.

நற்றவ வியாதனை நான்முகன் னோக்கி
மற்று மோர்கதை கேளென வகுப்பான் (௧)
முன்னொரு பிரளயம் முடிந்தபின் மைந்தர்
என்மன முயற்சியா லெழுவரைப் படைத்தேன் (௨)
அன்னவர் தம்மு ளறிவு மேன்மையுந்
துன்னினன் காசிபன் றம்பி மாமுகன் (௩)

ஏகாக் கரத்தை யீந்தவற் கதனே
வாகாய்க் கணிக்கு முறையையும் வகுத்தேன் (௪)
ஏற்றவம் மனுவை யிதயத் தழுத்தி
நோற்றனன் றேவவாண் டாயிரம் நோற்கக் (௫)
கற்பகக் கடவுள் காட்சிதந் தென்பெற
நற்றவ முயன்றாய் நவிலெனக் காசிபன் (௬)
பல்வகை யுயிரும் படைப்பதற் கேற்ற
வல்லப மெனக்கு வழங்கிட வேண்டும் (௭)
அத்துடன் கசிய பந்தனென் றடியேன்
புத்திர னாகத் தேவநீ பொருந்தி (௮)
என்னகத் தமர வேண்டுமென் றிறைஞ்ச
முன்னவ னவ்வரம் முறையொடு நல்கி (௯)
மறைந்தபின் காசிபன் வாழ்மனைக் கேகிச்
சிறந்தபன் னான்கு தேவிய ருடனே (௰)
இனிதுறக் கலந்தாங் கிருந்திடு நாளில்
வனிதையர் வயிற்றில் வானவ ரசுரர் (௰௧)
சராசர மனைத்துந் தகைவற் றுதிப்பப்
பொருவறு மாதவன் புத்திரர்க் கிசைய (௰௨)
ஒன்றுநான் கைந்தெட் டீரா றுதிய
வென்றிகொள் விநாயக மந்திரந் தெரிந்து (௰௩)
கோதறக் கணிக்கு முறையொடு கொடுப்பக்
காதலி னவருங் கைக்கொண் டாயிரம் (௰௪)
ஆண்டுபோ மளவு மருந்தவ முயலக்
காண்டற் கரிய கற்பகக் கடவுளும் (௰௫)
அவ்வவர் முன்ன ரவர்மனத் தெண்ணிய
திவ்விய வுருவொடு தெரிசனங் கொடுப்பக் (௰௬)
கண்டனர் யாவருங் களிமென வெழுந்து
தெண்டஞ் செய்தார் சிலர்வலஞ் சூழ்ந்தனர் (௰௭)
ஆடினர் சிற்சில ரருச்சித் தார்சிலர்
பாடரு மிசைபலர் பாடுவ ராயினர் (௰௮)
பந்த மகல்குணப் பரப்புக ளெவன்பால்
வந்தன வோபல் லண்ட வகுப்பெலாம் (௰௯)

ஈண்டிநின் றெடுங்க லெவன்பா லாமோ
காண்டகு மறைநூ லாகமங் கலையெலாம் (உய)
வரலெவன் பாலோ வள்ளலா மந்தக்
கரிமுகக் கணபதி கழல்தொழு கின்றாம் (உக)
உலகெலாம் பரவி யொன்றாய்க் கலந்தும்
மலவிருள் விகாரம் மருவா திலகிப் (உஉ)
புரிவினைப் பயனைப் புணர்த்திடு மிறையாங்
கரிமுகக் கணபதி கழல்பணி கின்றாம் (உங)
யாவ னருவா லிடரகன் றோடுந்
தேவர் பதியிற் சேர்ப்பவன் யாவன் (உச)
கடவுளர் கருமம் முடிப்பவன் யாரெனப்
படுமக் கணபதி பதம்பணி கின்றாம் (உரு)
மூர்த்தியாய்த் தலமாய்க் கங்கை முதலிய
தீர்த்தமா யறிந்தறி யாத்திறத் தினனுப்த் (உசா)
துலங்குமெங் கணபதி தூமலர்ப் பாதம்
நலங்கொளப் பணிகுது மென்றுமேன் மேலும் (உஎ)
இப்பரி சியாவரு மிருகரங் கூப்பிச்
செப்பிநின் றேத்தத் திருவுளங் கனிந்து (உஅ)
பல்வகை வரமும் பாங்குறக் கொடுத்துச்
சொல்லிய தோத்திரந் தனையெவ ராயினும் (உகூ)
முத்தினம் மும்மைச் சந்தியின் மொழிந்தாற்
சித்திகள் பெறுவ ரெட்டுநாட் செபிக்கின் (நய)
இதமிகு சுகங்க ளெய்துவ ரெண்காற்
சதுர்த்தியை நோற்றுச் சாற்றுவ ராயின் (நக)
அட்டமா சித்திக ளடையப் பெறுவர்
திட்டமா யிரண்டு திங்கணித் தியமும் (நஉ)
ஒருமுறை யோதி னிராச வசிகரம்
இருபத் தொருமுறை யியம்பிடி லெண்வகைச் (நங)
செல்வமுஞ் சேரு மெனவுரைத் தகன்றான்
புல்லிய வன்பாற் புங்கவர் முதலோர் (நச)
வெவ்வே றாலயம் வியப்பவுண் டாக்கி
அவ்வவர் காட்சித் திருவுரு வமைத்துப் (நரு)

பொருவறு மறைப்படி பூசனை புரிந்து
சுரரெனப் படுவோர் சுமுக ரென்றும் (ஙசு)
முனிவர்க ளேக தந்தர்கந் திருவர்
இனியகிம் புருடர் கபிலரே யென்றுஞ் (ஙஎ)
சாரணர் சித்தர் கசகன்ன ரென்றும்
பூரண மனிதர்லம் போதர ரென்றும் (ஙஅ)
விலங்கின மெல்லாம் விகட ரென்றும்
இலங்கிய பட்சிக ளெண்ணறு மரங்கள் (ஙகூ)
துவக்கறு விக்கின ராச ரென்றும்
நவக்கிர கங்கள் கணாதிப ரென்றும் (சய)
எண்டிசைப் பாலகர் தூமகே தென்றும்
வெண்டிரை நதிகளும் விளங்குதீர்த் தங்களுங் (சக)
கறைதவிர் கணத்தி யட்சரே யென்றுஞ்
சிறுபயிர் கிருமிமுண் டாதிய பலவும் (சஉ)
பண்புறு பால சந்திர ரென்றும்
எண்ணுமற் றுயிர்த்தொகை கசானன ரென்றும் (சங)
பெயர்வகுத் தேத்திப் பெருமகிழ் வுடனே
நயமுறு தந்தம் பதவியுற் றிருந்தார் (சச)
திருப்பாற் கடலிற் றிரட்டிய வமுதுபோல்
விருப்பாற் பெருந்தகை விநாயகற் குரிய (சரு)
சகத்திர நாமப் பரவையிற் றெரிந்து
தொகுத்தவிப் பன்னிரு பெயரையும் முறையே (சசு)
சொல்பவ ருலகிற் சூழ்துய ரகற்றி
எல்லாப் பயன்களு மெளிதினி லடைவர் (சஎ)
தானமுந் தவமுஞ் சாற்றரு வேள்வியும்
ஆனவை கோடி யாற்றலி னடையும் (சஅ)
பலனிலுஞ் சிறந்த பயன்பெறு வார்தினம்
புலரியி னினைந்திப் பெயர்களைப் புகன்றால் (சகூ)
என்றலர்த் தவிசோ னிசைத்திட வியாதன்
துன்றிய சகத்திரத் தொகைபெறு நாமம் (ருய)
ஏதவை பயக்கும் பயனெவை யவையெலாம்
ஓதென மலரோ னுரைக்கவுற் றனனே (ருக)

# சகத்திர நாமம்.

கணேசன் கணக்கிரீ டன்கண நாதன்
கணாதிப னேக மிதிட்டிர ணாதிய (௧)
ஆயிர நாமமு மணாகி பரத்துவம்
ஆபநா லாறு பெயர்களு மைங்கரற் (௨)
சூரியன வாங்கதி ருதயத் திவற்றைச்
சரிமுறை யோதுந் தவத்தினர்க் கிருமையும் (௩)
எல்லாப் பயனு மினிதுவந் தடையும்
நல்லா ரோக்கியம் நவையறு பாக்கியம் (௪)
வயமொடு தைரியம் வளம்பெறு சௌரியந்
தயவுதாட் சணியந் தருமா சாரம் (௫)
மானவே ளரசர் மனைவியர் வசியஞ்
ஞானமு மெண்வகைச் சித்தியு நாடும் (௬)
வருபகை பிணிநோய் வஞ்சனை யகலும்
அரிவையர் சூத்திர ரறிவிலா ரோதிற் (௭)
சுகமெலாம் பெறுவர் தூயரா யுடனே
இகபர வாழ்வி லின்புற விரும்புநர் (௮)
ஓதுதல் பிறரைக் கொண்டோ துவித்தல்
காதுறக் கேட்டல் கசிந்துகேட் பித்தல் (௯)
எழுதுத லெழுது வித்தலா மிவற்றிற்
பழுதற வொன்றைச் செய்திட வேண்டும் (௰)
நித்தமு மும்முறை நிகழ்த்த வியலார்
பத்தியி லொருகாற் பகர்ந்திட வேண்டும் (௰௧)
அதுவு மியலா ராறிரு மாதச்
சதுர்த்திக டோறுஞ் சாற்றிட வேண்டுங் (௰௨)
கற்பதற் கியலார் நிதிகொடுத் தாயினும்
மற்றவர்க் கொண்டு வழுத்திட வேண்டும் (௰௩)
அவ்வகை செய்ய நிதியில ராகின்
திவ்விய மாகத் தெரிந்த மூலவேழ் (௰௪)
மந்திர மாயினும் வழுத்திட வேண்டும்
அந்த மூலவே ழானவை கணபதி (௰௫)

ஏரம் பன்மோ கன்றர ணிதரன்
பாருள் ளருந்தவர் பராவு கலாதரன் (யசா)

கசிய பந்தன் மகாகண பதியே
இசைபெறு கிப்பி ரப்பிர சாதனன் (யஎ)

அறையுமா சார பூரகன் வரதன்
நிறையுறு சயனே யமுத மந்திரன் (யஅ)

எண்டகு மிலக்க கணபதி யெழிலார்
மண்டிய புகழ்வரச் சித்தன் பீச (யகூ)

விநாயகன் மங்கல விநாயக னுடுண்டி
விநாயகன் பிரிய கணபதி சித்தி (உய)

விநாயக னெண்டிசை விளங்குசிந் தாமணி
விநாயகன் மகோற்கட னெனவே விளங்கும் (உக)

இவைகளை யாயினுந் தேவர் முதலியோர்
தவமுற வெவ்வே றெடுத்துச் சாற்றிய (உஉ)

பன்னிரு மகாமந் திரங்களை யாயினும்
அன்பொடு கூறித் துதித்திட வேண்டுந் (உங)

தொகுத்தவோர் வரிசை மந்திரஞ் சொன்னாற்
சகத்திர நாமஞ் சாற்றிய பலனும் (உச)

இருவகைப் பெயர்களை நித்தமு மியம்பின்
வருபல னெண்மடங் கதிகமும் வளரும் (உரு)

நோன்பொடு விநாயக சதுர்த்தியிற் றொடங்கி
நான்கு மாதம் நவின்றிடு வார்க்கு (உசா)

முன்னைய மூவேழ் பவத்தினு முடித்த
துன்னரு பாவத் தொடர்பெலா மறுத்துச் (உஎ)

சிந்தையி னினைவெலாஞ் சீருறக் கணேசன்
தந்துபின் பதநிலை சாரவு மருள்வான் (உஅ)

என்றயன் வியாதற் கியம்பின னுகை
வென்றிகொள் சோம காந்தற் கிசைத்துப் (உகூ)

பார்க்கவப் பிரதம பாகம் முடித்தான்
தீர்க்கமெய்த் தவப்பிரு கெனுந்தே சிகனே (ஙய)

உபாசனகாண்டம் முற்றும். உ௲௯௱௬௰க

உ

கணபதிதுணை

## விநாயகமான்மியம் இரண்டாவது

# இலீலாகாண்டம்.

முதலாவது

## வக்கிரதுண்ட விநாயகர் திருவவதாரம்.

வெண்பிறைக் கோட்டு வேழ மாமுக
அண்ணலை யிறைஞ்சி வியாதனுக் கன்று (க)

செஞ்சொ லாரணன் செப்பிய முறைபோல்
எஞ்சிய கதைகளும் பிருகெடுத் திசைப்பான் (உ)

ஆனபல் லுலகு சராசர மனைத்துந்
தானே யாகியுந் தனக்கோ ருருவிலா (௩)

விநாயகக் கடவு ளுகந்தொ று மடியார்
மனோதய வன்பின் வழியுருத் தாங்கிக் (௪)

கோரிய வெல்லாங் கொடுத்திரட் சித்த
சீரிய திருவிளை யாடல்க ளனந்தம் (௫)

அன்னவை தம்மி லாறிரண் டெடுத்துப்
பன்னிரு கரற்குப் பகர்ந்தனர் சிவனார் (௬)

இங்கவை யியம்பின் வக்கிர துண்டர்
பொங்கணி கெழுசிந் தாமணி கசானனர் (௭)

விக்கின ராசர் விபன்மயூ ரேசர்
தக்கநற் பால சந்திரர் தூம (௮)

கேது கணேசர் கணபதி மகோற்கடர்
ஓதரு துண்டி விநாயகர் வல்லபை (௯)
நாதரு மாகு மம்முறை நவில்வாம்
வேத ஞதிய மூவரு மேனாள் (௰)
உசித பூசனை யுஞற்றிய காலையின்
விசுவ ரூபம் விளங்குற வெடுத்துப் (௰௧)
பல்வகை யண்டப் பகுப்பெலா மகட்டிற்
புல்லுறக் காட்டிய புதுமை யுரைத்தாம் (௰௨)
பண்டுனக் கவ்விளை யாடலின் வக்கிர
துண்டரென் ஞமஞ் சூழ்ந்தனெம் பிராற்கே (௰௩)

இரண்டாவது

## சிந்தாமணி விநாயகர் திருவவதாரம்.

இம்பரி லொருநா ளிந்திர ஞலாவி
வெம்பசி தாகம் மேலிடு மளவிற் (௧)
காசகன் மாதவக் கபிலமா முனிவாழ்
ஆசிர் மத்தை யடைதலு மாங்கவன் (௨)
ஆதரித் தன்பொடு நல்விருந் தளிப்பக்
காதலி னுண்டு களைமா றியபின் (௩)
தவமுனி மகிழத் தக்கவா றெண்ணி
எவையெவை வேண்டினுந் தருமியல் புடைத்தாய்த் (௪)
தனக்குமுன் மாயோன் றயவினிற் கொடுத்த
வனப்புயர் சிந்தா மணியினை வழங்கிப் (௫)
பொன்னக ரடைந்தான் முனியுமம் மணியைத்
தன்னெடுங் கரத்திற் றரித்துக் கொண்டனன் (௬)
இங்கிவை நிகழ்ந்தபின் றமிழ்வள நாட்டின்
மங்கல வபிசித் தென்னுமோர் மன்னன் (௭)
குணவதி யாமென் றியற்பெயர்க் குரிய
துணைவிதன் ஞேடு சுகமுற வாழ்நாள் (௮)
அருமகப் பேறற் றடவியிற் புகுந்து
வரமிகு வைசம் பாயனர்ப் பணிந்து (௯)

வாங்கிய சிவபஞ் சாக்கர மியம்பி
ஓங்கிய மாதவ முஞற்றி மீண்டனன் (௰)
போற்றருங் கமலப் புத்தே ளமிசஞ்
சாற்றருங் குணவதி தன்வயி னமைந்து (௰௧)
பத்தாந் திங்களிற் பூரண பாலனை
உத்தம வேளையிற் புவிமிசை யுதிப்பக் (௰௨)
குணமழ கியல்பு கோணிலை தெரிந்து
கணனென நாம கரணமுஞ் செய்து (௰௩)
காதலின் வளர்த்தார் காளையம் பருவம்
ஆதலுங் கணன்போ யருந்தவ மாற்றிப் (௰௪)
பரம சிவன்பாற் பலவரம் பெற்றுத்
திரிலோ கங்களுந் திறைகொடுத் திறைஞ்ச (௰௫)
நிகரில னாகித் திருமுடி புனைந்து
மகிழ்வொடு சிறந்து வாழுமோர் நாளிற் (௰௬)
பரிசனஞ் சூழப் படர்ந்துகான் புக்கி
அரியமா வேட்டைக ளாடிமீள் வழியின் (௰௭)
மாதவக் கபிலர் வாழ்வனம் புகுத
ஆதரித் தவர்சிந் தாமணி யருளால் (௰௮)
அறுசுவைக் கறியோ டன்னம் வழங்கச்
செறிபசி தணிந்து சேனையுந் தானுஞ் (௰௯)
சிந்தா மணியின் றிறமையை வியந்தனர்
கொந்தார் புயத்துக் கொற்றவர் கோமான் (௨௰)
மாதவக் கபிலர் மதிகமும் நோக்கிப்
பூதலத் திதுபோற் பொருவறு மணியான் (௨௧)
எந்த விடத்திலுங் கண்டில னிதனைத்
தந்திட வேண்டுந் தமியேற் கென்ன (௨௨)
மறுத்தனர் கபிலர் மன்னனுஞ் சீறிப்
பறித்ததை வலிந்துகைப் பற்றி யேகினன் (௨௩)
பொருந்திய சிவ ரத்தின மிழந்து
வருந்துறு நாகம் போன்முனி வருந்திப் (௨௪)
பாதக மிழைத்த பாவியாங் கணற்குத்
தீதுற வகோர தவத்தினைச் செய்து (௨௫)

மாயவன் மாயா சத்திமுன் வந்து
தாயென வருளிய விநாயக மந்திரங் (௨௬)
கருத்தொடு கணிக்கக் கணேசனு மிரங்கித்
திருத்தகு மோம குண்டத் தெழும்பி (௨௭)
அஞ்சலை யினியென் றபயங் கொடுத்து
நெஞ்சுறு துயரை நீக்கியாங் கிருப்ப (௨௮)
மணிகவர்ந் தேகிய மன்னவன் கனவில்
இணையகல் முனியா ரீடர்வரக் கண்டு (௨௯)
முந்தியான் சென்று முனிவனை முடித்து
வந்துறு திடரை மடக்குவ லென்னாச் (௩௰)
சதுர்வகைப் படையுஞ் சமுத்திரம் போலக்
கதுமெனத் திரட்டிக் கபிலர்மேற் சென்றான் (௩௧)
அருந்தவ முனிவரன் பெரும்பய மடைந்துந்
திருந்திய பூசனை திறம்பா முறைபிற் (௩௨)
செய்துகொண் டிருப்பச் சித்தி தேவியார்
ஐயன் விடைபெற் றமர்க்களத் தேகி (௩௩)
இமைப்போ தறமு னெண்ணறு வீரர்
தமைப்படைத் தெதிர்போய்த் தாக்கென விடுப்பக் (௩௪)
கைகலந் தாடினர் காவலன் படையெலாம்
வெய்யவன் முன்படு பனியென வீழ்ந்தார் (௩௫)
கபிலரைச் சாடக் கணன்விரைந் தோடித்
தபவடி வாயங் கினிதெழுந் தருளிய (௩௬)
ஐயனை நோக்கிச் சிலைகணை தெறித்தான்
பொய்தவை நீறாய்ப் பொடியிற் கருகின (௩௭)
மீண்டவ னெடுத்து வெங்கணை தொடாமுன்
ஆண்டகை யேந்திய மழுவா யுதம்போய்த் (௩௮)
தலைதனைக் கொய்து நிலமிசை வீழ்த்திக்
குலவிய திருப்பாற் கடலிடை குளித்து (௩௯)
வல்லையின் மீண்டு வந்துமுன் போலப்
புல்லிய தெம்பிரான் பொன்னலர்க் கரத்தில் (௪௰)
இங்கிவன் மடிதலு மெஞ்சிய படையெலாம்
அங்ககன் றோடின வபிசித் தரசன் (௪௧)

வந்தெம் பிரான்றன் மலரடி வணங்கிச்
சிந்தா மணியைச் செங்கையிற் கொடுப்பக் (சு௨)
கணேசனு மேற்றுக் கபிலர்கைக் கொடுத்துக்
கணனிரு புதல்வ ரமர்க்களத் திடைந்து (சு௩)
சிறைபுகு சுலபன் சூலபா ணியைச்
சிறைவிடுத் தருளித் திருவுருக் கரந்தான் (சுசு)
இவ்வவ தாரந் தனிலெம் பிராற்குத்
திவ்விய சிந்தா மணிவி நாயகர் (சு௫)
காமரு கபில விநாயகர் சுமுகர்
ஆமென மூப்பெய ரடைந்தன வன்றே (சு௬)

மூன்றுவது ௫௧

# கசானன விநாயகர் திருவவ்தாரம்.

பங்கயத் தவிசோன் பாலுதித் தொருவன்
அங்கவ னருளிய பலவரம் பெற்றுச் (௧)
செந்நிற வுருவாற் சிந்துர னென்ன
மன்னுற ராமம் வகுத்தெவர் தமையுந் (௨)
தழுவிடி லுடனே சாம்பராய்ப் பொன்றி
அழிவுறச் செய்யு மியல்புடை யோனுய்த் (௩)
தேவரு முனிவருந் திசைகாப் பாளரும்
யாவரு நடுங்கிக் கரந்துநாட் கழிக்கச் (௪)
சகமொரு மூன்றையுந் தனதுதாட் படுத்தி
நிகரில னாகத் தனியர சாண்டான் (௫)
அஞ்சிய வான்வ ரனைவருந் திரண்டு
குஞ்சர முகன்பாற் குறையெலாங் கூறக் (௬)
கருணைகூர்ந் தெம்பிரான் கைலையி லுமையாள்
திருவயிற் றுதித்துச் சிந்துரன் றன்னை (௭)
முடிவுசெய் தருள்வே மஞ்சலீ ரென்று
விடைகொடுத் தனுப்பி விமலையின் வயிற்றிற் (௮)
கருவெனப் பொருந்திக் கவினுற வளர்ந்தான்
விரவிய சூலின் வெப்பந் தணிய (௯)

அம்மனைச் சிவனு ரழைத்துக் கொடுபோய்
இம்பரி னொருபாற் பலவள மிசைந்து (ய)
பச்சிளந் தென்றல் பயில்வரக் குளிர்ந்த
உச்சிதப் பரியிலி யென்னுமோர் காவிற் (யக)
பணிபுரி பாங்கியர் பரிசனஞ் சூழ
மணிபொதிந் திழைத்த மண்டபத் திருத்தித் (யஉ)
தானுமங் கொருபால் யோகத் தமர்ந்தனர்
மாமெனடுங் கண்ணி மலர்த்தட மாடியும் (யங)
பாங்கிய ரொடுபோய்ப் பனிமலர் பறித்துந்
தேங்கமழ் தென்றலி னுலாவியுந் திரியக் (யச)
கயமுகா சுரனென் றொருபெருங் களிறு
பயமுறு தடுத்துப் பண்ணவர் சூழ்ந்த (யரு)
மண்டபந் தன்னை மருப்பினுற் றாக்கி
வண்டுக ளாக்கி மண்மிசை வீழ்த்தலுந் (யசா)
தேவிகண் டோடிச் சிவனார்க் குரைப்பக்
கோவமுற் றவருங் குறித்தொரு சூலம் (யஎ)
விட்டெறிந் தாரது விரைந்துபோ யுடலிற்
பட்டலுங் களிறு பாடுசாய்ந் தலறிச் (யஅ)
சிவாய நமவெனச் செப்பிமண் வீழலும்
உவாமதி முடித்தோ னன்பனென் றுணர்ந்து (யசு)
பிரிந்துபோ முயிர்க்குப் பெரும்பத முதவித்
திருந்திய தோலை யாடையா யணிந்து (உய)
தலைதனைக் கொய்து தன்மருங் கொருபாற்
பொலிவுற வைத்தனர் பூர்வகா லத்தில் (உக)
சுயேச்சையிற் சிவனார் தொண்டுகை மறவா
மயேச்சுர னென்றோர் மன்னவ னிருந்தான் (உஉ)
ஒருபக லவன்பா லிமையவர் குரவன்
வருதலு மெழுந்து மலரடி பணிந்து (உங)
பராவிய முறையிற் பெருமகிழ் வெய்தி
அரசகே ளிங்கென் னடிமிசைப் பொருந்த (உச)
வணங்கியு நின்றலை மண்ணொடு விண்ணும்
வணங்கமே லாகி வயங்குமென் றோர்வரம் (உரு)

ஆங்கவற் கருளின னதன்பிற கொருநாட்
பாங்கொடு வீதியிற் பவனி போதலும் (௨௬)
நாரதன் குறுகச் சனநெருக் கத்தாற்
சீரிய கோமான் கண்டிலன் சேற (௨௭)
மதகரி போல வணங்கா தேகலின்
மதகரி யாக மறுபிறப் பெடுத்துச் (௨௮)
சிவன்கணை பட்டுப் பதவி சேர்கென
அவனுரைத் திட்டா னம்முறை யானும் (௨௯)
அப்பவ முடிவி லானையின் வயிற்றிற்
செப்பிய கயமுகா சுரனெனப் பிறந்து (௩௰)
பண்டைய ஞானப் பற்றக லாமல்
எண்டகு சிவபிரான் கணைக்கிலக் காக (௩௧)
அம்மண் டபத்தை யடியொடு பெயர்த்தான்
இம்முறை நிகழ்ந்தபின் னிமையவர் கூடி (௩௨)
முன்போல் மண்டபம் முறையொடு வகுத்துப்
பொன்போ லம்மணப் பொலிவுற வைத்தார் (௩௩)
விநாயகன் சூழ்ச்சியால் விண்ணிருந் தோர்மொழி
நினதுயிர் பருகக் குழவியா யொருவன் (௩௪)
அம்மைதன் கருவில் வளர்கின் றானெனச்
செம்மையாய்ச் சிந்துரன் செவிபுக வன்னோன் (௩௫)
சிந்தா குலமெடு சென்றுபோய்த் தேடி
எந்தா யானவள் கண்வள ரேல்வையின் (௩௬)
மாயையி னுருவம் மறைந்தொரு வகையாய்ச்
சேய்தலை யறுத்துத் திருடிக் கொடுபோய் (௩௭)
விந்த மால்வரைப் பாங்கரின் மேவி
அந்தமி னருமைதை யாற்றரு கெறிந்தான் (௩௮)
போயது வீழ்ந்த புவியிடந் தாழ்ந்து
மேயது கணேச குண்டமென் பெயரும் (௩௯)
அறுதலைக் குருதி யாறெனப் பாய்தலின்
செறிதிரைச் சோண நதியெனச் செப்புவர் (௪௰)
மருங்குள சிலைகள் கணேசகுண் டத்தில்
ஒருங்குற வீழ்தலி னுருவெலாம் மாறி (௪௧)

எம்பிரா னுருவ மெய்திய முறையால்
உம்பரா தியரு முவகையி னெடுத்து (௪௨)
வழிபட் டிறைஞ்சுவர் மற்றிங் கெய்திய
விழைவறி யார்போல் விமலனுந் தேவியுஞ் (௪௩)
சிலநாட் சென்றபின் றேவ குழாத்துடன்
இலகொளிக் கைலைக் கெழுந்துபோ யிருந்தார் (௪௪)
ஐயிரண் டாமதி யடைதலு மெமையாள்
மொய்ம்மலர்க் குழலி முதிர்சூ லுளைந்து (௪௫)
பிறைவள ராவணிச் சதுர்த்தியிற் பெற்றாள்
குறைவுறு கவந்த மாயொரு குழவியைத் (௪௬)
தேவரு முனிவருந் திகைத்தொருங் குறீஇ
யாவரு மிறும்பூ* தடைந்துளம் மயங்கச் (௪௭)
சிரமிலா துதித்த சிறுவனுந் தனது
வரலா றுரைத்துக் கயமுகா சுரன்றன் (௪௮)
தலைதனை யழைத்துத் தன்னுடம் பதனில்
இலகுறப் பொருத்தினன் யாவரு மிறைஞ்சிக் (௪௯)
கைதொழு தேத்தினர் கசானன னென்றார்
மெய்பெறு மழகால் விகடரு மென்றார் (௫௰)
மகரயாழ் முனியால் மற்றிவர் பிறப்பை
இகலிய சிந்துரன் கேட்டாங் கெய்தி (௫௧)
வெள்வளை முழக்கிப் போர்க்கறை கூவப்
பிள்ளையாய் வளரும் பிரவண சொரூபன் (௫௨)
விண்ணள வளாவிய விசுவ ரூபங்
கண்ணெதி ரெடுத்துக் கரத்தினா லவனைப் (௫௩)
பற்றிக் குழைத்துச் சாந்துபோற் பண்ணி
நெற்றியிற் றிலதமாய் பேர்பெற வணிந்து (௫௪)
பண்ணவ ரெலாரையும் பாது காத்தனன்
நண்ணிய கசானன நாமமிவ் வாறே (௫௫)

௱௰௪

*இறும்பூது = அதிசயம்.

நான்காவது

# விக்கின விநாயகர் திருவவதாரம்.

பண்டொரு காலம் பனிப்படாம் போர்த்துக்
கொண்டல்கண் படுக்கு மிமயமால் வரையிற் (க)
சவுபரி யென்றோர் தவமுனி யிருந்தான்
அவனொரு நாட்புன லாடற் கேக (உ)
மனோமயை யென்னும் மனையவ ளில்லிற்
றனியின ளாகி வைகிய தருணங் (௩)
கிரவுஞ் சனனு மியற்பெயர்க் குரிய
அரசகந் தருவன் விசும்பிடை யடர்வான் (௪)
கண்டிவ ளழகைக் கசிந்துளங் காமங்
கொண்டுமண் மீது குதித்தெதி ரோடித் (ரு)
திருவனை யாடன் செங்கையைப் பற்றி
மருவுதற் கிழுக்க மற்றவள் பதறி (சா)
ஆகா பாவி யடாதிது விடடா
கூகூ வென்னக் கூக்குரல் கேட்டு (எ)
மாதவ னோடி வல்லையி னடைந்து
கோதையின் கற்பைக் குலைத்திட முயன்ற (அ)
பாதகன் றன்னைப் பார்த்தட பாவி
ஏதிலா திவள்கை தொட்டிழுத் தனைநீ (கூ)
நீதியை மறந்து பழிசெய நினைந்தாய்
ஆத லாலே யண்பறித் தொழிக்கும் (ய)
மூடிக மாகப் போவெனச் சபித்தான்
வாடிமற் றவனும் மனநடுக் குற்றுப் (யக)
பயிலருந் தவத்தோய் பத்தினி யழகால்
மயலுற நெறியின் வழுவினே னல்லால் (யஉ)
மற்றொரு பாதகம் மாநிலத் தறியேன்
குற்றமா மிந்தக் குறைபொறுத் தருளாய் (ய௩)
என்றடி பராவச் சவுபரி யிரங்கி
நன்றுநம் வாக்கோ நழுவுறு தாயினுந் (ய௪)

தயாபர மூர்த்தியாய்ச் சராசரந் தோறும்
வியாபித் திலங்கும் விநாயகப் பெருமான் (௰௫)
வருசில நாளிற் பராசுவ முனிவன்
திருவளர் கிரகந் தனிலவ தரிப்பான் (௰௬)
அன்னவன் றனக்கோர் வாகன மாகி
மன்னுவை மகிழ்வுற் றெனவகுத் திட்டான் (௰௭)
அவ்வுரைப் படியோர் மூடிக மாகிச்
செவ்விய வுலக மெங்குந் திரிந்தனன் (௰௮)
இங்கிவன் சரித மிவ்வா றுகப்
பங்கமின் மகர யாழிசை வல்லோன் (௰௯)
இந்திர னிடம்போ யிமயமால் வரைக்கும்
விந்தமா மலைக்கும் மத்தியி லேம (௨௰)
வதியெனப் படுபோர் வளநக ருண்டு
துதிமிகு மபினந் தனனெனுந் தோன்றல் (௨௧)
ஆள்பவ னும்மை யழைக்கா தொருபெரும்
வேள்வியை யாற்றத் தொடங்கினன் மேலது (௨௨)
நடைபெறு மாயின் னுதவுன் பதவி
அடையுமற் றவற்கே யசாத்திய மில்லை (௨௩)
அம்மகந் தன்னை யழித்தற் குபாயம்
எம்முறை யாயினுந் தேடென் றிசைத்தான் (௨௪)
இந்திர னினியென் செய்வதென் றேங்கி
அந்தர காலத் தீயென வடருங் (௨௫)
கால ரூபியைக் கடுகென வழைத்து
மேலுல காட்சியை வேட்டுப் புவிமிசை (௨௬)
தொடங்கிய யாகந் துகள்படத் தாக்கி
அடங்கலு மழித்து வாவென விடுப்ப (௨௭)
நன்றென வவனும் நானிலத் தேகி
வென்றிகொள் சோமா னபினந் தனனை (௨௮)
வதைத்துயிர் பருகி வளர்மகந் தன்னைச்
சிதைத்துமவ் வளவிற் சினமடங் காமல் (௨௯)
இடந்தொறு மிடந்தொறு மேகிமா தவரால்
நடந்திடு மகமெலாம் நாசப் படுத்தினன் (௩௰)

விக்கின னிவனால் வேள்விக ணிங்கிச்
சொர்க்கத் தவர்க்குத் துயர்பல சூழ்ந்தன (௩௧)
அவியுண வின்றிப் பசியுற வருந்தினர்
புவிவளங் குன்றிப் பொலிந்தன மறங்கள் (௩௨)
இந்திரன் முதலிய தேவர்கள் கூடித்
தந்திமா முகனைச் சரணமென் றடைய (௩௩)
அஞ்சா தீரென் றபயங் கொடுத்து
நெஞ்சார் துயரை நீக்கின னெம்பிரான் (௩௪)
இங்கிவர் சரிதமு மிவ்வா றாக
மங்கல மிகுத்த வரேணிய னென்றோர் (௩௫)
மன்னவ னிருந்தா னவன்மனை யாள்பெயர்
பொன்னெனச் சிறந்த புட்பகை யென்பார் (௩௬)
இருவரு நெடுநாட் பலதவ மிழைத்துக்
கரிமுக னருளாற் கருவயி னமையப் (௩௭)
புட்பகை யாங்கோர் புதல்வனைப் பெறலும்
நிட்கள விநாயகக் கடவுளப் புதல்வனை (௩௮)
அருகிருந் தோர்க ளறியா வண்ணம்
ஒருபான் மறைத்துத் தாமொரு குழந்தையாய் (௩௯)
வடிவமைந் திருப்ப வாணுத னோக்கிக்
குடமுறழ் வயிறுங் குஞ்சர முகமுங் (௪௰)
கரமொரு நான்குங் கண்டுளங் கலங்கி
வெருவின ளிஃதென் விகடமென் றழுதாள் (௪௧)
மன்னனும் வந்து மதலையை நோக்கி
இன்னதிங் கிருந்தா லிடர்வரு மென்று (௪௨)
மடுத்தடங் கரையின் மறைத்துக் கொடுபோய்
விடுத்திரென் றுய்ப்பக் கொண்டுபோய் வைத்தார் (௪௩)
செய்கடன் முடிக்கப் புலரியி னெழுந்து
பொய்கைக் கரையிற் புக்கிய பராசுவன் (௪௪)
பச்சை மென்றளிர்ப் படுக்கையி லமர்ந்த
உச்சித பாலனைக் கண்டெடுத் தோடிச் (௪௫)
சீரிய கிரகத் தடைந்துதன் றேவி
வீரிய வற்சலை கையினிற் கொடுப்பப் (௪௬)

பாக்கிய மிங்கு பலித்ததென் றவளுஞ்
சேக்கையி லூறிய திருவமு தூட்டிக் (சஎ)
கருத்தொடு வளர்ப்பக் கலைவளர் மதிபோல்
உருத்திகழ் பெருமான் வளர்ந்தன ணொருநாள் (சஅ)
சவுபரி முனிவன் சாபம் பெற்ற
தவகிர வுஞ்ச னென்னு மூடிகம் (சகூ)
பராசுவன் கிரகப் பாங்கரை யடுத்து
வரைகளை யகழ்த்தி மண்மிசை சாய்த்தும் (ருய)
வேதிகை குண்டம் வெண்சுவர் தருக்கள்
ஆதிய வெல்லா மழித்திடக் கண்டு (ருக)
மாசகல் முனிவன் மனக்கவல் கொள்ளப்
பாசந் தன்னைப் பாலக னெறிந்தான் (ருஉ)
ஆங்கது தொடர வாகுவு மஞ்சி
ஏங்கிய மனத்தோ டிம்பரை நீங்கிப் (ருங)
பாதலஞ் சுவர்க்கம் பலவிடந் தோறும்
ஆதர வின்றி யலைந்தலைந் தோடிக் (ருச)
கரந்திடப் பாசங் கைவிடாப் பிடியாய்
விரைந்துபோய்ப் பற்றி விநாயகக் கடவுள் (ருரு)
முன்புதந் திடலும் முற்பிறப் புணர்த்தி
அன்புட னதன்மே லாரோ கணித்துத் (ருசு)
திசைதொறுஞ் செலுத்தி விளையாட் டயர்ந்தனன்
இசைபெறு மாதவ ரிமையவ ரெலாரும் (ருஎ)
வந்துகண் டையன் மலர்ப்பதம் பணிந்து
சிந்தையின் கவலைகள் யாவையுஞ் செப்பிப் (ருஅ)
பாதக விக்கினன் பகைமுடித் தடியேம்
தீதிலா துய்யச் செய்தியென் றிரப்ப (ருகூ)
அஞ்சலென் றன்னோர்க் கபயங் கொடுத்து
விஞ்சிய வலிசேர் விக்கினன் றன்னைச் (சுய)
சமர்புரிந் தழித்துத் தன்பத முதவி
இமையவர் தம்மை யிதம்பெறச் செய்து (சுக)
மேதகு விக்கின ராசரென் றெவரும்
பூதலத் திறைஞ்ச நாமமும் புனைந்து (சுஉ)

பராசுவ முனிக்கும் பத்தினி யாட்கும்
வரேணிய னோடு மனையவ டனக்கும் (௬௩)
வேண்டிய வரங்கள் விருப்பொடு நல்கிக்
காண்டகு முருவங் கரந்தன னன்றே (௬௪)

ஐந்தாவது ௱௭௮

# மயூரேசவிநாயகர் திருவவதாரம்.

பண்டொரு கற்பந் தனிற்சிவ னருளால்
விண்டுவி னுந்தியில் வேதன் பிறந்து (௧)
மண்விண் சராசர வகுப்பெலாம் முறையே
பண்ணிய பின்னர்ப் பரசிவ னிடத்து (௨)
மெய்மறை யாகம புராண நூ லெல்லாம்
ஐயந் திரிபறக் கற்றவை யனைத்தையும் (௩)
புத்தக மொன்றிற் பொருந்துற வெழுதி
வைத்ததை நிதமும் வழிபட் டிருந்தான் (௪)
இவ்வா றிருப்ப விமையவ ரோடு
தெவ்வரா மசுர ரேனைக ணெருங்கிப் (௫)
பொருதிடைந் தவர்க்குப் புறங்கொடுத் தோடி
வரமிகு சங்கா சுரன்றனை யடுத்துத் (௬)
தேவர்க ணிதமுந் திருமறை கற்றுப்
பாவமற் றொழுகும் பண்பினு லன்றோ (௭)
மன்னிய தவர்பான் மகத்துவ மாதலின்
என்னவா றேனு மம்மறை தனைநீ (௮)
எடுத்தழித் திட்டா லமரரை யெளிதின்
மடித்திடு வோமென மற்றவ னிசைந்து (௯)
தம்பி கமலா சுரன்றனைக் கூவி
உம்பர்க ளாண்மையு மொழுக்கமு மழியச் (௰)
சத்திய லோகச் சதுர்முகப் பிரமன்
புத்தகந் தன்னைப் போய்க்கொடு வாவெனச் (௰௧)
சென்றயன் யோகத் துறங்கவு மெதிரே
ஒன்றெனை விருந்த மறைதனைக் கவர்ந்து (௰௨)

கொண்டுபோய்த் தமையன் கையினிற் கொடுப்ப
வெண்டிரை விரிநீர் வேலையின் மற்றத்துக் (௰௩)
காவல்வைத் திட்டான் கடந்தன சிலநாள்
தேவரு முனிவருஞ் செய்வன மறந்து (௰௪)
விதியில ராகினர் வேள்விகள் குன்றிப்
பதிதொறும் மல்கிப பல்வகைப் பவங்கள் (௰௫)
நற்றவ யோக நித்திரை நீங்கி
உற்றன வெல்லாந் திசைமுக னுணர்ந்து (௰௬)
பரசிவ னிடம்போய்ப் பணிந்து முறையிடக்
கரிமுக னருளாற் கருதிய பெறுவாய் (௰௭)
அஞ்சலை யென்றுங் கவர்விடை யருளக்
குஞ்சர முகத்துக் கோலமெய் யுருவம் (௰௮)
மனதுறப் பொருத்தி மந்திரங் கணிப்பத்
தனிமருப் புடையான் றரிசன மருளி (௰௯)
அறைந்தமா மறையோ டாகம புராணம்
மறைந்தன வென்று வருந்தலை மூன்றும் (௨௰)
விழிகளா யமது முகத்தினில் விளங்கும்
பழுதுறு துலகிற் பரப்புவ லென்று (௨௧)
விடைகொடுத் தருளி வேதியன் போல
வடிவெடுத் தாயிரம் மறையவர் சூழ்வரச் (௨௨)
சதுர்மறை யாகம புராண மனைத்தும்
புதிதா யெழுதிய புத்தக மொன்றைக் (௨௩)
கரமிசை யேந்திக் காசினி தனிலே
வருதலுஞ் சுந்தர வனத்து மாதவர் (௨௪)
அன்புட னெதிர்கொண் டழைத்துப சரிக்க
இன்புட னவர்பா லெம்பிரா னமர்ந்து (௨௫)
தன்பெயர் தனைமல் லாலமென் றுலகிற்
பன்னுவ ரிந்நூல் பழமறை யாகம (௨௬)
புராண மடங்கிய புத்தக மாகும்
பராமுக மற்றுப் படியுமென் றுதவ (௨௭)
வாங்கிப் படித்து மயக்ககன் றெழுகினர்
ஆங்கது முதலா யறநெறி தழைத்துப் (௨௮)

பவவிரு ளகலச் சிறந்தன பாரெலாம்
தவமிகு சுரரே தலையெடுத் துலாவினர் (௨௯)
எங்குமிம் முறையா யெழின்மிக விலங்கச்
சங்கா சுரனுந் தம்பியை யழைத்து (௩௰)
ஈரமொன் றெண்ணிச் சமுத்திர நடுவிற்
சேமித் தடக்கிய திருமறை நூலைச் (௩௧)
சுந்தர வனத்தி லெழுந்தொரு மறையோன்
முந்திய முறையின் முதலுற விரித்தான் (௩௨)
சிந்தனை யினியென் செய்வது நீபோய்
அந்தமல் லானை யழித்தியென் றனுப்ப (௩௩)
நன்றென வவனு முலகெலா நடுங்கச்
சென்றனன் சதுர்வகைச் சேனைக ளுடனே (௩௪)
திரைகட லேழுந் திரண்டெழும் பியபோல்
வருபடை யொ யான் மாதவர் கலங்க (௩௫)
வருதொழிற் கெல்லா மொருமுத லாகித்
திருவிளை யாடல் செய்யுமல் லாலன் (௩௬)
குஞ்சர முகத்துக் கோலங் காட்டி
அஞ்சா திருமென் றவர்மனந் தேற்றினன் (௩௭)
திருமருங் கமர்ந்த புத்தி தேவியார்
பொருகளம் போதற் கனுமதி பெற்று (௩௮)
நாயக னருளால் நால்வகைச் சேனையும்
ஆயுத பாணிக ளாய்ப்புடை சூழ்வரச் (௩௯)
சென்றமர்க் களத்திற் றிகிரிபோற் சுழன்று
துன்றிய தானவத் தொகுதியை யழிக்கக் (௪௰)
கண்டுளங் கொதித்துக் கமலா சுரனுங்
கொண்டுகை வில்லைக் குனித்தெதிர் நெருங்கி (௪௧)
அம்மன் படைகளை யதஞ்செய வாத்தாள்
விம்மிய கோபக் கனலெழ விழித்தாள் (௪௨)
அத்திரு நோக்கா லவள்முகத் தெழுந்தோர்
புத்திர னுதித்துப் பூமியிற் பாய்ந்து (௪௩)
நாலிரு திசையி னதிபரும் நடுங்கக்
காலருத் திரன்போற் களத்தம ராடித் (௪௪)

சக்கிர பாணி யெனும்பெயர்க் கோமான்
உக்கிரை யென்னும் மனைவிதன் னுடனே (௩)

தருமா புத்தி சாம்பனென் றோதும்
இருமா மந்திரத் தலைவர்க ளோடும் (௪)

வாழ்தரு நாளின் மகப்பே றின்றி
வேள்விக ளாற்றியும் விரதம் புரிந்தும் (௫)

புத்திரர் பெறப்பெறப் பொன்றுத னோக்கி
மெத்தவும் மனது விசனமுற் றிருப்ப (௬)

முதிர்தவச் சவுனக முனிவரன் வந்து
சதாசிவ மூர்த்திக் கிடமா யிருக்குஞ் (௭)

சூரியன் னோன்பைத் தொடங்குவை யாயின்
காரிய மனைத்துங் கைவரு மென்று (௮)

சொற்றன னம்முறை மன்னனுந் தோகையும்
நற்றவ நோன்பை நடத்துவ ராயினர் (௯)

நாலை மூடனோர் நாட்செலு மளவில்
வேலன விழியாள் வெய்யவ னருளால் (௰)

மகவுண் டாகி யையிரண் டாமதி
நிகழ்வு மொருநாட் சேடிய ருடனே (௰௧)

சிந்தெனு மொருநதி தீரத் துலாவும்
அந்தநல் லமையஞ் சூலுளை வாகிப் (௰௨)

பெற்றன ளாங்கோர் பெட்புறு குழவியை
உற்றிடும் பொழுதே யொருகரந் தன்னில் (௰௩)

தாங்கிய சக்கரம் மறுகரந் தன்னில்
வாங்கிய சூலமும் மலர்விழி மூன்றுஞ் (௰௪)

செஞ்சடை துலங்கத் தேவர்க ளெல்லாம்
அஞ்சவெங் குரலோ டவதரித் தனனால் (௰௫)

உக்கிரை நோக்கி யுள்ளங் குலையப்
பக்கஞ் சூழ்ந்த பாங்கிய ரஞ்சினர் (௰௬)

அந்தணன் போல வருணனு மடைந்து
மைந்தனைக் கொடுபோய் மன்னவன் கையில் (௰௭)

தந்தவன் சிந்தின் கரையுதித் தனனால்
சிந்தென நாமஞ் செப்புகென் றகன்றான் (௰௮)

மன்னனு மப்பெயர் வகுத்தா தரிப்பத்
தன்னிக ரிலாமற் றனையனும் வளர்ந்து (௰௯)
தோடலர்ச் சோலை சுனைநதி வாவியில்
ஆடுவ னுடுழி யாங்குநின் றெழுந்து (௨௰)
பாய்ந்துசந் திரனைப் பற்றிப் பிழிந்து
மாந்துவ னமுதம் மலைமிசை குதிப்பான் (௨௧)
கடனடு விறங்கிச் சேறெழக் கலக்குவன்
அடவியி னெருங்கி விலங்கின மழிப்பான் (௨௨)
இத்தகை குறும்புகள் பற்பல விழைப்பப்
புத்திர னிவனுற் றனவர் வாழ்வு (௨௩)
நிறைவுறு மென்னச் சுக்கிரன் நினைந்து
மறையவன் போல வடிவெடுத் தெதிரே (௨௪)
வந்துகண் டன்பா லாசிகள் வழங்கி
மந்திரங் காதின் முறையொடு வகுத்தான் (௨௫)
அம்மனுப் பெற்ற சிந்தகன் றங்கோர்
செம்மலர்க் காவிற் செவ்விதி னிருந்து (௨௬)
பரசிவன் றன்னைப் பத்தியி னோக்கி
இருபது நூறுண் டருந்தவ மிழைக்கக் (௨௭)
கண்ணுதல் மகிழ்ந்து காட்சிதந் தருளி
எண்ணிய வரங்க ளெவையெனக் கேட்ப (௨௮)
மூவுல காட்சியும் முதன்மையுஞ் சிறப்பும்
யாவர்கை யாலு மழிவிலா வாழ்வும் (௨௯)
வேண்டுமென் றிரப்ப விநாயகக் கடவுள்
ஆண்டுதித் தழிக்கு மந்நா ளளவும் (௩௰)
விரும்பிய வகைநீ விளங்குவை யென்று
வரங்களை யுதவி வானிடை மறைந்தார் (௩௧)
சிந்துவு மப்பாற் றிருமனைக் கேகித்
தந்தைதா யிருவர் தாளிணை பணிந்து (௩௨)
வரமிகப் பெற்ற வரலா றெல்லாம்
உரைசெய மகிழ்ந்து திருமுடி புனைந்தார் (௩௩)
அரசுகைப் பற்றிய பிறகாங் கவனுக்
தரையொரு மூன்றையுந் தன்னடிப் படுத்திப் (௩௪)

பகைவரை யெல்லாம் பணிந்திடச் செய்து
தொகைமிகு தானவர் தொகுதியைக் காத்துத் (௩௫)
தேவரை யெல்லாஞ் சிறைபிடித் தொருங்கே
காவலில் வைத்துக் கண்டக நகரில் (௩௬)
தன்னையே நிதமுந் தாழுவ தன்றிப்
பின்னொரு தெய்வதம் பேணு தாக்கி (௩௭)
உற்கையென் றோது மொருமட மானைப்
பொற்புற வேட்டுப் புதல்வராந் தருமன் (௩௮)
அதமனென் றிசைக்கு மிருவரைப் பயந்தாங்
கிதம்படைத் தியார்க்கு மிடர்களே விளைத்தான் (௩௯)
ஆயினு மிமையோ ரந்தரங் கத்தில்
தாயென விரங்குந் தந்திமா முகனை (௪0)
அன்பொடு வணங்கி யருள்பெற் றிருந்தார்
முன்பியம் பியமுச் சந்திசேத் திரத்து (௪௧)
மாதவ ரெல்லாஞ் சிவபெரு மானைக்
காதலி னிறைஞ்சிக் கவுரிதன் னுடனே (௪௨)
நமக்கொரு துணையா யிங்கெழுந் தருளி
அமர்ந்திடென் றிரப்ப வடியவ ருளம்போல் (௪௩)
மாதவ வேட வடிவெடுத் தாங்கு
காதலி யுடனோர் கோயிலி னிருந்தார் (௪௪)
இருந்தவர் சிலநாள் யோகத் திருப்பத்
திருந்திழை யுமையாள் சேவடி பணிந்து (௪௫)
சராசர மனைத்துஞ் சாமியென் றனையே
பராவலும் யோகம் பயிறலு மாக (௪௬)
மற்றெவர் மாட்டு வரம்பெறக் கருதிக்
கற்குமிச் சாதனைக் கபடமென் றசாவப் (௪௭)
பேதாய் நம்மைப் பிரிந்தக லாமல்
கோதகல் சுதந்தர வடிவுகொண் டருளி (௪௮)
ஆசையோ டெம்மைப் பணிந்திடு மடியார்
பூசனை யொப்புக் கொண்டவர் தமக்கு (௪௯)
மெய்ப்புறு வரங்கள் கொடுத்திடு மோர்பொருள்
அப்பொருள் தனையே கருத்தினி லமைப்போம் (௫0)

மந்திர மொன்று வழுத்துவ லிதைநீ
சிந்தனை செய்யிற் சிறந்தவப் பொருளும் (௫௧)
வந்துநின் மகனுய் வானவர் சிறையைத்
தந்திடும் மீட்டுத் தாழ்குழ லாயெனப் (௫௨)
பார்வதி மகிழ்ந்து பன்னிரு வருடஞ்
சீர்திகழ் மந்திர செபதப நடாத்தி (௫௩)
ஆசைகொள் சதுர்த்தி யடைதலு மாங்கோர்
பூசை மண்டபம் பொற்புற வமைத்து (௫௪)
வகுத்தொரு மூர்த்தியை வழிபா டாற்றத்
தொகுத்தவம் மூர்த்தியின் சுடர்முகத் தெழுந்து (௫௫)
தந்திமா முகவன் றரிசன மளித்தபின்
சிந்துவின் சிறையாற் றேவரீ டேறத் (௫௬)
திங்க ளொன்பதுஞ் சென்றுல குதித்த
மங்கல பாலக வடிவம தெடுத்துக் (௫௭)
கைத்தல மாறுங் கண்ணொரு மூன்றும்
முத்தா பரணம் மொய்த்தமார் பகமுங் (௫௮)
கதரெறிந் திலகக் காரிழை யுமையாள்
எதிர்போ யமர்ந்தன னிவனியல் பேதெனில் (௫௯)
ஆதி யுகத்தி லீயிரு கரமுஞ்
சோதிநல் லுருவுஞ் சிங்கவா கனமும் (௬௰)
அடுத்த வுகத்தி லாறு கரங்களுந்
தொடுத்தவெண் ணிறமுந் தோகைவா கனமும் (௬௧)
பின்வரு முகத்திற் கரமொரு நான்கும்
மன்னிய சிவப்பு வர்ண மேனியுந் (௬௨)
தடமலை போற்பெருச் சாளிவா கனமுங்
கடையுக மாகிய கலியுகந் தன்னில் (௬௩)
மலர்க்கர மிரண்டும் மேக வர்ணமுங்
குலப்பரி யூர்தியுங் கொண்டாட் டயரும் (௬௪)
பண்பின னுகும் பாலக னுயுறக்
கண்குளிர்ந் தம்மன் கரமிசை யேந்திக் (௬௫)
கொங்கையி னமுதங் கொடுத்தனள் விரும்பின்
மங்கல வாத்தியம் மலிந்தது மண்மேற் (௬௬)

கண்டக நகரிற் கறைமழை பொழிய
மண்டிய நரிநா யழுகுரன் மலிந்து (௬௭)
நேரறு சகுனம் நிகழ்வதற் குற்ற
காரணந் தேடிக் காண்மினென் றரசன் (௬௮)
தூதரை விடுப்பத் துரிதமா யவரும்
பூதலஞ் சுற்றிப் போந்துமீண் டடைந்து (௬௯)
கண்டிலம் யாண்டுங் காரண மரசே
தண்டக வனத்தி னுளதிரிச் சந்தி (௭௰)
சேத்திர மென்னுந் திருப்பதி தனிலே
ஆர்த்தகு முனிவ ரமர்ந்தன ரனேகர் (௭௧)
சிவபெரு மானுந் தேவியு மாங்கே
அவர்திரு மத்தியி லினிதெழுந் தருளினர் (௭௨)
பனிமதி வாரம் பார்மிகப் புகழும்
விநாயக சதுர்த்தி விசாகநா ளுடனே (௭௩)
சிங்க முகூர்த்தமுஞ் செவ்விதிற் பொருந்த
அங்கொரு புதல்வ னவர்க்கவ தரித்தான் (௭௪)
மாதவர் யாவரும் வந்துவந் தன்பிற்
பாத பூசனை பண்ணுவ ராயினர் (௭௫)
இதுவொன் றல்லா [illegible]ணியிலே வேறு
புதுமைக ளென்றார் பூபதி நினைந்து (௭௬)
கண்ணுத லளித்த வரமொழி காலம்
நண்ணிய தென்று நல்வலி யுடனே (௭௭)
மாயையின் மிக்க வசுரரை யழைத்துப்
போயக் குழவியை வதைமினென் றுய்த்தான் (௭௮)
ஆங்கவ ரிசைந்து முறைமுறை யாகத்
தாங்களே யழியுந் தன்மையி லுற்றார் (௭௯)
ஓராந் திங்களி லொருபெருங் கழுகாய்
நேருறி யொருவன் பாலனைத் தூக்கி (௮௰)
விண்மிசை செல்ல மிடற்றினை முறித்து
மண்ணுறிப் பால னுமைமடி யமர்ந்தான் (௮௧)
இரண்டாந் திங்களி லிருவ ராகு[illegible]ய்ப்
புரண்டுமேல் வீழப் பூனையாய்க் கொன்றனன் (௮௨)

மூன்றாந் திங்களிற் பூனைபோ லொருவன்
தோன்றின னவனையுந் தொலைத்தன னையன் (௮௩)

நாலாந் திங்களி லொருமுனி மகனைப்
போலவந் தடுத்துப் பொன்றின னொருவன் (௮௪)

ஐந்தாந் திங்களி னச்சுமா மரமாய்
வந்தமற் றொருவனைப் பாலகன் பாய்த்தான் (௮௫)

ஆறாந் திங்களி லசுரமா தொருத்தி
வீறா யடுத்துக் கரந்துயிர் விடுத்தாள் (௮௬)

ஏழாந் திங்களி லாமைபோ லெய்தித்
தாளா லுதைபட் டழிந்தன னொருவன் (௮௭)

எட்டாந் திங்களிற் குதிரைபோ லொருவன்
கிட்டிவந் திவரக் குடலறுந் திறந்தான் (௮௮)

ஒன்பதாந் திங்களி லொருவனங் கடுத்துத்
தின்பதற் கிசைந்த தேங்கனி யென்று (௮௯)

நச்சமைத் தாக்கிய நாவற் கனியைப்
பச்சிளம் பாலன் கையினிற் கொடுப்ப (௯௰)

வாங்கியுண் டெம்பிரான் வலக்கைமோ தகத்தை
ஆங்கவற் கருத்தி யழிந்திடச் செய்தனன் (௯௧)

பத்தாந் திங்களிற் பாம்புபோ லொருவன்
கர்த்தனை விழுங்கிக் கிழிந்தக டிறந்தான் (௯௨)

பதினொராந் திங்களிற் பற்பலர் சூழ
மதிவளர் சோலையி னுலாவுழி யொருவன் (௯௩)

எண்கா லிருதலைச் சரபமா யெய்தி
அண்ணலின் கையா லடிபட் டிறந்தான் (௯௪)

பன்னிரண் டாகப் படர்தரு திங்களிற்
பின்னுமோ ரசுர னிருவரைச் சிலம்பாய் (௯௫)

வடிவுற வமைத்து மதலைகைக் கொடுப்ப
நடைபயில் கா[illegible]தனு மணிந்து (௯௬)

நிருத்தஞ் செய்தலு நெடுந்துக ளாகி
வருத்தமுற் றிறந்து மண்மிசை வீழ்ந்தார் (௯௭)

அம்மதி தன்னி லின்னுமோ ரசுரன்
மும்மத வேழ வுருக்கொடு முடுகி (௯௮)

அங்குற வையன் கரமிசை யேந்திய
அங்குசப் படையா லதனையு மழித்தான் (௯௯)
இரண்டா மாண்டினி லின்னுமற் றொருவன்
திரண்டநஞ் செடுத்துச் சிறுவனுற் றூடும் (௱)
மடுவினிற் கலந்து வானிடை மறையத்
தடவிழி நோக்காற் றடாகநீர் முழுதும் (௱௧)
இன்னமு தாகவு மிருள்விசும் பகத்து
மன்னிய வசுரன் மடியவும் புரிந்தான் (௱௨)
மூன்றா மாண்டில் முனிச்சிறா ருடனே
தோன்றலோர் தடத்திற் றோய்ந்துநீ ராடைப்பின் (௱௩)
மற்றோ ரசுரன் மகரமீ னாகி
உற்றலைத் தையன் கரத்துயி ரழிந்தான் (௱௪)
மீண்டுபோ மளவின் மேலுமோ ரசுரன்
நீண்டமா மலையாய் நின்றெதிர் மறிப்பக் (௱௫)
கண்டொரு நெடுமூச் செறியவக் காற்றால்
துண்டுக ளாகித் தொலைந்ததம் மலையும் (௱௬)
நான்கா மாண்டில் வேறொரு தானவன்
தான்கன வித்தைகள் கற்றவன் போல (௱௭)
வந்து சிறார்களை வாரி விழுங்கிப்
பிந்தவும் வெளியே செவிவழி விடுத்தும் (௱௮)
இம்முறை வியப்பப் பலவகை செய்தபின்
அம்மன் மடியிற் பாலனை வாரி (௱௯)
விழுங்கியும் பின்னர் வெளிவிடுத் திடாமல்
எழும்பலும் யாவரு மேக்கமுற் றிரங்க (௱௰)
ஐயனு முமையா ளணிமுகத் துதித்துக்
கையினு லவனை யறைந்துயிர் கவர்ந்தனன் (௱௰௧)
ஐந்தா மாண்டி லொட்டக மாகி
வந்தவன் றனையும் வதைத்தனன் மேலும் (௱௰௨)
சாயையைப் பற்றச் சார்ந்திடு மொருவன்
காயமு மழியக் கண்கொடு நோக்கினன் (௱௰௩)
பிந்தவு மொருவன் முனிச்சிறுன் போன்று
பந்துக ளாடி வந்தெதிர்த் தழிந்தான் (௱௰௪)

மன்னிய வாறு மாண்டினில் விசுவ
கன்மனென் றொருவன் கர்த்தனை யடைந்து (ாயரு)
பருதிதன் புதல்வி சமுஞையை வேட்டு
மருகனாய் வரலும் மற்றவ னுருவின் (ாயசா)
வெப்பற வாயுதங் கொண்டுதான் கடைய
அப்பொழு துதிர்ந்த பொடிகளை யள்ளிப் (ாயஎ)
பஞ்சா யுதமாய்ப் படைத்தொரு சூலம்
நஞ்சணி மிடற்று நாயகற் குதவி (ாயஅ)
இங்கொரு பரசு தாமரை பாசம்
அங்குச மாகிய நான்கையு மடிக்கண் (ாயகூ)
வைத்தன னேற்றுத் தரித்திட வேண்டுங்
கர்த்தமென் றிறைஞ்சக் கணேசனு மேற்றுக் (ாஉய)
குன்று வரங்கள் கொடுத்தன னதன்பின்
அன்றொரு பாதக வசுரனங் கடுத்துச் (ாஉக)
செந்நாய் போல்வரச் சிறுவனு முடனே
தன்கையி னங்குசத் தாலுயிர் பறித்தான் (ாஉஉ)
ஏழா மாண்டிற் காசிப முனிவரும்
வாழ்மனை யதிதியும் வந்துகண் டிறைஞ்சி (ாஉங)
வரம்பல வாங்கிச் சென்றதன் பின்னர்
பெரும்பல முளாரிரண் டாளிக ளாகி (ாஉச)
முன்னடுத் திறந்தார் முன்னவன் கரத்தால்
இன்னணங் கொல்லற் காகவந் தீண்டிய (ாஉரு)
துட்டர்க ளெலாரையுந் தொலைத்திடு மெம்பிரான்
எட்டா மாண்டின் மயிலூர்ந் தாடிய (ாஉசா)
திருவிளை யாடலைச் செப்புதுங் கேண்மோ
அருமறைக் காசிபர் பத்தினி மாரில் (ாஉஎ)
கத்துரு வினதையைச் சாவலி னொருமுறை
வைத்தமை யாலவள் மைந்தன் சடாயு (ாஉஅ)
பின்னொரு முறைகத் துருவைநிந் தித்தான்
அன்னதி னலவ ளெண்மகா ரடுத்துச் (ாஉகூ)
சடாயுவைத் துணைவர் தம்மொடு கொடுபோய்
விடாதுபா தலத்தில் வெஞ்சிறை யிருத்தினர் (ாஙய)

மற்றுளம் வாடிய வினதைமா தவத்திற்
பெறமொருு வண்டந் தனைக்கொடு போந்து (௱௩௧)
கணபதி முன்றரக் கைபிறை லுடைத்தனன்
அணிதிகழ் மயிலொன் றதிலுதித் ததுவே (௱௩௨)
விண்ணுயிர் நீல கிரியென வெழுந்த
வண்ணமா மயிலி னெம்பிரா னிவர்ந்து (௱௩௩)
பாதலம் புகுந்து பத்தினி வினதை
காதற் புதல்வரைக் காவலான் மீட்டு (௱௩௪)
மாமயூ ரேச ரெனப்பலர் வழுங்கு
நாமமேற் றனேக விளையாட் டயர்ந்து (௱௩௫)
சிந்து ராசன் றினந்தின மனுப்ப
வந்தவ ரெலாரையும் மாய்த்தன் னப்பால் (௱௩௬)
விடுபவ ரனைவரும் மீண்டில ராகிப்
படுவது கண்ட பார்த்திபன் வெகுண்டு (௱௩௭)
பல்வகைப் போரினுங் கைதேர்ந் துள்ள
வல்லபக் கனலா சுரன்றனை யழைத்துத் (௱௩௮)
திரமிகு சேனைத் திரளொடு நீபோய்
அரனிளங் குமரனை யழித்தியென் றனுப்பச் (௱௩௯)
சென்றன னுணர்ந்த சிவபெரு மானும்
வென்றுவா வென்று விநாயகக் கடவுளைப் (௱௪௰)
பூத கணத்தொடு போர்க்களத் தனுப்ப
யாதனு மேகி யாதவர் மகிழத் (௱௪௧)
தானவ ருடனே சமர்பல நடாத்தி
வானுல கேற வைத்து மீண்டனன் (௱௪௨)
சேதியிவ் வாறெனச் சிந்துரா சற்குத்
தூதுவ ரோடித் துரிதமா யுரைப்ப (௱௪௩)
என்னினி யாத மென்றுணா ராமல்
அங்கசர்ச் சேனைக ளனைத்தையுங் கூட்டி (௱௪௪)
வெஞ்சமர்க் களம்புக விநாயகப் பெருமான்
மஞ்ஞையி னிவர்ந்து வரிசையின் மருங்கு (௱௪௫)
நந்தி முதற்கண நாதரும் வீரனுங்
கந்தனுஞ் சூழ்வரச் சென்றுகை கலந்து (௱௪௬)

நீடிய வெம்போர் நெடும்பல பகலாய்
ஆடியவ் வசுர படையெலா முடைத்துச் (௱௪௭)
சிந்துமா மன்னனைச் சிதைத்துயிர் போக்கி
அந்தமின் முத்தியு மாங்கவற் கருளித் (௱௪௮)
தேவரைச் சிறையான் மீட்டுவிண் ணேற்றி
யாவரும் மகிழ வவ்வவர்க் கேற்ற (௱௪௯)
பல்வகை வரமும் பயனுற முறையே
நல்கியங் கூர்ந்த மயில்வா கனத்தைச் (௱௫௰)
சண்முகற் குதவித் தன்பெரும் புகழ்சேர்
புண்ணிய வுலகைப் பொருந்தின னன்றே (௱௫௧)

ஆறாவது ௪௱௧

## பாலசந்திர விநாயகர் திருவவதாரம்.

கூற்றுவன் மகனுக் கொழுங்கனல் வடிவொடு
தோற்றிய வனலா சுரன்றனைப் பண்டோர் (௧)
அந்தண குமரன் போல்வடி வெடுத்து
வந்துவாய் மடுத்து வளர்ந்தவெங் கனலை (௨)
மாதவ ரறுசான் வழிபடத் தீர்த்த
காதையைப் பிரதம காண்டத் திசைத்தாம் (௩)
அவ்வவ தாரந் தனிலெம் பிராற்குச்
செவ்விய பால சந்திர விநாயகர் (௪)
என்றநன் னாம மெய்திய திதனை
என்று நினைப்பவ ரிதம்பெறு வாரே (௫)

எழாவது ௪௱௨

## தூமகேது விநாயகர் திருவவதாரம்.

விந்திய மென்னும் மேதகு நாட்டின்
அந்தமில் வளங்கூர் மகிபா தினியென (௧)
ஒருதிரு நகருண் டங்கர் தன்னிற்
பெருகிய தானவர்க் கொருபெருந் தலைவனைத் (௨)

தேவர்கண் டஞ்சுந் திறமையுஞ் சிறப்பும்
மேவிய தூமா சுரனெனு மொருவன் (௩)
சுகரி சுமகி சுநேத்திரி சுப்புரு
புகர்சும ஞேகரி யெனப்பெயர் புனைந்த (௪)
மனைவிய ரைவரும் மந்திரத் தலைவருந்
தனையருஞ் சூழத் தனியர சாண்டான் (௫)
சிவமறை யாகமந் தெளிந்தற நெறியில்
தவறு தொழுகுந் தன்மைய னாகியும் (௬)
இழிவுறு மசுர குலத்துறற் கிசைந்த
பழமைய வினையின் பக்குவங் கேண்மோ (௭)
வரமிகு விகுதி யெனும்பெய ருடனே
அரசர்தங் குலத்தில் வந்தவ தரித்துத் (௮)
தீவுகட் கரசாய்ச் செங்கோ னடாத்தி
யாவரும் புகழ வாழ்தரு நாளில் (௯)
தொண்ணூற் றொன்பது வேள்விகள் முடித்து
வண்மைகொள் நூறும் மகந்தொடுத் தாற்ற (௰)
வாசவ னுணர்ந்து வானுல குரிமையும்
ஆசிகொள் போகமு மகலுமென் றஞ்சி (௰௧)
வருந்திடு மேல்வையின் மகரயாழ் முனிவன்
தெரிந்தெதிர் குறுகத் தெண்டனிட் டெந்தாய் (௰௨)
அவனியி னீபோய் விகுதியங் காற்றுந்
தவமிகு வேள்வியைத் தடுத்திடென் றிரந்தான் (௰௩)
அம்முனி வரனு மதற்குடன் பட்டுச்
செப்மறை வேதியன் போலுரு வெடுத்து (௰௪)
மாசகல் வேள்வி மண்டபத் தடையத்
தேசுயர் விகுதியுஞ் சென்றெதிர் போற்றி (௰௫)
அருக்கிய முதலிய வன்பொடு வழங்கி
இருக்கையி னமர்ந்தபின் னிங்கெழுந் தருளிய (௰௬)
காரண மேதென மறையவன் போல்வரு
நாரதன் னோக்கி நராதிப கேட்டி (௰௭)
வள்ளலென் றன்னை வையகந் துதித்தல்
உள்ளமை யாயி னொன்றியான் வேண்டுவன் (௰௮)

எங்குல மரபி னித்துணைக் காலம்
பங்கமில் பிரம சாரிநோன் பாற்றி (௰௯)

இல்லாச் சிரமத் துறவினி நினைந்து
நல்லா ளொருத்தியை நாடியிங் குற்றேன் (௨௰)

அன்னவ ளோநின் மனையவ ளாகும்
பொன்னெனச் சிறப்பெலாம் பொருந்தின ளாதலின் (௨௧)

மறுக்கா தவளை வழங்கெனக் கென்றான்
அறக்கோல் சாய்க்கா வரசனுந் திகைத்து (௨௨)

நெடுமறை யுணர்ந்த நீடிய புகழோய்
அடாதன கேட்ட லடுக்குமோ வுலகில் (௨௩)

சுவையறு பொருள்களை நல்லார்க் குதவுந்
தவமறை விதிக்குந் தணந்திதை யொருவன் (௨௪)

தன்மனை யாளைப் பிறன்கொளத் தருதல்
நன்முறை யன்றா மிங்கவர் வாழுங் (௨௫)

கன்னியர் பலரை யழைத்துமுன் விடுதும்
அன்னவர் தம்மி லொருத்தியைத் தெரிந்து (௨௬)

கொள்ளுக வளியேன் கொண்டவில் லாளைத்
தள்ளியிந் நாட்டர சாட்சியோ டெல்லாம் (௨௭)

வேண்டினு நல்குவன் விருப்புட னென்றான்
ஆண்டகை யிவ்வா றியம்பலு நாரதன் (௨௮)

மாதவ வேள்வி வகுக்குமன் னவர்கள்
யாதொரு பொருளை யார்வேட் டடையினும் (௨௯)

இல்லையென் றுமற் கொடுத்தலே முறையாம்
நல்லவ வொன்றுன் மனைவியை நாடி (௩௰)

வந்தியான் கேட்க மறுத்தனை யாதலின்
பிந்திய பவத்தி லசுரனாய்ப் பிறவெனச் (௩௧)

சாற்றியும் வேள்விப் பொருளெலாந் தரைமேல்
நாற்றிசை சிதறக் கலைத்தெறிந் தகன்றான் (௩௨)

மனமிகச் சலித்து மன்னனும் நாரத
முனிசெய லிஃதென் றுணர்ந்தவ ணங்கி (௩௩)

மனைபுகுந் திருந்தா னப்பவ மொழிந்தபின்
முனிவரன் சாப முறைபிச காமல் (௩௪)

அசுர ரஞ்சிடு மருந்தவப் பலனால்
இச்சைபெற் றுத்தலைமையு மிதங்களும் பெற்றான் (௩௫)
இங்கிவன் சரித மிவ்வா றாக
அங்குய ராச குலத்தவ தரித்த (௩௬)
மாதவ ராச னெனுமொரு மன்னன்
காதலி சமுத்தை யொடுகலந் திதமாய் (௩௭)
அன்றிலும் பேடு மாமென வாழ்ந்தான்
சென்றன பலநாட் சிறுவர்க ளிலாமல் (௩௮)
மனைவியை நோக்கி மாதரா யுன்னை
அனைவரும் மலடி மலடியென் றழைக்கப் (௩௯)
பெற்றனை பழிசய் பேரிளம் பருவமும்
உற்றனை யாயினு மகவுயிர்த் திலைநீ (௪௰)
பழிக்கிட மாயினை யென்முக்த் தினிமேல்
விழித்திட வேண்டா மகலென விளம்பினன் (௪௧)
கூறிய மாற்றங் கொம்பனை கேட்டு
மாறரு துயரின் மனங்கிடந் துருக்க (௪௨)
கொழுகொம் பில்லாக் கொடியென வீழ்ந்து
விழியுகு புனலா றெனப்பெருக் கெடுப்பப் (௪௩)
பரதவித் தழுதும் பழவினை யிதுவென
ஒருவகை யுள்ளந் தேறின ளாகிக் (௪௪)
கடிமனை துறந்து கானகத் தேகி
நெடியநா ரணனை நெஞ்சகத் தெண்ணிப் (௪௫)
பன்னிரு வருடம் புரிந்தனள் மாதவம்
அன்னவட் கிரங்கி யையங்கரப் பெருமான் (௪௬)
எவ்வெவ ரெந்தத் தெய்வந் தொழினும்
அவ்வவர்க் கவ்வா றருளுந் தியல்பால் (௪௭)
நாரணன் போல நங்கைமுன் னெய்திக்
காரன் குழலா யென்பெறக் கருதி (௪௮)
இத்தவம் முயன்றா யியம்பெனச் சமுத்தை
மெத்தவு மன்பு மச்சமும் மேவி (௪௯)
மகப்பே றிலாமையின் மன்னவன் வெறுக்க
நகர்ப்பிரிந் திங்கு நலிதர வுற்றேன் (௫௰)

படிபுரந் திடநின் போமொரு பாலகன்
அடியவள் பெறுதற் கருள்செய வேண்டும் (௫௧)

சுவாமியென் றிரந்தாள் சுந்தரப் புதல்வன்
அவாவிய வாறுனக் கமையுமென் றருளிக் (௫௨)

கரவிலான் கரப்பக் களிப்புட னவளுந்
திருமனை நோக்கிச் சென்றனள் திரும்பி (௫௩)

ஆங்கவள் தலைவ னன்பொடா தரிப்பப்
பூங்கருப் பத்திற் பொருந்தினா ரணனுங் (௫௪)

கருவென வளர்ந்தான் காலமவ் வகைசெலத்
தருமமார்க் கத்தைத் தணந்துதூ மாசுரன் (௫௫)

மாற்றலர் பதியெலாம் மடுத்திடக் கருதி
ஆற்றலோ டேக முயலுமத் தருணம் (௫௬)

ஊனைக்கொலத் திருமால் சுழுனையி னுந்தியில்
வனக்கரு வாகி வளர்கின் றனென (௫௭)

ஒருமொழி விண்ணி லுதித்தலு முள்ளம்
வெருவின ளாகி வியாகுல மடைந்து (௫௮)

புத்தியி லாண்மையிற் போரிற் சிறந்த
வித்துரு மனைக்கூய் விரைவினில் நீபோய் (௫௯)

மாதவ ராசன் மனையவள் வயிற்றுக்
காதற் கருவை யழித்துவா வென்ன (௬௰)

மறுத்திடற் கஞ்சியம் மந்திரி படையுடன்
கறுத்தடர்ந் தெழுந்த கங்குல்வா யேகி (௬௧)

மாதவ ராசனும் மனைவியு முறங்கும்
போதவர் மாழிகைப் பொற்கத வுடைத்து (௬௨)

மென்மலர் செறியணை விரித்தபூ மஞ்சந்
தன்னொடு கொடுபோய்க் காட்டினில் வைத்து (௬௩)

மருவிய துயிலில் வதைபுரிந் திடுதல்
சரியல வென்று தாமதஞ் செய்ய (௬௪)

மாமயி லன்னாள் மலர்க்கண் டிறந்து
சாமனை யனைய கணவனை யெழுப்பிக் (௬௫)

கடிமனை யகத்துக் கண்டுறங் கியாம்
அடவியில் வருமா றேதென வஞ்சித் (௬௬)

திகைத்தனள் தணைவரு சேனைக ளுடனே
பகைத்துவித் துருமன் கொலைசெயப் படர்ந்தான் (௬௭)
அப்பொழு தங்ஙன மனேக் வாயிரம்
ஒப்பரு வீரர்க ளொருகணத் துதித்துத் (௬௮)
தானவ ரெலாரையுந் தரையுறச் சாய்த்தார்
மானமற் றொடுங்கி யோடிவித் துருமன் (௬௯)
விளைந்தன வெல்லாந் தூமா சுரற்குத்
தெளிந்திட வுரைத்தான் சினந்தவ னிவனைக் (௭௰)
கூறிரண் டாக வாளினாற் கொன்று
வேறொரு நான்கு வீரரை யழைத்துத் (௭௧)
தனித்துமன் னவனுந் தேவியு மிருக்கும்
வனத்திடை நீர்போய் மறைந்தாங் கிருந்து (௭௨)
பிரசவ காலம் பெறுமக வதனைத்
திருடி வதைத்துத் திரும்புமென் றனுப்பக் (௭௩)
கரந்தவர் சென்று கானிடைப் பதுங்கி
இருந்தன ரப்பா லரசனும் மனைவியும் (௭௪)
கனவோ நினைவோ கண்டன வென்று
தினகர னுதிக்குந் திசைதெரி யாமல் (௭௫)
அடவியி லலைந்து காய்கனி யருந்தி
உடலிளைத் திருந்தா ரொருபக லவர்முன் (௭௬)
அடியவர்க் கிரங்கு மானை மாமுகக்
கடவுளு மெய்திக் காட்சிதந் தருளி (௭௭)
மடவர லாய்நீ மாதவம் பயிலுழி
நெடுமால் தன்னை நினைந்தமை யாலே (௭௮)
அன்னவன் னினது கருவினி லமைந்தான்
இன்னமுஞ் சிலநா ளினிற்பிறந் துலகைப் (௭௯)
பரிவுட னாளுவன் பாலக னெனைப்போல்
வரமிடைக் கேட்ட வாய்மையி னாலே (௮௰)
நாமுமிங் கோர்மக னாகி வந்தனந்
தூமனிங் கமர்க்குச் சூழ்ந்திடப் போறான் (௮௧)
சங்கரித் தருள்வேந் தளர்ந்திடா யென்று
கொங்கைபா லருந்திக் குழவியா யிருப்ப (௮௨)

மறைந்தாங் குலவிய வயவரிம் மாற்றம்
அறிந்தன ருடனே யகன்றுபோய்த் தூமற் (௮௩)
குரைத்தலு மடங்காக் கோபமுண் டாகிப்
பெருத்ததன் படையெலாம் பெயர்ந்திடச் செய்து (௮௪)
கொண்டமர்க் கெழுந்து கொடுங்கான் புகுந்தனன்
கண்டவெம் பெருமான் கனிவாய் திறத்தலுந் (௮௫)
தூமம்* பிறந்து படலமாய்ச் சுரந்து
தூமனைச் சூழ்வரு சேனைக ளுடனே (௮௬)
பாதலத் துய்த்துப் பாருல கனைத்துந்
தீதற விளங்கச் செய்தடங் கியதே (௮௭)
தூமனைத் தூமத் தாலழித் தமையால்
தூமகே தென்று சூழ்ந்தது நாமம் (௮௮)
அரசமா தவற்கு மாபிழை யவட்கும்
வரமளித் தமலன் மறைந்தபின் னிருவருந் (௮௯)
திருநகர்க் கேகித் திங்க ணிறைந்துற
ஒருமகப் பெற்றுக் குறைவில ராகிப் (௯௰)
பருவகா லத்திற் றாமா சுரன்றன்
அரசவற் குதவி யாண்டிருந் தனரே (௯௧)

எட்டாவது ௪௬௭

# கணேசர் திருவவதாரம்.

பலியெனுந் தானவன் பலவரம் பெற்று
வலுமையா லமரரை வன்சிறைப் படுத்தி (௧)
ஆண்டமுப் புரத்தை யழிப்பதற் கெண்ணிய
தாண்டவ மூர்த்தி திருமுகத் தெழுந்து (௨)
வரங்கொடுத் தருளிய வரலா றதனைப்
பிரதம காண்டத் தோரிடத் துரைத்தாம் (௩)
திவ்விய கணேச ரெனுந்திரு நாமம்
அவ்வவ தாரத் தமைந்ததைங் கரற்கே (௪)

* தூமம் - புகை ௫௱௧

ஒன்பதாவது

# கணபதி திருவவதாரம்

பண்டொரு திருநாட் பரம சிவனார்
ஒண்டொடி யுமையொடு கைலையை நீங்கிக் (க)
கொன்றை கூவிளங் கோங்குமந் தாரந்
துன்றிய நறுமலர்ச் சோலையின் மேவி (உ)
ஆங்கொரு சித்திர மண்டபத் தமர்ந்தார்
பாங்குள சுவரிற் பலவகை மந்திரம் (ங)
அழகுறத் தீட்டி யவைமுகந் தனிலோர்
களிறொரு பிடியைக் கலந்த பான்மையின் (ச)
வடிவொரு பிரணவ வடிவமு மேலாய்
இடமுற வெழுதிய வியல்புபார்த் திருவருங் (ரு)
களிறையும் பிடியையுங் கருத்துட னோக்க
மழைமத முக்கண் மருப்புயர் வாரணத் (சா)
திருமுகத் துடனோர் சிறியபா லகனாய்
வரமருள் விநாயகன் வந்துமுன் னுதிப்ப (எ)
அம்மனு மத்தனு மன்பொடா தரித்துத்
தம்முயர் கைலை வெற்பினைச் சார்ந்து (அ)
கணபதி யெனப்பெயர் கவினுறச் சாத்திக்
கணங்களுக் கரசாய்க் கைலை வாசலின் (கூ)
விந்தைகொள் முகப்பின் விளங்குற விருத்தி
அந்தப் புரத்தை யடைந்தன ரப்பால் (ய)
தேவரு முனிவருங் கணபதி யைத்தினம்
ஆவலின் வந்துகண் டருண்மிகப் பெற்றார் (யக)
பொன்மணிக் கோயிலுட் புக்கிய சிவனார்
தன்மருங் கடைந்த தையலை நோக்கிப் (யஉ)
பொழுதினைப் போக்கப் பூண்டவெம் பணிகளைப்
பழுதறு பந்தய மாகவேற் படுத்தி (யங)
ஓர்முறை சூதிங் காடுவ மிருவரும்
வார்வளர் தனத்தாய் வருதியென் றழைப்ப (யச)

வெல்வியுந் தோல்வியும் விளம்புவ தாரெனத்
தொல்பவ வினையின் றொடர்பினால் மாயோன் (௰௫)
நாடலு மவ்விடம் நடுவென விருத்தி
ஆடின ரிருவரு மம்மனே கெலித்தாள் (௰௬)
வெள்கிய சிவனார் வென்றவர் தாமென
உள்ளமைக் கெதிரா யுரைத்தன ரிருவரும் (௰௭)
இவ்வகை வாதிட் டிருந்த மாயனைச்
செவ்விய சாட்சி செப்பெனக் கேட்பக் (௰௮)
கண்ணுதல் காட்டிய கண்சா டையினால்
உண்மையை மறைத்திங் குமாபதி தானே (௰௯)
வென்றவ ரென்ன வெகுண்டுமை யாளும்
நன்றலாக் கபட நாடக முரைத்தாய் (௨௰)
கண்கொடு கண்டதைக் கழறு தொழித்தநின்
கண்ணிலாப் பாம்பாய்க் காசினி யிடம்போய் (௨௧)
வடதீ வடைந்து வடதரு நீழலிற்
கிடவெனச் சபித்தாள் கேசவ னஞ்சித் (௨௨)
துயருறச் சிவனார் தோழனை நோக்கிக்
கயமுகா சுரனைக் கணபதி யழித்து (௨௩)
வடதீ வுறுநாள் வந்தவிச் சாபங்
கெடுமெனத் தேற்றக் கேசவ னேகிக் (௨௪)
கருந்தட நெடுமலைக் கண்ணிலாப் பாம்பாய்
இருந்தன னிக்கதை யிவ்வா றிருப்ப (௨௫)
மரகத னென்னும் மாமுனி யொருவன்
அருமைய தவத்தி லனேகநா ளிருந்து (௨௬)
கண்விழித் தெதிரே களிறொரு பிடியுடன்
பண்ணிய புணர்ச்சியைப் பார்த்தலு முடனே (௨௭)
மிக்கவெங் காம வெறிபிடித் தலைப்பச்
சுக்கிரன் செய்த சூழ்ச்சியின் வழியே (௨௮)
தானவர் குலத்துத் தையலா ளொருத்தி
வானமர் தெய்வ மாதரிற் சிறந்த (௨௯)
சுந்தர விபுதை யெனும்பெயர்க் குரியாள்
வந்தெதிர் நின்று மருவுதற் கிசைய (௩௰)

வளர்தவ முனியும் மகிழ்ந்திரு வோருங்
களிறும் பிடியுமாய்க் கலந்தனர் கலவியில் (௩௧)
துதிக்கர மிருமருப் பொருகச முகத்தோ
டுதித்தனன் கசமுகா சூரனென் றொருவன் (௩௨)
பெருவலி யுடையான் பெருந்தவ மாற்றி
வரமிகச் சிவன்பால் வாங்கிவா னவரைத் (௩௩)
தன்னடிப் படுத்தித் தானவ ரெலாரையும்
நன்னிலைப் படுத்தி நமனென வாழ்நாள் (௩௪)
தேவர்கள் யாவருந் திரண்டுபோய்க் கணத்தின்
காவல னாகிய கணபதி யிடஞ்சு (௩௫)
முறையிட வெம்பிரா னசலனை யூர்ந்து
நிறைவலிப் பூத வீரர்க ணெருங்கச் (௩௬)
சென்றமர் புரிந்து கயமுகா சுரனை
வென்றவன் மூடிக மாய்விரைந் தோட (௩௭)
வாகன மாக்கி வானவர்க் கெல்லாம்
போகமு நல்கி மீண்டுபோ நெறியில் (௩௮)
வடதீ வால மரத்தடி கிடந்த
நெடுமால் சாபம் நீக்கின னவனும் (௩௯)
இத்தின மாகிய மார்கழிச் சட்டி
உத்தம நாளென் றுலகினோற் பவர்க்கு (௪௰)
வேண்டிய வரமெலாம் விருப்பொடு நல்க
வேண்மென் றிரப்ப விநாயகக் கடவுளும் (௪௧)
அவ்வரங் கொடுத்தாங் ககன்றன்ன் கணபதி
இவ்வகை யால்வரும் பெயரெனப் படுமே (௪௨)

பத்தாவது ௫௪௩

# மகோற்கட விநாயகர் திருவவதாரம்

அங்கமென் றோது மழகிய நாட்டிற்
பங்கமில் காத்திர மெனும்பதி தனிலே (௧)
மாதவ மிகுத்த ரவுத்திர கேது
காதலி சாரதை யெனப்பெயர் பூண்ட (௨)

அந்தண னொருவனு மாயிழை யொருத்தியும்
மைந்தரை வேண்டி மாதவ மிழைப்ப (௩)

வளர்தவப் பயனால் வந்தாங் கிரட்டைக்
குழவிகள் பிறந்தன குளிர்ந்துள மகிழ்ந்து (௪)

தேவாந் தகனு நராந்தக னென்று
மேவாய்ந் திடுபெயர் விதியுறப் புனைந்து (௫)

பரிவொடு வளர்த்தனர் பாலகர் வளர்ந்து
வருமொரு நாளில் நாரதன் வந்து (௬)

சிவபஞ் சாட்சரந் தனையவர் செவியில்
நவையற வோதி நடந்தன னப்பால் (௭)

இருவருஞ் சென்றோர் வனத்திடை யிருந்து
பெருந்தவ மிழைத்துப் பிஞ்ஞகன் றன்பால் (௮)

எண்ணிய வரமெலா மினிதுறப் பெற்று
விண்ணவர் கோனை வெளிசெலத் துரத்தி (௯)

அவன்பதி தேவாந் தகனிருந் தாளப்
புவனபா தலங்களை நராந்தகன் புரந்தான் (௰)

இத்தகை யிருவரு மியற்றிடு மரசில்
சத்திய முயர்நெறி தவமெலா மழிந்தன (௰௧)

இந்திரன் முதலிய விமையவர் தம்மை
மைந்தராய்ப் பெற்ற மயிலனா ளதிதி (௰௨)

தன்பெருங் கொழுநன் காசிப முனிபால்
அன்புட னடைந்து சுரர்துய ரகற்றத் (௰௩)

தக்கதோர் புதல்வனைத் தருகெனப் பணிய
விக்கின விநாயகர் தம்மைவேண் டென்றான் (௰௪)

அம்முறை யவளு மருந்தவ மாற்றினள்
எம்மையாள் கணேச னிரக்கமுற் றவள்முன் (௰௫)

குழவியாய்க் குறுகினன் கோடிசூ ரியர்போல்
அழகிய மதலையை யதிதிகண் டெடுத்துத் (௰௬)

தன்னாச் சிரமஞ் சார்ந்தனள் காசிபன்
என்னாச் சரிய மிச்சிறு னழகென (௰௭)

விதிப்படி சடங்குகள் மேதக நடாத்தி
மதிக்கரு மகோற்கட ரெனப்பெயர் வகுத்துக் (௰௮)

காதலின் வளர்ப்பக் கணேசனும் முறையே
பூதலந் துதிக்கப் பொருவற வளர்ந்தான் (௰௯)
ஒருவய தாகமுன் முனிவ ரனுப்பிய
விரசையா மரக்கியை விண்ணுறப் புகுத்தியும் (௨௰)
இருவய தாகமுன் கிள்ளைக ளாகி
வருமிரு பகைவரை வதைத்துயிர் போக்கியும் (௨௧)
மூவய தாகமுன் முதலையாய்க் கிடந்த
பாவகந் தருவன் சாபந் தீர்த்தும் (௨௨)
நான்கெனு மாண்டின் மூன்றுகந் தருவர்
தேன்மலர் தூவி வழிபடு பஞ்ச (௨௩)
மூர்த்திக டம்மை யெடுத்து மறைத்துப்
பார்த்துழி தன்பால் விளங்குறக் காட்டியும் (௨௪)
ஐந்தெனு மாண்டி லெவகை யுருவொடு
வந்திடு மைவரை மாய்ந்திடச் செய்தும் (௨௫)
இந்திரன் கொண்ட மனச்செருக் ககற்ற
விந்தைகொள் விசுவ ரூபங் காட்டியும் (௨௬)
ஆறெனு மாண்டிற் பதிஞ் லுலகமும்
விறல்கொண் டோடி விளையாட் டயர்ந்தும் (௨௭)
வென்றிகொள் காசி மன்னவ னடைந்து
தன்றிரு மைந்தன் மன்றலுக் கழைப்பப் (௨௮)
புரோகித னாகிப் போம்வழி தனிலே
நராந்தகன் சிறிய தாதையா மொருவன் (௨௯)
கண்டக பருவதச் சாரலுள் ளாற்குத்
தண்டனை யாமெனத் தலைதனைக் கொய்தும் (௩௰)
அவனிரு மைந்தர்கள் வந்தாங் கெதிர்ப்பப்
பவவுட னராந்தகன் பாலுற வீசியும் (௩௧)
ஐந்து நூ றவுண ரமர்க்கெதிர்த் தாரை
முந்துமோர் கர்ச்சனை யாற்கெட முடித்துங் (௩௨)
கங்கைசூழ் காசியி லவுணர்தம் மாயையாற்
பொங்கிய சண்ட மாருதம் போக்கியும் (௩௩)
அரண்மனை வாயிலி னடைக்கல் லாக
ஒருவன் கிடந்து தடுப்பதை யுணர்ந்து (௩௪)

தேங்கிளங் காய்பல சிதறிட வடிப்பித்
தாங்கவ னெழும்பலு மமர்புரிந் தழித்தும் (௩௫)
மன்னவன் றன்னொடு வைகியம் மனையில்
இன்னமு தருந்திபு மிராக்கண் டுயின்றும் (௩௬)
மற்றநா ளெழும்பி மறுகுக டோறும்
உற்ற சிறுவர்க ளொடுவிளை யாடியுங் (௩௭)
காசி மன்னவன் சுயபுரோ கிதனும்
மாசக றருமை தத்தனங் கடைந்து (௩௮)
தன்னிரு புதல்வியர் தமைமணஞ் செய்கென
அன்னதற் கிசைந்தாங் கவனுட னேகியுங் (௩௯)
கழுதைக ளாகி யவுணர்க ளிருவர்
வழியினிற் பொருது வரவுயிர் போக்கியும் (௪௰)
மற்றுமங் கொருவன் மதகளி றாகி
உற்றெதிர் தாக்க வுதைத்துமண் வீழ்த்தியுஞ் (௪௧)
சிரம்பையென் றோது மொருபெரு மரக்கி
கரங்கொடு தைலம் விடங்கலந் தெடுத்துக் (௪௨)
குலமகள் போன்ற கோலமுற் றெய்தித்
தலமிசை பூசுழி யவளுயிர் தணத்துந் (௪௩)
திருமணக் கோலந் திகழுறக் கொண்டு
வருவதை யுணர்ந்து மலரயன் றனே (௪௪)
தரும தத்த னுவவ தரிக்கப்
பொருவறு புதல்விய ராகிவந் திருந்த (௪௫)
சத்திக ளாகுந் தமக்கிணை யில்லாச்
சித்திபுத் திகளைத் திருமணம் முடித்தும் (௪௬)
அன்னவர் தம்முட னணிபெறு காசி
மன்னவன் மனைக்கு மீண்டெழுந் தருளியுங் (௪௭)
காற்றொடு நெருப்பாய்க் கங்குலி னடைந்து
நாற்றிசை யெரித்த பகைவரை யழித்துந் (௪௮)
தண்டக வனப்புறு சுண்டியை வேந்தன்
கண்டுகொள் மாறு காசிக் கழைத்துஞ் (௪௯)
சோதிட னாகிச் சூழ்ந்தவோர் வஞ்சப்
பாதகன் றன்னைப் படிமிசை வதைத்துந் (௫௰)

தவளேயுங் கிணறு மாயிடர் விளைத்த
அவுணர்க ளிருவரை யழிந்திடச் செய்தும் (௫௧)
இருளொடு மலேயும் மழையுமாய் மூவர்
தருமிட ரெல்லாந் தானு யழித்தும் (௫௨)
வேடனுங் கண்ணியும் விருட்சமு மாயவர்
கூடிய கூட்டங் குலேத்துயிர் போக்கியுந் (௫௩)
தாயெனு மதிதி போலெதிர் வந்து
தீயநஞ் சூட்டிய தீயளே வதைத்துங் (௫௪)
காசி மாநகர்ப் பிரசைகள் யாவரும்
ஆசிகொள் விருந்துக் கழைப்ப மனேதொறும் (௫௫)
ஏக காலத் திருந்தமு தருந்தியும்
போக பாக்கியம் பொருந்தில் ஞகி (௫௬)
ஐயமேற் றுண்ணு மந்தண னொருவன்
செய்தபுல் லரிசிச் சிற்றுண வதனே (௫௭)
வியந்துபா ராட்டி விருப்புட னருந்தி
நயந்தபல் வரங்கள் மகிழ்வுற நல்கியும் (௫௮)
இவ்வகை யடியார்க் கினியன புரிந்து
தெவ்வருக் கிடுக்கண் செய்துகொண் டிருந்தான் (௫௯)
கொன்றிடு வோமெனச் சபதங் கூறிச்
சென்றவ ரொருவருந் திரும்பில ராக (௬௰)
மேல்விளே வுணரா துளமிக வெகுண்டு
நால்வகைப் படையுட னேகி நராந்தகன் (௬௧)
கங்கை வளங்கூர் காசியை வளேத்துச்
சங்க முழக்கிச் சமர்க்கறை கூவினன் (௬௨)
மன்னனு மைந்தரும் மந்திரத் தலேவரும்
அந்நகர்ச் சேனேயோ டமர்க்கள மேகி (௬௩)
ஆற்றற் கரிய வமர்பல நடாத்தியும்
ஏற்றி னராந்தகற் கிடைந்தவன் கையில் (௬௪)
வன்சிறைப் பட்டு வருந்துவ ராயினர்
மன்னவன் மனேயாள் மகோற்கட மூர்த்தியை (௬௫)
வந்துகண் டரசற் குற்றவா றெல்லாஞ்
சிந்தைநொந் தியம்பத் தேறுதல் கூறி (௬௬)

போர்க்கெழுந் தருளினன் பூத கணம்பல
ஆர்ப்பரித் துடனே யவதரித் தீண்டி (௬௭)
மருங்குறி யமர்க்களம் வந்துகை கலந்து
பெருஞ்சமர் தொடுத்தார் பிறங்கொரு குரூரன் (௬௮)
தானவ ரெலாரையும் பின்னிடத் தாக்கலும்
மானமுற் றெதிர்த்து நராந்தகன் மலைந்து (௬௯)
மண்ணொடு விண்ணுந் திசைகளு மலையப்
பண்ணினன் கற்ற பலபல மாய (௭௰)
வஞ்சக வெம்போர் வகைவகை புரிந்து
அஞ்சாக் குரூர னவையெலா மறுத்துப் (௭௧)
பணிதலைக் குறைக்கும் பருதியிற் சுழன்று
முனைமுகத் தடர்ந்த வசுரரை முடிப்பக் (௭௨)
கண்டுருக் கரந்து காத்திர நகர்போய்
மண்டிய சேமப் படையெலாஞ் சேர்த்து (௭௩)
வந்தனன் மறுநாள் மகோற்கட மூர்த்தியும்
அந்தமில் பூத கணமுட னேகித் (௭௪)
திருவிளை யாட்டாய்ச் சிலபொழு தவனுடன்
பொருதபின் னுயிரைப் போக்கி மீண்டனன் (௭௫)
பாதக னிவன்முடி பிவ்வா றாகத்
தூதுவ ரோடிச் சுவர்க்கம் புகுந்து (௭௬)
தேவாந் தகற்குத் தெண்டனிட் டுலகின்
மேவிய வெல்லாம் விபரமா யுரைப்பக் (௭௭)
காய்ச்சிய வுலைமுகக் கரும்பொ னூசியைப்
பாய்ச்சிய தன்மையிற் றுடித்துடல் பதைக்கப் (௭௮)
பொன்னுல கடங்கலும் போர்முர சறைந்து
தன்னெடுஞ் சதுர்வகைப் படைகளைத் திரட்டி (௭௯)
வளமிகு காசி மாநகர்ப் புக்கி
இளவ னராந்தக னெம்பிரா னுடனே (௮௰)
பொருதுயி ரழிந்த போர்க்கள மடைந்து
வரிசையா யணிபெறச் சேனையை வகுத்தான் (௮௧)
மாதவர் பரவு மகோற்கட மூர்த்தியும்
பூத கணங்கள் புடைவரப் போந்து (௮௨)

சித்தி தேவியார் திருமுக நோக்க
அத்திரு நாயகி யவர்கருத் துணர்ந்து (அங)
சீர்திக ழணிமா மகிமா கரிமா
நேர்பெறு லகிமா நிகரறு பிராத்தி (அச)
பொற்புயர் பிரகா மியமீ சத்துவம்
அற்புத வசித்துவ மாமெனப் பெயரிய (அரு)
எண்வகைப் படுமா சித்திக டம்மை
எண்வகைச் சிறந்த சத்திக ளாக்கித் (அசு)
துன்றிய வயவருந் துணைசெலப் படைத்து
வென்றுவா வென்று விடுத்தலு மவர்போய் (அஎ)
எண்டிசைக் கதிபரு மிடம்பெயர்ந் தோடக்
கண்டவ ரெல்லாங் கலங்கிமண் வீழ (அஅ)
வடவைக ளெட்டு வளைந்தபோற் சூழ்ந்து
படையணி குலைத்துப் பல்போர் விளைத்தனர் (அகூ)
சிதறிய சேனையை யொருங்குறத் திரட்டிப்
பதறிய தேவாந் தகனெதிர் படர்ந்து (கூய)
தனுவளைத் தனேக சரங்களைப் பூட்டி
மனகதி யாக மாரிபிற் றாவித் (கூக)
தேவ சேனையைத் திசைதொறு மோட்டி
யாவருங் கலங்கச் செய்தாற் பரித்தான் (கூஉ)
அணிமா முதலிய சத்திக ளெண்மரும்
இணையறு சூரனு மெதிர்த்தம ராடிக் (கூங)
கைகா லயர்ந்து களைத்திடு மியல்பை
ஐயன் மருங்கி லமர்ந்துகண் ணுக்கிய (கூச)
புத்தி தேவியார் பூசலி னம்மவர்
இத்தகை யிடைத லேற்குமோ வென்று (கூரு)
பற்கடித் துருத்துப் பார்த்தலு முடனே
உற்றன ளொருமக ளோங்கிய மலைபோல் (கூசு)
இடிமுழக் கென்ன விரைந்தெதி ரோடிப்
படுகளத் தேறிய பகைவரை யெல்லாம் (கூஎ)
அரைநொடிக் குள்ளே யமபுரத் தேற்றி
வரமிகு தேவாந் தகனைவாய் மடுத்து (கூஅ)

மென் று விழுங்கி மீண்டன ளவனும்
ஒன்றிய சூக்கும வுருக்கொடு வெளிபோப் (௯௯)
கங்கு லகலமுன் காத்திர மூதூர்
அங்கடைந் தோர்மக மாற்றியம் மகத்தில் (௱)
ஒருபெரும் புரவியும் வீரரு முதிப்பப்
பெருமகிழ் வோடப் புரவிமி லேறித் (௱க)
துணைபுறு வீரர் சூழ்வரக் களம்போய்
இணைபறு சங்கத் தொலிமிக வெழுப்பினன் (௱உ)
ஒருபுற மெம்பிரா னுதவிய சூரன்
நிரைபெறு பூத கணத்துட னெருங்கச் (௱ங)
சித்திதே வியராற் சிறப்புற வெழுந்த
சத்திக ளொருபாற் சருவி நெருங்க (௱௪)
மற்றொரு மருங்கிற் புத்திதே வியரால்
உற்ற திண்படைத் தேவியு நெருங்க (௱௫)
இருதிறப் படையு மிவ்வகை கலந்து
தரைமிக நடுங்கச் சமர்பல விளைத்தார் (௱௬)
நராந்தக னுண்மைமி னுன்மடங் கேறிய
சுராந்தகன் பரிமேற் சுவாமியோ டெதிர்த்து (௱எ)
வரம்புரிந் தேற்ற வடிக்கணை யெல்லாந்
தெரிந்து தூவியுஞ் செயம்பெற லரிதாய் (௱அ)
வஞ்சக மாயை வகைவகை விளைத்து
வெஞ்சம ராடினன் விநாயகக் கடவுளும் (௱௯)
ஆங்கவன் மாயை யனைத்தொடு மாவி
நீங்கச் செய்து நெடுஞ்சமர் முடித்தான் (௱ய)
ஆடினர் பாடின ரமரர்கள் யாவரும்
வாடுத லொழிந்து மகோற்கட மூர்த்தியைக் (௱யக)
கைதொழு திறைஞ்சினர் கர்த்தனு மப்பால்
மெய்தவக் காசி வேந்தன் சபைக்கு (௱யஉ)
மீண்டெழுந் தருளி மேதக வைகி
ஆண்டகை மைந்தன் மணவினை முடித்தபின் (௱யங)
கடிநகர் தணந்து காசிபன் கிரகம்
அடைந்து சிலநா ளங்ஙன மமர்ந்து (௱ய௪)

பின்பியா வர்க்கும் பேர்வர முதவித்
தன்பெரு முலகைச் சார்ந்தன னன்றே (ாயரு)

பதினொராவது சுருஅ

## துண்டி விநாயகர் திருவவதாரம்.

மேதகு துண்டி விநாயகர் பிறந்த
காதையை யெடுத்துக் கழறுதுங் கேண்மோ (க)
நன்னிலை யுறுகை வர்த்தமா நாட்டிற்
பன்மக மென்றோர் பட்டண முண்டு (உ)
பிரம சுரனெனப் பெயருடைத் தானவன்
அரசனு யவ்வூ ரரசியற் றிடுநாள் (ஙு)
பரம சிவனைப் பத்தியோ டேத்தி
ஒருவரு முயலாப் பெருந்தவ மிழைப்பத் (ச)
தாண்டவ மூர்த்தியுந் தரிசன மருளி
வேண்டிய தென்கொல் விளம்பெனத் தன்கை (ரு)
ஆர்தலைப் படினு மவரெரிந் தழிய
ஓர்வரம் வேண்டு முதவெனப் பணிந்தான் (சா)
வேண்டிய வரத்தை விமலனு முதவ
ஆண்டதி னுண்மை யறியும் பொருட்டுக் (எ)
கரந்தனை யுயர்த்திக் கறைமிடற் றண்ணல்
சிரந்தனைத் தொடுவான் சென்றன னெம்பிரான் (அ)
தாமரை நல்கிய வரந்தனை யுடனே
தாமா யழித்த றகாதென மறையத் (கூ)
திசைதொறுந் தேடித் திரிந்தனன் றிருமால்
வசைவரு மிவனு லெனமனத் தெண்ணி (௰)
அழகிய போகினி வடிவம தெடுத்துக்
குழலமர் கோதைபி னளியினம் முரல (௰க)
இளம்பிறை போல வளங்கெழு நுதலின்
விளங்கிய திலதமும் வெண்ணகை வரிசையும் (௰உ)
படரொளி விரிக்கப் பசுந்திதல் பூத்த
குடமுலை மலர்ப்பூங் கொம்பென வொசிந்து (௰ஙு)

நடைகொடி பாவனை யாற்புவி முழுதும்
அடியிணைப் படுத்து மணங்கென வெதிரே (௰௪)
வருதலும் பிரம சுரன்மனம் மயங்கி
விரவிய காம வெப்பக் தழுந்தி (௰௫)
அரிவையர் சிகாமணி யாய்வரும் பாவாய்
தரைமிசை யென்னுயிர் தரித்திட வேண்டில் (௰௬)
இன்ப கலவிக் கிசையென வணங்கி
அன்பி னயமொழி யாடின னாயினும் (௰௭)
நாடகப் பெண்யான் னீயோ நராதிபன்
கூடலுக் கிசைபிற் குலமுறை தவறும் (௰௮)
ஆயினு மென்போ லபிநயங் காட்ட
நீயுடன் பட்டா லிணங்குவே னென்றலும் (௰௯)
நன்றென விசைந்தான் னங்கையு மெதிர்போய்
நின்றுதன் கரங்களை நேருறக் கூப்ப (௨௰)
மன்னனு மம்முறை வழுவறச் செய்தான்
பின்னொரு கரத்தைச் சிரமிசை வைத்தாள் (௨௧)
மன்னிய மயலான் மறந்து வரத்தை
அன்னவ ளைப்போ லவனுஞ் செய்தான் (௨௨)
கரந்தலைப் படலுங் கண்ணுதல் வரம்போல்
எரிந்துடல் கருகி யிறந்தன னப்பால் (௨௩)
எண்ணிய வெண்ணம் பலித்ததிங் கென்று
வண்ணமோ கினியாய் வந்தமா லகன்றான் (௨௪)
பிரம சுரன்மக னாகிய துராசதன்
அரசுதன் கைவச மாகிய பின்னர் (௨௫)
தந்தையை யழித்த திருமா லுடனே
இந்திரன் முதலிய விமையவ ரெலாரையுஞ் (௨௬)
சிறைசெயுங் கருத்தொடு சிவன்றனை நோக்கி
முறையொடு நெடுந்தவம் முயன்றவ ரிடத்தின் (௨௭)
வாங்கிய வரத்தின் மகத்துவ மதனால்
ஓங்கிய வானவ ருலகொடு மாலயன் (௨௮)
பதவிக ளெல்லாந் தன்வசப் படுத்தி
அதமிகச் செய்தன னாற்றில ராகி (௨௯)

யாவருஞ் சிவனொடு காசிமா நகரின்
மேவின ராண்டுந் துராசதன் விரைந்து (௩௰)

போதலுங் காலம் பொருந்திலை யென்று
கேதா ரத்துக் கேகினர் யாவரும் (௩௧)

கரந்தொழித் தாரெனக் காசிமா நகரில்
இருந்து துராசதன் றனியர சியற்றினன் (௩௨)

கொடுங்கோ லாணையிற் குறைந்தவிப் பாகம்
கடும்பசி யடைந்த கற்பக நாட்டார் (௩௩)

மங்கை யுமையாள் மருங்கடைந் தழுது
தங்குறை யெல்லாஞ் சாற்றலுங் கேட்டுப் (௩௪)

பொங்கினள் கோபம் பொலிதலு முடனே
செங்கமலப் பொற் றிருமுகத் திருந்து (௩௫)

வாடிய தேவர் மனமகிழ் வடையக்
கோடிசூ ரியர்போற் குலவொளி பரந்த (௩௬)

செய்ய மேனியுந் திருமுக மைந்தும்
ஐயிரு கரமு மழகொடு துலங்க (௩௭)

விநாயகப் பெருமான் வெளிவந் துதிப்ப
பஞேமணி யுமையாள் மனமிக மகிழ்ந்து (௩௮)

தேவருக் கிடர்பல செய்யுந் துராசதன்
ஆவியைப் பறித்து வாவென் றனுப்பினள் (௩௯)

பூத கணங்கள் புடைவர வுடனே
நாதனு மேகிக் காசியை நண்ணத் (௪௰)

துராசத மன்னன் றுடிக்கா யெழுந்து
பரிசனத் துடனே படுகளத் துற்றான் (௪௧)

இருதிறப் படையுங் கைகலந் திகலிப்
பொருதன பிணக்குவை பொலிந்தன வெம்பிரான் (௪௨)

இரண்டுநான் காறெட் டீரைந் தாகத்
திரண்டு நெறித்த செழுமலர்க் கரங்களும் (௪௩)

பொற்புயர் மான்மயில் மூடிகஞ் சிங்கம்
பற்பல வாகனம் மேலெழுந் தருளி (௪௪)

வேறுவே றுருக விளங்கிய வைம்பத்
தாறுருத் தாங்கி யமர்களத் தாடி (௪௫)

அசுரர்க ளெலாரையுங் காலனூர்க் கனுப்பி
விசுவகல் லுருக்கொண் டொருபத முயர்த்தித் (௪௬)
துராசதன் முடிமேற் றும்மென வைத்துத்
தரைமிசை யழியா வரமுள ளாதலின் (௪௭)
என்றுநம் மடிக்கீ ழித்திரு நகரின்
ஒன்றிய மேற்கு வாசலி னமர்ந்து (௪௮)
பாதகஞ் செய்து வருபவர் தம்மை
நீதியா யடக்கென நியமித் திருத்தினன் (௪௯)
தேவரு முனிவருந் திருவிசை பாடி
யாவருஞ் சூழச் சிவபிரான் முன்போற் (௫௰)
காசி மாநகர்க் கோயிலை யடைந்தனர்
வாசவன் முதலியோர் வருத்தந் தீர்ந்தனர் (௫௧)
சகலருந் துண்டி விநாயக ரென்னப்
பகையறுத் தவரைப் பரவுவ ராயினர் (௫௨)
அதுமுத லயக் காசிமா நகரை
இதமிகு துண்டி நகரமு மென்பார் (௫௩)
மிக்கசீர் விசுவ நாதருக் கெதிரே
வக்கிர துண்ட மூர்த்தி யமர்ந்திட (௫௪)
மற்றைய வைம்பத் தறுவருங் கோயில்
சுற்றிலுஞ் சத்தா வரணமாய்ச் சூழ்ந்தனர் (௫௫)
அத்தொகை யாரி லொருவரை யாயினும்
பத்தியிற் பணிந்தாற் பலன்மிக வுண்டாம் (௫௬)
தப்பிழை துராசதன் றனையழிப் பதற்காய்
ஒப்பிலாத் துண்டி விநாயக ராக (௫௭)
வந்தவந் நாளில் மற்றுமோ ராடல்
விந்தையாய்ப் புரிந்த விபரமுங் கேண்மோ (௫௮)
மந்தர கிரிக்கு வரங்கொடுத் தவ்விடம்
இந்திரன் முதலிய விமையவர் சூழச் (௫௯)
சிவபிரான் சிலநா ளமர்ந்தபின் றிரும்பித்
தவமிகு காசியைச் சார்ந்திட விரும்பி (௬௰)
அங்கர சாளுந் திவோதா சன்றன்
செங்கோ னெறியைப் பிழைபடச் செய்மின் (௬௧)

போயெனத் தேவரைப் புகழ்மிகு பிரமனை
ஞாயிறைத் தன்கண நாதரை முறைமுறை (சுஉ)
ஏவலு மவர்போய்ச் செயவிய லாமன்
மேவினர் தவத்தின் விநாயகக் கடவுளைச் (சுங)
சிந்தையி னினைக்கத் திருவுள முணர்ந்து
விந்தைகொள் காசி வியனகர் புகுந்து (சுச)
சாத்திரஞ் சொல்லிச் சனங்களை வெருட்டிப்
பார்த்திப னுளத்தைப் பரவசப் படுத்தி (சுரு)
விலகிய சிவனையும் விண்ணவர் தமையும்
நலமிகு காசி நகர்ப்புகுத் தினனே (சுசு)

பன்னிரண்டாவது எஉச

## வல்லபை விநாயகர் திருவவதாரம்.

மறையவன் மைந்தன் மரீசி யென்பான்
முறையொடு புரிந்த முதிர்தவப் பலனால் (க)
காண்டகு முயிரெலாங் கருவினில் வளர்க்கும்
மாண்டகு சத்தியோர் பெண்மக வாகிப் (உ)
புண்ணிய யமுனைப் புனற்கரை வளர்ந்த
தண்ணந் தாமரைத் தவிசினி லிருப்பக் (ங)
கண்டுள மலர்ந்த களிப்புட னெடுத்துக்
கொண்டுதன் பிரம புரநகர் குறுகி (ச)
மனையவள் தேவ வல்லிகைக் கொடுத்து
வனமிகு வல்லபை யெனப்பெயர் வகுத்துப் (ரு)
பொருவற வளர்க்கப் புதல்வியும் வளர்ந்து
பருவகா லத்திற் பாங்கியர் சூழச் (சு)
சாலையொன் றமைத்துத் தவமிழைத் திருந்தாள்
மேலைய வரமுறை விநாயகப் பெருமான் (எ)
அந்தண னுய்வந் தருந்தவங் குலைத்துச்
சுந்தர மிகுந்த சுயவுருக் காட்டி (அ)
மாதவ மரீசி மனைக்கெழுந் தருளி
வேத விதிப்படி விவாகம் முடித்தனன் (கூ)

வல்லபை கணேச னெனப்பல தேவருஞ்
சொல்லி வணங்கித் துதிமிகப் பாடினர் (௰)

அந்த வேளையி லாயனுந் தேவியுந்
தந்திருப் புதல்விய ராகிய மோதை (௰க)

சுந்தரி மனோரமை சுமத்திமை சுமகை
நந்தினி காமதை மங்கலை கேசினி (௰உ)

பொற்பிர மோதை புகழ்பெறு காந்தை
சற்குண சாரு காசையென் றியம்பும் (௰ங)

பன்னிரு பெயரையு மழைத்துமுன் னிறுத்தி
இன்னவர் தமையு மேற்றெமை யாள்கெனப் (௰ச)

பரவலு மேற்றுப் பன்னிரு வரையுந்
திருமணம் புரிந்து திருமால் தனக்கு (௰ரு)

மெய்மைய ஞானம் விளங்குறப் புகட்டி
ஐதிகழ் விசுவ ரூபமுங் காட்டி (௰சா)

மாதவ மரீசி முதலியா வர்க்குங்
காதலி னருமைய வரங்களு முதவித் (௰எ)

தேவியர் புடைவரச் சென்றுதம் முலகை
மேவினன் வல்லபை விநாயக னன்றே (௰அ)

எசஉ

## வியாசர் உபதேசங்கேட்டு வரம்பெறல்.

இன்னணஞ் சிவனார் சண்முகற் கிசைத்தனர்
என்னப் பிரம னியம்பிய பின்னர் (க)

வல்லபை கணேசன் மாயனுக் குரைச்
சொல்லிய யோக ஞானமுந் தொகுத்து (உ)

மயலறக் காட்டி மாதவத் துயர்ந்த
வியாதனை நோக்கி விள்ளுவன் மேலும் (ங)

மனோதய வறிவான் மட்டிடற் கரிய
விநாயகப் பெருமான் மேதகு சரிதையைத் (ச)

தீயவர் கேட்பினுந் திருந்திநல் லொழுக்கம்
மேயுறப் பெறுவர் மேல்வரு கலியின் (ரு)

வருணபே தங்கட் குரியதாய் வகுத்த
தருமந் திறம்பி நன்றியை மறத்தல் (சு)

பல்வகை யுயிர்க்கும் பலவிடர் புரிதல்
கல்வியை நல்லொப் புரவையுங் கடத்தல் (எ)

தானந் தருமந் தவமொடு வேள்வி
ஆனவை பலவுஞ் செய்யா தொழிதல் (அ)

தப்பறு குருதக் கணைகொடா திருத்தல்
முப்பா னூலின் விதிகளை முனிதல் (கூ)

மலசல மோடு வாயில் விழைச்சுக்
கலவி விழைச்சையுங் கருதா திருத்தல் (ய)

மனமொடு தேவரை வழிபடு மிடத்தும்
புனித மின்மை பொருந்திய விடத்தும் (யக)

அடுக்குறு கூந்த லவிழ்ந்த விடத்துந்
துடக்கற நீரிற் றேயா திருத்தல் (யஉ)

அந்தணர் பசுக்க ளோம்பூ தங்கள்
சந்திரர் சூரியர் தமைத்தொழா திருத்தல (யங)

அன்னை பிதாக்குரு மூத்தவ னரசன்
என்னுமைங் குரவரைப் பேணா திருத்தல் (யச)

அருந்திடு முணவைத் தொழாமதடுத் தருந்தல்
விருந்தினர் மூத்தோ ரடிமைகள் பிள்ளைகள் (யரு)

பசுக்களென் றேதப் படுமிவர்க் குணவு
புசிப்பதற் கிடாமற் புறக்கணித் திருத்தல் (யசு)

தன்னிலும் பெரியார் பந்தியி லிருந்தால்
அன்னவ ருணமுன் னுண்டெழுந் திருத்தல் (யஎ)

குரவ ரன்பொடு கொடுப்பன வற்றை
ஒருகரம் நீட்டி வாங்குத லவர்க்குத் (யஅ)

தன்னொரு கரத்தால் யாதையுங் கொடுத்தல்
மன்னிய முனிவா லெவரையுஞ் சீறுதல் (யகூ)

அந்திப் பொழுதி லணிவிளக் கேற்றி
வந்தித் ததனை வழிபடா தொழிதல் (உய)

இருதே வர்க்கு நடுவினும் பார்ப்பார்
திரளினு நடுவூ டறுத்துச் செல்லுதல் (உக)

ஆமயம் சாம்ப லாவுறை தொழுவங்
காமரு தீர்த்த மாலயஞ் சுடலை (உஉ)
வழியிடத் துமிழ்தன் மலசலங் கழிதல்
களவு பரத்திரி கமனஞ் சூது (உங)
கட்கொலை யென்பன செய்யக் கருதல்
வெட்கமற் றயலவர் பொருள்களை விரும்பல் (உச)
குற்றமுங் கோளுங் கூறித் திரிதல்
நற்றவ மாழப் பொய்தனை நவிலல் (உரு)
மாமிச மருந்தல் மனையினில் வதியுங்
காமரு தெய்வதங் கைதொழா திருத்தல் (உசா)
சாதமுங் கறியுந் தமக்கெனச் சமைத்தல்
ஏதமி லட்டிலை யெச்சிற் படுத்தல் (உஎ)
தலைமிசை வார்த்து வழிந்த வெண்ணெயை
நலமென வுடம்பி னவைபுறத் தேய்த்தல் (உஅ)
மனையவள் குணத்தை மற்றவர்க் கியம்பல்
தனது குறைகளைத் தானு யுரைத்தல் (உகூ)
தன்னுயிர் வாட்டுத னெருப்பைத் தாண்டுதல்
அன்னந் தொடைமேல் வைத்தெடுத் தருந்தல் (ஙய)
ஆடையில் லாமற் றடாகத் திறங்குதல்
நீடிய நகத்தா னிலத்தினைக் கீறல் (ஙக)
புலாலுண் பவர்பாற் போசன மருந்துதல்
அலாலங் கருந்து மவரோ டிணங்குதல் (ஙஉ)
உரைக்குமெய்ஞ் ஞான வுபதே சத்தைக்
கருத்தொடு விரும்பிக் கேளா திருத்தல் (ஙங)
நஞ்சர வாட்டுத னன்மந் திரங்களை
வஞ்சக ராதி தகாதவர்க் குரைத்தல் (ஙச)
பெரியோ ரிருந்த வாசனந் தன்னைத்
தரைவிழக் காலாற் றள்ளி யுதைத்தல் (ஙரு)
நகங்களை மயிரைப் பல்லினாற் கடித்தல்
சுகங்கொளப் பெரியோ ருறங்குழி யெழுப்பல் (ஙசா)
நீர்விளை யாடல் நெருப்பினிற் காய்தல்
சீரியர் தம்மைத் தீயரென் றுரைத்தல் (ஙஎ)

காலொடு காலைத் தேய்த்துக் கழுவுதல்
மேலுயர் தலையைக் கைகொடு தொடுதல் (௩அ)
உண்கலத் துமிழ்தல் பாழ்மனை புகுந்து
கண்வளர்ந் திடுதல் கரிமயிர் சாம்பல் (௩௯)
என்பிவை யெடுத்து நீரிற் போடுதல்
நன்னிழன் மரங்களை நாசப் படுத்துதல் (௪0)
தீயையுந் திக்குக் கீழே பிடித்தல்
வாயெழு மெச்சிலைத் தீமே லுமிழ்தல் (௪௧)
ஓரிடத் தெரியை வேறிடத் தெரியொடு
சேரப் பொருத்துத னீர்தெளித் தவித்தல் (௪௨)
ஆடையான் முறத்தா லக்கினி மூட்டுதல்
கேடுறு கொம்பு மண்கரி சாம்பர் (௪௩)
ஆதிய கொண்டு பற்களை விளக்குதல்
தீதென வுணர்ந்து தெரிந்துகொள் ளாமல் (௪௪)
கிடையினு நின்றுங் கிளர்நகை புரிந்தும்
நடையினு மேந்தி நல்லூ ணருந்தல் (௪௫)
முட்டை சுரைக்காய் பழங்கறி முதனாள்
அட்ட பழஞ்சோ றுதிய வருந்தல் (௪௬)
அரனடி யார்மறை யாகம புராண
மிருதிவெண் ணீறு வெறுத்துநிந் தித்தல் (௪எ)
கங்குல் விடிய வைந்துநா ழிகைமுன்
தங்கிய படுக்கை தணவா துறங்கல் (௪அ)
பெரியவர் நடக்கும் பாதையி லவரொடு
சரிவர நேரே தாமும் நடத்தல் (௪௯)
விதித்தநன் னாளும் விலக்கிய நாளும்
மதித்தொழு காமன் மனைவியைப் புணர்தல் (௫0)
தேவநாட் சிராத்தந் திருவிழா வதுவை
மேவிய நாட்களி லறஞ்செயா திருத்தல் (௫௧)
அத்திரு நாட்களி லதிதி விருந்தினர்
சித்தங் களிக்கச் சோறிடா திருத்தல் (௫௨)
குடிப்பிறப் பாண்மை கூடிய செல்வம்
படிப்பிவைக் கமையா வுடைநடை பழகுதல் (௫௩)

பலபெயர் நடுவ ணுறங்குதல் பிறரைப்
பலபெயர் நடுவ ணிருந்திகழ்ந் துரைத்தல் (ருச)

பிறர்செயத் தமக்குப் பொருந்தா தவற்றைப்
பிறர்க்குச் செய்யத் தாமுடன் படுதல் (ருரு)

வறியரை யிகழ்ந்து முறைகடந் துரைத்தல்
பிறர்மனம் வருந்த வஞ்சனை பேசுதல் (ருசா)

செம்மையில் லாதான் செய்வன வற்றை
அம்முறை தானுஞ் செய்து காட்டுதல் (ருஎ)

எழுந்துபோ வாரைப் பின்னின் றழைத்தல்
விழைந்துபோ மிடத்தை வினவுத லும்முதல் (ருஅ)

ஒருவனை நோக்கியுன் னுடம்புநன் றென்னல்
அருந்தவர் தம்மைக் காவா தகற்றல் (ருகூ)

ஒளிதனை வாயா லூதி யவித்தல்
பழியுறி லதற்கு நாணா திருத்தல் (சாய)

கற்றதை வியந்து குரவர்முன் காட்டல்
நற்றநு தாய்மகள் சகோதரி பிறன்மனை (சாக)

ஆதிய பேரொடு தனியிடத் துறைதல்
மேதவ ருவப்பதைத் தாமு முவத்தல் (சாஉ)

ஆலயத் திடத்தும் பெரியவ ரவையினும்
மேலவ ரல்லார் தமைக்கொடு புகுதல் (சாங)

அத்தகு மிடங்களிற் காறி யுமிழ்தல்
நித்திரை கொள்ளுத னின்று சிரித்தல் (சாச)

தன்சுய கணவன் வடிவமொன் றல்லால்
பின்னெவர் வடிவையும் பிரியமாய்ப் பார்த்தல் (சாரு)

கைநொடி பாவனை கண்மருட் டாதிய
செய்தா டவரின் சிந்தையை மயக்கல் (சாசா)

குரவர்தம் பெயரைக் கூறுதல் தம்மிற்
பெரியவர் தமைமுறைப் பெயர்கொண் டழைத்தல் (சாஎ)

பிறர்மனை புழைக்கடை வாயிலாற் புகுதல்
நிறைவுறு மொருவர் நிழலினை மிதித்தல் (சாஅ)

ஆராய் வின்றி யாதையும் பேசல்
ஊரவர் வெறுக்கத் தக்கவை செய்தல் (சாகூ)

அரசன் படைத்திறம் பகைவருக் கறைதல்
தருமம் புரிந்ததைத் தாமாய் விளம்புதல் (எ௰)
பிறர்தரு விருந்தை யிகழ்ந்து பேசுதல்
அறமிகு நோன்பை யாற்றிப் புகழுதல் (எக)
பெறற்கரி தாகிய பேறுகள் விரும்பல்
அறப்பழு தாற்கெட் டழிந்தவைக் கிரங்கல் (எஉ)
நலமிகு கருமம் நாடும் பொழுது
புலையரைக் கொண்டு நாட்கேட் டேகுதல் (எ௩)
வழுக்கறு சான்றோர் வைகிய சபையில்
ஒழுக்கமற் றங்க சேட்டைக ளுஞற்றல் (எ௪)
நடுநிலை தவறிப் பொய்க்கரி நவிலல்
அடைக்கலப் பொருளை யபகரித் தெடுத்தல் (எ௫)
ஆதிய பலவாந் தீமைகள் புரிந்து
மாதரித் திரம்பிணி மலிதர வாழ்வர் (எ௬)
வேதா கமத்து விதியெலாந் திறம்பி
நீதி நெறிக ணிலைபிறழ்ந் தழியும் (எஎ)
அன்னதாற் றேவ ரக்கலி யுகத்தில்
துன்பமிக் கவராய்த் துயர்கெட வேண்டிக் (எஅ)
கணேச மூர்த்தியைக் கைதொழு திறைஞ்சிக்
குணமொடு போற்றுவர் குளிர்ந்தெம் பிரானுந் (எ௯)
தாமிர வண்ண மகோற்கட மூர்த்த
மாமணி யோரவ தாரங் கொண்டு (அ௰)
பொற்கர மொன்றிற் பூந்தா மரையும்
மற்றொரு கரத்தில் வாளா யுதமுங் (அக)
கொண்டொரு கார்நிறக் குதிரைமே லிவர்ந்து
மண்டிய பூதப் படைபல மருங்குற (அஉ)
வந்து மிலேச்சரை வதைபுரிந் திடுவான்
பிந்தக் கிரேதா யுகமது பிறந்து (அ௩)
தருமமே வதையுந் தலையெடுத் திடுமால்
ஒருசிறி தாயினுங் கலியினிற் புரியும் (அ௪)
புண்ணியந் தனக்குப் பொருந்துமா பலன்கள்
எண்ணுக் கடங்கா வியல்பினை யுடைத்தாம் (அ௫)

வரமருள் கணேசன் றரைமிசை புரிந்த
திருவிளை யாட்டெலாந் தெளிவுற வெடுத்து (அரு)
நாலுகத் துள்ள நாடொறு மியம்பினும்
மேலுறப் பெருகி விரியுமே யன்றி (அஎ)
அடக்கரி தாமிங் கறைந்தவற் றுள்ளோர்
இடத்திலெம் பெருமா னுருத்திர னதி (அஅ)
மூவரைத் தந்தான் முறையொடென் றுரைத்தும்
மேவிய ருத்திரன் மிளிர்முகத் திருந்து (அகூ)
தானுதித் தானென வேறிடத் துரைத்தும்
ஆனநன் மகவா யடைந்தன னென்றும் (கூ0)
உமையவ ளிவனைப் பணிந்தன ளோரிடத்
துமையை யிவனே பணிந்தன னென்றும் (கூக)
அவள்வயிற் றுதித்தன னென்றோ ரிடத்தும்
அவள்முகத் துற்றன னென்றுமற் றிடத்தும் (கூஉ)
நானா விதமாய் நவின்றன வெல்லாம்
ஆன வுகபே தங்களி னாலும் (கூங)
தேவர்கள் வல்லப விகற்பத் தானும்
பாவமி லடியவர் பரிபா கத்து (கூச)
வேறுபாட் டானும் விளைந்தன வன்றி
மாறுபா டென்னல் மகாபவ மாகும் (கூரு)
வென்றிகொள் விநாயகக் கடவுளி னியல்பு
என்று மோர்நிலை யுடைத்திவர் சரிதம் (கூசா)
மத்திம குணத்தர் மலைப்புற வினைத்தும்
உத்தம குணத்த ருண்மையென் றுணர்வார் (கூஎ)
உம்பர்கள் செய்த வுபாசனைச் சரிதமும்
எம்பிரான் செய்த திருவிளை யாடலும் (கூஅ)
தெள்ளிதி னுரைத்தாஞ் சென்றுநீ முறையே
கள்ளவிண் மலராற் கணேசனை வணங்கிக் (கூகூ)
கருதிய வரங்களைப் பெறுகென வாழ்த்தி
அருமறை வியாதற் கயன்விடை யளிப்பச் (௱)
சென்றவ னங்கோர் திவ்விய விடத்தில்
நன்றென விருந்து நற்றவம் புரிந்து (௱க)

கற்பக னருளாற் கலையெலா முணர்ந்த
விற்பன ளுகி விரித்துப மறையெலாம் (ரஉ)
அருளினன் சோம காந்தனே யென்று
பெருமையோ டுரைத்தான் பிருகுமா தவனே (ரங)

அசரு

# சோமகாந்தன் முத்தியடைதல்.

திருமறைக் கெட்டாக் கரிமுகப் பெருமான்
அருமைய மான்மிய மனைத்துங் கேட்ட (க)
காவலன் சோம காந்தனும் மனைவியும்
மேவிய களிப்பொடு மெய்த்தவப் பிருகின் (உ)
ஆசிர மத்தி லமர்ந்தொரு வருடம்
பூசனை புரிந்து புழைநெடுங் கரத்தோன் (ங)
அனுப்பிய விமான மதன்மிசை யிவர்ந்து
வனப்புயர் மகனொடும் மந்திரி மாரொடும் (ச)
புகரறு கணேசன் பொற்பத மடைந்து
மகிழ்வொடு பொலிந்து வரம்பிலின் புற்றூர் (ரு)
இவ்வகைச் சிறந்த விந்தமான் மியத்தைச்
செவ்விய பத்தி சிரத்தையோ டியாவர் (சா)
ஆயினுங் கேட்ப ராயினிங் கவர்க்கு
மாயிரு சனன மரணதுன் பங்கள் (எ)
சோகம் வறுமை துக்கம் வியாதி
மோகம் பாவம் மொழிபகை யரிட்டம் (அ)
அச்ச மிடையூ றரும்பசி கோபம்
இச்சகத் துயர மெய்துவ திலையால் (கூ)
அட்டமா சித்தியு மவர்வச மாகி
அட்டபாக் கியங்களு மடைந்தவ ராகிக் (ய)
கல்வி புகழ்வலி வெற்றிநன் மக்கள்
நல்லூழ் நுகர்ச்சி வாழ்நாள் பொன்னெல் (யக)
அழகு பெருமை துணிவுநோ யின்மை
இளமை யறிவோ டெனப்பதி னாறும் (யஉ)

அடைதற் கரிய பேறனு பவித்து
முடிவிற் சிறந்த முத்தியும் பெற்று (௰௩)
வாழுவர் விநாயக மான்மிய மோங்கி
வாழ்க வுலகெலாம் வாழ்கவா ழியவே (௰௪)

அ௫க்

## இலீலாகாண்டம் முற்றும்.

# விநாயகமான்மியம் சம்பூரணம்.

| | | | | |
|---|---|---|---|---|
| உபாசனகாண்டம் | அகவல் | அடி | .... | ௪௲௯௱௨௨ |
| இலீலாகாண்டம் | ,, | ,, | .... | ௲௭௱௰அ |
| | | | | ஆக.... ௫௲அ௱௪௰ |

# பிரசுரக் குறிப்புகள்.

தரும சொரூபம், மந்த அறிவுடையோராலும், நுண்ணிய அறிவுடையோராலும் முறையே விளங்குமியல்புடைத் "தூலம்", "சூக்குமம்" என்னுமிருவகைத் தென்ப. தெய்வீகத்தன்மையும் அகன்ற பேரறிவு முடைய ஆன்றோர்களால் இயற்றப்பட்ட சைவ புராண விதிகாசங்களெல்லாம், மேலைய இருபாலாருக்கும் (வீடுபெறு முபாயத்தை மாத்திரமல்ல) அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகைப் பொருள்களையும் இனிது விளக்கும் பொருட்டுக் கற்பனாலங்கார வர்ணனைகளுடன் அமைக்கப்பட்டன. இதனையுணரார் அவைகளைப் பொய்யென நிந்தித்துத் தமது பேதமைப் பெருக்கைக் காட்டுவர்.

விநாயகக்கடவுளை மூன்று கண்ணுடையர் ஐந்து கரமுடையர், இரண்டு மனைவியர் உடையர் எனரூபகப்படுத்திப் பேசுமிடத்து மந்த அறிவுடையார் பத்திகொண்டு மெய்யென நம்பிப் புண்ணிய வயத்தராகின்றனர்; நுண்ணறிவுடையார், புத்திகொண்டு, முக்குண முடையர், ஐந்தொழிலுடையர், இருவகைச் சத்திகளை யுடையர் என்னும் நுட்பொருள்களையுந் தெளிகின்றனர்.

இவ்விரு பாலாருமன்றி, விபரீத புத்தியுடைய புல்லறிவாள ராகிய பிறவொரு பாலாரும் தற்காலத்துளர். அவர்களுக்கு அம்ம! நாமென் சொல்வேம்!! "உருவத்தா னீண்ட வுயர்மரங்களெல்லாம், பருவத்தா லன்றிப் பழா" என்றபடி, அவர்கள் தக்ககுரவரைச்சார்ந்து சந்தேக விபரீதங்களை யறுத்து மெய்ஞ்ஞானோபதேசங்களைப் பெற்றுத் தம்மைப் பீடிக்கும் அஞ்ஞானவிருட் படலத்தையகற்றிப் பக்குவ ரானலொழிய, புராணவழிப் பிறக்கும் இத்தகைய நல்களாற் பெரும் பயனடையார். ஒருதருவின் பருவம் ஏறவேற, அதனிடம் பூ, பிஞ்சு, காய், கனியாதிய முறையே தோன்றுமாறு, ஒருவனறிவு வளரவளர அவனிடம், மெய்ஞ்ஞான சொரூபாகிய கடவுட்பத்தியுந் தானேவளர்வதாகும்.

பொறிகளை ஒருவழிப்படுத்திப் பத்தியோடு கடவுளை நினைந்து செய்யும் வந்தனை வழிபாட்டால் விரும்பிய பலன்கள் கைமேல் உடனே சித்திக்காவிடினும் விளையும் புண்ணியத்துக்குக் குறைவேயில்லையென்றும் அப்புண்ணியம் மறுமையிலாயினும் நற்கதியிலுய்த்து விடுமென்றுந் தருமசாத்திரங்கள் கூறும்.

இஷ்ட போக பாக்கியங்களைப் பெறக்கருதி இத்தேசத்திலே வருடமொரு முறை அனேக ஆடவரும் பெண்களுங் காப்புக்கட்டி இருபத்தொரு நாள் விநாயக விரதமனுட்டித்து வருகிறார்கள். அந்நாட்களிலே கோயில்களில் வைத்துப் படித்துவரும் பிள்ளையார் கதை

யுடன் இப்புத்தகத்தையும், நித்தியம் முழுதும் படிக்க இயலாவிடின் சிறுச்சிறு பாகங்களாகப் பகுத்தேனும் வாசித்துவரின் மிக்க பல னுண்டாமென்பது பலருடைய கருத்து. சைவ சமயத்தவர்கள் யாவரும் எந்தவேளையினும் எக்கருமத்தை முயல்போதினும் முன்னுற நினைந்து தொழுந்தெய்வம் விநாயகக்கடவுளாதலின் அப்பெருமானுர் மான்மியஞ் செறிந்த திவ்விய சரித்திரங்களைத் தொகுத்துரைக்கும் இப்புத்தகத்தை அவர்கள் எத்துணைப் பத்தி சிரத்தையோடு கையாடி வருவார்களென்பதை விரிக்கவேண்டியதில்லை.

ஆக்கைக் கருங்கலமவ் வாக்கையிடத் தாருயிர்போல்
நோக்கிப் பனுவலுயிர் நட்பொருளை—வாக்காய்ந்து
கண்டுணர்வர் மேலோர் கசடர் விபரீதங்
கொண்டுபயன் கொள்ளார் குறித்து

---

கண்டியிலே தற்காலமுள்ள சைவாபிமானிகளாகிய ஸ்ரீமான்கள் வீரசிங்கம் பிள்ளை, அன்னப்பா, ஐயாத்துரை, பெரியதம்பி, காத்தமுத்துப்பிள்ளை, தாமோதரம் பிள்ளை முதலிய பலரும் அவ்வூரினும் அடுத்த விடங்களினுமுள்ள சைவப்பிரபுக்கள் யாவரையுஞ் சேர்த்து செல்வ விநாயகர் கோயிலில் வைத்து இந்நூலை அரங்கேற்றுவித்தபொழுது சபைக்கணிருந்து கேட்ட யாவரும் இதனை மகிழ்வுடன் அங்கீகரித்துப் பற்பல நயவுரை சாற்றினர்.

பிறவிடங்களில் இந்நூலைக்கண்ணுேட்டஞ் செய்தவர்களும், அனேக சிறப்புரைகளைப் பாசுரங்களாகவுங் கவிகளாகவும் எழுதியனுப்பினுர்கள். விரிவு பற்றி அவற்றுட் சிலமாத்திரம் இங்ஙனம் இடம் பெற, எஞ்சியவை மறு பதிப்புக்கு வைக்கப்பட்டன.

---

யாழ்ப்பாணம், கந்தர்மடம்,

## ஸ்ரீ. வை. சி. சிவகுருநாத பிள்ளை,

எழுதிய பாசுரம்.

---

மட்டக்களப்பு வாசராம் பூபால பிள்ளை யவர்கள் இயற்றிய விநாயகமான்மியம் கற்ருேர் கல்லாதோராகிய இருபாலாருக்கும் விளங்கக்கூடிய செந்தமிழ் நடையாயிருப்பதை வாசித்துப் பார்த்தபொழுது அகமிக மகிழ்ந்தேன். பிள்ளையார் கதையைப் பிள்ளையவர்கள் பெரும் பிரயாசமெடுத்து அச்சிடுவித்ததற்காகச் சைவசமயிகளாகிய நாமனைவரும் அவர்கள் பெருமுயற்சியைப் பெருமையுடன் பாராட்டல்கடன்.

## திரிகோணமலை,

## ஸ்ரீ செ. இராசேந்திர முதலியாரியற்றிய

### விருத்தம்.

பாரதமாம் பெருங்கதையைப் பண்டுமேக மேருவினிற் பதியக்கொம்பாற்
சீரிதமா யெழுதானை முகக்கடவுள் புகழ்ச்சரிதந் திகழ நாளும் [தான்
பாரிலுயர் விநாயகமான் மியமெனுநற் பெயருடனோர் பனுவல் செய்
ஊரிலுயர் மட்டுநகர்ப் பூபால பிள்ளையெனு முரைவல் லோனே

## ஸ்ரீ ச. கதிர்த்தம்பி உபாத்தியாயரியற்றிய

### நேரிசை ஆசிரியப்பா.

சீர்மலி பொற்புயர் திருமகள் விளங்குந், கார்மலி பொன்னு டெனக்கன வளஞ்சூழ், வைகைநன் னதிசேர் மறையொலி முழங்குஞ், சைகைபோற் றுனக் கொடிபல நிரம்பும், பாண்டிமா நாட்டின் பைந்தமிழ்ச் சங்கத், தீண்டிய புலவரிசைத்த காவியம், பாண்டித் துவமுயர் பஞ்ச லக்கணத், தாண்டமை கிடந்த வரிறபத் தெரிக்கும், எழுத்துச் சொற்பொருள் யாப்பணி யெனவே, வழுத்து வகையை வழிமுறை யுணர்த்தும், அகத் தியந் தொல்காப் பியமருந் தொன்னூல், சகத்திரு [illegible] க்குந், தருக்க நூலும், வேத சிவாகமம் விளங்குசித் தாந்தப், போதஞ் சித்தி புறமகம் புறப்புறச், சமய நூ லுணர்வெலாந் தருமுறை யாக, அமைவுறப் பெற்ற வருந்தமிழ்ப் புலவன், இலக்கண விபாக மெனக்கிடந் தொளிரும், பலப்படு மூன்றும் பலப்படுத் துணர்வோன், அதிற்படு மூன்று குற்றமு மகற்றி, எதிர்ப்படு காட்சி கருத்துக் கேள்வியென், றிசைத்தி டளவைகொண் டியற்பிர மேயத், தகைப்படா வகையே ஐயந் திரிபொரீஇப், பல்பொரு ளுணர்ந்த பகாரு மறிஞன், செல்வனுத் தியோகச் சிறப்பினின் மேலோன், ஆங்கி லேயமு மதிற்பொலி தத்துவப், பங்கமை நூலும் பலதெரிந் தாய்ந்தோன், ஆன்மார்த் தத்தி னமைவும் பரார்த்தத், தான்மார்த் தங்களுந் தானுணர் பத்தி யோன், தேவா ரந்திரு வாசகந் தேனென, பாவா ரக்கொ நல்லூ னுடையோன், செநெறிற் பணைசூழ் திருமட் டக்களப், பென்னுமா நாட்டி னிசைபுளி யங்நகர், தன்னிற் சதாசிவப்

பிள்ளைசெய் தவத்தான், மின்னி யோங்கிய மேன்மைசேர் மதியஞ், சீமந் தனிபுரா ணம்பல நூல்கள், நாமந் துலங்க நவையற வுரைத்தோன், சராசர மனைத்துந் தானாய் வேறாய்ப், பராபர வஸ்துவாய்ப் பகர்தவ மறையெலாம், விளக்கரும் பொருளாய் விளங்குமுட் பொருளாய், நாத்திகம் படைத்தோர் நாவுள மகன்றே, ஆத்திகம் படைத்தோர்க் கமைவுறு பொருளாய், ஆதியு முடிவு மகன்றநற் பொருளாய்ச், சோதிபஞ் சாக்கரத் துற்றநற் பொருளாய், சிவதத் துவமுதற் செப்பிடு பிருதுவி, யிவணிருந் தத்துவ தாத்வீக மென்னும், உலகெலா முதவு மொருபெரும் பொருளாய், அலகிலான் மாவுக் கனுதி மலத்துள, நசையிற் றனுகர ணாதியீ நற்பொருள், அசைவின் மறையி னடங்கிய நற்பொருள், ஆகிய பிரவணத் தமர்ந்தே யவ்வடி, வாகி நின்ற வரும்பதியாம் பொருள், விநாயக னென்றே விளக்குபார்க் கவநூல், தனுதித யந்தனி ரூன்படித் தோர்ந்து, மற்றவரியாவரு மகிழ்ந்துகற் றய்யத், தெற்றென விளங்குஞ் செந்தமி ழுகவலிற், கற்றோர் களிக்கவு மற்றோர் மதிக்கவும பற்றோ ரகத்திற் பதித்தன நுழையவும், வேண்டுவ விளக்கி விரிந்தவை சுருக்கிப், பாண்டுள நூல்வழி பாங்கொடு தழீஇ, விநாயக மான்மிய மெனப்பெயர் விளம்பி, அனுதி மலமெத் தவான்மர் பேறச், சொற்றன னொருநாற் றுதிபெறு, நற்றவர் புகழ்பூ பாலநா வலனே.

---

## ஸ்ரீ சு. தாமோதரம் பிள்ளையியற்றிய

கலித்துறை.

நீறும் பிரணவப் பேறும் விளங்க நிலமிசையே
கூறுமா விநாயக மான்மியஞ் செய்து குறைதவிர்த்தான்,
தேறுஞ் சதாசிவப் பிள்ளையருந் தவச் செல்வனலர்
நாறுந் தொடைப்பினன் பூபால பிள்ளைநன் னாவலனே

---

## ஸ்ரீ இ. நவரத்தினசிங்கமியற்றிய

வெண்பா.

விண்மணிபி லாய்ந்து விநாயக மான்மியத்தைச்
சொன்மணியிற் றந்து சுவையளித்தான்—மன்மதனோர்
பூபால நாவலனும் போற்று சதாசிவற்குப்
பூபால னவான் புனைந்து

## ஸ்ரீ சி. வேற்பிள்ளை உபாத்தியாயரியற்றிய

### கலித்துறை.

---

பாரோங்கி மேவ விநாயகமான்மியம் பாடித்தந்தான்
காரோங்கு மட்டக் களப்புறைவாசன் கங்காகுலத்தன்
சீரோங்கு வண்புகழ் சேருஞ்சதாசிவச் செம்மலருள்
பேரோங்கு விற்பனன் பூபாலபிள்ளையென் பேரினனே.

---

(ஸ்ரீ கா. பசுபதிப்பிள்ளை, பொ. மு. சுவாமிநாதபிள்ளை, க. சுந்தரம்பிள்ளை, சே. முத்துக்குமாரு, ஆதியோரனுப்பிய கவிகளெல்லாம் பிரசரிக்கப்படாவிடினும் நன்குமதித்தேற்றுக் கொள்ளப்பட்டன.)